Regd. No. 2514 Swadesamitran Illustrated Weekly

SANITARY FITTINGS



பர்ன் வெண்ணிற சலவைக்கல் சானிடரி பிட்டிங்குகள். இதைப்போன்ற மற்ற போர்ஸிலின் அல்லது களிமண் தயாரிப்புகளைக் காட்டிலும் உறுதியுள்ளவைகளாதலால் நீடித்த காலம் ஆரோக்கியமாய் உழைக்கும்.

அழகான அமைப்பு, அற்புத தோற்றம். இவை சுலபமாக உடையாது, வெடிக்காது. சுலபமாக சுத்தம் செய்யலாம்.

இந்தியாவில், இந்திய ஊழியர்களைக்கொண்டு, இந்திய மூலதனத்தைக் கொண்டு தயாரிக்கப்படுவது. மிதமான விலை. வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சாமான்களின் ரகத்திற்கு இணையானது.

விவரமான புத்தகம் கேட்போருக்கு இலவசமாக அனுப்பப்படும்.

BURN & CO., LTD.

ESTABLISHED 1781

BP-4(A) 12, MISSION ROW, CALCUTTA.

WORKS AT RANIGANJ AND JUBBULPORE

SAVE FOR VICTORY
BRITISH WAR SAVINGS MOVEMENT
ASK YOUR BANK

பர்ன் & கம்பெனி லிமிடெட்,

ஸ்தாபிதம் : 1781

12, மிஷன்ரோ, கல்கத்தா.

தொழிற்சாலை : - ராணிகஞ்சு & ஜபல்பூர்

சென்னை ராஜதானிக்கு ஏஜண்டுகள்:—

பம்பாய் கம்பெனி லிமிடெட், த. பெ. நெ. 109, மதராஸ்.

மற்ற மருந்துகளால் குணப்படுத்த முடியாதென அபிப்பிராயப்பட்ட பல்லாயிரக் கணக்கான குழந்தைகள் இவ்வபூர்வ மருந்தினால் காப்பாற்றப்பட்டிருக்கின்றனர்.

ஜம்மி'ஸ் லிவர் க்யூர்

பிரபல டாக்டர்கள் இதை வைத்ய சாஸ்திரத்திற்கே ஒரு நன் கொடை யெனப்போற்றுகிறார்கள்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும் அல்லது

ஜம்மி வெங்கட்ரமணய்யா & சன்ஸ்.

1/1. பிராடீஸ் ரோட், மைலாப்பூர், மதராஸ்.

மற்றும்:-பம்பாய், கல்கத்தா, லக்ஷமணபுரி, பெங்களூர், திருச்சினாப்பள்ளி.

காப்பத்தைத்தடுக்க "ரஹாத்"

நிச்சயமான மருந்தாகும். மூன்று நாட்கள் உபயோகித்தால் கர்ப்பம் தரிக்காது. ஆர்டருடன் உத்திரவாத பாரமும் அனுப்பப்படும். விலை ரூபா 5/8. அல்லது 10 ஷில்லிங். மாதவிடாய் தவறாமல் ஏற்படும்.

Dr. S. H. KHAN, (S.M.) 42, Churchgate St., Fort, Bombay. Phone 21343.

கே. சுவாமிநாதன் & கோ

24, எர்ரபாலு செட்டித் தெரு, மதராஸ்.

ரைஸ் மில், மாவு மில், சிக்கார் & காபி மிஷின், பம்பு வியாபாரமும், எல்லாவித காஸ்டிங் வேலைகளும், ஆயில் எஞ்சின் ரிப்பேர்களும் செய்யப்படும்.

சுவாமிநாதன் பவுண்டரி ஏஞ்சினீரிங் ஒர்க்ஸ்,

7, வால்டாக்ஸ் ரோட், P. T., மதராஸ்.

பிராஞ்சு:- பேனிங்டன் ரோடு, தஞ்சாவூர்.

டோங்ரேயின்

பாலாமிருதம்

பிரசித்தி பெற்ற

குழந்தைகளின் டானிக்

Printed and Published by T.S. Vi[illegible] Iyer, B.A., at the Swadesamitran Power Press, Mount Road, Madras. Editor, C.R. Srinivasan, B.A.

சுதேசமித்திரன்

வாரப்பதிப்பு

Vol. 13 No. 26 26-7-'42 Price 2 Annas

மூன்று தலைமுறைகள்

தாய் தன் மகளுக்கு
வுட்வார்ட் வைத்தியனின்
கிரைப் 'வாட்டர் என்னும்
மருந்துத் திராவகம்
எப்படி குழந்தைக்கு சுகம்
தருகிறதென்று சொல்லுகிருள்.

WOODWARD'S
GRIPE WATER

W. WOODWARD LTD., LONDON, ENGLAND

சுதேசமித்திரன்

வாரப் பதிப்பு 26 - 7 - '42

பத்திரிகாசிரியர் மஹாநாடு

அகில இந்திய பத்திரிகாசிரியர் மஹாநாடு பம்பாயில் சென்ற வாரம் நடைபெற்றது. மஹாநாட்டில் ஸ்ரீ ஸஹானி ஒரு அறிக்கையைப் படிக்கிருர். (என. என். பி. எஸ்)

சென்றவார நிகழ்ச்சிகள்

காரியக் கமிட்டியின் தீர்மானம்

மொத்தம் ஆயிரம் வார்த்தைகள் கொண்ட ஒருதீர்மானத்தை காங்கிரஸ் காரியக் கமிட்டி இம்மாதம் 14-ந் தேதி வெளியிட்டது. தற்போதைய ராஜீய நிலைமையைக் கமிட்டி பரிசீலித்திருக்கிறது.

இதுவரை காங்கிரஸ் எடுத்து வந்துள்ள நிலைமையைக் கமிட்டி விவரித்துளது. பிரிட்டிஷ் அதிகாரம் இந்தியாவிலிருந்து மறைய வேண்டுமென்று கமிட்டி வற்புறுத்துகிறது. அவசரப்பட்டு எந்த நடவடிக்கையிலும் இறங்க காங்கிரஸ் விரும்பவில்லை என்றும், நேசநாடுகளுக்குச் சங்கடமுண்டாக்கக்கூடிய வித்தைய நடவடிக்கையிலும் இறங்குவதைச் சாத்தியமான வரையில் தவிர்க்கவே விரும்புவதாகவும், காங்கிரஸ் யோசனையை அங்கீகரிக்குமாறு பிரிட்டிஷ் சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுவதாகவும் கமிட்டி கூறியிருக்கிறது.

கோரிக்கை பூர்த்தியாகாமல் போனல் தன்னுடைய ராஜீய உரிமைகளை நிலை நாட்டவும், இந்தியாவின் விடுதலையைப் பெறவும் மகாத்மாவின் தலைமையில் அஹிம்ஸா முறையில் எல்லா நடவடிக்கையும் எடுக்கும்படியான நிர்ப்பந்தம் காங்கிரஸுக்கு ஏற்படும் என அது உரைக்கிறது.

பிரிட்டிஷ் ஆக்ஷி இந்தியாவிலிருந்து மறைந்து விட்டால் நாட்டிலுள்ள பொறுப்புவாய்ந்தவர்கள் ஒன்று பட்டு தற்காலிக சர்க்கார் ஒன்றை அமைப்பர். இந்தச் சர்க்காரில் எல்லா கக்ஷிகளின் பிரதிநிதிகளுமிருப்பர். பிற்பாடு எல்லோரும் ஏற்கக்கூடியதாக இந்திய ஸர்க்காருக்காக ஒரு அரசியலைத் தயாரிக்க ஒரு திட்டம் வகுக்கப்படும்.

பிரச்னைகள் மிகவும முக்கியமானவையாதலால் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியே இறுதியாக முடிவு செய்ய வேண்டுமென்று கமிட்டி தீர்மானித்திருக்கிறது. அ. இ. கா. கமிட்டி ஆகஸ்ட் 7-ந் தேதி பம்பாயில் ஆரம்பமாகிறது.

* * *

மகாத்மாஜி நிபந்தனை

"இந்தியாவின் சுயேச்சையை அங்கீகரிக்காவிடில் 'வாபஸ் யோசனை'யில் எத்தகைய சமரஸப் பேச்சுக்கும் இடமில்லை என்பதை அழுத்தத்துடன் கூற நான் விரும்புகிறேன். இந்தியாவின் சுயேச்சை மாற்ற முடியாதவகையில் அங்கீகரிக்கப்பட்டு விட்டால் பிறகு பல காரியங்கள் நடக்கலாம், மேற்படி ஒரே ஒரு காரியத்தைச் செய்வதன் மூலம் பூரா நிலைமையையுமே பிரிட்டிஷ் பிரதிநிதிகள் மாற்றினராவர். இது வரை எண்ணிக்கையின்றி எத்தனையோ தடவை நம்பிக்கை விழுந்துபோன மக்களிடையே புதிய நம்பிக்கையும் பிறக்கும். ஆகவே பிரிட்டிஷார் என்று அந்த மகத்தான காரியத்தைச் செய்கின்றனரோ அந்த நாள் இந்தியாவின் சரித்திரத்தில் மட்டுமின்றி, உலக சரித்திரத்திலும் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும். அதனல் யுத்தத்தின் கதியும் வெகுதூரம் மாறக்கூடும்" என்று சென்ற 14-ந் தேதி பிற்பகல் பத்திரிகைப் பிரதிநிதிகளுக்கு அளித்த பேட்டியில் மகாத்மா காந்தி தெரிவித்தார்.

* * *

"போய் வருகிறேன்"

தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி கூட்டம் 15-ம் தேதி நடந்தது. அது முடிந்ததும் ராஜாஜி விடைபெற்றுக்கொண்டு கிளம்புகிருர். பக்கத்தில் டாக்டர் ராஜன் நிற்கிருர்.

மௌலானு ஆஸாதுடன் பேட்டி

நிருபர் ஒருவர் மௌலானு ஆஸாதைக் கண்டு பேசிய போது அவர் சொன்ன வருமாறு:—

ஜனநாயக நாடுகளுடன் காங்கிரஸ் எப்போதும் அநுதாபம் செலுத்தச் சித்தமாகவிருக்கிறது. பிரிட்டிஷ் சர்க்காரின் யுத்த ஏற்பாடுகளில் குறுக்கிடக் காங்கிரஸ் எப்போதும் விரும்பியதில்லை. ஜபபானியப் படையெடுப்பைத் தவிர்க்கவே அது விரும்புகிறது. காங்கிரஸ் தானே எல்லா அதிகாரத்தையும் பெற வேண்டுமென்றும் சொல்லவில்லை. எல்லோருக்கும் அதிகாரம் வேண்டுமென்றே அது கோருகிறது. காங்கிரஸுக்கு உண்மையான அதிகாரம் வழங்கப்பட்டால், மற்றக் கட்சியினரையும் அது கலந்து கொண்டு அவர்களையும் தன்னுடன் சேர்த்துக் கொள்ளும்.

முஸ்லீம் லீகிடமோ, அன்றி வேறு கட்சியினரிடமோ பிரிட்டன் அதிகாரத்தைக் கொடுப்பதில் எனக்கு ஆக்ஷேபமில்லை. ஆனல் அந்த அதிகாரம் உண்மையான சுயேச்சையாக இருக்க வேண்டும்; எந்தக் கட்சியாகவிருந்தாலும் மற்றக் கட்சிகளுடன் கலந்து உழைக்காவிட்டால சரிவர காரியங்களைக் கவனிக்க முடியாது. ஆகவே மற்ற கட்சிகளுடன் அது கலந்து ஆலோசிக்க வேண்டியது அத்தியாவசியம்.

* * *

பண்டித நேரு விளக்கம்

புதிய டில்லியில் பத்திரிகை நிருபர்கள் கூட்டத்தில் பண்டித ஜவஹர் பேசுகையில் "இந்தியா சுயேச்சை பெற்றால் இந்திய மக்கள் உற்சாகத்துடனும் தீவிரமாகவும். படையெடுத்து வருவோரை எதிர்த்துப் போராட முடியும், அதனல்தான் இந்தியாவில் பிரிட்டிஷ் ஆதிக்கம் மறைய வேண்டுமெனக் காங்கிரஸ் வற்புறுத்துகிறது. நல்லெண்ணத்துடனில்லாமல் துவேஷத்துடன் இப்போது திடீரென இந்தியாவில் கவர்ன்மெண்டு காரிய நிர்வாக அமைப்பு மாறினல் சங்கடங்கள் சில நேருமென்பது உண்மையே. ஆனல் இபபோதுள்ள நிலைமையை விட எந்த சங்கடமும் மேல் என்றே தெரிகிறது" எனக் குறிப்பிட்டார்.

* * *

ராஜாஜி முடிவு

ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாச்சாரியார் இம்மாதம் 15-ந் தேதி மாலை தியாகராய நகர் ஹிந்திப் பிரசார சபைக் கட்டிடத்தில் நடைபெற்ற சட்டசபைகள் காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் தமது ஜனப்பிரதிநிதி சபை அங்கத்தினர் பதவியையும் கட்சித் தலைமைப் பதவியையும் ராஜீநாமா செய்ய உத்தேசித்திருப்பதைத் தெரிவித்தார்.

இதற்கான காரணங்களையும் அவர் விளக்கினர். கட்சிக் கூட்டத்தை முன்னமேயே கூட்டாமல் காலங்கடத்துவதாகக் கூறப்பட்ட புகார்களுக்கும் அவர் பதிலளித்தார். கட்சிக் கூட்டத்தில் அங்கத்தினர்கள் குறிப்பிட்ட வகையில்நடந்துகொள்ள வேண்டுமென்று மாகாண காங்கிரஸ் கமிட்டி உத்தரவிட முடியாதென்றும் அதுசட்டவிரோதமானதென்றும் ராஜாஜி எடுத்துக் காட்டினர்.

ஜனப் பிரதிநிதி சபைத் தலைவர் கனம் புலுசு சாம்ப மூர்த்தி தமது தலைமைப் பதவியையும், அங்கத்தினர் பதவியையும் ராஜினாமாச் செய்து விட்டதாக ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியார் கூட்டத்தில் அறிவித்தார்.

* * *

கவர்னருக்குக் கடிதம்

ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாச்சாரியார் ஜனப்பிரதிநிதி சபையில் தமக்குள்ள அங்கத்தினர் பதவியை ராஜினாமாச் செய்து சென்ற 16-ந் தேதி சென்னை கவர்னருக்குக் கடிதமெழுதியிருக்கிருர்.

* * *

அவள் அறியாதது

"ரேவதி" எழுதியது

"ஏண்டி காமு, ஒரு சாரியா, உன் பெண்ணுக்கும் கலியாணம் நிச்சயமாச்சாமே? உனக்கு ஒரு பெரிய பாரம் விட்டுது போ! யாராத்துப் பிள்ளை? சம்பாத்தியம் உண்டா? என்ன சீர்? தாலி, கூறை எல்லாம் எடுத்தாச்சா?" என்று மேலே, மேலே கேள்விகளை அடுக்கிக்கொண்டே போனாள் பக்கத்தாத்துப் பார்வதி மாமி.

"என்னமோ அம்மா, ஸ்வாமி க்ருபையாலும் பெரியவா ஆசீர்வாதத்திலும், இந்த மூனு வருஷமா அவர் அலையா அலைந்ததுக்கு, பட்டணத்துலெ. பெரிய இடமா கிடைச்சிருக்கு! அங்கேயே வந்து கலியாணம் செய்து கொடுக்கணமாம்! அடி பங்கஜம்! மாமியை வந்து நமஸ்காரம் பண்ணடி!" என்று தன் பெண்ணைக் கூப்பிட்டு விட்டு, "இன்ஜினீயர் ராமய்யர் பிள்ளை; கம்பெனியில் நூறு ரூபாய் வேலை." என்று காமு அம்மாள் தொடர்ந்து சொன்னாள்.

"இன்ஜினியர் ராமய்யர் பிள்ளையா? எங்க அக்கா பெண்ணுக்குப் பார்த்த பிள்ளைனா? பிள்ளை அம்மை வடு மூஞ்சி, கறுப்புன்னு விட்டுட்டா! இந்தக் கிளியை வளர்த்துப் பூனை கையிலே கொடுப்பாளோடி?" என்றாள் பார்வதி மாமி.

நமஸ்காரம் செய்த பங்கஜம் ஒரு நிமிஷம் மாமியின் கால்களை கெட்டியாகப் பிடித்துக்கொண்டாள். "மஹராஜியாய் இரு!" என்று பார்வதி மாமி மனப்பூர்வமாய் ஆசீர்வதித்தாள்.

பட்டணத்துக்குப் போகும் ரயில் வேகமாகச் சென்று கொண்டிருந்தது, பொழுது விடியும் நேரம். சுப்பய்யரும், காமு அம்மாளும், தூக்கக் கலக்கத்துடன் ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார்கள், பங்கஜம் இந்த உலகிலேயே இல்லை: அவள் மனம் எங்கெங்கோ சஞ்சரித்துக் கொண்டிருந்தது. அம்மை வடு மூஞ்சி, கறுப்பு என்ற இரண்டு வார்த்தைகளும் அவள் உள்ளத்தில் திரும்பத் திரும்ப எழுந்து கொண்டிருந்தன. அவள் கட்டின கோட்டைகள் எல்லாம் அந்த இரண்டு வார்த்தைகளினால் அடியோடு பெயர்ந்து இடிந்து விட்டன. அனுபவமற்ற அவளது சிறு பெண் மனதுக்கு, அழகும், காம்பீகமும் தான் சந்தோஷ வாழ்க்கையின் முக்கிய அம்சங்களாகத் தோன்றின.

அவ் வீட்டிற்குள் நுழைந்ததுமே, இடுப்பில் குழந்தையை வைத்துக் கொண்டு, ஒரு பெண் பங்கஜத்தை நோக்கி அன்புடன் புன்னகை புரிந்தாள். அவளைப் பார்த்தவுடன், பங்கஜத்துக்கு அவளைக் கட்டி அணைத்துக் கொள்ளவேண்டும் என்று தோன்றியது. "அவள் எவ்வளவு அழகாய் இருக்கிறாள்! அவள் முகத்தில் தான் என்ன அலாதி சந்தோஷம்? அவள் குழந்தை தான் எப்படி மூக்கும் முழியுமாய், லக்ஷணமாய் இருக்கிறது! அவள் கணவன் யாரோ?" என்று பங்கஜம் தன்னையே கேட்டுக்கொண்டாள்.

அதே சமயத்தில் அந்தப் பெண், "எங்கே மச்சினரைக் காணோம்? இவ்வளவு அழகாகத் தனக்கு ஒரு பெண்டாட்டி வந்திருக்காள் என்று கர்வமாக்கும்?" என்று வாய்விட்டுச் சொல்லி, தன் கபடமற்ற மனதை வெளிப்படுத்தினாள். இவள் பேசி முடிப்பதற்குள் மாடியிலிருந்து அம்மை வடு மூஞ்சியுடன் கறுப்பாய் ஒருவன் கீழே இறங்கி வந்தான்.

பங்கஜம் தன்னையும் அறியாமல் மூஞ்சியைத் திருப்பிக் கொண்டாள். அவள் தேகம் நடுங்கிற்று. ஆனால் அவனைக் கண்டவுடன், அந்தப் பெண் கண்களில் ஏனோ இதுவரையில் இல்லாத ஒரு பிரகாசம்? அவள் சிரித்த முகத்துடன் அன்பே உருவெடுத்தாற்போல் அவனை நோக்கிச் சென்றாள்.

"ஏன் இவ்வளவு நேரம்? உங்க அம்பி ஆம்படையாளைப் பாருங்கோ? கண்ணைப் பறிக்கிறாப்போலே எப்படி இருக்கா பாருங்கோ!" என்று சொல்லி, மாடிப் படியில் இருந்து வந்த காலடிச் சப்தத்தைக் கேட்டு:— "இதோ, அவரே வந்துட்டாரே!" என்றாள்.

பங்கஜம் திடுக்கிட்டு மேலே பார்த்தாள். நல்ல சிகப்பாய் லக்ஷணமாய் ஒரு யுவன் மாடியில் இருந்து இறங்கி வந்து கொண்டிருந்தான். அவள் மனதில் சொல்லொணாத உணர்ச்சிகள் தோன்றின. அவளுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. அவள் மனதில் சந்தோஷமும், ஆச்சரியமும் மாறி மாறித் தோன்றின. "இந்த மஹாலக்ஷிமியின் ஆசைக் கணவன் நான் வெறுத்தவன்!" என்ற எண்ணம்தான் அவள் மனதில் அடித்துக் கொண்டது. அவள் குழந்தை உள்ளத்திலிருந்து ஒரு கரிய இருள் விலகிற்று!

(முன் பக்கத் தொடர்ச்சி)

பிரிட்டிஷ் கருத்து

காங்கிரஸ் காரியக்கமிட்டித் தீர்மானத்தின் பயனாக பிரிட்டிஷ் கவர்ன்மெண்டின் மனப்பான்மையில் மாறுதல் ஏற்படப் போவதில்லை. காங்கிரஸ் தீர்மானப்படி அதிகாரத்தை அவர்கள் விடுவதானால் நாட்டில் குழப்பமேற்படுத்தாமலும் ஜப்பானியருக்கு வசதியேற்படுத்தாமலும் அவ்விதம் செய்வதற்கில்லை—இதுவே பிரிட்டிஷ் சர்க்கார் மனப்பான்மை என்பதாக ராய்ட்டரின் அரசியல் நிருபர் அறிவிக்கிறார்.

சுதேச சமஸ்தானங்கள் தவிர பத்து கோடி முஸ்லீம்களும் 6 கோடி தாழ்ந்த வகுப்பினரும் காங்கிரஸ் கொள்கையை எதிர்ப்பதைக் கவனிக்க வேண்டுமென்றும் சர்க்கார் கருதுகின்றனரென அவர் தெரிவிக்கிறார்.

* * * *

மகாத்மா பதில்

மகாத்மா 'ஹரிஜன்' பத்திரிகையில் எழுதுவதாவது:—

நான் அசௌக்கியமடைந்து படுத்த படுக்கையாயிருக்க நேர்ந்தால், அஹிம்ஸா இயக்கத்தை எப்படி நடத்த முடியும் எனப் பலர் கேட்கிறார்கள்.

ஆனால், அவ்வளவு கேவலமாக என் தேக நிலை இருப்பதாக டாக்டர்கள் சொல்லவில்லை. நான் மிக்க களைப்படைந்திருப்பதால், அவர்கள் நான் ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும், 15 நாட்களுக்காவது ஒரு குளிர்ந்த பிரதேசத்தில் நான் தங்கி இருக்கவேண்டுமென்றும் யோசனை கூறியிருக்கிறார்கள். நானும் ஓய்வு எடுத்துக்கொள்ள எவ்வளவோ முயன்று பார்க்கிறேன். ஆனால் எனக்குள்ள கடமை என்னை அவ்விதம் ஓய்வு எடுத்துக் கொள்ளவொட்டாமல் தடுக்கிறது; நியாய வழியே நாம் போனால் பலாத்காரமற்ற ஒரு இயக்கத்தை நடத்துவதற்கு தேக அசௌக்கியம் ஒரு தடையாகாது. அதோடு அஹிம்ஸா நெறியுடன் கூடிய ஒரு காரியத்தில் ஆண்டவன் மீது பாரத்தைப் போட்டு அவன் மறைந்து நின்று காட்டும் வழியை அநுசரித்தே நடப்பது வழக்கம் அப்படி இருந்தாலும் சத்திய சோதனையில் ஈடுபட்டிருக்கும் நான் அஹிம்ஸையில் நம்பிக்கை கொண்டிருக்கும்போது களைப்படைவதும் ஒரு குறை யென்றே கருதுகிறேன்; இத்தனையும் பிழையில்லாத பரிபூரண பக்குவமுடைய ஒருவருக்கே பொருந்தும். அந்த பக்குவ நிலையை அடைய நானும் முயலுகிறேனாலும், அப்பா! அதற்கும் எனக்கும் எவ்வளவோ தூரமிருக்கிறது.

* * * *

ஆசியாவில் புதிய ஏற்பாடு

புதிய டில்லியில் கீழ்த்தேச சபை சபையில் முன்பு ஆஸ்திரேலியப் பிரதிநிதியாயிருந்த ஸர் பெர்டிராம் ஸ்டீவன்ஸ் ஒரு கூட்டத்தில் தெரிவித்ததாவது:—

'ஜப்பான் முறியடிக்கப்படுமானால், ஆசியாவில் ஒரு புதிய ஏற்பாடு அமுலுக்கு வந்தேயாக வேண்டும். கீழ்நாடுகள் முன்போல் சிறிதும் எதிர்ப்பின்றி பணிந்து நடக்குமென எதிர்பார்க்க முடியாது. சீனர் இந்தியர், மலேயர், ஜாவா வாஸிகள் இவர்களை சம அந்தஸ்துடன் உள்ள நண்பர்களாக நாம் எண்ணவேண்டும். ஐரோப்பியரது மதிப்பு இதுவரை இருந்து வந்த முறையானது தகர்க்கப் பட்டு விட்டது.

இந்திய ராஜீயத் தலைவர்களுக்கும் பிரிட்டனுக்கும் இடையேயுள்ள பிளவு பெருகி வருவதாகத் தோற்றுகிறதாயினும், இந்தியா ஜப்பானியருக்குத் திட்டமான விரோதி; சீனாவிடம் நெருங்கிய நட்புகொண்டிருக்கிறது. ஜப்பான் வெற்றி படைந்தால் இந்திய சுதந்திரத்தைப்பற்றிய நம்பிக்கை ஒழிந்துவிடுமென்பது இந்தியாவுக்குத் தெரியும்'

தமிழ் நூல்கள்

ஸரஸராஜன்	0	4
ப்ரேமப்ரபா	0	8
சுடர் விளக்கு	0	6
பக்ஷமாலிகா	0	6

சுதேசமித்திரன் ஆபீஸ், சென்னை.

துணிகளை அதிக நன்றாக வெளுப்பதற்கு இந்த விசேஷமான ஸோப்பை உபயோகியுங்கள்.

★ ஆடைகளை அதிக வெண்மையாக் அலக்குகிறது.
★ மெல்லிய வஸ்திரங்களுக்கு கேடிழைப்பதில்லை.
★ வீட்டில் துணிமணிகள் வெளுப்பதை அதிகம் லகுவாக்குகிறது.

A TATA PRODUCT
டாம்கோ விற்பனை இலாகா
நெ. 1, வாரன் ரோட், பீமன்பேட், மைலாப்பூர், மதராஸ்.

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட், டாடாபுரம் & பம்பாய்.
(F S 1951)

சீவக சிந்தாமணி-5.

சீவகன் செய்த கன்னிப்போர்

வ. வேணுகோபாலன் எழுதியது

கட்டியங்காரன் இராசமாபுரத்தே கொடுங்கோலாட்சி செய்து வந்தான். அந்நாளில் ஒரு நாள் அரண்மனையைச் சேர்ந்த பசுக்களும் எருதுகளும் அந்நகரின் பக்கத்து மலையில் வழக்கம் போல் மேய்ந்து கொண்டிருந்தன. அம்மலையில் வேடர்கள் வாழ்ந்து வந்தனர். மன்னவனுடைய பசுக்கள், மலையில் மேய்வதைக் கண்டனர் அவ்வேடர்கள். அந்தப் பசுக்கூட்டத்தைக் கவர்ந்துகொள்வதற்கு அங்கிருந்த வேடரெல்லாரும ஒன்று கூடிப் பேசினர். அப்பொழுது நிமித்தம் கூறுபவனாகிய வேடனொருவன் பசுக்களைக் கவர்வதற்கு நிமித்தம் பார்த்தான். பார்த்தபின் வேடரெல்லாரையும் நோக்கி

"நண்பர்களே! நாம் எண்ணியபடி பசுக்கூட்டத்தைக் கவர்ந்து விடுவோம்; அப்பொழுதே அரசன் படை நம்மைப் பின் தொடர்ந்து போர் செய்யும்; நாம் அரசன் படையைத் தோற்கடிப்போம். ஆனால் அதற்குப் பின் தேரில் ஒருவன் வருவான். அவனால் நாம் துரத்தப்பட்டு பசுக்கூட்டத்தை விட்டு ஓடிப் போவோம்" என்று கூறினன்.

"அறிவில்லாத நிமித்திகனே! உன் நிமித்தம் தப்பி விடும்; அரசன் படை தோற்றுப் போன பின் ஒருவன் வந்து நம்மை என்ன செய்வான்? யமனுயிருந்தாலும் ஒருவனாய் வந்தால் என்ன செய்ய முடியும்? ஆதலால் இப்பொழுதே பசுக்கூட்டத்தைக் கவர்வோம்! வாருங்கள்" என்று கூறி வேடரெல்லாரும் வில்லைக்கையில்கொண்டு புறப்பட்டனர். பசுக்கூட்டங்களிருக்குமிடம் சென்றதும் அவற்றைச் சுற்றி வளைக்க எண்ணினர். அங்குக் காவல் செய்யும் இடையர்களைக் கண்டதும் அவர்கள் மீது அம்பாலெய்து ஓடச்செய்தனர். இடையர்கள் வேடர்களுக்குப் பயந்து மத்தாற்கடையப்பட்ட தயிரைப் போல் சிதறி ஓடி விட்டனர். பின்பு வேடர், பசுக்கூட்டங்களை வளைத்துத் தம்மிடத்திற்கு ஓட்டலாயினர்.

இடையர் மனம் வருந்தி, இடைச் சேரிக்குள் புகுந்து தம் மனைவியரிடம் நிகழ்ந்ததைக் கூறினர். இடைச்சியர் பசுக்களை பிரிந்து வருந்தியிருக்கும் கன்றுகளைத் தழுவிக் கொண்டு வருந்தினர்.

இடையர்கள் எல்லாரும் ஒன்றுகூடி ஆலோசனை செய்து நடந்ததை அரசனிடம் தெரிவிப்பதென்று முடிவு செய்தனர். ஆரவாரத்துடன் இடையரெல்லாரும் கூட்டமாகக் கிளம்பி கட்டியங்காரனுடைய அரண்மனைக்குச் சென்றனர். அங்குக் காவல் புரியும் வாயிற் காவலினிடம் தம் வரவைக் கூறி நிகழ்ந்ததை அரசனிடம் தெரிவிக்குமாறு முறையிட்டனர். வாயிற்காவலன் கட்டியங்காரனிடம் சென்று,

"அரசே, நம் அரண்மனைப் பசுக்கூட்டங்களை வேடர் கவர்ந்துகொண்டனராம். இடையர்களை அடித்துத்துரத்தி விட்டனராம். அவர்கள் சமூகத்திற்கு அறிவிக்கும்படி முறையிட்டு வெளியே நின்றுள்ளார்கள்" என்றான்

அம்மொழியைக் கேட்ட கட்டியங்காரன் அவமானத்தால் வாயிற்காவலன் மீது கோபங்கொண்டு பின்பு தணிந்தான். உடனே இடையர்களை அழைத்து நிகழ்ந்ததை முறையே கேட்டான் அவர்களுடன், தனது பெருஞ்சேனையொன்றை யனுப்பி வேடரைக் கொன்று பசுக்களை மீட்டுவரும்படிக் கட்டளையிட்டான்.

அரசன் படைகள் பேராரவாரத்துடன் நகரத்தை விட்டுப் புறப்பட்டு மலை மீது ஏறிச் சென்றன மிக்க வேகத்துடன் வேடர் பசுக்கூட்டங்களை ஓட்டிச் செல்வதைக் கண்டனர் அரசன் படையினர் உடனே வேடரைப் பின் தொடர்ந்து தாக்கின. வேடர் மீளாக்கோபம் கொண்டு அம்புகளைப் பொழிந்து போர் செய்தனர். சிறிது நேரம் அரசன் படையும் வேடர் படையும் சண்டை செய்தன.

கடைசியாக வேடர்கள் அரசன் படையைப் பேராற்றலுடன் தாக்கித் துரத்திவிட்டனர். ஆயுதங்களை அவ்வவ்விடங்களிலே சிந்தி விட்டு நகருக்குள் ஓடிவிட்டனர். அரசன் படையினர். அதைக்கண்ட இடையர் மேலும் மிகப் பயந்து, ஓடி கட்டியங்காரனிடம் நிகழ்ந்ததைக் கூறினர்.

இடையர்கள் கூறுவதைக் கேட்ட கட்டியங்காரன் வேடருடன் மீண்டும் போர் செய்தற்குப் பயந்து பேசாமல் இருந்து விட்டான்.

'அரசன், வேடருக்குப் பயந்து தம் விஷயத்தில் கவலை எடுத்துக்கொள்ளவில்லை. பசுக்களை மீட்டுக் காப்பது நம் கடமை' என்று உறுதி செய்து கொண்டனர் இடையர். இடையர் தலைவனான கோவிந்தன் என்பவன் புதிதாக ஒரு முடிவு செய்தான்:

'பசுக் கூட்டத்தை எந்த ஆண் மகன் மீட்டுத் தருகிறானோ. அவனுக்கு என் மகள் கோவிந்தையை மணம் புரிவிப்பேன்" என்று கூறி அச்செய்தியை நகர் முழுவதும் முரசறைவித்து தெரியச் செய்தான்.

கோவிந்தன் மகள் கோவிந்தை அழகு மிக்க மங்கைப் பருவத்தினள் என்பதை நன்றாக அறிந்திருந்த பலரும், இந்தக் காரியத்திற்கு ஆயத்தமாயினர். ஆனால் வேடரிடம் போர் செய்தற்குப் பயந்தவராய்ப் பேசாமல் வருந்தியிருந்துவிட்டனர். வேடரை வெற்றிகொண்டு கோவிந்தையை மணப்பது எந்த ஆண் மகனாலும் முடியாதென்று பலரும் வீரம் பேசினர். "வேடரோடு போர் செய்து பசுக் கூட்டத்தை மீளச் செய்யும் வன்மையையுடையவன் ஒருவன்கூட இந்த நகரில் இல்லையே!" என்று ஏங்கியிருந்தான் கோவிந்தன்.

சீவகனுடைய தோள் வலியை அறிந்த ஒருவன், இச்செய்தியை அவனுக்கு அறிவித்தான். அதைக் கேட்ட சீவகன், வேடர் மீது பெருங் கோபம் கொண்டான் பசுக்களைத் துன்புறுத்தும் வேடரை அடக்காத அரசன் மீதும் அடங்காத கோபம் கொண்டான்.

"பசு, பெண்டிர், பாலர், பார்ப்பார் என்றின்னவர்களைக் காப்பது என் கடமை ஆதலால் யானே வேடரிடமிருந்து பசுக்களை மீட்டு வருவேன்; மீட்டு வராது போனால், வேடரிடத்து ஆண்மையையும், பசுவையும் பறிகொடுத்துப் பாற்சோறு விழுங்கி அரசு கட்டிலில் நாய் போலிருக்கும் கட்டியங்காரனாவேன்" என்று சபதம் கூறிச் சில வீரர்களையும் அழைத்துக்கொண்டு தான் தேரில் ஏறி வேடரிருக்கும் இடம் சென்றான் சீவகன்.

முன்பு நிமித்தம் கூறிய வேடன், சீவகனின் தேர் வருவதைக் கண்டதும் அஞ்சி, வேடரை நோக்கி, "இனி நாம் இத்தேரில் வருபவனோடு போர் செய்ய முடியாது". என்று கூவினன். அதைக்கேளாத வேடர்கள், சீவகனை எதிர்த்து நின்று போர் செய்தனர். சீவகன் தன் தேரைக் காற்றைப்போல விரைவாக ஓட்டி நாலாபக்கமும் அம்பு மழையைப் பொழிந்தான். வேடர்கள், சீவகனுடன் எதிர்த்து நிற்கமுடியாதவராய்ப் பயந்து ஓடலாயினர். சீவகன், நீண்ட தூரம் அவர்களைத் துரத்திவிட்டு அங்கு வளைக்கப்பட்டிருந்த பசுக்கூட்டங்களை மீட்டு இடையர் வசம் ஒப்புவித்தான்.

இடையர்கள் சீவகன் செய்த கன்னிப்போரைக் கண்டு ஆச்சரியமும் மகிழ்வும்கொண்டு அவனை வாழ்த்தி நகரில் அழைத்துச் சென்றனர். சுநந்தனும் சுநந்தையும் சீவகனுக்குத் திருஷ்டி கழித்து மகிழ்ந்தனர்.

இச்செய்தியைக்கேட்ட கட்டியங்காரன், தன்னாலாகாத காரியத்தைச் சீவகன் செய்தானென்று மனம் புழுங்கினான்.

இடையர் தலைவனான கோவிந்தன் தான் மொழிந்தபடி, கோவிந்தையைச் சீவகனுக்கு மணம் செய்விக்க ஆயத்தம் செய்தான். சீவகன் தான் அரசகுலமாதலின், இடையர் குலத்தவளான கோவிந்தையை வணிகர் குலத்துப் பதுமுகனென்னும் தன் தோழனுக்கு மணம் செய்விப்பதாகத் தன் மனத்தே நிச்சயித்தான்.

திருமணநாளன்று, மணப்பந்தரில், கோவிந்தன் கோவிந்தையைக் கன்னிகாதானம் [illegible] எண்ணச் சீவகனுக்குத் தன் குலப்பெருமையைக் கூறி அவன் கையில் நீரை வார்த்தான். சீவகன் புன்முறுவலுடன். 'பதுமுகனுக்காக ஏற்றேன்' என்று கூறி நீரையேற்றான். பின்னர் சீவகன் விருப்பப்படி அவன் தோழனை பதுமுகனுக்கும் கோவிந்தைக்கும் மணம் நிகழ்ந்தது.

அடுத்த வாரம்:
கப்பல் கவிழ்ந்தது.

அரிய தமிழ் நாவல்கள்

	ரூ.	அ.
வைதேகி	2	8
பத்மசுந்தரன்	2	0
சாருலோசனா	2	8
காதலின் கனி	2	8
ராதாமணி	2	8
தியாகக் கொடி	2	0
நவநீதகிருஷ்ணன்	2	0
சாமளநாதன்	2	0
மங்களபாரதி	2	0
சண்பகவிஜயம்	1	12
கௌரீமுகுந்தன்	1	12
ஸாரமதி	1	12
தயாநிதி	1	12
உணர்ச்சி வெள்ளம்	1	8
சந்தோஷமலர்	1	8
சோதனையின் கொடுமை	1	8
ராஜமோகன்	1	4
அனாதைப்பெண்	1	4
இன்பஜோதி	1	4
வானக்குயில்	1	[illegible]
கஸ்தூரி திலகம்	1	[illegible]
கானல் நீர்	1	4
புகழ்மாலை	1	4
கலா நிலையம்	1	4
ஜீவியச் சுழல்	1	4
ஆத்மசக்தி	1	[illegible]

சுதேசமித்திர[illegible] சென்னை

ஹிந்திக்கதை

கடமை

★

ஜய சங்கர் பிரசாத்

எழுதியது

மமதா வராந்தாவில் உட்கார்ந்து அதிவேகமாக ஓடும் நதியைப்பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுடைய யௌவனம் உதயசூரியனை ஒத்திருந்தது. மனதில் வேதனை, முகத்தில் கவலைக்குறி, கண்ணீர்த்துளியை வெளிப்படுத்தியகண்கள். வாழ்க்கையையே வெறுத்தவளாக இருந்தாள்! அவள் ரோஹுதாஸ் துர்காபதி அரசனின் மந்திரி சூடாமணியின் ஏகபுத்திரி. அவள் வரையில் சொத்து சுதந்திரத்திற்கு ஒன்றும் குறைவில்லை. ஆனால் அவள் பாலிய விதவை! ஹிந்து மத விதவைகள் வாழ்க்கையில் ...கவும் கேவலமானவர்கள். ...னால் அவர்கள் வாழ்க்கை ...கணவனை இழந்த பிறகு சுகமென்பது ஏது?

சூடாமணி மௌனமாக வராந்தாவினுள் நுழைந்தான். காவிநிறமான நதியில் மன நிம்மதியை ஒன்றி சேர்க்க அவள் ஸ்தம்பித்து அதிலேயே மனதை லயிக்கச் செய்திருந்தாள். தகப்பனார் வந்ததுகூட அவளுக்குத் தெரியாது. சூடாமணி மகளைப் பார்த்து மிகவும் வருத்தப்பட்டான். அன்பு நிறைந்த

> **மொழி பெயர்த்தவர்**
>
> ★
>
> ஸ்ரீ வி. எஸ். வெங்கடேசன்

மகளைப்பற்றிய கவலை அவனை மிகவும் வாட்டியது. சட்டென்று திரும்பி வெளியே போய்விட்டான். அவன் எப்பொழுதும் கலகலப்பாக இருப்பான். ஆனால் அன்று ஏனோ அவன் மனோநிலை மிகவும் தடமாட்டமாகத் தென்பட்டது. கால்கள் கூடச் சரியான பாதையில் செல்லவில்லை!

ஓர் இரவும் பகலும் கழிந்து அவன் மமதா இருக்குமிடம் வந்தான். அச்சமயம் அவனுடன் பத்து சேவகர்கள் வெள்ளித் தட்டில் எதையோ எடுத்து வந்திருந்தார்கள். அவர்கள் காலடிச் சப்தம் கேட்டு மமதா திடுக்கிட்டு எழுந்தாள். மந்திரி சூடாமணி தட்டுகளைக் கீழே வைக்கும்படி அவர்களுக்குச் சைகை செய்தான். அவர்களும் தட்டுகளைக் கீழே வைத்துவிட்டுப் போய் விட்டார்கள்.

"இவை என்ன அப்பா?" என்று மம... கேட்டாள்.

"உனக்... ...அம்மா!-காணிக்கை!". ... ...த தட்... ...ணி...யை எடுத்தான் தங்கக் கட்டிகளின் சோபை மாலைசூரியனின் கிரணத்தால் தாக்குண்டு மின்னல் போல் மின்னின.

மமதா திடுக்கிட்டு "இவ்வளவு தங்கம்! இது எங்கிருந்து வந்திருக்கிறது?" என்று கேட்டாள்.

"பேசாமலிரு மமதா-உனக்காகத்தான் இதெல்லாம்".

"முகம்மதியர்கள் கொடுத்த லஞ்சத்தை நீங்கள் வாங்கிக் கொண்டீர்களா? அப்பா! இவைகளெல்லாம் நல்லதுக்கல்ல—நாசமாக்கத்தான்! திருப்பி அனுப்பி விடுங்கள். நாம் பிராமணர்கள். இவ்வளவு பொன்னை என்ன செய்வது?

"இந்தப் பழைய ராஜ்யம் நிலைத்திருக்காது அம்மா! என்றுவது ஒரு நாள் இவர்கள் மீது முகம்மதியர்கள் படையெடுக்கலாம்—ஆக்ரமிக்கலாம். பிறகு மந்திரி உத்தியோகமேயில்லாமல் போய் விடும்—அப்பொழுதிற்காகத்தான்!" என்றான் சூடாமணி.

"அட கடவுளே! அப்பொழுதுக்காகவா! ஆபத்துக்காகவா! இவ்வளவு ஐஸ்வரியம்! நம் அரசனுக்கு எதிராகவா இவ்வளவு தந்திரம்! அப்பா...பிச்சை கூடக் கிடைக்காதா? ஹிந்துக்கள் யாரும் பிழைத்திருக்க மாட்டார்களா? பிராமணனுக்கு ஒரு பிடி அரிசி கொடுக்க மாட்டார்களா?—உமது நடத்தை கடைசியில் ஆபத்தாக வந்து சேரும். மனதைத் தேற்றிக்கொள்ளுங்கள். என் மனம் தடுமாற்றமாயிருக்கிறது — இந்தப் பொன் கட்டிகள் என் கண்களைக் குருடாக்கி விடுகின்றன!" என்றாள் மமதா.

"புத்தியில்லாதவள்" என்று சொல்லிய வண்ணம் சூடாமணி வெளியில் போய்விட்டான்.

மறுநாள் நகரத்தில் மூடு பல்லக்குகள் வரிசை வரிசையாக வந்தன. மந்திரி சூடாமணி அவைகளைப் பார்த்ததும் சற்று திடுக்கிட்டான். அவன் தன்னைச் சமாளித்துக் கொள்ள முடியவில்லை. அவன் பல்லக்கின் மூட்டங்களைத் திறக்க எண்ணி அவ்விடத்திற்குச் சென்றான். அதற்குள் பட்டாணியர்கள் அவனைத் தடுத்து "இது எங்களை அவமானப் படுத்துவது போன்றது" என்று சொன்னார்கள் பேச்சு முற்றியது. கத்தியை உருவிக் கொண்டார்கள் பிராமணன் அங்கேயே அடிபட்டு இறந்து விட்டான். ராஜா ராணி மற்றும் அவர்களுடைய சிப்பந்திகள் உள்பட அனைவரும் ஷேர் ஷாவினிடம் அகப்பட்டுக்கொண்டார்கள்—மமதா மாத்திரம் எங்கோ மறைந்து விட்டாள். பல்லக்கினுள் மறைந்திருந்த பட்டாணியச் சிப்பாய்கள், நகர்மெங்கும் தேடியும் மமதா அகப்படவில்லை.

2

காசிக்கு வடக்கே மௌரியர்களுடையதும் குப்த வம்சத்தினரதும் அதிக கீர்த்தி பெற்றிருந்தது.

கௌதம புத்தருடைய உபதேசங்களை வெளியுலகத்துக்குப் பரப்ப பல பிக்ஷுக்கள் முதல் முதலாக தர்ம சக்ரவிஹாருக்கு வந்திருந்தார்கள். அங்கு மிகவும் பாழடைந்த குடிசை ஒன்றில் மமதா "அனன்யா சிந்தயந்தோ மாம்யேஜனா: பர்யுபாஸதே" என்று பாடிக்கொண்டிருந்தாள். அவள் பிக்ஷுக்களைப் பார்த்ததும் சட்டென்று தன் சுலோகத்தை நிறுத்திக்கொண்டாள். ஒரு அகல் விளக்கு மந்தமாக எரிந்து கொண்டிருந்தது. அவள் கதவைச் சாற்றித் தாளிட எத்தனித்தாள். ஆனால் அதற்குள் வழிப்போக்கன் ஒருவன் "அம்மா, எனக்குக் கொஞ்சம் தங்க இடம் வேண்டும்" என்று கேட்டான்.

"நீர் யார்?" என்று மமதா கேட்டாள்.

"நான் 'முகல்' வம்சத்தினன். இந்த யுத்தத்தில் ஷேர் ஷாவினிடத்திலிருந்து தப்பித்துக் கொண்டு வந்துவிட்டேன். உயிரைக் காப்பாற்றிக்கொள்வதற்காக! மிகவும் களைத்து விட்டேன். இந்த இரவில் என்னால் ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியாது"

"ஷேர் ஷாவினிடத்திலிருந்தா?" என்று கேட்டு அவள் உதட்டைக் கடித்துக்கொண்டாள்.

"ஆமாம் அம்மா!"

"அப்படியானாலும் நீரும் அவர்களைப்போல் தான் இருப்பீர்கள்—தயவு தாட்சண்ணியமின்றி உங்களையும் யுத்த வெறி பிடித்திருக்கும். அதே கொடுமைத்தனத்தின் பிரதிபிம்பம் உங்கள் முகத்தில் ஜொலிக்கிறது—என் குடிசையில் உங்களுக்கு இடமில்லை, வேறு எங்காவது போங்கள்!" என்றாள் மமதா.

"நாக்கு வரண்டுவிட்டது. கூடயிருந்தவர்கள் என்னை விட்டுவிட்டுப் போய்விட்டார்கள். குதிரையும் களைத்து விழுந்துவிட்டது—மிகவும் களைத்திருக்கிறேன்" என்று சொல்லிக் கொண்டே அவன் களைப்பின் மிகுதியால் உட்கார்ந்தான். அவன் தலை சுழன்றது. 'இந்தச் சனியன் எங்கிருந்து வந்தது' என்று மமதா நினைத்துக்கொண்டாள். அவனுக்குக் குடிக்கத் தண்ணீர் கொடுத்தாள். அவன் சற்று சாந்தியடைந்தான். எல்லாரும் தயவு தாட்சண்யமின்றி இருக்கமாட்டார்கள். என் தகப்பனரை இதே ஜாதியினன் தானே கொன்றான்!-என்று மனதில் நினைத்துக்கொண்டாள்.

சற்று களைப்பு தணிந்தவுடன் "அம்மா, நான் போகட்டுமா?" என்று அவன் கேட்டான்.

'நான் பிராமண ஜாதியினள். என். மத தர்மப்படி நடக்க வேண்டும். அதிதி... உபசரிக்க வேண்டும்! ஆனால் இங்கு... இல்லை! இல்லை!! எல்லா மதத்தினரிடமும் காட்டக் கூடாது. ஆனால் இது தயவில்லையே—கடமையைச் செய்ய வேண்டும். பிறகு?' என்று மனதினுள்ளேயே எண்ணிக் கொண்டாள்.

அவன் தன் கத்தியை ஊன்றி எழுந்து நின்றான். மமதா சட்டென்று "என்ன ஆச்சரியமாயிருக்கிறது, நீங்கள் வஞ்சனை செய்வது; இருங்கள்" என்றாள்.

"வஞ்சனை இல்லை. எப்பொழுதுமில்லை. அம்மா! போகிறேன். தைமூரின் வம்சத்துப் பெண்களிடமா வஞ்சனை செய்வேன்?' விதியின் விளையாட்டு"

மமதா மனதினுள்ளேயே 'இங்கு யார் முகம்மதியர்களிருக்கிறார்கள்! இது என் குடிசை. எது வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளட்டும், என் கடமையைச் செய்தே தீருவேன்!' என்று எண்ணிக் கொண்டு அவள் குடிசையை விட்டு வெளியில் வந்து "பயத்தினால் மிகவும் களைப்படைந்திருக்கிறீர்; போங்கள் உள்ளே! நீங்கள் யாராக வேண்டுமாயினுமிருங்கள். உங்களுக்கு நான் தங்க இடம் தருவேன். நான் பிராமண ஜாதியினள். எல்லோரும் தங்கள் மதக்கோட்பாடுகளை விட்டுவிட்டாலும் நானும் அப்படிச் செய்வதா?" என்றாள்.

அவன் சந்திரனின் ஒளியில் அவள் முகத்தைப் பார்த்தான். அவன் மனதிலுள்ளே அவளுக்கு வந்தனம் செய்தான். மமதா, பக்கத்திலிருந்த இடிந்த சுவற்றின் பக்கம் போனாள். களைத்திருந்த அவன் குடிசையினுள் சென்றான்.

சூரியோதயமானதும் மமதா தெருவின் பக்கம் பார்த்தாள். அநேக குதிரை வீரர்கள் அங்குமிங்குமாகச் சுற்றிக் கொண்டிருந்தார்கள். அவள், தான் ஏதோ முட்டாள் தனம் செய்து விட்டதாக எண்ணித் தன்னை நொந்து கொண்டாள்.

மொகல் ஜாதியினன் குடிசையை விட்டு வெளியில் வந்து "மிர்ஜா—இதோ, இங்கே இருக்கிறேன்" என்றான்.

அந்தக் குரலைக் கேட்டுச் சேனைகள் ஆரவாரித்தன. மமதா மிகவும்பயந்து போனாள். வழிப்போக்க மொகல் வம்சத்தினன் "அந்த ஸ்திரீ எங்கே? அவளைத் தேடிப் பிடியுங்கள்" என்றான். மமதா பயந்து காட்டினுள் ஓடிமறைந்துகொண்டாள், நாள் முழுவதும் அங்கிருந்து வெளிக்கிளம்பவே இல்லை. மாலை அவர்கள் போவது தெரிந்து அவள் குடிசையின் மறைவில் வந்தவுடன்மொகல்வம்சத்தினன் குதிரை மீது ஏறி நடையைச் செலுத்தியப்படி "மிர்ஸா, அந்த ஸ்திரீக்கு நான் எதுவும் கொடுக்க முடியாமல் போய் விட்டது. அவளுடைய குடிசையை நன்றாகக் கட்டிக் கொடுத்து விடு-நான் ஆபத்திலிருந்த சமயம் இங்கு தான் தங்கினேன். இந்த இடத்தை மறக்கக் கூடாது" என்று அவன் சொன்னதைக் கேட்டாள்.

(15-ம் பக்கம் பார்க்க)

போலிஷ் ஒற்றன்

★

உளவாளிக் கதை

★

'நியாயவாதி'

★

இந்த யுத்தம் ஆரம்பமாவதற்கு சில காலத்துக்கு முன், போலீஸ் வேவு இலாகாவில் உயர்ந்த ஸ்தானம் வகித்த காப்டன் ஸாஸ்னௌஸ்கி (Sosnowki) பெர்லினுக்கு அனுப்பப்பட்டான். அவன் சாமர்த்தியத்தையும் சாகஸத்தையும் நன்குணர்ந்துள்ள போலீஸ் ராஜாங்கம் அவனிடம் அவனுக்கு ஒரு முக்கியமான ரகசிய வேலையை அளித்திருந்தது. அது என்னவெனில் ஜெர்மன் ராணுவ அதிகாரிகளால் தயாரிக்கப்பட்ட போலந்து படையெடுப்பு ரகசிய திட்டத்தைப்பற்றிய தகவல்களை அறிந்து வருவது என்பதே.

அச்சமயம் ஜெர்மனிக்கும் போலந்துக்கும் ஏற்கனவே ஏற்பட்ட சிநேக ஒப்பந்தம் அமுலில் இருந்தது. எனினும் ஹிட்லருக்கு டான்ஸிக் மீதும் "காரிடார்" (Corridor) என்ற வழிநடைப் பிரதேசத்தின் மீதும் ...பொழுதும் குறி இருந்தது என்பதைப்பற்றி போலீஸ் அதிகாரிகளுக்கு யாதொரு சந்தேகமுமில்லை. அவற்றைக் கைப்பற்ற அவர் யுத்த சன்னாகம் செய்துகொண்டிருந்தார் என்று அவர்கள் அஞ்சினார். அவரது படையெடுப்புத் திட்டத்தை முன் கூட்டியே அறிந்துகொண்டால் அதைத் தடுக்க வல்ல எதிர் நடவடிக்கைகளையும் பாதுகா...களையும் எடுத்துக்கொள்ளலாம் என்பது அவர்களது கருத்து.

சிங்கார புருஷன்

பெர்லினுக்குச் சென்ற அந்த போலீஸ்ஒற்றன் உயர்ந்த சமூகத்தில் பழக ஆரம்பித்தான். ஜெர்மன் பாஷையிலும் ஜெர்மன் நடையுடை பாவனைகளிலும் அவனுக்கு நல்ல தேர்ச்சி இருந்ததால் அவனுடன் பழகிய பிரபுக்களாலும் சீமாட்டிகளாலும் அவன் நன்கு மதிக்கப்பட்டது ஒரு வியப்புக்குரிய விஷயமன்று. உல்லாஸமாய்ப்பொழுது போக்கி, கவலையின்றி பணத்தைச் செலவழித்த அவன் ஒரு சிங்கார புருஷனாக விளங்கினான்.

ஜெர்மன் நகரத்தில் உயர்ந்த சமூகத்தைச் சேர்ந்த ஸ்திரீகள் பலர் அவன் மீது ப்ரியம் கொண்டனர். அவர்களில் வான் பர்க் சீமாட்டி தான் அவனிடத்தில் தனது உள்ளத்தைப் பறிகொடுத்துத் தத்தளித்தாள். கண்ணைக் கவரும் எழிலையும் யௌவனத்தின் சோபையையும் பெற்ற அவன் மீது போலீஸ் ஒற்றனுக்கும் காதல் ஜனித்து விட்டது. இப்படி பரஸ்பரம் பிரேமை கொண்ட அவர்கள் வெகு சீக்கிரத்தில் கருத்தொத்த ஜோடியாகிவிட்டனர். வான் பர்க் சீமாட்டி ஏற்கனவே விவாகமானவள். அவள் கணவன் ஒரு கண்ணியம் வாய்ந்த பிரபு. எனினும் அவள் தனது கடமையை மதிக்கவில்லை. தனது புருஷனுக்குத் தான் துரோகியாகிவிட்டதைப்பற்றி அவளுக்கு யாதொரு சிந்தனையுமில்லை. தனது காதலனுடன் எல்லையற்ற இன்பத்தில் மூழ்கியிருப்பதைவிட தனது வாழ்க்கையில் பெறக்கூடிய பேறு வேறு யாதுமில்லை என்று அவள் எண்ணினாள்.

இப்படி புதிதாகத் தனக்கு வாய்த்த காதலியின் துணையில் தனக்கு நல்ல அனுகூலம் ஏற்படும் என்பது போலீஸ் ஒற்றனின் நினைவு. வான்பர்க் சீமாட்டி தனக்காக நெருப்பில் விழச்சொன்னாலும் விழத் தயங்கமாட்டாள் என்பதை நன்குணர்ந்த அவன் ஒரு நாள் அவளிடம் தன் கருத்தை வெளியிட்டான். தான் ஜெர்மனியில் தங்கியிருப்பதன் உண்மை நோக்கம் என்னவென்பதை அவன் அவளிடம் ஒளிக்காமல் கூறி, "எனது நாட்டுக்கு ஏற்படவிருக்கும் ஆபத்தை தவிக்கவே நான் இந்த வேலையை மேற்கொண்டு வந்திருக்கிறேன். நீ எனக்கு ஒத்தாசை செய்வாயா?" என்று வினவினான்.

அவன் வேண்டுகோளுக்கு அவன் காதலி இணங்கினாள் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

யாவற்றையும் மறந்தாள்

அவள் தனது நாட்டை மறந்தாள். தனது கடமையை மறந்தாள். தனக்கு ஏற்படக்கூடிய ஆபத்தையும் மறந்தாள். தனக்கு சித்திக்கக்கூடிய அவமானத்தையும் இழிவையும் மறந்தாள். காதலே அவள் உள்ளத்தில் வியாபித்து மற்ற எல்லாவற்றையும் விரட்டியது.

அவளுக்கு உறவினளான நாட்ஸ்னர் என்ற கன்னிகை ஜெர்மன் ராணுவ காரியாலயத்தில் 'டைப்' அடிக்கும் பணிமகளாக உத்தியோகம் பார்த்து வந்தாள். அவளுக்குக் கிடைத்த சொற்ப சம்பளம் அவளது செலவுக்குப் போதவில்லை அதை ஏற்கனவே டிபோர்க் சீமாட்டி நன்குணர்வாள்.

ஆதலால் டைப் அடிக்கும் கன்னியைச் சரிப்படுத்துவது அவளுக்கு ஒரு பிரமாதமான காரியமன்று. அவளும் அவன் காதலனும் அளித்த லஞ்சத் தொகை க... அப்பேதையின் அறிவை மயக்கியது, யாதொரு சிரமுமின்றி ஏராளமான பணத்தைப் பெறுவது அவளுக்கு அளவற்ற ஆனந்தத்தைக் கொடுத்தது. அவள் தனது கடமையை மறந்தாள். தனது நாட்டுக்குத் துரோகம் பண்ணவும் துணிந்துவிட்டாள்.

தனது மேலதிகாரிகளால் அவ்வப்பொழுது டைப் அடிப்பதற்காகத் தன்னிடம் கொடுக்கப்பட்ட தஸ்தாவேஜுகளை 'டைப்' அடித்தபின் தன்னிடமுள்ள. கார்பன் காகிதங்களை (Carbon Sheet) ஸாஸ்னௌஸ்கியிடம் கொடுப்பதாக அவள் ஒப்புக்கொண்டாள்: அதற்காக பெருத்த தொகைகளை அவளுக்கு அளிப்பதற்கு இசைந்தான்.

மகளிடம் பிரஸ்தாபம்

நாட்கள் கழிந்தன. போலிஷ் ஒற்றன் தாராளமாய்க் கொடுத்து வந்த லஞ்சத் தொகைகளால் நாட்ஸ்னர் உல்லாஸமான வாழ்க்கையை மேற்கொள்ளலானாள். நல்ல உடைகளையும் விலையுயர்ந்த நகைகளையும் தரித்து ஒரு சீமாட்டியைப் போன்று மிளிர்ந்த அவளுக்கு தான் வழக்கமாகப் பெற்று வந்த சொற்ப சம்பளத்துக்கு அத்தகைய வாழ்க்கை ஏற்றதன்று என்பதை உணரவில்லை.

ஒரு நாள் கிராமத்திலிருந்து அவளைப் பார்க்க வந்த அவளது தாய் அவளது டாம்பீகத்தையும் ஆடம்பரத்தையும் கண்டு திகைத்துவிட்டாள். முன்பெல்லாம் மிகுந்த சிக்கனமாய் எளிய வாழ்க்கையை நடத்திய போதிலும் அவளது சம்பளம் அவளது செலவுக்குப் போதவில்லை என்பதை கிழவி அறிவாள். இப்பொழுதோ பெண் தாராளமாய் பணத்தை வாரியிறைத்து உல்லாசமாய்ப் பொழுதுபோக்கியது அவளுக்கு திகைப்பையும் பிரமிப்பையும் கொடுத்தது. உடனே அவள் அந்த விஷயத்தைப் பற்றி மகளிடம் பிரஸ்தாபித்தாள்.

"அம்மா! உன் சம்பளத்துக்கு நீ இப்படி செலவு செய்வது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறதே? உனக்கு ஏது இவ்வளவு பணம்?" என்று வினவினாள் தாய்.

"அப்பா உயிருடன் இருந்தபொழுது அவருக்குப் பிராண சிநேகிதராயிருந்த மேஜர்ஜியை உனக்குத் தெரியாதா? அவர் எனக்கு உதவி செய்து வருகிறார்" என்றாள் மகள்.

தனது ராஜாங்கத்துக்குத் துரோகம் செய்து வருவதையும், அதனால் தனக்குக் கிடைத்த லஞ்சத்தையும் பற்றி அவள் தனது தாயிடம் சொல்ல மனம் கூசினாள். அதனால அப்படிப் பொய் கூற அவள் துணிந்தாள்.

பெண் சொன்னது உண்மையென்று நம்பினாள் கிழவி. திருப்தியுடன் அவள் தனது கிராமத்துக்குத் திரும்பினாள்.

மேஜரின் ஆச்சரியம்

சில தினங்களுக்குப் பின் அவள் தனது கணவனின் நண்பனை மேஜர்ஜியை சந்திக்கும்படி நேரிட்டது. தனது மகளுக்கு அவன் அளித்து வந்த உதவியைப் பிரஸ்தாபித்த அவள் தனது நன்றியறிதலைத் தெரிவித்தாள்.

மேஜரின் ஆச்சரியத்துக்கு ஒரு எல்லையில்லை. ஏனெனில் அவள் கிழவியின் மகளுக்கு யாதொரு உதவியும் செய்யவில்லை. ஆனால் அப்பெண் எதற்காக அப்படி பொய் கூறவேண்டும்? அவனது மனம் சிந்தனையில் ஆழ்ந்தது.

பெர்லினில் உல்லாஸ வாழ்க்கை நடத்த விரும்பும் பெண்கள் வெகு சீக்கிரத்தில் தங்களது ஒழுக்கத்தையும் கற்பையும் இழந்து விடுவது மேஜருக்குத்தெரியாத விஷயம் அல்ல. தனது நண்பனின் மகளும் அத்தகைய படுகுழியில் விழுந்து விட்டாளோ என்ற பயம் அவனை வாட்டியது. வேவு இலாகாவில் இருந்த தனது நண்பனிடம் அவன் ஒரு நாள் அவ்விஷயத்தைக் கூறி டைப் அடிக்கும் பெண் மீது மோருல் வைக்க ஏற்பாடு செய்தான்.

ஜெர்மன் வேவு இலாகாவின் கவனம் அப்பேதைப் பெண் மீது விழுந்தது. அவள் போலிஷ் ஒற்றனிடம் அடிக்கடிச் சென்றதும் அவனிடமிருந்து பணம் பெற்று வந்ததும் வேவு அதிகாரிகளுக்கு வெட்ட வெளிச்சமாயிற்று. அவளது நடவடிக்கைகளின் மீது அவர்கள் கண்ணுங் கருத்துமாய் இருக்க ஆரம்பித்தனர்.

போலந்து மீது படையெடுப்புத் திட்டத்தைப்பற்றிய ரகசிய அறிக்கை ஜெர்மன் ராணுவ அதிகாரிகளால் த...ரிக்கப்பட்டிருந்தது. அதை ... ...ம் வேலையில் ஈடுபட்டிருந்த நாட்ஸ்னர் தன்னிடமுள்ள "கார்பன்" காகிதங்களை எடுத்துக்கொண்டு போலிஷ் ஒற்றனின் இருப்பிடத்துக்குச் சென்றாள். அதற்காக அவன் ஒரு பெருந் தொகை கொடுப்பதாக வாக்களித்திருந்தான்.

எல்லாம் வெளியாகியது

ஆனால் என்ன விபரீதம்! அவள் ஜெர்மன் போலீசாரால் கைது செய்யப்பட்டாள். போலீஸ் உத்தியோகஸ்தர்கள் அவளைச் சிறையில் பயமுறுத்தி விசாரணை செய்தனர். இனி விஷயத்தை மறைப்பதில் பயனில்லை என்பதை உணர்ந்த அவள் எல்லாவற்றையும் ஒளிக்காமல் கூறி விட்டாள்.

போலிஷ் ஒற்றனும் அவளது காதலியும் கைது செய்யப்பட்டனர். இருவரும் தண்டனையில் இருந்து தப்ப முடியாது என்று அஞ்ச வேண்டியதாயிருந்தது. ஏனெனில் அவர்களது குற்றத்தை நிரூபிக்க பலமான ருஜுக்கள் இருந்தன.

ஆனால் போலிஷ் ஒற்றனை அவனது ராஜாங்கம் கைவிடவில்லை. அது விரைவில் எதிர் நடவடிக்கை எடுத்துக் கொண்டது. வார்ஸாவிலிருந்த ஒரு ஜெர்மன் ஒற்றனை அது கைது செய்து சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்ற ஒரு ராஜீயக் கொலையில் அவனைச் சம்பந்தப்படுத்த முயன்றது.

அதன் பயனால் போலிஷ் ஒற்றன் விடுதலை பெற்றான். அவன் போலந்துக்கு திருப்பியனுப்பப்பட்டான். அவனுக்குப் பதிலாக போலந்தில் கைதியாய் வைக்கப்பட்ட ஜெர்மன் ஒற்றன் பரிவர்த்தனை செய்யப்பட்டு ஜெர்மனிக்கு திருப்பியனுப்பப்பட்டான்.

ஆனால் ஒற்றனின் காதல்

(16-ம் பக்கம் பார்க்க)

நீதிக் கதை

மோசம் வெளியானது

எ. எஸ். பி. அய்யர்
ஐ. ஸி. எஸ்.

குல் சண்ட் என்னும் பெயருடைய பெரிய பணக்காரன் ஒருவன் இருந்தான். அவன் வட்டிக்குப் பணம் கடனாகக் கொடுப்பது வழக்கம். அந்த வட்டி வியாபாரியிடம் அப்பு மாதம் அறுபது ரூபாய் சம்பளத்தில், குமாஸ்தாவாக அமர்ந்தான். நாள் ஒன்றுக்கு பனிரெண்டு மணி நேரம் அவன் வேலை செய்ய வேண்டியிருந்தது. சம்பளத்தைத் தவிர, ஒரு தம்பிடி கூட எந்த வகையிலும் அவனுக்குக் கிடைக்கவில்லை. குல்சண்ட் என்பவனோ அதிக கெட்டிக்காரன், வேலை வாங்குவதில் நிபுணன்; மிகவும் அழுத்தமான மனிதன். அதனால் அப்புவுக்கு குல்சண்ட் என்னும் தன் அதிகாரியைக் கண்டால் பிடிக்கவில்லை. வேறொரு நல்ல எஜமானனைக் கண்டு பிடிக்க அப்பு எண்ணினான். அச்சமயம் தீராத வயிற்று வலியால் குல் சண்ட் அதிக கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தான். ரண சிகிச்சையில் நிபுணரென்று பெயரடைந்திருந்த பிஜுர் என்னும் பம்பாய் வைத்தியரிடம் சிகிச்சை செய்துகொள்ள குல் சண்ட் தீர்மானித்தான். உடனே அவன் பம்பாய்க்குச் சென்றான். அவன் தன்னுடன் அப்புவையும் கூட்டிக்கொண்டு சென்றான், அப்புவுக்கு மூன்றாம் வகுப்பு டிக்கட் ஒன்று வாங்கிக் கொடுத்து, செலவிற்கு ஒரு ரூபாயும் கொடுத்தான். பம்பாய் சேர்ந்ததும் வட்டி வியாபாரி அப்புவிடம் பின் வருமாறு சொன்னான்: "நான் வைத்தியரிடம் செல்கிறேன். நான் யாரென்று தெரிந்தால். எனக்கு ரண சிகிச்சை செய்ய அவர் ஐந்நூறு ரூபாய்கள் கேட்பார். ஏழைகளிடம் அவர் விசுவாசமுள்ளவர். ஆகையால். அவர் ஏழைகளுக்கு சிகிச்சை செய்ய நூறு ரூபாய்களே வாங்கிக்கொள்வது வழக்கமாம். ஆகையால், நான் கோவணத்தைக் கட்டிக்கொண்டு போய், ஏழை மாதிரி நடித்து நூறு ரூபாய்கள் கொடுத்து சிகிச்சை செய்துகொள்ளப் போகிறேன்!" "அப்படியானால் நான் தங்களுடன் கூட வர வேண்டியதில்லையே" என்றான் அப்பு. "வேண்டாம். நீ உன் இஷ்டம்போல் பத்து தினங்கள் எங்கு வேண்டுமானாலும் போகலாம். உன் உதவி எனக்கு பத்து தினங்களுக்கு வேண்டியதில்லை" என்று குல்சண்ட் சொல்லிவிட்டான். "அப்படியானால் பத்து தினங்களுக்கு எனக்குச் சேரவேண்டிய சம்பளமாகிய இருபது ரூபாய்களைக் கொடுத்து விடுங்கள். நான் இவ்விடத்தில் ஹோட்டலில் ஒரு அறையை அமர்த்திக்கொண்டு இருக்கிறேன். என்னுடைய சாப்பாட்டுச் செலவு முதலியவைகளுக்கு எனக்கு பணம் வேண்டும்" என்று அப்பு சொன்னான். 'என்ன! சம்பளமா கேட்கிறாய்? நீ வேலை செய்யாத தினங்களுக்குக் கூடவா நான் உனக்கு சம்பளம் கொடுக்க வேண்டும்? நான் அப்படி கொடுக்கும் வழக்கமில்லை. இந்த பத்து தினங்களுக்கு உனக்கு ஒரு தம்பிடி கூடக் கிடைக்காது. வேண்டுமென்றால் முன் பணமாக நான் உனக்கு இருபது ரூபாய் கொடுக்கிறேன்; பிறகு உன் சம்பளத்திலிருந்து கழித்துக் கொள்கிறேன். நான் வைத்தியசாலையிலிருந்து வெளி வந்த பிறகு நீ உன் வேலையைத் தொடங்கும் தினத்திலிருந்து தான் உனக்கு சம்பளம் கொடுக்கப்படும்' என்றான் குல்சண்ட். அப்பு எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் அவன் கேட்கவில்லை. அப்பு குல் சண்ட் கொடுத்த இருபது ரூபாய்களை வாங்கிக் கொண்டான். தன் எஜமானனுக்கு புத்தி வரும்படிச் செய்ய வேண்டுமென்று அப்பு தீர்மானித்தான்.

வட்டி வியாபாரி, கோவணத்தைக் கட்டிக் கொண்டு, பிஜுர் என்னும் வைத்தியரிடம் சென்று தான் பரம ஏழை என்று சொல்லிக் கொண்டு. சிகிச்சைக்கு நூறு ரூபாய்கள் கொடுப்பதாக ஏற்பாடு செய்து கொண்டார். ரண சிகிச்சைக்கு முன்பு வியாதியஸ்தர்கள் பார்வையிடப்படும் அறைக்கு அவர் அனுப்பப்பட்டார். அந்த சமயத்தில் வாடகை மோட்டார் வைத்துக்கொண்டு அப்பு அந்த வைத்தியரின் ஆஸ்பத்திரியை அடைந்தான். அப்பு நேராக வைத்தியரிடம் சென்றான். 'வைத்தியரே, கீர்த்தி வாய்ந்த வட்டி வியாபாரியான குல் சண்ட் என்பவருக்கு ரண சிகிச்சை செய்தாகி விட்டதா?' என்று அப்பு கேட்டான். 'இவ்விடத்தில் ஒரு வட்டி வியாபாரியும் இல்லை. பரம ஏழையான குல் சண்ட் என்னும் ஒரு மனிதன் இப்போது தான் ரண சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு வந்திருக்கிறார்' என்றார் வைத்தியர். 'அவருடைய வியாதி தீராத வயிற்று வலி அல்லவா?' என்று அப்பு கேட்டான். 'ஆம்' என்று மனக் குழப்பத்துடன் வைத்தியர் பதிலளித்தார். 'குள்ளமாயும், பருமனாயும், சிறிய கண்களையுடையவராயும் அவர் இருப்பார். அவருடைய மூக்கின் மீது ஒரு பரு இருக்கும்' என்று அப்பு அடையாளம் சொன்னான். 'ஆம்' என்று ஆச்சரியத்துடன் வைத்தியர் சொன்னார். 'அப்படியானால், என்னுடைய எஜமானராகிய குல்சண்ட் என்னும் பெரிய வட்டி வியாபாரியாகத் தான் இருக்கவேண்டும். நான் அவருடைய அந்தரங்க காரியதரிசி. அவரைத் தாங்கள் ஏழையென்று சொல்வது ஆச்சரியமாக இருக்கிறது. அவருக்கு ஒரு வருஷத்தில் கிடைக்கும் வட்டியைக்கொண்டே, அவர் இந்தத் தெரு முழுவதையும் விலைக்கு வாங்கிவிட முடியும், என்று அப்பு எடுத்துச் சொன்னான். 'அப்படியா சமாச்சாரம்' என்று வைத்தியர் சொல்லிவிட்டு, குல்சண்ட் என்

ஹிந்து மகா சபைத் தலைவர்

அகில இந்திய ஹிந்து மகா சபைத் தலைவர் வீர ஸவர்க்கார் காஷ்மீர ஹிந்து சிக்கிய மஹா நாட்டில் தலைமை வகிக்க ஜம்முவுக்கு லாகூர் வழியாகச் சென்ற போது ஸ்டேஷனில் அவருக்கு மஹத்தான மரியாதை காட்டப்பட்டது. வீர ஸவர்க்கார் பிரபல அகாலித் தலைவர் மாஸ்டர் தாரா ஸிங்குடன் நிற்பதைப் படத்தில் பார்க்கலாம். (என் எஸ். பி. எஸ்.)

பவரைக் கூப்பிட்டு 'நீ என்னை ஏமாற்றிவிட்டாய். நீ பெரிய பணக்காரனென்று தெரிகிறது. என்று சொன்னார். 'இல்லை' என்றான் குல்சண்ட். 'நீ பொய் பேசுவதனால் பயனில்லை. உன்னுடைய அந்தரங்கக் காரியதரிசி உன்னைப் பார்ப்பதற்காக அடுத்த அறையில் காத்துக் கொண்டிருக்கிறார்' என்றார் வைத்தியர். 'யார் அப்புவா?' என்று கோபத்துடன் குல் சண்ட் கேட்டான். 'ஆம். அதே பெயருடையவன் தான். பணக்கார வியாதியஸ்தர்கள் எனக்கு ஐந்நூறு ரூபாய்கள் கொடுத்துத்தீரவேண்டும். நீ என்னை மோசம்செய்ய எண்ணியதால், எனக்கு நீ ஆயிரம் ரூபாய்கள் கொடுத்தால் தான் நான் உனக்கு சிகிச்சை செய்வேன். கொடுப்பதற்குத் தயாராயிருந்தால் கொடு. இல்லையேல். இப்பொழுதே நீ இவ்விடம் விட்டுப்போய் விடு, என்று வைத்தியர் சொன்னார். குல் சண்ட் என்பவனுக்கு மற்ற வைத்தியர்களிடம் நம்பிக்கை இல்லை. ஆகவே. வைத்தியருக்கு ஆயிரம் ரூபாய்களை குல்சண்ட் கொடுத்தான். அப்புவுக்கு இருபது ரூபாய்கள் கொடுக்க மறுத்ததனால் தனக்கு தொள்ளாயிரம் ரூபாய்கள் நஷ்டமானதைக் குறித்து குல்சண்ட் மனம் வருந்தினான், அதிக கோபத்துடன் குல்சண்ட் அப்புவைப்பார்த்து 'என் எதிரில் நில்லாதே உன்னை வேலையிலிருந்து நீக்கிவிட்டேன்' என்று கூவினான். "வைத்தியரே, குல் சண்ட் செய்த மோசத்தை வெளிப்படுத்தியதனால், நான் என் வேலையை இழந்தேன். எனக்கு ஏதாவது நஷ்ட ஈடு செய்ய தங்களால் முடியுமா?' என்று அப்பு கேட்டுக் கொண்டான். 'எனக்கு அதிகமாகக் கிடைத்த தொகையை உனக்கே கொடுத்து விடுகிறேன்' என்றார் வைத்தியர். 'மாதம் அறுபது ரூபாய் சம்பளம் ஒழிந்தாலும் ஒழிந்தது. எனக்கு ரொக்கமாக ஐந்நூறு ரூபாய்கள் கிடைத்து விட்டன' என்றான் அப்பு. 'உனக்கு வேலையும் போகவில்லை மாதம் எழுபத்தி ஐந்து ரூபாய் சம்பளத்தில் நான் உன்னை என்னிடமே வேலைக்கு அமர்த்திக் கொள்கிறேன்'. என்று வைத்தியர் சொன்னார். 'சபாஷ்!' என்று குதித்துக்கொண்டே அப்பு சொன்னான்.

சுதேசமித்திரன்.
வாரப் பதிப்பு - 15-2-'42

சென்றவார நிகழ்ச்சிகள்

இந்தியப் பொது பாஷை

"இந்தியா முழுமைக்கும் ஒரே பாஷையை விரும்புகிறவர்கள் ஹிந்தி, உருது என்ற இரு பகுதிகளையும் கற்க வேண்டும், அவ்வாறு கற்பவர்கள் தான் இறுதியில் நமக்கு பொது பாஷை ஒன்றைத் தர முடியும். எந்தப் பகுதி ஜனங்களிடையே அதிக செல்வாக்கு உள்ளதாகவும், எல்லோரும் எளிதில் அறிந்து கொள்ளக் கூடியதாகவும் இருக்கிறதோ. அந்தக் பகுதிதான் அகில இந்திய பாஷையாக இருக்க முடியும், என்னுடைய யோசனை பொது மக்களிடையே ஆதரவு பெற்றால், பாஷைப் பிரச்னை அரசியல் விவகாரங்களில் பிரதான பிரச்னையாக இராமல், அது ஆக்ஷேப சமாதானங்களுக்கு இடமின்றி தீர்ந்து விடும்" என்று காந்திஜி "ஹரிஜன்" பத்திரிகையில் ஒரு நிருபருக்கு அளித்துள்ள பதிலில் கூறியுள்ளார்.

* * * *

மகாத்மா வகுத்த வழி

சாந்தி நிகேதனத்திலிருந்து வெளியாகும் 'விஸ்வ பாரதி பத்திரிகை' என்ற ஹிந்தி சஞ்சிகையில் ராஜன் பாபு அஹிம்ஸைப் பற்றியுள்ள அபிப்பிராய பேதங்கள் சில. வற்றை எடுத்துக் கூறி விளக்கியிருக்கிறார். அவர் மகாத்மா வகுத்துள்ள வழியே சிறந்த தென்பதையும் வற்புறுத்தியிருக்கிறார்.

பலாத்கார மூலம் அஹிம்ஸா நெறி அடைய நினைப்பது தவறு. அது காலில் பதிந்த சேற்றைக் கழுவ முயலும் ஒருவன் மீண்டும் சேறு நிறைந்த பள்ளத்தில் கால் வைப்பதற்கு ஒப்பாகும். நமது வழிகள் பரிசுத்தமாயிருக்க வேண்டும். அப்போதுதான் பரிசுத்தமானலக்ஷ்யம் கைகூடும். அஹிம்ஸைக்கும் பலாத்காரத்துக்கும் நடக்கும் போராட்டம் ஒரு புரமிருக்க உலக சக்திகளை சமாளிப்பதற்கேற்ற ஆற்றலும் நமக்கு வேண்டும். நமது புராதன கலைஞான வளர்ச்சியையும் நமது சம்பிரதாயங்களையும் கவனிக்கையில் நாம் இந்த காலத்தில் ஐரோப்பியர்கள் காட்டி வரும் மனோ பாவத்தை ஏற்கவேமுடியாது. ஆகவே காந்திஜியின் நிர்மணத் திட்டமே நமக்குக் கிடைத்துள்ள சிறந்த மார்க்கமாகும். இந்த சந்தர்ப்பத்தில் அதுவே ஏற்ற வழி; அதோடு அரிய லக்ஷியத்துடன் கூடிய வழியும் அதுவாக விருப்பதால் நாம் அனைவரும் அதைப் பின்பற்ற வேண்டும் எனக் குறிப்பிட்டிருக்கிறார்.

ஐரோப்பியச் செய்திகள்

நெருக்கடியைத் தீர்க்க

இம்மாதம் 3-ந்தேதி லார்ட் சபையில் இந்தியாவின் நிலைமை பற்றி விவாதிக்கப்பட்டது. தொழிற் கட்சியைச் சேர்ந்த லார்டு பாரிங்டன் தற்காலமுள்ள மிக்க அவசரமான பிரச்னைகளுள் ஒன்றாக இந்தியப் பிரச்னை இருக்கிறதென்றும், இதனை சர்க்கார் கவனத்திற்குத் தாம் கொண்டு வருவதாகவும் கூறினார்.

"இந்தியாவுக்குப் பின்னால்சுய ஆட்சி அளிக்காமல் இப்பொழுதே சுயஆட்சி அளித்துவிட உத்தேசமென்றும், பிரிட்டிஷ் சர்க்கார் ஐயமுறத் தெளிவாக தெரிவித்துவிட வேண்டும் என்பது எனது முதலாவது யோசனையாகும். இந்தியத் தலைவர்கள் சில நபர்களுடன் பேரம் பேசத் தயாராக இருக்கின்றதாகத் தோன்றுகிறது. இந்த நபர்களும் சர்க்காரும் வைஸ்ராயின் நிர்வாக சபையை பூரணமாக (அந்நிய நாட்டு, பாதுகாப்பு இலாகாக்கள் (உள்பட) இந்திய மயமாக்கிவிடத் தயாராக இருக்க வேண்டும். அத்தகைய நிர்வாக சபையை அவர்கள் தாற்காலிகமான சர்க்காராகக் கருதி நடத்தத் தயாராக இருக்க வேண்டும். புதிய நிர்வாக சபை, அரசியல் நிர்ணய சபை அல்லது அரசியல் நிர்ணய மகாநாட்டைக் கூட்டுவதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுப்பதைத் தனது கடமைகளில் ஒன்றாகப் பெற்றிருக்குமாறு செய்யட்டும். இறுதியாக நான் சொல்லும் யோசனை யாதெனில் இந்த அரசியல் நிர்ணய சபை தயாரிக்கும் அரசியலை பிரிட்டிஷ் சர்க்கார் பார்லிமெண்டில் தங்களது மசோதா ரூபமாகக் கொண்டு வந்து யுத்த முடிவுக்குப் பிறகு மூன்று வருஷங்களுள் சட்டமாக நிறைவேற்றி வைக்க வேண்டும் என்பதேயாகும்."

முஸ்லிம் லீக் இந்திய முஸ்லிம்களில் பெரும் பான்மையோருடைய பிரதிநிதி ஸ்தாபனமாக இருக்க முடியாது. அது இந்தியாவைப் பங்கு போடுவதற்காகத் தயாரித்த திட்டம்; அனுஷ்டான சாத்தியமற்றது மட்டுமின்றி திட்டமாக மிக்க பிற்போக்கானதுமாகும்."

லிபரல் கட்சித் தலைவரான லார்டு க்ரூ பின்வருமாறு பேசினார்:—மாகாண சர்க்கார்களது அதிகாரத்தைப் பெருக்கி மத்திய சர்க்காரது வேலைகளையும் கடமைகளையும் வரை யறுப்பதே

பிரிட்டிஷ் ராஜ குடும்பம்

மாக்ஷின்ம தங்கிய மன்னர் பிரான், எலிஸபெத் ராணி. ராஜகுமாரி, மார்கரேட் ரோஸ், நாய்க்குட்டிகளுடன் பொழுது போக்குகின்றனர். யுத்த காலத்தில் ராஜ குடும்பத்தார் வாழ்க்கையைச் சித்தரித்துக் காட்டும் படம் ஒன்று இப்போது தயாராகி இருக்கிறது. "ராயல் ரோட்" என்ற மகுடமிட்ட இபபடத்தின் ஒரு காட்சியை மேலே காணலாம்.

மிக்க உபயோகமான முன்னேற்ற வழியாக இருக்குமென நான் நினைக்கிறேன்.

லார்டு வெட்ஜ்வுட் பின்வருமாறு கூறினார்:—

இந்தியா சம்பந்தப்பட்டமட்டில் பின் கண்ட 3 காரியங்களைச் செய்ய வேண்டுமென விரும்புகிறேன். ஜப்பானியர் இந்தியா மீது படையெடுத்தால் அவமான முண்டாகும். இதனைத் தவிர்க்கவேண்டும். இந்தியாவின் பூரண உதவியைத் தற்போது பெறவேண்டும். இந்தியா சிநேகபாவத்துடனும் சுதந்தரத்துடனுமிருக்க வேண்டும். லிபரல் கட்சியைச் சேர்ந்த லார்டு காட்டோ கூறியதாவது. இந்தியர்கள் பிரிட்டிஷாரை துவேஷிக்கவில்லை.

அரசியல் பிரச்னையைத் தீர்த்து குடியேற்ற நாட்டு அந்தஸ்து வாக்குறுதியை நிறைவேற்றினாலொழிய இந்த அசிரத்தை நீடிக்கும். குடியேற்ற நாட்டு அந்தஸ்தை அளிப்பதும் எந்த ஒருசமூகத்தில் தனிப்பட்ட ஆதிக்கத்தின் கீழ் தேசீய நிர்வாக சபை வராதபடி அதன் அமைப்பை ஏற்படுத்துவதும் தான் பரிகாரமாகும்.

உதவி இந்தியா மந்திரியான டெவான்ஷயர் பிரபு பின்வருமாறு பதிலளித்தார்:—

இந்தியருள் ஓரளவு உடன்பாடு ஏற்படாமல் அதிகாரத்தை மாற்றிக்கொடுத்தால் குழப்பமேற்படும். இதனால் நாங்கள் எல்லாக் கட்சி இந்தியத் தலைவர்களையும் ஒருங்கு சேர்ந்து இந்தியாவின் அதிகாரத்தை நாம் மாற்றிக்கொடுக்க இயலும்படி ஒரு இந்திய சர்க்காரையோ சர்க்கார்களையோ ஏற்படுத்துவதற்கான திட்டத்தைத் தயாரிக்கும்படி வைத்திருப்பதுடன் யுத்தம் முடிந்ததும் கூடிய சீக்கிரம் இந்த அதிகார மாற்றம் ஏற்படுமென்றும் உறுதிமொழி அளித்திருக்கிறோம்.

இதுவரை இந்தியத் தலைவர்கள் தங்களுள் உடன்பாடு செய்துகொள்ளுவது சாத்தியமாக இல்லை. அவர்கள் உடன்பாட்டுக்கு வருவதற்காக தீவிர முயற்சி எதுவும் செய்திருப்பதாகத் தோன்றவுமில்லை.

அடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியது நாம் என்றும் தாங்களல்லவென்றும் அவர்கள் தவறான அபிப்பிராயங்கொண்டிருக்கின்றனர். அது மாதிரி இல்லை; அம்மாதிரி இருக்கவும் முடியாது.

காங்கிரஸ் கவர்ன்மெண்டுகளை பதவி ஏற்கும்படி நாம் நிர்ப்பந்திக்க முடியாது. உடன்பாடு செய்துகொள்ளும்படி தலைவர்களை நாம் நிர்ப்பந்திக்கவும் முடியாது."

* * * *

டாக்டர் அம்பேத்கார்

தினம் டாக்டர் அம்பேத்கர் ராஜப்பிரதிநிதி நிர்வாக சபையில் பதவி யேற்பதன் முன் இரண்டு இடங்களில் பிரசங்கம் புரிந்தார். முதலில் ரத்னபுரி—கொலாபா தொழிலாளர் முன்பு பேசினார். "நிர்வாக சபையில் தொழிலாளர் சார்பில் நான் சண்டை போடுவேன்: இது உறுதி: கொஞ்சமும் பின் வாங்கமாட்டேன்: உங்களுக்கு இதில் சந்தேகம் வேண்டியதில்லை. ஆனால் சிறிய விஷயங்களில் அபிப்பிராய பேதம் ஏற்பட்டதைப் பெரிதாக்கி ராஜிநாமாவும் பண்ணமாட்டேன்" என்றார் இவர். இதே பிரசங்கத்தில் தாழ்த்தப்பட்ட வகுப்பாரின் முற்போக்கைத் தாம் நாடுவதாகவும் தெரிவித்தார்: தொழிலாளரும் தாழ்த்தப்பட்டோரும் ஒன்று சேர்ந்தால் தேசத்திற்கு நன்மை ஏற்படும் என்றார்; தாழ்த்தப்பட்டோருக்காகத் தனிக் கக்ஷி ஒன்று இருப்பதால் தொழிலாளர் இயக்கத்திற்குத் தீமை இல்லை என்பதையும் இவர் திட்டமாகக் குறிப்பிட்டார். ஒரு சமூகம் சோபிக்க வேண்டுமானால், கீழே இருக்கும் வகுப்புகள் தான் முதலில் பிரதான்யம் பெற வேண்டும் என்றும், இதற்கப்புறம் மேலே இருக்கும் வகுப்புகளுக்கும் நலன் ஏற்படும் என்றும் இவர் சொன்னார். தாழ்த்தப்பட்டவர் நிலை உயர்ந்தால், இதரர்களது நிலையும் தானாகவே உயரும் என்று முடிவு கட்டினார் இவர்.

* * * * *

அடுத்தபடியாக நாகபுரியில் கூடிய அகில இந்திய தாழ்த்தப்பட்ட வகுப்பார் மஹாநாட்டிலும் டாக்டர் அம்பேத்கர் நீண்டப் பிரசங்கத்தைச் செய்தார். இதில் இவர் தமது வகுப்பாருக்கு அதிக மதிப்பு கொடுக்கப்படாததைக் கண்டித்துப் பேசினார். தாழ்த்தப்பட்ட வகுப்பினர் இனியும் தூங்கிக்கொண்டிருந்தால் அவர்கள் துர்பாக்கியமான ஸ்திதியில் தள்ளப்படுவார்கள் என்பதை எடுத்துக் காட்டி, தமது வகுப்பார் சார்பில் சில கோரிக்கைகளையும் வெளியிட்டார் ஜாதி ஹிந்துக்கள் இராத இடமாகப் பார்த்து, "தீண்டாத" வகுப்பாருக்காகக் குடியிருப்பு வசதியை ஸர்க்கார் சீக்கிரம் அமைத்துத் தரவேண்டும் என்பது முதலாவது: மாகாண ஸர்க்கார்கள் இந்த வகுப்பு மக்களுக்கு உயர்தரக் கல்வி அளிக்கப் பிரதி வருஷமும் பணம் ஒதுக்கி வைத்து அதைப் பயன்படுத்த வேண்டும என்பது இரண்டாவது: நிர்வாக அதிகாரம் கொண்ட உத்தியோகங்களுக்கு ஒரு குறிப்பிட்ட கால அளவுக்குள் இவ்வகுப்பைச் சேர்ந்தவர்களைக் கொஞ்சம் கொஞ்சமாக, அவரவர் யோக்யதானுஸாரம் நியமிக்க வேண்டும் என்பது மூன்றுவது: தங்களது ராஜீய அபிலாஷைகளைப் பஹிரங்கமாகத் தெரிவிக்க இவ்வகுப்பாருக்கு ஒரு கக்ஷி இருக்க வேண்டும என்பது நான்காவது. இவை யாவும் நியாயமானவையே என்பதை ஒருவரும் மறுக்க முடியாது. சண்டையின்றி சமரஸமாக இவற்றைச் சாதித்துக்கொள்வதனால், ஒருவரும் அவர்களைத் தடை செய்ய மாட்டார்கள்! ஆனால் ஒரு விஷயம். மேலே குறிப்பிடப்பட்ட கருத்தும் கோரிக்கைகளும் டாக்டர் அம்பேத்கரின் உள்ளத்தை உண்மையாய்ப் பிரதிபிம்பிக்கின்றன.

2

ஜாதி ஹிந்துக்களிடம் இவருக்கு ஏன் இவ்வளவு துவேஷம்? நாட்டில் இருக்கும் கக்ஷிகள் போதாதா? மேலும் ஒரு புதிய கக்ஷியை ஸ்தாபிக்க இவர் இப்படித் துடிப்பானேன்?—இம்மாதிரியான சில கேள்விகள் எழும்புவது இப்போது சகஜம். ஆனால் இவற்றிற்கெல்லாம் டாக்டர் அம்பேத்கரின் வாழ்க்கை தகுந்த பதிலைத் தரும். பிறவி முதல் இவர் பட்டபாடும், "ஜாதி இரண்டொழிய வேறில்லை" என்று மஹான்கள் உபதேசித்த நாட்டில இவருக்கு ஏற்பட்ட வருத்தமும், இவர் பிறந்த வகுப்பைப் பிறர் பழித்துப் பேசியதும். இவருடைய மனதில் சாஸ்வதமான ஸ்தானத்தை ஸ்வீகரித்துக் கொண்டன. இளமைப்பருவத்திலிருந்தே இழிச்சொல்லிலிருந்து விடுபடும் வழியை நாடக் கங்கணம் கட்டிக்கொண்டார்: காலக்ரமத்தில் தமது வகுப்புக்கும் சரி சமானமான அந்தஸ்தை சம்பாதித்துக்கொடுகக சிரத்தை கொண்டார்: தீராத ஆசையும் திடசித்தமும் துணை நின்றன. மிகவும் எளிய குடும்பத்தில் தோன்றி, சொந்த முயற்சி, ஊக்கம் ஆகியவை காரணமாக முன்னணிக்கு வந்து, இறுதியில் எளிதில் கிட்டாத ராஜப்பிரதிநிதியின் நிர்வாகசபை மெம்பர் பதவியை எட்டிவிட்டார்: தாழ்த்தப்பட்ட வகுப்பும் மேலோங்கும் என்ற நம்பிக்கை உதயமாகும்படிச் செய்திருக்கிறார். இவரது நியமனம் இவரது வகுப்புக்கும் கௌரவத்தை உண்டாக்கியிருக்கிறது என்பதும், இதனால் இனி இவரது வகுப்புக்கும் பிரதான்யம் உண்டென்பதும் மறுக்க முடியாத விஷயங்களாவன!

* * * * * *

டாக்டர் பீமராவ் ராம்ஜி அம்பேத்கர்—இது தான் இவரது முழுப்பெயர்—பம்பாயில் பிறந்தவர். இப்போது இவருக்கு ஐம்பது வயது ஆகிறது: ஸதாராவிலும் பம்பாயிலும் படித்தார்: படிப்பில் ஆரம்பம் முதலே அதிக சிரத்தை, சிரத்தையுள்ளவர் சிரமத்தைப் பொருட்படுத்தாமல் படித்தால் அவர்கள் எப்படி சோபிக்காமல் இருக்க முடியும? படிப்பு கட்டாயம் பலனைத்தரும்: அம்பேத்கர் கற்றது கலாசாலையில் ஆசிரியர்களுக்குக் களிப்பூட்டியது. உயர்தரக் கல்வி பெற்றார்: 'எம். ஏ' பட்டமும் அடைந்தார்: பெற்றோர் இவரது கல்வி விஷயத்தில தங்களது கஷ்டத்தையும் கவனித்தாரில்லை. அர்த்த சாஸ்திரத்திலும் அரசியல் சாஸ்திரத்திலும் அம்பேத்கருக்கு அபார பரியம: அத்தியந்தமான அன்பு கூட: இவ்விரு பகுதிகளிலும இவர் பெற்ற பாண்டித்தியம் தான் இப்போது இவர் தேசம முழுதும் பிரசித்தியடைந்திருப்பதற்குக் காரணம்: புஸ்தகப் படிப்பில் இருந்த ஆசை பெரிய புத்தகாலயத்தை சேகரிக்க இவருக்கு உதவியது: கையில் பணம கிடைத்தால் புத்தகம வாங்குவது தான் முதல் வேலை இவருக்கு! நல்ல படிப்பாளி என்ற பெருமை விரைவில் பல இடங்களுக்கும் பரவியது. 1917-ஆம் ஆண்டில் பம்பாய் 'ஸைடன்ஹாம் காமர்ஸ் கலாசாலை'யில் பொருளாதார சாஸ்திர ஆசிரியர் பதவியை இவர் ஏற்றுக்கொண்டார். ஆனால் இந்தப்பதவியில் இவர் அதிக காலம் நீடித்திருக்கவில்லை மறு வருஷம ஓட்டுரிமை விஷயத்தைப்பற்றி ரிபோர்ட்டு பண்ண வந்த ஸவுத்பரோ கமிட்டி முன்பு இவர் சாக்ஷியம கூறினார். வாக்குரிமை விஸ்தரிப்பின் அவசியத்தை அதிகாரிகளிடம் இவர் நன்கு உணர்த்தினார்,

3

இதற்கப்புறம் இவர் மேனாடுகளுக்குப் புறப்பட்டுச் சென்றார். இங்கிலாந்துக்குப் போய் லண்டன் சர்வகலாசாலையில சேர்ந்துகொண்டார்: அங்கு பொருளாதார சாஸ்திர நிபுணரான டாக்டர் எட்வின் கணன் என்பவர் ஆசிரியர்; உலகம் முழுவதும் பிரசித்திபெற்ற அவர் கீழ், இவர் படித்தார். பொருளாதாரம் வர்த்தகம் ஆகிய பகுதியில் ப்ராவீண்யம் பெற்று இவர் அந்த சர்வகலாசாலையில் டாக்டர் (டி. எஸ். ஸி) பட்டத்தையும் ஸ்வீகரித்தார். ஜெர்மனியில் இருக்கும் பான் சர்வகலாசாலையிலும் சிறிதுகாலம் படித்தார். லண்டனில் இருக்கும் இந்தியா ஆபீஸ் புத்தகாலயத்திற்குப்போய் ஆராச்சியும் நடத்தினார் இதே காலத்தில் பாரிஸ்டர் பரீக்ஷையிலும் 1923-ம் வருஷத்தில தேறினார். பிறகு அமெரிக்காவுக்கும் இவர் போனார்; அங்கு கொலம்பியா சர்வகலாசாலையில் சேர்ந்து படித்தார்: இங்கும் அர்த்த சாஸ்திரத்தில் தான் அதிக அக்கறை இவருக்கு. அமெரிக்கா போய்ப் படிப்பதற்கு இவருக்கு காலஞ்சென்ற பரோடா மஹாராஜா ஸயாஜிராவ் கெய்க்வார் உதவி புரிந்தார்: பரோடா சமஸ்தானாதிபதிக்கு பொதுவாகவே நல்ல படிப்பாளிகள் வெளிநாடுகளுக்குப்போய்ப் படிக்க சகாயம் புரிய வேண்டும் என்ற எண்ணம் உண்டு; இது தவிர தாழ்த்தப்பட்ட வகுப்பார் விஷயத்தில் அதிகச் சலுகை காட்ட வேண்டும் என்பதும் அவரது கருத்து. ஆகவே டாக்டர் அம்பேத்கருக்கு அவர் தயக்கமின்றி ஆதரவளித்தார்.

* * * * * * *

"கே. எஸ். ஆர்." எழுதியது

1925-ல் டாக்டர் அம்பேத்கர் தாய்நாடு திரும்பினார்: மேனாட்டில் இவர் ரொம்ப சிக்கனமான வாழ்க்கையை நடத்த வேண்டி இருந்தது: செலவை ஒடுக்கி, சிரமப்படாமல் காலம் கழித்தார்: அமெரிக்காவிலிருந்து ஆஸ்திரேலியக் கப்பல் ஒன்றில் கொழும்பு வந்துசேர்ந்தார்: இந்தக்கப்பலில் ஒரு அறைக்குப் பதினைறு பிரயாணிகள்! பிரயாணம் பூர்த்தி பெற நாற்பது தினங்கள் பிடித்தது: ஒவ்வொரு துறைமுகத்திலும் தங்கித் தாமதித்தே வந்தது: பிரயாணக் கட்டணம் 15 பவுன்கள் தான். கொழும்பில் இறங்கி நேராக பம்பாய்க்குப் பயணமானார்: ரயிலில் மூன்றாம் வகுப்பில் ஏறிக்கொண்டார். பம்பாய் வந்ததும், புத்தகங்களை மூட்டை கட்டிக்கொண்டு ஒருவரும் அறியாமல் தம் வீடுபோய்ச் சேர்ந்தார். ஐந்து தினங்களுக்குப் பின்னர், இந்தியக் கல்வி இலாகாவில் உத்தியோகம் அளிப்பதாக ஸர்க்கார் இவருக்குத் தந்தி அனுப்பினர். பெரிய உத்தியோகம்: ஆனால் அதை ஒப்புக் கொள்ள இவர் மறுத்து விட்டார். காரணத்தை டாக்டர் அம்பேத்கரே பின்பு கூறினார். "மாதம் 450 ரூபாய் சம்பளத்தில் நான் ராஜ போகம் அனுபவித்திருப்பேன. உத்தியோகம் ஏற்றால் நான் என் இஷ்டப்படி பேச முடியாது. எப்படியாவது என் வகுப்புக்கு ஏதாவது நன்மை செய்ய வேண்டும் என்ற எண்ணம் என் உள்ளத்தில் மேலிட்டிருந்தது இம்மாதிரி மனோபாவம் எல்லோருக்கும் ஏற்படுமா?" கடமையில் கருத்துகொண்டு, காரியத்தில் கண்ணாக இருப்பவர்களுககுத் தான் இது ஏற்படும் அல்லவா? பம்பாய் வந்தவுடன் வக்கீல் தொழிலை மேற் கொண்டார். நியாயவாதத்தில் நிபுணர் என்ற நிர்மலமான கீர்த்தியும் கிடைத்தது: சுய முயற்சியாலும் சலியாத உழைப்பினாலும் சம்பாதித்தார்.

4

பொருளாதார சாஸ்திரத்தில் வாய்த்த பயிற்சி சில புத்தகங்களில் பலிதமடைந்தது. பிரதானமான சில பிரச்னைகளைப் பற்றி எழுதினார். மதிப்பு மிகுந்த புத்தகங்கள்: அடிலாத படிப்பைப் பிம்பிக்கும் புத்தகங்கள்: ஆராய்ச்சியும் அறிவும் சேர்ந்து சோபிக்கும் புத்தகங்கள், விஷயத்தை விளக்கிக்காட்டும் வல்லமை வாய்ந்த புத்தகங்கள். சுமார் இருபது வருஷங்களுக்கு முன்பு ரூபாய் பிரச்னை அநேகரைச் சிந்தனையில் ஆழ்த்தியது. நம் நாட்டில் நிலவ வேண்டிய நாணய முறை பற்றிய பிரஸ்தாபம் அதிகரித்தது: தங்க நாணயத்திற்கும் வெள்ளி நாணயத்திற்கும் இருக்க வேண்டிய மதிப்பு விகிதம் குறித்துப் பலர் வரைந்தனர். 1923-ல் டாக்டர் அம்பேத்கரும் ஒரு புத்தகம் எழுதினார். இந்திய நாணய முறையின் விருத்தாந்தத்தையும், பல விசாரணைக் கமிஷன்களினால் ஏற்பட்ட விபரீதத்தையும், இதில் அவர் விஸ்தாரமாக விவரித்தார். ரூபாய்க்கு மாற்று மதிப்பு கூடாது: ரூபா வெளியீட்டை ஒரு அளவுக்குள் வைத்துக்கொள்ளவேண்டும் இவ்விதம் இவர் யோசனை கூறினார். நம் நாட்டிற்குத் தங்க நாணயத்திட்டத்தை அமுலாக்குவதை 1900-ல் நிதி இலாகா மெம்பர் ஸர் எட்வர்ட் லா ஆக்ஷேபித்தார் என்றும், அந்நாளில் அதிக ரூபா வெளியீடு இருந்தது என்றும் அவரைப்பற்றி இதில் கடுமையாகக் குறிப்பிட்டிருந்தார் இவர். 1925-ம் வருஷம், இந்திய நாணய முறை பொக்கிஷ பரிபாலனம் ஆகியவற்றைப் பரிசீலிப்பதற்காக நியமிக்கப்பட்ட ராயல் கமிஷன் முன்பு சாக்ஷியம் கூற இவர் அழைக்கப்பட்டார். அந்தச் சமயம், கமிஷன் மெம்பர்கள் சிலா, இவரது புத்தகத்தை வைத்துக்கொண்டு இவரைப் பல குறுக்குக் கேள்விகள் கேட்டனர்: இவரைத்தடுமாற வைக்கப் பார்த்தனர். இவர் சிறிதாவது சளைக்கவில்லை. இரண்டொரு சந்தர்ப்பத்தில், "நம் இருவருக்கும் அபிப்பிராயபேதம் இருந்தே தீரும்" என்றும் கூறிவிட்டார். ரூபா-பவுன் விகிதாசாரம் எப்படி இருக்கவேண்டும் என்றும் இவரைக்கேட்டனர். ஒரு ரூபாய்க்கு பதினெட்டு பென்ஸ் விகிதம் இருக்கவேண்டும் என்று கூறினார். மேலும் குத்திக்கேட்டதற்கு ரூபாய் மதிப்பு குறைந்தால இந்திய தொழிலாளருக்கு மேலும் கஷ்டம் அதிகரிக்கும் என்று தெரிவித்தார். கமிஷன் யாதாஸ்தில் டாக்டர் அம்பேத்கரின் கருத்து அதிக ஆதரவைப் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

* * * * *

1925-ல் டாக்டர் அம்பேத்கர் "பிரிட்டிஷ் இந்தியாவில் மாகாண நிதி நிர்வாகம்" என்ற தலைப்புடன் மற்றுமொரு சிறந்த நூலை இயற்றினார்: சரித்திர பந்தாவில் வெகு கோர்வையாக எழுதப்பட்டது இது. இதற்கப்புறம் "இந்தியாவில் ஜாதி முறை", "துண்டு நிலங்களும் அதன் பரிஹாரமும்", "ஜாதி ஒழிப்பு" முதலிய புத்தகங்களையும் இவர் வெளியிட்டார். இவை யாவும் இவரை வெகு சீக்கிரத்தில் முன்னுக்கு கொண்டுவந்து விட்டன. ஜாதி வித்தியாஸம் இவரைப் பெரிதும் உபத்ரவித்தது. எப்படியாவது இந்த வேறுபாட்டை விலக்கவேண்டும் என்று இவர் விரும்பினார், பம்பாயில் இருந்த பிராம்மணரல்லாதார் கக்ஷியில் சேர்ந்து, பத்து வருஷகாலம் அதில் உழைத்தார். தாம் எதிர்பார்த்த பலன் கிடைக்குமென்று நம்பினார்: ஆனால் பிரயோஜனமில்லை. பிறகு பிரசாரத்தில் புகுந்தார்: பலவித விக்கினங்கள் உத்பவித்தன. வகுப்புவாதக் கொடியைத் தாங்கியவுடன், இவரிடம் விருப்பு கொண்டவரும் வெறுப்பு காட்டினார். ஜாதி ஹிந்துக்களிடம் பலதரப்பட்ட கஷ்டங்களையெல்லாம் அனுபவித்தார்: காபி ஹோட்டலுக்குச் சென்றால் கவனிப்பார் கிடையாது: கிட்ட நெருங்கிப் பேசவும் கூச்சம் காட்டினர்: வாடகை வண்டிக்காரனும் ஏற்றிச் செல்ல விரும்பவில்லை. ஹிந்து மதத்தைச் சேர்ந்த தம்மை, அம்மதத்தைச் சேராதவர் போல பிறர் நடத்தி வந்தது, இவரது மனதைப் பெரிதும் புண்படுத்தி விட்டது: வேறு ஒரு மதத்தைத் தழுவலாமா என்ற எண்ணமும் சிற்சில சமயங்களில் உதித்ததுண்டு: ஆயினும் லக்ஷியத்தை அலக்ஷியம் செய்ய இவர் மறுத்தார். எப்படியாவது உள்ளே புகுந்து வேலை செய்ய ஆசை பிறந்தது: பழைய பம்பாய் சட்டசபை மெம்பரானார்; புதிய ஜனப்பிரதிநிதி சபைக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டார்: சுதந்திர தொழிலாளர் கக்ஷியின் தலைவரானார், சட்டசபையில் கிடைத்த ஸ்தானம் ஒரு விதத்தில் இவருக்கு இதரர்களுடன் சரிசமத்துவத்தைக் கொடுத்தது. தமக்கு மட்டும் கிடைத்து என்ன பயன்? தம் இனத்தாரில் பெரும்பாலருக்கும் இது வேண்டுமல்லவா?— இந்த நோக்கமே மனதில் மேலிட்டது: இன்றும் இதில் தான் இவருக்கு நாட்டம்!

5

ஆரம்ப காலத்தில் இவருக்குத் சுயராஜ்யக் கக்ஷியில் பற்றுதல் அதிகம் இருந்தது; ஸ்வராஜ்யம் கிடைத்தால்தான் கதிமோக்ஷம் என்ற கருத்தும் உண்டு. பிரிட்டிஷ் ஸர்க்காரின் அதிகாரம் நீடித்துக்கொண்டே போனால் லாபம் இல்லை என்றும் நினைத்தார். 1930-ல் நடந்த காம்ப்தி மஹாநாட்டில் தம் மனதில் இருந்ததை இவர் பட்டவர்த்தனமாகத் தெரிவித்தார். "ஸ்வராஜ்யம் எனப்படும் ஆட்சி முறையில் தாழ்த்தப்பட்ட வகுப்பாராகிய உங்களுக்கும் விமோசனம் ஏற்படும்: நிர்வாகப் பொறுப்பில் பெரும் பங்கும் உங்களுக்குக் கிட்டக்கூடும்" என்றார் இவர் அச்சமயம். தேசபக்தி பூண்டு, தம் வகுப்பாரின் முற்போக்கை இவர் ப்ரதீக்ஷித்தது, நாடு முழுதும் இவரைப் பிரசித்தராக்கிவிட்டது: தாழ்த்தப்பட்ட வகுப்புக்கும் சலுகை கிடைத்தது: ஒரு முக்கிய கக்ஷி என்று பேசவும் நிர்ப்பந்தம் பிறந்தது. இதற்குச் சற்று முன்பு ஸைமன் கமிஷனும் அதனுடன் ஒத்துழைத்த இந்திய மத்ய கமிட்டியும், தாழ்த்தப்பட்ட வகுப்பாருக்குக் கூட்டுத் தொகுதியையும், சில ஸ்தானங்களை ஒதுக்கி வைப்பதையும் சிபார்சு செய்தனர். அப்போது டாக்டர் அம்பேத்கர் இவற்றை யெல்லாம் முழு மனதுடன் ஆமோதித்துப் பேசினார். இதற்கப்புறம் 1930-ல் லண்டனில் வட்ட மேஜை மஹாநாடு ஆரம்பமாகியது. இதற்கு டாக்டர் அம்பேத்கரும் அழைக்கப்பட்டிருந்தார். முதல் மஹாநாட்டில் இவர் கூட்டுத் தொகுதியை நிறுவுவதற்கு சம்மதித்தார். சில ஸ்தானங்களை ஒதுக்கித் தருவதற்கும் திருப்தி தெரிவித்தார். இதுவரை எல்லாம் இனிதாகவே நடந்தன.

* * * * *

இரண்டாவது வட்டமேஜை மகாநாட்டில் டாக்டர் அம்பேத்கரின் மனநிலை திடீரென மாறிவிட்டது. காந்திஜியும் காங்கிரஸ் பிரதிநிதிகளும் கூட வந்திருந்தனர். மஹாநாடு நடந்து வருகையில், மைனாரிட்டி சப் கமிட்டிக் கூட்டத்தில், மஹாத்மாஜி தலைமைவகிக்க நேர்ந்தது. அப்போது சட்டசபைகளில் தாழ்த்தப்பட்டோருக்காக ஸ்தானங்கள் ஒதுக்கி வைக்கப்படவேண்டும என்பது டாக்டர் அம்பேத்கரால் வற்புறுத்தப்பட்டது, இது சிக்கலானது என்பதைக் கண்டார் காந்திஜி. தற்போதைய நிலையில் இது சாத்தியமில்லையே என்றார் அவர். அவ்வளவுதான்! தாழ்த்தப்பட்ட வகுப்புப் பிரதிநிதிகள் உடனே மைனாரிட்டி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு விட்டனர். அவர்களுக்குத் தனித்தொகுதிகளையும், தனிப்பட்ட ஸ்தானங்களையும் தர இது சம்மதித்தது. 1931-ம் வருஷம நவம்பர் மாதம் மைனாரிட்டி ஸப்கமிட்டி கூட்டத்தில் பிரிட்டிஷ் பிரதம மந்திரி இந்த ஒப்பந்தத்தை வரவேற்றதுடன் தாழ்த்தப்பட்டோர் கோரிக்கையையும் ஆதரித்தார். இது மஹாத்மாவுக்கு மிகுந்த விசனத்தையே விளைவித்தது. உணர்ச்சி ததும்பும் குரலில், "இதர மைனாரிட்டிகளின் கோரிக்கைகளை நான் ஒப்புக்கொள்ள முடியும். ஆனால் 'தீண்டாதார்' விடுத்திருப்பது என்னை மிகவும் வருத்துகிறது" என்றார் அவர். தாம் தான் அவ்வகுப்பாரின் உண்மைப் பிரதிநிதி என்றும், அவர்கள் சார்பில் பேச டாக்டர் அம்பேத்கருக்குப் பூரண உரிமை கிடையாதென்றும் அவர் கூறினார். தீண்டாதாருக்காகத் தாம் தமது வாழ்க்கையையும் கொடுக்கத் தயார் என்றும், அவர்களுடைய ராஜீய உரிமையைப் பற்றிப் பிரஸ்தாபிப்பவர்களுக்கு இந்திய சமூகத்தின் அமைப்பு எத்தகையது என்பது தெரியாது எனவும் அவர் பேசினார். அடுத்த மாதம் மஹாத்மாஜி தாயகம் வந்து சேர்ந்தார்: சீக்கிரமேயே அவர் சிறைப்படுத்தப்பட்டு எர்ரவாடா சிறைக்குக் கொண்டு போகப்பட்டார். மறு வருஷம் ஜனவரி மாதம் லோதியன் கமிட்டி இந்த நாட்டுக்கு வந்தது. இந்த சமயத்தில் மஹாத்மாவுக்கு தாம் லண்டனில் கூறியவை ஞாபகத்திற்கு வந்தன: கருத்தை நிறைவேற்ற விருப்பம் கொண்டார்: அதற்காக சிந்திக்கலானார்: கடைசியில் அந்தராத்மா அவருக்கு வழி காட்டியது. மார்ச்சு மாதம் இந்தியா மந்திரிக்கு ஒரு கடிதம் எழுதினார்: தனித் தொகுதியைத் தாழ்த்தப்பட்டவருக்கு அளித்தால், தாம் உண்ணாவிரதம் இருக்க முடிவு பண்ணியிருப்பதாகத் தெரிவித்தார்.

6

ஸர் ஸாமுவேல் ஹோர் அனுப்பிய பதில் சமரஸத்திற்கு இடம் தரவில்லை. போதாக்குறைக்கு ஆகஸ்டு மாதத்தில் பிரதம மந்திரி வகுப்புத் தீர்ப்பொன்றையும் சமர்ப்பித்தார்:

தேசியப் பாதுகாப்பு சபை: ராஜப் பிரதிநிதி தலைமையில் முதன் முதல் கூடியபோது எடுத்தது. மூன்றும் வரிசையில் (வலதிருந்து 4-வது) டாக்டர் அம்பேத்கர் நிற்கிருர்.

தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தனித் தொகுதி மட்டுமில்லை, பொதுத் தொகுதியில் போட்டியிடவும் அது அனுகூலம் புரிந்தது: மஹாத்மாவுக்கிருந்த சந்தேகம் தெளிவாகி விட்டது. செப்டம்பர்மாதம் 20-ந் தேதி உண்ணாவிரதம் ஆரம்பிக்கப் போவதாக அவர் பிரதமருக்கு அறிவித்து விட்டார். கடிதப் போக்குவரத்து நடந்து வந்தது: நாட்டில் உள்ளவர்கள் மஹாத்மாவின் முடிவை மாற்ற முற்பட்டனர்: உண்ணாவிரதத்தைத் தடுப்பதில் கவலை காட்டினர்: தனித் தொகுதியை ஆக்ஷேபித்து அதிகாரிகளுக்குத் தீர்மானங்களை அனுப்ப ஏற்பாடு செய்தனர். பம்பாய் கூட்டத்தில் இத்தகைய தீர்மானத்தை நிறைவேற்ற ஏற்பாடாகியிருந்தது. இது நிறைவேறிஞல் இது தமது கக்ஷிக்குப் பாதகம் புரியும் என்ருர் டாக்டர் அம்பேத்கர்: ஆகவே தீர்மானம் கடைபட்டது. பண்டித மாளவியாஜி பம்பாயில் விஷயத்தை ஆலோசிக்க ஒரு மஹா நாட்டைக் கூட்டினுர்: அவர் டாக்டர் அம்பேத்கரைச் சந்தித்துப் பேசினுர்: கொஞ்சம் கொஞ்சமாகக் கவலை அகலும் வழிபட்டது. ஒரு புறம் மஹாத்மாவைச் சந்தித்துத் தலைவர்கள் சம்பாஷித்தனர்: மற்ருெரு புறம் டாக்டர் அம்பேத்கருடன் பேச்சு வார்த்தைகள். பம்பாய் மஹாநாட்டிலும் டாக்டர் அம்பேத்கர் கலந்துகொண்டார். காலம் கடந்ததே தவிர, காரியம் கூடினபாடில்லை. குறிப்பிட்ட தினத்தன்று மஹாத்மாவின் உபவாசமும் ஆரம்பித்துவிட்டது. பிர்லா மாளிகையில் டாக்டர் அம்பேத்கர், ஸர் ஸப்ரூ, ராஜாஜி, மாளவியாஜி, ஸர் புருஷோத்தமதாஸ், ஸ்ரீ ஜயகர், டாக்டர் மூஞ்சே ஆகிய தலைவர்கள் கூடினர்: கூட்டுத் தொகுதியை இவர் எதிர்த்தே நின்ருர்: பிறகு ஸர் ஸாப்ரூ கூறிய யோசனை ஒப்புக்கொள்ளப்பட்டது: மஹாத்மாஜிக்கு இவை யாவும் அறிவிக்கப்பட்டனவாயினும், நேரில் தாழ்த்தப்பட்ட வகுப்புத் தலைவர்களைக் கண்டு பேச ஆசைப்பட்டார் அவர். இந்த சம்பாஷணையில் மஹாத்மா டாக்டரின் நகல் திட்டத்தில இருக்கும் குற்றங் குறைகளை எடுத்துக் காண்பித்தார்: ஆயினும் டாக்டர் பிடித்த பிடியைச் சிறிதாவது தளர்த்தவில்லை: இறுதியில் மஹாத்மாவின் முறையீடும் வாதமும் இவரது மனதை மாற்றின: இதன் பிறகு தலைவர்கள் ஒரு ஒப்பந்தத்தைத் தயாரிக்க முனைந்தனர். உபவாஸம் ஆரம்பித்த ஐந்து தினங்களுக்குப் பின்பு ராஜாஜி, ஸர் ஸப்ரூ ஆகியவர்களது முயற்சி காரணமாக, ஒரு ஒப்பந்தம் பிறந்தது.

* * * * *

செப்டம்பர் மாதம் 24-ம் தேதி எரவாடா ஒப்பந்தம் தோன்றியது. பிரிட்டிஷ் சர்க்காரும் இதை ஒப்புக்கொண்டனர். உத்தமரின் உபவாசமும் ஓய்ந்தது. இதில் அவர்களுக்குக் கல்வி அளிக்கவும் உத்யோகம் வழங்கவும் ஷரத்துகள் சேர்க்கப்பட்டன. ஜாதி ஹிந்துக்கள் சார்பில் மாளவியாஜி இதில் கையெழுத்திட்டார். பல பிரபல தலைவர்கள் தயாரித்த இந்த ஒப்பந்தம் டாக்டர் அம்பேத்கருக்குப் பெரிய ஸ்தானத்தை அளித்தது. பிரசித்தி பலவிடங்களுக்கும் பரவியது. இந்த சமயத்தில் நாடு பூராவும் ஒரு பெரிய இயக்கம் ஆரம்பித்தது: ஹிந்துக்களுக்கு நல்லெண்ணம் உண்டென்பதைத் தெரிவிப்பதே அதன் உத்தேசம், ஹரிஜனங்களுக்கு ஆலயங்களைத் திறந்துவிடக் கிளர்ச்சி நடந்தது. ஆதரவும் எதிர்ப்பும் பலமாகவே இருந்தது. வைதிகக் கோஷ்டியின் வசவு மொழிகளுக்குக் குறைவே இல்லை. டாக்டர் அம்பேத்கர் தான் இதற்குக் காரணபூதர் என்று பலர் அவரைப் பழித்தனர். உண்மையில் இவர் இந்த ஆலயப்பிரவேச உரிமையை விரும்பவில்லை. இதனல் பயன் ஏற்படாது, இயன்றவளவுக்கு ஹிந்து சமூகத்தில் தம் வகுப்பாருக்கு சரிசமானமான அந்தஸ்து அளிக்க வேண்டும் என்று இவர் வற்புறுத்தினர். தம் வகுப்பாரின் முன்னேற்றத்திற்காக இவர் கல்வி அபிவிருத்தியையும் நிஷபக்ஷபாதமின்மையையும் வேண்டினர் மஹாத்மாஜி கோவிலைத் திறந்துவிட ஏற்பாடு பண்ணியது, விஷயத்தை வேறு வழியில் புகுத்திவிட்டதாகவே இவர் கருதினர். ராஜீய உரிமைகளுக்காகப் போராடுபவர்களிடம் ஆத்மீகத்தின் அம்சத்தைக் காட்டுவது இவருக்குப் பிடிக்கவில்லை. ஆகையால் இவர் இதற்கப்புறமும் தமது இனத்தார் பலவகையிலும் அபிவிருத்தியடைந்துவருவதையே பிரதானமாகக் கொண்டு வந்தார். மூன்றும் வட்டமேஜை மகாநாட்டிலும், பார்லிமெண்டரி கூட்டுக் கமிட்டியிலும் கலந்துகொண்டு புதிய இந்திய அரசியல் சட்டம் உருப்பெறுவதற்கு இவர் உதவினர்.

7

புதிய சட்டப்பிரகாரம் இந்தியாவுக்கு சமஷ்டி அரசியல் விதிக்
கப்பட்டது: மாகாண சுயாட்சி முறையும் வழங்கப்பட்டது
1937-ல் புதிய அரசியல் அமுலுக்கு வந்தது. சமஷ்டி திட்டத்தில்
டாக்டர் அம்பேத்கருக்குப் பூரண திருப்தி கிடையாது. அதில்
பல குறைகள் இருப்பதாகவே இவர் கருதினர்: சுதேச சமஸ்
தானங்களைப் புகுத்தியதால் பிரிட்டிஷ் இந்தியாவுக்கு லாபமில்லை
என்று இவர் கூறினர். 1939-ம் வருஷத்தில் புனா கோகலே
இன்ஸ்டிட்யூட்டில் ஒரு பெரிய பிரசங்கம் புரிந்தார். "சமஷ்
டியா? சுதந்திரமா?" என்பதே விஷயம். அறிவையொட்டி
ஆராய்ந்து அலசிப்பேசினர். மாகாண சுயாட்சி முறையே
நீடித்துவருவது போதாது. மத்ய ஸர்க்காரின் அதிகாரத்தையும்
கைப்பற்றவேண்டும்: இரண்டும் ஒன்று சேர்ந்தால் தான் கதி
மோக்ஷம் ஏற்படும்.—இவ்விதம் இவர் கூறினர். மூன்று வருஷங்
களுக்கு முன்பு இவர் கூறியதுதான் இன்றும் முக்கியமான
தாக இருந்து வருகிறது. பிறகு யுத்தம் தொடங்கியது. யுத்த
முயற்சியில் இந்திய ஆதரவைப்பெற ஆசை பிறந்தது: சென்ற
வருஷம் ஜூலை மாதம் ராஜப்பிரதிநிதியின் நிர்வாக சபையில்
மேலும் சில இந்தியர் நியமிக்கப்பட்டனர்: இவருக்கும்
அப்போது ஸ்தானம் கிடைக்கும் என பலர் எதிர்பார்த்தனர்:
ஆனல் தேசிய பாதுகாப்புச் சபையில் இவருக்கு ஸ்தானம் வழங்
கப்பட்டது: அதை பூழுமனதுடன் ஏற்றுக் கொண்டார்:
இந்த ஏற்பாடுகளும் மக்களுக்கு மகிழ்ச்சி ஊட்டவில்லை. ராஜப்
பிரதிநிதி சபை பூராவும் இந்தியர் அடங்கியதாய் இருக்க
வேண்டும்: பாதுகாப்பு நம்மவரிடமே இருக்க வேண்டும்:—என்
றெல்லாம் இங்குள்ளவர் தெரிவித்தனர். இவ்வருஷம் ஏப்ரல்

(18-ம் பக்கம் பார்க்க)

நமது தொடர் கதை

விஜயனின் காதலி

★

—டாக்டர் சாட்டர்ஜி எழுதியது—

முன் கதைச் சுருக்கம்

விஜயன் ஜமீன்தார் ஹரிஹர் கோஷாலின் புத்திரன்: சீமை சென்று திரும்பியவன்: மனைவி இறந்துவிட்டாள்: ஒரே பிள்ளை தான் அவனுக்கு. கனேசபுரத்தில் இருந்த வீட்டைத் தானே நேரில் போய் காலி செய்வதற்காக அவன் வந்தான்: தன் சிறு பிள்ளையையும் தன்னுடன் அழைத்துக்கொண்டே போனன். வீட்டில் அவன் எதிர்பார்த்த ஆஸாமி இல்லை. அனுராதா மட்டும் இருந்தாள். விஜயன் அவ்விடத்தில் தங்கியிருக்க நேருடுகிறது. ஆகவே விஜயனின் புத்ரனை அனுராதா மிகுந்த பரிவுடன் கவனித்து வருகிருள்: வித்தியாசமின்றி நடத்திவருகிருள்: இது விஜயனுக்குத் தெரியும். ஆகவே அவனுக்கும் அனுராதாவுக்கும் இது காரணமாக அடிக்கடி பேச்சு நேரிடுவதுண்டு.

* * * * *

4

இந்த வீட்டிற்கு வந்த பிறகு விஜயனுக்கு ஒரு ஈஸி [chair] கிடைத்தது. சாயங்காலம் அதில் படுத்துக் கொண்டு இரு கைகளிலும் கால்களை நீட்டிக் கொண்டு கண்களை மூடிக்கொண்டு, ஸிகரெட் பிடித்துக்கொண்டிருந்தான். இதற்குள் "பாபு ஸாகேப்" என்று யாரோ கூப்பிட்ட சப்தம் கேட்டது. கண்களைத் திறந்து பார்த்தான் விஜயன். ஒரு வயதான கனவான் நின்று கொண்டு மரியாதையாய் அவனை அழைத்துக் கொண்டிருந்தார். உடனே அவன் எழுந்து உட்கார்ந்தான். வந்திருந்த கனவானுக்கு வயது அறுபது இருக்கும். ஆனல் சிவந்த மேனி. உல்லாஸ புருஷராகவே காணப்பட்டார். மீசை யெல்லாம் நரைத்து விட்டது: என்ருலும் நடுநடுவே ஒவ்வொரு கறுப்பும் இருந்தது. வாயில் இரண்டொரு பற்களைத் தவிர பாக்கி யாவும் பொய்ப்பற்கள்: உடம்பில் நல்ல பட்டுச் சட்டை. கழுத்தில் சால்வை, சீன தேசத்து வார்னிஷ் ஜோடு. கடிகாரச் சங்கிலியில் நகம் பொன் கட்டித் தொங்கிக்கொண்டிருந்தது அந்தப் பட்டுக் காட்டில் இவர் சிறந்த தனமுள்ளவராக காணப்பட்டார். அருகே இருந்த ஒரு திண்ணையில் ஏதோ புஸ்தகச் சாமான்கள் இருந்தன அவைகளை நகர்த்தி விட்டு, விஜயன் அவரை உட்காரும்படிக் கூறினன். விருத்தர் உட்கார்ந்து கொண்டு "நமஸ்காரம், பாபு!" என்ருர்.

"நமஸ்காரம்!" என்ருன் விஜயனும்.

வந்திருந்தவர் "தாங்கள் கிராமத்து ஜமீந்தார். தங்கள் தகப்பனர் பிரசித்த லக்ஷாதிபதி! அவர் பெயரைச் சொன்னலே போதும் நாங்கள் அவருடைய புத்திரர். பாவம். அந்தப் பெண் மேல் கொஞ்சம் தயை காட்டா விட்டால் அவள் ரொம்பக் கஷ்டப் படுவாள்" என்ருர்.

"எந்தப் பெண், பாவம்? அவளிடம் எவ்வளவு ரூபாய் வாங்குகிறீர்கள்?" என்ருன் விஜயன்.

பணம் காசு விஷயம் ஒன்றுமில்லை நான் பேசுவது, அந்த காலஞ் சென்ற அமர சட்டர்ஜீயின் மகளைப்பற்றி—நாம் நினைக்க வேண்டிய மனிதர் அவர். இந்த ககன சட்டர்ஜீயின் சகோதரி! இந்த வீடு அவளுடைய பிதுரார்ஜிதமானது. அவள் இருக்கமாட்டாள்—போய் விடுவாள். அவளுக்கு ஏற்பாடாகிக் கொண்டு வருகிறது, ஆனல் தாங்கள் அவளைக் கழுத்தைப் பிடித்துத் தள்ளுவது தங்கள் கௌரவத்திற்குகந்ததல்ல!" என்ருர்.

இந்தப் படிப்பற்ற விருத்தர் மேல் கோபம் கொள்ள முடியாது விஜயன் இதைத் தன் மனதிற்குள் அறிந்து கொண்டான். ஆனல் பேச்சு வார்த்தை முறையில் சற்று கோபம் கொண்டான் "என்னுடைய உசிதா அனுசிதங்களை நானே தெரிந்து கொள்கிறேன். தாங்கள் யார் அவளுககாக வக்காலத்து வாங்கிக்கொண்டு வந்திருப்பவர்?" என்ருன்.

"என் பெயர் த்ரிலோசன-கங்கோபாத்யாயர், அருகேயுள்ள மஸ்ஜிதபுரத்தில் வீடு. என்னை எல்லோரும் அறிவார்கள் தங்கள் தாய் தந்தையரின் ஆசிர்வாதத்தினல், இங்கே என்னிடம் வந்து கை நீட்டாத மனிதர் கிடைப்பது அரிதென்றே சொல்லி விடலாம். உங்களுக்கு நம்பிக்கை இல்லாவிட்டால் விநோத கோஷிடம் கேட்டுக் கொள்ளுங்கள்" என்ருர்.

"எனக்கு கை ஏந்த வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டால், தங்கள் இருப்பிடத்தைத் தேடுகிறேன். ஆனல், நீங்கள், வக்காலத்து வாங்கிக் கொண்டு வந்திருக்கிறீர்களே, அவள் உங்களுக்கு என்ன ஆக வேண்டும்? நான் தெரிந்து கொள்ள முடியுமா?" என்ருன் விஜயன்.

வந்திருந்தவர் வேடிக்கையாக சிரித்துக் கொண்டே, "என்ன ஆக வேண்டும், இந்த வைகாசி மாதம் ஏழெட்டு நாள் போனல், நான் அவளை விவாகம் செய்து கொள்ளப் போகிறேன்" என்ருர்

விஜயன் ஆச்சர்யமடைந்து போனன். "தாங்களா அனுராதாவை கல்யாணம் செய்து கொள்ளப் போகிறீர்கள்?" என்ருன.

"ஆமாம்! இது தான் தீர்மானமான எண்ணம். சித்திரைக்குப் பிறகு நல்ல முகூர்த்தம் ஒன்றும் கிடைக்கவில்லை, கிடைத்திருந்தால் இந்த சுப காரியம் இந்த மாதத்திற்கு முன்பே நடந்து இருக்கும் இங்கே இருக்கவேணும் என்ற விஷயம் தங்களிடம் சொல்லும்படிக்கூட ஏற்பட்டிருக்காது." என்ருர்.

சிறிது நேரம் சும்மா இருந்து விட்டு "இந்த கல்யாணத்தை யார் நிச்சயம் செய்தார்கள்? ககன சட்டர்ஜியா?" என்று கேட்டான் விஜயன்.

விருத்தர்கோபப் பார்வையுடன் "அவன் தான் ஓடிப் போனவனயிற்றே, சொத்தையும் நாசம் செய்து விட்டு, ஓடியும் போய்விட்டான், இவ்வளவு நாள் அவனல் தான் தடைபட்டு வந்தது. இல்லா விட்டால் தை மாதமே நடந்திருக்கும். நாங்கள் சிறந்த குலீனர்கள், கிருஷ்ண பரமாத்மாவின் சந்ததிகள், வம்சஜன் வீட்டில் தங்கையைக் கொடுக்க மாட்டேன்": இது தான் அவனுடைய வார்த்தைகள். இப்பொழுது அந்தக் கர்வம் எங்கே போயிற்ருே தெரியவில்லை? வம்சஜன் வீட்டிற்குத் தான் ஓடிவர நேர்ந்தது. இந்தக் காலத்தில் ஜாதி குலம் இதை யார் பார்க்கிருர்கள்? பணம் தான் குலம், ரூபாய் தான் மரியாதை; ரூபாய் தான் சகலமும் சொல்லுங்கள்—என்ன சரிதான இல்லையா?" என்ருர்.

"ஆமாம்! அது சரிதான்! அனுராதா ஒப்புக் கொண்டாளா?" என்று கேட்டான் விஜயன்.

அந்தக் கனவான் கம்பத்தில் ஒரு தட்டு தட்டி "சம்மதம்? சொல்வதென்ன இருக்கிறது? கர்வம் பேசிக்கொண்டிருந்தது. நகரத்திலிருந்து நாங்கள் வந்து போட்ட போடில் திண்டாடி தெருவில் நின்று ஐயோ அம்மா வென்று என்னிடம் வந்து நின்றது. இல்லாவிட்டால் எனக்கென்ன வந்தது? இந்த எண்ணமே எனக்குக் கிடையாது. பெண் வீட்டுக்காரர் அபிப்ராயம் பிள்ளை வீட்டுக்காரர் அபிப்ராயம் ஒன்றும் கிடையாது. பெண்ணும் மாப்பிள்ளையுமே நேருக்கு நேராகிவிட்டனர் நான் கூட 'தொலையட்டும் சனியன்! தள்ளு குப்பையில்! இரண்டுதரம் தான் மணம் செய்து எல்லாம் பார்த்தாகிவிட்டதே! இன்னமும் என்ன?' என்று எண்ணினேன். ஆனல் அனுராதாவே ஆளை அனுப்பி என்னை வரவழைத்தது 'கங்கோலி மஹாசயரே! தங்கள் சரணத்தில் சற்று இடமளியுங்கள்! தங்கள் வீடு கூட்டி என் வாழ்நாளைக் கழிக்கிறேன்!' என்று சொல்லும்போது என்ன செய்வது? ஒப்புக்கொள்ளும்படி தான் ஆகிவிட்டது." என்ருர்.

விஜயன் ஸ்தம்பித்து உட்கார்ந்திருந்தான். விருத்த மஹாசயர் மீண்டும் "கலியாணம் இந்த வீட்டிலேயே நடைபெற வேண்டும். பார்ப்பதற்கு சற்று கம்பீரமாக இருக்கிறது. இல்லாவிட்டால் என் வீட்டிலேயே கூடச் செய்ய முடியும். ககன சட்டர்ஜிக்கு ஒரு அத்தை இருக்கிருள். அவள் தான் கன்யாதானம் செய்யப்போகிருள். இப்பொழுது தாங்கள் மாத்திரம் சம்மதப்பட்டுவிட்டால் யாவும் சரிப்பட்டுவிடும்" என்ருர்.

விஜயன் தலை நிமிர்ந்து "சம்மதப்பட்டு நான் என்ன செய்ய வேண்டும், சொல்லுங்கள்? வீட்டைக்காலி செய்ய நிர்ப்பந்திக்காமல் இருக்க வேண்டும், இது தானே? நல்லது! அப்படியே ஆகட்டும். இனி நீங்கள் சென்று வரலாம் நமஸ்காரம்" என்ருன்.

"நமஸ்காரம்! மஹாசயஜி! நமஸ்காரம். அதுதான் விஷயம்! அதுதான் விஷயம்! தங்கள் தந்தைதான் லக்ஷாதிபதி! அவர் பெயரைக் காலையில் நினைத்தாலே புண்ணியம். பெயரைச் சொன்னலே நற்பொழுது முடியும்!" என்ருர்.

"அப்படியே ஆகட்டும்! தாங்கள் இப்பொழுது சென்று வாருங்கள்!"

"ஆஹா! சென்று வருகிறேன்! நமஸ்காரம், மஹாசயஜி!" என்று சொல்லிக்கொண்டே த்ரிலோசன பாபு செல்லலானர்.

விருத்த மஹாசயர் சென்ற பின் விஜயன், 'இதைப்பற்றி யோசித்து மண்டையை உடைத்துக்கொள்வதில் என்ன லாபம்?' என்று முதலில் எண்ணினன். உண்மையில் இந்தக் கிழவரைத் தவிர அவளுக்குவேறு யார்? வழி தான் என்ன இருக்கிறது? இது ஒன்றும் உலகில் நடக்காத ஒரு அதிசயமல்ல. இது உலகில் சகஜமாக நடந்துகொண்டுதான் வருகிறது. இதைப்பற்றி வருந்துவதில் என்ன பயன்? திடீரென்று அவனுக்கு விநோத கோஷின் ஞாபகம் வந்தது. அன்று ஒரு நாள் "அனுராதா தன் சகோதரனிடம், 'குலத்தையும் கோத்திரத்தையும் பார்ப்பதால் என்ன ஆகப் போகிறது, ஏதோ சோறு துணிக்குக் குறைவில்லாமல் கிடைத்தால் போதாதா? என்று சொன்னதும். அதற்கு ககன் கோபத்துடன் 'நீ தாய் தந்தையரின் பெயரைக் கெடுக்க விரும்புகிருயா?' என்று கேட்டதும்—அதற்குப் பதிலாக அனுராதா, தன் தமயனிடம், 'நீ அவர்களுடைய குலக்கொழுந்து, நீதான் அவர்கள் பெயரைக் காப்பாற்ற வேண்டும், நான் காப்பாற்ற முடியாது' என்று சொன்னது மான இத்யாதி விஷயங்கள் அவன் வாயிலாக அறிந்தது நினைவுக்கு வந்தன.

இந்த வார்த்தைகளில் அடங்கி இருக்கும் வேதனையை விஜயனல் அறிய முடியவில்லை. அவனுக்கு குலீன மரியாதையில் நம்பிக்கை உண்டா? அதல்ல விஷயம். ஆயினும் அவனுடைய அனுதாபம் ககனிடம் சென்றது. அனுராதாவின், கூர்மையான பதில் வார்த்தைகளைப் பற்றி தனக்குள் யோசனை செய்யலானன. வரவர அது அவனுக்கு வெட்கமற்றதாகவும், துச்சமானதாகவுமே தோன்றலாயிற்று.

வெளியே குடி ஜனங்கள் வந்து கூடி இருந்தனர். அவர்களுடன் சென்று தன் காரியங்களைப் பார்க்க வேண்டும் ஆனல் அன்று அவனுக்கு ஒன்றுமே பிடிக்கவில்லை. தர்வானைக் கூப்பிட்டு அவர்கள் எல்லோரையும் போகும்படிச் சொல்லக் கட்டளை இட்டு விட்டு, சிறிதுநேரம் தனிமையில் உட்கார்ந்து யோசனை செய்து விட்டு என்ன நினைத்துக் கொண்டானே என்னமோ, எழுந்து நேரே உள்ளே சென்ருன்.

சமையலறைக்குள் ஒரு பாயை விரித்து அனுராதா படுத்துக் கொண்டிருந்தாள். அவளுடைய இரு பக்கங்களிலும், குமாரும் சந்தோஷும் மகாபாரதக் கதை நடந்தது. இரவு சமயலை சீக்கிரம் செய்து முடித்து விட்டு பிரம் தினம் சாயங்காலம் இந்த திரிமா

பையன்களுக்கு கதை சொல்லிக் கொண்டிருப்பது வழக்கம்: பிறகு குமாருக்கு சாதம் போட்டு அவனை அவன் தந்தையிடம் அனுப்புவதும் வழக்கம்: நிலவு விரிந்த இரவு. அருகே இருந்த மாமரத்துத் துளிர்களின் வழியாக சந்திரன், தன் வெள்ளிக் கிரணத்தை, அவளுடைய, முகத்திலும், உடலிலும், வீசிக்கொண்டிருந்தான் மரத்து நிழலில் யாரோ மனிதனின் நிழல் தெரிவதைக் கண்டு திடுக்கிட்டு "யார்?" என்றாள். அனுராதா.

"நான் தான்! விஜயன்!"

மூவரும் வாரியடித்துக் கொண்டு எழுந்தனர், சந்தோஷனுக்கு, [illegible] பாபுவிடம் ரொம்ப [illegible]யம். முதல் நாள் நடந்த சம்பவத்தை அவன் மறக்கவே இல்லை. ஆகையால் அவன் எழுந்து ஓடலானான். குமாரும் அவனை அனுசரித்தான்,

"த்ரிலோசன் கங்கோலியைத் தங்களுக்குத் தெரியுமா? அவர் இன்று என்னிடம் வந்திருந்தார்" என்றான் விஜயன்.

அனுராதாவுக்கு ஆச்சர்யமாகி விட்டது "தங்களிடமா? தாங்கள் அவரிடம் கடனுளியல்லவே!" என்றாள்

"இல்லை, ஆனால் இருந்திருந்தால் தங்களுக்கு நன்மையாக இருந்திருக்கும். என்னுடைய ஒரு நாளைய கொடுமைக்கு, தாங்களும் ஒரு நாள் பதில் செய்ய முடிந்திருக்கும்!"

அனுராதா பேசவில்லை விஜயன் மீண்டும் "தங்களுக்கும் அவருக்கும் மணம் நிச்சயமாகி விட்டதென்று அவர் தெரிவித்து விட்டுப் போனார்! இது வாஸ்தவம் தானா?"

"ஆமாம்!"

"தாங்களே அவரை யாசித்து ஒப்புக் கொள்ளச்செய்தீர்களா?"

"ஆமாம் அப்படித்தான்!"

"அப்படி இருந்தால் இது வெட்கப்படக்கூடிய விஷயம்! கேவலம் தங்களுக்கு மாத்திரமுல்ல! எனக்கும் கூட."

"தங்களுக்கு ஏன்?"

"இதைச் சொல்லத்தான் நான் வந்தேன். த்ரிலோசன் பாபு என்னிடம் என்னுடைய நிர்ப்பந்தத்தால் தான் தாங்கள் இப்படித் தீர்மானம் செய்தீர்கள்! தங்களுக்கு வேறு திக்கில்லாததால் ரொம்ப வேண்டி விநயத்துடன் அவரை ஒப்புக்கொள்ளச் செய்தீர்கள்! இல்லாவிட்டால், இந்த விருத்தாப்பியத்தில், மணம் செய்து கொள்ள வேண்டும் என்ற இச்சையே அவருக்குக் கிடையாதாம். தாங்கள் அழுது, அங்கலாய்த்துக் கொண்டதின் பேரில், தயை வைத்து, இதை ஒப்புக் கொண்டேன் 'என்றும்' சொன்னார்" என்றான் விஜயன்.

"ஆமாம். இவை யாவும் உண்மை தான்!"

"என்னுடைய நிர்ப்பந்தத்தை நான் வாபீஸ் பெற்றுக் கொள்கிறேன். என்னுடைய நடத்தைக்காகத் தங்களிடம் மன்னிப்பும் கேட்டுக் கொள்கிறேன்" என்றான் விஜயன்.

அனுராதா மௌனமாக இருந்தாள். விஜயன் மறுபடியும் "இப்பொழுது தங்கள் தரப்பிலிருந்து தாங்கள் தீர்மானத்தை வாபீஸ் பெறுங்கள்" என்றான்.

"இல்லை! அது நடக்காது. நான் வாக்குக் கொடுத்து விட்டேன் எல்லோரும் கேள்விப் பட்டிருக்கிறார்கள்! ஜனங்கள் அவரைப் பரிகாசம் செய்வார்கள்." என்றாள் அனுராதா.

"கேலி செய்யமாட்டார்களா? அதுவும்! ரொம்பக் கேலி செய்வார்கள்! அவருக்கு சரி சமானமான பிள்ளைகள் இருக்கிறார்கள். பெண்கள் இருக்கின்றனர். அவர்களுடன் சச்சரவு ஏற்படும். அவருடைய குடும்பத்தில் உபத்திரவங்கள் உண்டாகிவிடும். உங்களுடைய சாந்தியின்மைக்கும் ஒரு எல்லை இருக்காது. இவைகளை எல்லாம் தாங்கள் யோசித்தீர்களா?"

அனுராதா ரம்யமான குரலில் "யோசித்திருக்கிறேன்! இது ஒன்றும் நடக்காது என்பது என் நம்பிக்கை" என்றாள்.

இதைக்கேட்ட விஜயன் பிரமித்துப்போய்விட்டான் "வயதானவர் எவ்வளவுநாள் ஜீவித்திருப்பார் என்று தாங்கள் நம்புகிறீர்கள்:" என்றான்

"உலகில் ஸ்திரீகள் தங்களுடைய கணவன்மார்களுக்கு தீர்க்காயுள் வேண்டுமென்று தான் விசேஷமாக விரும்புகிறார்கள் கணவனுக்கு முன் சுமங்கலியாகவே நான் இறந்து விடவும் கூடும்" என்றாள் அனுராதா.

விஜயனுக்கு இதற்குப் பதிலளிக்க தேடிப்பார்த்துக் கூட வார்த்தைகள் அகப்படவில்லை. செயலற்று நின்று விட்டான். சில நிமிஷங்கள் இம்மாதிரி மௌனத்தில் கழிந்த பிறகு அனுராதா வணக்கமான குரலில் "தாங்கள் என்னை போகச் சொல்லி உத்திரவிட்டீர்கள் ஆனால் பிறகு அதைப்பற்றிப் பேச்சை எடுக்கவில்லை இது உண்மைதான் தயை வைக்க நான் யோக்யமற்றவளாயினும் தாங்கள் தயை வைத்தீர்கள். இதற்காக நான் எவ்வளவு கடமைப்பட்டிருக்கிறேன் என்பதை மனதால் எண்ணுகிறேன். அதை வாய்விட்டுச் சொல்ல முடியவில்லை," என்றாள்.

விஜயனிடமிருந்து யாதொரு பதிலும் வராததைக் கண்டு அனுராதா மீண்டும் "பகவான் அறிவான் நான் யாரிடமும் தங்களைப்பற்றி எதுவும் சொல்லவில்லை. சொன்னால் அது, அநியாயம், பொய்யும் ஆகும். கங்கோலி மஹாசயர் ஏதாவது சொல்லி இருந்தால் அது அவராகச் சொன்னதாகத் தான் இருக்கும். ஆயினும் அவருக்காகவும் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுகிறேன்" என்றாள்

"உங்களுடைய முகூர்த்தம் எப்பொழுது? வைகாசி மாதம் இருபத்தெட்டாம் தேதியா? ஆனால் ஒரு மாதம் தான் இருக்கிறது—அல்லவா?" என்று கேட்டான் விஜயன்.

"ஆமாம்!"

"ஒருகால் இதில் ஏதாவது மாறுதல் ஏற்படக்கூடுமோ?"

"அநேகமாக இல்லை! கிட்டத்தட்ட அப்படித்தான் அவர் நம்பிக்கை அளித்திருக்கிறார்"

விஜயன் வெகு நேரம் பேசாமல் இருந்துவிட்டு "ஆனால் நான் வேறொன்றும் சொல்ல வேண்டியதில்லை. தங்களுடைய எதிர்கால வாழ்க்கையைப்பற்றி தாங்கள் சற்று கூட யோசிக்கவில்லை. இதுதான் எனக்கு வருத்தமாக இருக்கிறது" என்றான்.

"ஒரு தரமல்ல, நூறு தரம் யோசித்துவிட்டேன் எனக்கு இரவு பகல் இதே யோசனை தான். தாங்கள் என் நன்மையை விரும்புகிறவர்கள், தங்களுக்கு என் [illegible] வெளியிட எனக்கு வார்த்தைகள் அகப்படவில்லை ஆனால் தாங்களே யாவற்றையும் ஒரு முறை யோஜனை செய்து பாருங்கள்—பணமில்லை—அழகில்லை, வீடில்லை, வாசலில்லை—சகாயமின்றி, தனியாகக் கிராமத்துக் கொடுமைகளின்று தப்பித்துச் சென்றிருக்க ஒரு இடமும் இல்லை—வயதாயிற்று, இருபத்தி இரண்டு, இருபத்திமூன்று. அவரைத் தவிர யார் என்னை மணக்க விரும்புவார்கள்? தாங்கள் தான் சொல்லுங்களேன்? யாரிடம் சென்று நான் ஒரு வாய் சோற்றுக்குப் பிச்சை எடுப்பது? இதைக் கேட்டால் தாங்கள் தான் என்ன எண்ணுவீர்கள்?" என்றாள் அனுராதா,

"இவையெல்லாம் உண்மை தான் இதற்குப்பிரதிவாதம் ஒன்றும் சொல்லமுடியாது" இரண்டு மூன்று நிமிஷம் பதில் சொல்லாமல் விஜயன் நின்றான். பிறகு கம்பீரமான அனுதாபத்துடன் "இந்த மாதிரி சந்தர்ப்பத்தில் நான் தங்களுக்கு எந்த வித உதவியும் செய்யமுடியாதா? செய்ய முடியுமானால் சந்தோஷம் தான்!" என்றான்.

"யாரும் செய்ய முடியாத பெரிய உபகாரத்தைத் தாங்கள் எனக்குச் செய்திருக்கிறீர்கள் தங்களுடைய ஆச்சர்யத்திலகப்பட்டு பயமற்று இருக்கிறேன் இந்த இரண்டு குழந்தைகளும் எனக்கு சந்திர சூரியர்கள் இதுவே எனக்குப் போதும்! தங்களிடம் ஒரே ஒரு பிரார்த்தனை தான் செய்கிறேன்! சகோதரனின் நற்றத்திற்காக, தாங்கள் மனதிற்குள் என்னையும் [illegible] என்று எண்ணாமல் இருக்க வேண்டும் நான் மனமறிந்து ஒரு குற்றத்தையும் செய்யவில்லை" என்றாள்.

"இது எனக்குத் தெரியும். தாங்கள் சொல்ல வேண்டியதில்லை." என்று சொல்லிவிட்டு விஜயன் மெள்ள வெளியே செல்லலானான்.

"சர்மா" மொழி பெயர்த்தது.

(தொடரும்)

காலையில் எழுந்தவுடன்

காலையில் எழுந்தவுடன் நீங்கள் செய்ய வேண்டிய முதல் காரியம் டீ அருந்துவதே. இரவிலுண்டான அசக்தியை முற்றிலும் போக்கி, சுறு சுறுப்புடன் உங்கள் பகல் வேலைகளைக் கவனிக்க தயார் செய்ய வல்ல உயரிய பானம் டீயே.

★

எங்கள் புதிய பிரசுரமாகிய "டீ அருந்துவதற்கான சமயங்கள்" என்ற சித்திரங்களுடன் கூடிய புத்தகத்தில் டீ அருந்துவதற்கான சில விசேஷ சமயங்களைப்பற்றி இங்கிலீஷில் சொல்லப் பட்டிருக்கிறது. இந்த விளம்பரத்தைக் கத்தரித்து, உங்கள் பெயர் விலாசத்துடன், கீழ்கண்ட விலாசத்தாருக்கு அனுப்பினால், அவர் இப்புத்தகத்தின் பிரதி ஒன்று இலவசமாக அனுப்புவார். கமிஷனர் (இந்தியாவுக்கு), இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டு, தபால் பெட்டி நெ. 2172 கல்கத்தா.

இந்தியன் டீ

அருந்துங்கள்

புத்துயிரளிக்கும் உயரிய பானம்

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது

IK 156

பொறுமைப் பேய்

சிறு கதை.

★

ஆர். கே. பார்த்தசாரதி எழுதியது

நான் சித்திரமெழுதுபவன் அழகே எனது தெய்வம். அவள் குடியிருக்குமிடமே எனது பூஜையறை அவள் எங்கு காணப்படினும் கைகூப்பித் தொழுவேன். அவளை எனது சித்திரத்திரையிலேற்றி மகிழ்வேன். அழகுத் தெய்வம் என்னிடம் பன்மடங்கு அதிகமான அழகைப்பெற்று விளங்குகிறாள் என்று என் சித்திரத் திறமையைப் பலர் போற்றுவதுண்டு. எனினும் இப்பேச்சினால் நான் அகங்காரம் கொள்ளவில்லை. "எனது லட்சியம் இன்னும் நிறைவேறவில்லை. கலைத்தெய்வம் இன்னும் என்பால் அருள் சுரக்கவில்லை" என்பதை நான் நன்கு அறிவேன்.

எனது மனைவி கல்யாணமாகி வெகு நாட்கள் வரை எனது லட்சியத்தின் குறுக்கே நிற்கவில்லை. எனினும் அந்தோ! ஒரு சமயம் அவள் எனது கலையையே கொலை செய்தாள் எனவும் அவ்வளவு கொடுமையான ஏமாற்றமொன்று ஏற்பட்டது.

இயற்கையில் என் இளம் மனைவி தயை நிறைந்தவள். இரப்போர்க்கு 'இல்லை'யென்று சொல்லமாட்டாள். பட்டினி கிடப்பவர்களைக் கண்டு பரிதவிப்பாள். அதிகம் கூறுவானேன்! ஏழைகளுக்கும் எளியவர்களுக்கும் எனது வீடு அன்னசத்திரமாக விளங்கியது. இது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியையே கொடுத்ததென்று சொல்ல வேண்டும். சில சமயத்தில் நான் வேடிக்கையாக "நாம் இப்படியே பிறருக்கு அன்னமிட்டுக்கொண்டிருந்தால் ஒரு நாள், நாம் இந்த கதிக்கு வந்துவிடமாட்டோமா?" என்பதுண்டு. அப்பொழுது "கொடுத்துக் கேட்டவர் ஒருவரில்லை' என்பதே அவள் பதில். எனது மனைவியின் [illegible] எனது கலாவுணர்ச்சிக்கு மிகவும் அனுகூலமாக இருந்தது. வீட்டில் அமைதியும் அன்பும் குடிகொண்டிருந்தன.

ஒரு சமயம் எனது மனைவி பீச்சிற்குச் சென்றிருந்தாள். நான் வேறோரிடத்தில் இயற்கையின் அழகை அள்ளிப்பருகச் சென்றிருந்தேன். பட்டணத்தின் எழிலையை ஒருவன் காண வேண்டுமென்றால் அவன் அதை 'மரீனா'வில் நிற்கும் கார்களின் எதிரிலும் நடையின் இரண்டு பக்கங்களிலும் தான் பார்க்கலாம் என்று கூறவும் வேண்டுமா? அந்தோ! எத்தனை முடவர்கள்" கண்ணிழந்தவர்கள், எத்தனை பேர்! பரிதாபம்! கம்பீரமாக நிற்கும் கார்களின் முன் தீனமாகத் திரியும் திக்கற்றவர்களின் தோற்றம் மனிதவாழ்வின் மாயையை நன்கு அறிவுறுத்துவது போலும், கவலை தேங்கிய முகத்துடன் கை நீட்டிப் பிச்சை கேட்கும் அவர்களுக்குக் காலணா போடுவதா, அங்கு காற்று 'வாங்க' வந்திருக்கும் பணக்காரர்களின் வேலை! அவர்களுக்கு இதைவிட முக்கியமான வேலைகள் கிடையாதா? என்னே இந்த ஏழைச் சனியன்களின் தொந்தரவு! பட்டணத்தைப் பாழ்படுத்துகிறார்களே.!

என் மனைவியின் 'கார்' முன் ஒரு பெண் உருவம் நெருங்கியது, தீனமான குரலில் "அம்மா காலணா கொடுங்களேன். காலையிலிருந்து ஆகாரமொன்றுமில்லை" என்ற வார்த்தைகள் தட்டுத்தடுமாறி வெளிப் போந்தன. அடாடா! என்ன கொடுமை! இளமையில் வறுமை! பதினைந்து வயது நிரம்பிய . ஒரு பெண் அழகியின்-இல்லை இல்லை-ஒரு பிச்சைக்காரியின் குரல் எனது மனைவியின் மனதைக் கலக்கி விட்டது. தீராத கவலையினால் வாடி வதங்கிய அப் பெண்ணின் முகத்தைக் கரிய கூந்தலின் நுனி மறைத்துக் கொண்டிருந்தது. பூரண சந்திரனை ஒரு மேகக் கீற்று மூடியிருப்பது போலிருந்தது. அப் பெண்ணின் முகத்தில் அவ்விள வயதிலேயே விழுந்திருந்த சுருக்கங்கள் சமூகத்தின் ஈரமற்ற தன்மையைப் பெருக்கிக் காட்டின. நூற்றுக்கணக்கான ஒட்டைகளாலாகிய ஒரு வஸ்திரமே அப் பெண்ணின் மானத்தைக் கூடியவரை காப்பாற்ற முயன்றது.

இக்கோரக்காட்சி என் மனைவியை எண்ணக் கடலில் ஆழ்த்தியது. வெகுநேரம் சிந்தனையற்றவள் போல் உட்கார்ந்திருந்தாள். மறுமுறை அப் பெண் 'அம்மா ஏதேனும் பிச்சை உண்டா?' என்று கேட்ட பொழுதுதான் என் மனைவி திடுக்கிட்டு விழிப்புற்றாள். கருணை, கரை புரண்டு ஓடியது. வேறொன்றும் பேசாமல் அப்பெண்ணைத் தன் 'காரில்' ஏறிக்கொள்ளும்படி கூறினாள். அப்பெண் தனது காதுகளையே நம்பவில்லை. 'காரில்' ஏறச்சொல்லி நன்றாகப் புடைத்து விடுவார்களோ? என்றுகூட அவள் சந்தேகப்பட்டாள். பிச்சைக்காரியாவது 'காரில்' ஏறிக்கொள்வதாவது! ஐயையோ! இதென்ன விபரீதம்! இம்மாதிரி கூறும் பணக்காரர்களை அப்பிச்சைக்காரி பதினைந்து வருடங்களாகக் கண்டதேயில்லையே! பிச்சைகேட்டால் 'சீ நாயே, அப்புறம் போ' என்றல்லவா பணக்காரர்கள் திருவாய் மலர்ந்தருள்வார்கள்!

'இது ஏதோ சூது' என்று நினைத்துப் பிச்சைக்காரி வேறு பக்கம் செல்ல முயன்றாள். ஆனால் எனது மனைவியா விடுபவள்? அவளைப் பலவந்தப்படுத்திக் காரில் அமர்த்திக் கொண்டுவீட்டை அடைந்தாள். அன்றுமாலை இப்பைத்யக்காரச் செய்கையைக்கண்டு பல பணக்காரர்கள் 'மரீனா'வில் வாய்விட்டுச் சிரித்திருப்பார்கள்.

வீட்டையடைந்ததும் பிச்சைக்காரப்பெண்ணிற்குப் பல வித உபசாரங்கள் நடந்தன. கந்தலுடை போய் பட்டு வஸ்திரம் வந்தது: கால்வயிற்றுக் கஞ்சிக்கும் வழியில்லாத பெண்ணிற்கு ஒரு [illegible] 'ஓவல்டின்' கிடைத்தது. அத்ருஷ்டமென்றால் இதுவன்றோ அதிருஷ்டம். என் மனைவியின் தாராளம் தான் என்ன! சுருங்கக்கூறின் பிச்சைக்காரி பெண் திலகமென விளங்கினாள் என்றாலும், அப்பேதை இவையொன்றும் புரியாமல் மருண்ட மானைப் போல் "மிரள மிரள" விழித்தாள்.

இச்சந்தர்ப்பத்தில் தான் நான் வீட்டிற்குத் திரும்பினேன், உள்ளே சென்றதும் என் மனைவி பீச்சில் நடந்த எல்லாவற்றையும் சாங்கோபாங்கமாகக் கூறினாள். அதைத்தான் மேலே எழுதியிருக்கின்றேன். அப்பெண்ணின் அழகை விவரித்தாள். அழகுத் தெய்வத்தை உபாஸிக்கும் எனக்கு உடனே அவளைப் பார்க்கவேண்டுமென்று தோன்றியதில் ஆச்சரியமென்ன?

அப்பெண்ணைப் பார்த்தேன். ஆகா! என்ன அழகு! நான் பூஜித்த அழகுத் தெய்வம் இன்று எனக்குத் தரிசனம் தந்தாள் போலும். என்னே யௌவனத்தின் வனப்பு! ஒரே இடத்தில் எல்லா விதமான ஸௌந்தர்யத்தையும் பார்க்க விரும்பி, பிரும்மா இப்பெண்ணைப் படைத்தான் போலும்! 'ஆஹா இவளல்லவோ அழகி' என்று வாய் விட்டுக் கூறினேன். இவ்வளவு நேரம் மிகுந்த மகிழ்ச்சியுடன் பேசி வந்த என் மனைவியின் முகம் சட்டென்று ஒளி மங்கியது. அப்பொழுது நான் இதை அதிகம் கவனிக்கவில்லை; அதைப்பற்றிக் கவலைப் படவுமில்லை.

அன்று அவ்வழகி எங்களுடனேயே சாப்பிட்டாள். என் மனம் அவளது அழகைக் கல்பனை செய்தவாறிருந்தது. "எனது சித்திரத்தின் லட்சியம் இவளது உருவமே" என்று எண்ணி அகமகிழ்ந்தேன்.

மறுநாள் காலை அப்பெண்ணை வீட்டில் காணேம். எனது மனைவி வெளியே 'போய்விட்டாள். என் மனம் தவித்தது. மிகுந்த வேதனையுற்றேன். 'நேற்று வந்த பெண் எங்கே?' என்று [illegible]த்துடன் வேலைக்காரியைக் கேட்டேன் என் வேதனையையறிந்த வேலைக்காரி "ஐயா! இன்று காலை அந்த பிச்சைக்காரப்பெண்ணை யஜமானி அம்மா 'வெளியே அனுப்பி விட்டாள்" என்று சுருக்கமாகச் சொன்னாள். ஐயோ! என்ன காரியம் செய்தாள் என் மனைவி!

விஷயம் விளங்கிவிட்டது. என் மனைவியை பொறுமைப் பேய் பிடித்து விட்டது, அடி பாவி! பொறாமை [illegible] உனது தாயுணர்ச்சியான தயையையும் துரத்தி விட்டதே! பெண்மையைக் காட்டிவிட்டாயே! அவ்வேழைப் பெண்ணின் பாக்யத்தை நானா கெடுக்கவேண்டும்! அவள் ஓர் அழகி' என்று காமத்துடனா நான் கூறினேன்? எனது கலையுணர்ச்சியன்றோ என்னை அவ்வாறு கூற தூண்டியது! ஆஹா எவ்வளவு குரூரமாக எனது கலையின்பம் கொலையுற்றது!

அன்று நான் அடைந்த வருத்தத்தை நான் தான் உணரக்கூடும், வார்த்தைகள் உணர்த்தா.

தமிழ் நூல்கள்

லோகமாயை தல[illegible]	0	8
இரஞ்சிதமாலா	0	8
ஜகஜ்ஜாலன்	1	10
குழந்தைக்கட்டி	1	4
உலகரகசியம்	1	0
சலாம்பிகை	2	4
நவரத்னலாபிகட்	0	12

சுதேசமித்திரன் ஆபீஸ்: சென்னை.

ஸ்ரீ கோபால மந்திரம் [illegible] ஸ்தாபன தினக் கொண்டாட்டம் சென்ற மாதம் 22-ம் தேதி ராயப்பேட்டை ஸ்ரீபுரம் அஜாக்ஸ் மெஸ் கட்டிடத்தில் நடந்தது.

த்யாகராஜ கீர்த்தனம்

[காபிரைட்]

(சங்கீத வித்வான் துறையூர் :எம். ராஜகோபால சர்மா)

I

பல்லவி

ஏமமோ தெலியக பலிகேரு செலுலார
நாமீத தயலேக

அனுபல்லவி

முனு மந்தரகிரி முனுக கூர்மமை வீ-
புனதால்சகலேதா

சரணம்

1. கரிராஜு மகரிசே காஸிஜெந்தக நேனு
கருண ஜூடலேதா

2. வெருவக நீடஜொச்சின ஸோமகுனிகொட்டி
வேதமு தேலேதா

3. காளிந்திலோனி காளியுனி மதம்புனு
காலனண சலேதா

4. மகரமு கொம்போயின குருபுத்ருனி
மரிதெச்சி யொஸகலேதா

5. த்யாகராஜுனகு ஸகுடைன நாது
ப்ரதாபமு வினலேதா

II

செலுலார!	—சகோதரிகளே!
நாமீத தயலேக	—என்மீது சிறிதும் இரக்கங் கொள்ளாமல்
ஏமேமோ	—என்னென்னமோ புகார்களை என்மீது சுமத்தி
தெலியக	—அறியாமையால்
பலிகேரு	—பேசுகிறீர்கள்.
முனு	—முன்பு
மந்தரகிரி	—மந்தர பர்வதம்
முனுக	—கடலில் மூழ்கிய தருணத்தில்
கூர்மமை	—நான் ஆமை உருக்கொண்டு
வீபுனதால் சகலேதா	—அப் பர்வதத்தை என்முதுகினல் தாங்கவில்லையா?
கரிராஜு	—கஜேந்திரன்
மகரிசே	—முதலையால்
காஸிஜெந்தக	—கஷ்ட மடைந்த தருணத்தில்
நேனு	—நான்
தருணஜூடலேதா	—கருணைகொண்டு அதை ரக்ஷிக்கவில்லையா?
வெருவக	—பயப்படாமல்
நீட	—சமுத்திரத்திற்குள்
ஜொச்சின	—மறைந்த
ஸோமகுனி	—ஸோமகாஸுரனை
கொட்டி	—ஸம்ஹரித்து
வேதமு தேலேதா	—வேதங்களை நான் மீட்டுக்கொண்டு வரவில்லையா?
காளிந்திலோனி	—காளீயமடுவில் இருந்த
காளியுனி	—காளிங்கன் என்ற கொடிய சர்ப்பத்தின்
மதம்புனு	—மதத்தை
காலனணசலேதா	—என்கால்களால் மிதித்து அடக்கவில்லையா?
மகரமு கொம்போயின	—முதலை விழுங்கின
குருபுத்ருனி	—என்குருவான சாந்தீபினி மஹரிஷியின் புத்திரனை
மரிதெச்சி யொஸகலேதா	—நான் திருப்பி மீட்டு உயிருடன் கொண்டு அவரிடம சேர்ப்பிக்கவில்லையா
த்யாகராஜுனகு	—த்யாகராஜனுக்கு
ஸகுடு ஜன	—உண்மைத் தோழனுய் உள்ள
நாதுப்ரதாபமு	—என்னுடைய வீரப்ரதாபங்களைப்பற்றி
வினலேதா	—நீங்கள் கேட்டதில்லையா?

III

முன்கதைச் சுருக்கம்:—பக்தைகளான கோபிகைகள் ஒரு சமயம் கண்ணனுடைய குழலோசையைக் கேட்டுப் பரவசமாகி, அவனைத் தேடிக் கண்டுபிடித்து அவனுடன், மிகுந்த அழகு கொண்டு விளங்கும் யமுனு நதி தீரத்தை அடைந்தனர். அங்கே அவர்கள் [illegible] ஓடத்தைக் கண்டனர். பின்பு, அவர்கள் ஒன்று கூடி ஆலோசித்து க்ருஷ்ணனை தங்களுடன் அழைத்துச் செல்லக்கூடாதென்று தங்களுக்குள் முடிவு செய்துகொண்டு, ஓடத்திலேறி பொழுது போக்க ஆயத்தம் செய்தார்கள்.

அவர்கள் ஸம்பாஷணையை உற்றுக் கேட்டுக்கொண்டிருந்த ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா தன் துணையின்றி அவர்கள் ஓடத்தை நடத்திச் செல்வது சாத்தியமாகாது என்று கூற, அதற்கு அவர்கள் தாங்கள் கண்ணனை அழைத்துச் செல்லாதத்திற்குக் காரணமாயுள்ள அவனுடைய குறும்புத்தன மான [illegible] லீலைகளைக் குறிப்பிட்டுக் காட்டி நிந்தனை செய்தனர்.

கோபியர்களின் வசைமொழியைக் கேட்ட க்ருஷ்ணபரமாத்மா,

ஈ நதின காது ஜலநிதி-கான நிபவ வார்தினிபுடு கடுவேகமுனன்
மானினுலார ஸுராஸுர-மானவுல் தரிம்பஜேயு மாதவுகா நே||

"கோபிகைகளே! பெரிய சமுத்திரத்தையும் அதற்கும் பெரியதான இப்பிறவிக் கடலையும் தாண்டச் செய்விக்கும் திறமையுள்ள எனக்கு இந்த யமுனையில் உங்களுடன் ஓடத்திலேறி இவ் ஓடத்தை நடத்துவதா ஒரு பெரிய காரியம்" என்று க்ருஷ்ணன் தனது உண்மையான மகிமையை வெளியிட்டார்.

ஏமமோ:—இது நௌகா சரித்திரத்தின் 5-வது கீர்த்தனம். கோபியர்களின் மனதைத் தேற்றி தன்னிடம் உண்டாகும்படி செய்ய கண்ணன் தான் பக்த பரிபாலனம் செய்த வரலாற்றையெல்லாம் அவர்களுக்கு எடுத்துரைத்து தன்னை அழைத்துச் செல்வதால் அவர்களுக்கு பெரும் நன்மை ஏற்படுமென தைரியம் கூறுகிறுர்.

முனு மந்தரகிரி:—தேவாசுரர்கள் திருப்பாற்கடலில் ஒன்று கூடி மந்தரகிரியை மத்தாக வாஸுகியைக் கயிறுகவும் கொண்டு கடையும்பொழுது மந்தரகிரி பர்வதம் சமுத்திரத்தில் [illegible]யது. அத்தருணம் பகவான் ஆமை உருக்கொண்டு பர்வதத்தைத் தன் முதுகால் தாங்கி [illegible]க்கு அபயமளித்த வரலாற்றை இங்கு கூறுகிறுர்.

கரிராஜு:—பகவான், தான் கஜேந்திரனுக்கு அருள்புரிந்த வரலாற்றை இங்கு குறிப்பிடுகிறுர். இக் கதை ஸ்ரீமத் பாகவதம் எட்டாவது ஸ்கந்தத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

வெருவக:—பகவான், தான் மத்ஸ்யாவதாரமெடுத்து வேதங்களை மீட்டுக் கொண்டு வந்த வரலாற்றை இங்கு குறிப்பிடுகிறுர்.

காளிந்திநி:—இவ்வரலாறு ஸ்ரீமத் பாகவதம் தசமஸ்கந்தம் 16-வது அத்தியாயத்தில் [illegible]ாகக் கூறப்பட்டுள்ளது.

மகரமு:—இந்தக் கதையை ஸ்ரீமத் பாகவதம் தசமஸ்கந்தம் 45-வது அத்தியாயத்தில் [illegible]ணவும்.

IV

ராகம் ஸௌராஷ்டிரம் — மிச்ர சாபு தாளம்

(17-வது மேள ஜன்யம். ஆ. ஸம்பூர்ணம் அவ. ஸ்நிதாபமகமாகரீஸா.)

பல்லவி

ரீ	ஸா ;	ஸாரீ	கா	மா ;	பா ;	பா ;
வ	[illegible]	மோ .	தெ	லி	ய	க
கா மா	தா ;	நிஸாநி	[illegible]	தா ;	தநீத	பா ;
பலி	கே	ரு . .	செ	லு	லா . .	ர
பா	தா பா	பா மா	மக	மா ;	கா மா	தா ;
நா	மீ .	த .	தி .	ய	லே .	.
நிதா	தநீத	பா ;	; பா	பா	பா ;	பா ;
.	. . .			செலு	லா	ர

சரணம்

பா தா	தாஸா	ஸாநீ	தா	தா ;	தநீத	பா ;
முனு	[illegible]	. .	தி	ர	இ .	ரி
பா பா	தா[illegible]	பா மா	மாகா	பம	காரீ	ரீ ;
முனு	க .	கூர் .	ம .	.	மை .	வீ
ஸாரீ	ஸா ;	ஸா[illegible]	ஸா	ரீ ;	காமா	பதபம
புன	தால்	. .	ச.	க	லே .	. .
கரி	ரீ ;	; .	ஸா	; .	; ;	;

([illegible] இது [illegible] பாடவும்.)

கடமை

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

3

மொகல், பட்டான் ஜாதியினர் யுத்தம் நடந்து வெகு நாட்களாகின. மமதாவுக்கும் எழுபது வயதாகியது. அவள் தன் குடிசையில் படுத்திருந்தாள். அவளுடைய சொந்தமாகாத இருமல் அவளை வாட்டிக்கொண்டிருந்தது. அவளுக்குச் சிசுருஷை செய்ய கிராமத்துப்பெண்கள் நால்வர் வந்திருந்தனர்.

மமதா தண்ணீர் குடிக்க விரும்பினுள். பெண் ஒருவள் அவள் வாயில் தண்ணீர் விட்டாள். திடீரென்று ஒரு குதிரை வீரன் அந்தக் குடிசையின் வாசலில் காணப்பட்டான். அவன் தன்னுடனேயே "மிர்ஜா சொன்ன அடையாள இடம் இதாகத்தான் இருக்கவேண்டும். அந்த ஸ்திரீ இப்பொழுது இறந்திருப்பாள்-இங்கு யாரிடம் [illegible] நாள் ஷா இன்ஷா ஹுமாயூ[illegible] எந்தக் குடிசையில் தங்கி[illegible]தார் என்று கேட்பது? இது [illegible] நடந்தும் பல வருஷங்களாகின்றனவே, [illegible]ன்று சொல்லிக் கொண்டான்.

மமதாவின் மங்[illegible]மான காதில் அவன் சொன்ன சொற்கள் கேட்டன. அவள் அருகிலிருந்த பெண் ஒருவளிடம் "அவனை இங்கே கூப்பிடு" என்ருள்.

குதிரை வீரன் அவளருகில் வந்தான். மமதா சற்று தடமாற்றத்துடன் "அமீர் ஷா இன்ஷா தானே வேறு யாரோ எனக்குத் தெரியாது. ஆனல் ஒரு இரவு இந்தக் குடிசையில் தங்கியிருந்தான். அவன் என் வீட்டைக் கட்டிக்கொடுப்பதாய்ச் சொன்னதைக் கேட்டேன். [illegible] மடைந்த என் குடிசை நாசமடையவிருக்கிறது. இதைத் தெரிந்து கொ[illegible] நான் இன்று இதை [illegible] போகிறேன் இனி [illegible] இதை வீடாகவேண்டு[illegible] கட்டுங்கள். அரண்[illegible] வானலும் கட்டுங்கள் இந்த இடத்திலேயே [illegible] விடுங்[illegible]ள்!" என்ருள்.

குதிரை வீரன் பிரமித்து நின்ருன். மமதாவின் உயிர் உடலை விட்டு நீங்கியது.

* * * *

அந்தக் குடிசையை எட்டு கோணமுடைய பஜனை மடமாகக் கட்டினர்கள். அதன் முன்புறத்தில் "ஏழு ராஜ்யங்களுக்கு அதிபதியான ஷா இன்ஷா ஹுமாயூன் ஒரு நாள் இங்கு தங்கியிருந்தார். அவருடைய புத்திரன் அக்பர் தகப்பன் கட்டளைப்படி இதைக் கட்டினர்" என்று சிலாசாஸனம் செய்யப்பட்டிருந்தது. ஆனல் அந்த மடத்தில் எங்கும் மமதா[illegible] பெயர் மாத்திரம் க[illegible]ல்லை.

போலிஸ் ஒற்றன்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

யான போர்க் சிமோட்டிக்கும் அவளது பேச்சைக் கேட்டு தனது ராஜாங்கத்துக்குத் துரோகம் செய்யத் துணிந்த நாட்ஸ்னர் என்ற மடந்தைக்கும் யாதொரு மீட்சியுமில்லை. அவர்களுக்கு மரண தண்டனை அளிக்கப்பட்டது. அதிலிருந்து தப்ப யாதொரு வழியுமில்லாததால் அவர்கள் அப்போல்லாத விதியை அனுபவிக்கும்படி நேரிட்டது.

ஒரு அற்[illegible] பொய் [illegible]ப்பயமாக [illegible]வு நடத்திய ஒரு திறமை வாய்ந்த ஒற்றனைக் காட்டிக் கொடுத்தது. அது மட்டுமன்று, அதை உரைத்தவளையும் அவளது சிநேகிதியையும் தூக்குமரத்துக்கு அனுப்பி விட்டது. விதியின் விளையாட்டின் பயங்கரம்தான் என்னே!

நரஸஸிஸ் டீ குடியுங்கள்
நறுமணத்திற்கும் பானத்திற்கும் நிகரற்றது

சில டீ இலைகள் சிறந்த மணமுள்ளதாயினும் ருசிப்பதில்லை. மற்றும் சில வாய்க்கு ருசிப்பினும் மணமிருப்பதில்லை. நரஸுவால் பொறுக்கி பதம் செய்யப்படும் டீ சிறந்த மணத்துடன்கூடிய உங்களுக்குகந்த ஓர் உயர்ந்த பானமளிக்கும்.

எந்தத் தரத்திலும் எவ்வளவு வேண்டுமானுலும் இந்தியாவில் எந்த பாகத்திற்கும் அனுப்பப்படும்.
கீழ்க்கண்ட இடங்களில் கிளை ஆபீசுகள் சீக்கிரம் ஆரம்பிக்கப்படும்:—
பம்பாய், டெல்லி, ரங்கூன், கொழும்பு.

நரஸூஸ் மானியுபாக்சரிங் கம்பெனி
பாக்டரிகள்:-
சென்னை, சேலம். MNTK-12

சித்திரமும் சிருங்காரமும்

அபேதவாதியின் கருத்து

நகரத்திற்கு தண்ணீர்த் திட்டம் தயாரிப்பது, சாக்கடை வசதி ஏற்படுத்தித் தருவது, ரஸ்தாக்களை சீராக அமைத்து வைப்பது, தெருக்களில் விளக்கேற்ற வழிகாட்டுவது, இவைதான தங்களது முக்கிய கடமை என்று இந்தியாவில் நகரசபையார் நினைக்கின்றனர். இன்னும் முற்போக்கான நகரங்களில், மக்களுக்கு வைத்திய வசதியை அளிப்பதுடன் அவர்களுக்குக் கல்வி புகட்டவும் பள்ளிக்கூடங்களை நிறுவியிருக்கின்றனர். கலை என்ற பேச்சு எழும்பியவுடனேயே அவர்களுக்கும் நகர சபை... ...தொரு ச... ...என்று கூறி விடுகின்றனர்: கலை ஒரு அநாவசிய... ...ம் என்று கருதுகின்றனர். கலா வளர்ச்சிக்கு வழி தேடுவதும் நகர சபைகளின் பொறுப்புக்குட்பட்டதே யாகும் என்பது என் துணிபு. ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் நகர சபைகள் பல கலைகளின் அபிவிருத்திக்கு உதவியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இவ்விதம் அபிப்பிராயம் தெரிவித்... பம்பாய் நகரத்தின் மேயரான ஜனப் யூஸப் மேஹர் அலி. ஜனப் மேஹர் அலி சிறந்த அபேதவாதி: சமீபத்தில் "பிலிம் இந்தியா" பத்திரிகையின் நிருபர் அவரைப் பேட்டியிட்டார். அப்போது அவர் சினிமா சம்பந்தமாகத் தமக்குள்ள மேற்கண்ட அபிப்பிராயத்தைத் தெளிவுபடுத்தினர்.

ஜனப் மேஹர் அலிக்கு நம் கலைச்செல்வத்தை விருத்தி செய்வதில் அதிக ஆசை: ஆகிலும் அபாரம். மேனாடுகளில் சுற்றிப்பார்த்த போது கலைகளுக்கு எத்தகைய பிரதான்யம் அங்கு அளிக்கப்பட்டுவருகிறது என்பதையே இவர் பிரதானமாகக் கவனித்து வந்தவர்: சுமார் நான்கு வருஷங்களுக்கு முன்னர், ஐரோப்பா, அமெரிக்கா கண்டங்களுக்கும் போய் வந்தார் இவர் பல நாடுகளுக்கும் சென்று திரும்பினர். பல இடங்களில் இவருக்கு வரவேற்பும் உபசாரமும் நடத்தி வைக்கப்பட்டன.

முனிசிபல் தியேட்டர் அமைப்பு

முனிஸிபல் தியேட்டர்-அதாவது நகரசபையார் ஆதினத்திற்குட்பட்ட தியேட்டர்-எவ்விதம் இருக்கவேண்டும் என்பது பற்றி ஜனப் மேஹர் அலி கொண்டிருக்கும் கருத்து மஹோன்னதமானது. புத்திசாலிகளுக்கு அது அளவிட முடியாத திருப்தியைத் தரும. அவர் கூறுவதை இங்கு எடுத்துக் காட்டுவோம்:—

"இந்தியாவிலிருக்கும் பிரபல பத்திரிகைகளைத் தருவிக்கும் உயர்தர வாசகசாலையின் அங்கமாக முனிசிபல் தியேட்டர் அமைந்திருக்கவேண்டும். இதனுடன் நற்கலை, சித்திரக்கலை, சங்கீதம், ஆகியவை சம்பந்தமான புத்தகங்கள் கொண்ட ஒரு லைப்ரரியும் இருக்கவேண்டும். இதில் நம் நாட்டுப் புத்தகங்கள் மட்டுமல்லாமல் மேனாட்டுக் கலைகளைப் பற்றிக் கூறுபவையும் இருத்தல் அவசியம்.

"இந்த முனிசிபல் தியேட்டரில் நாடகங்களை நடிக்கவும் வசதி இருக்கவேண்டும்: கலை, கல்வி, சரித்திரம் இவற்றைப் பற்றிய படக்காட்சிகளைக் காட்டவும் இதில் ஏற்பாடு செய்தல் முக்கியமாகும். இதற்காகக் கட்டணம் மிகவும் சொற்பமாயிருக்கவேண்டும். ஹாலும், வருபவர்களுக்கு சௌகர்யமானதாக இருக்க வேண்டும். பெரிய சங்கீதக் கச்சேரிகளையும், நடனங்களையும் நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும், இம்மாதிரி சௌகர்யங்கள் அமைந்த ஒரு ஹாலை நிர்மாணித்த பின்பு, நகர மேயர் உலகப் பிரசித்தி பெற்ற கலா நிபுணர்களை அழைத்து, தங்களது திறமையைக் காட்டும்படி அவர்களைக் கேட்டுக் கொள்ள வேண்டும். உதய சங்கர், பால் ரோப்ஸன் போன்ற பிரபலஸ்தர்களுக்கு அழைப்பு அனுப்பி, நகர மக்களுக்காக அவர்கள் தமது கலைத் திறமையைக்காட்ட ஏற்பாடு செய்ய வேண்டும். பிரபல நடிகர்களோ அல்லது வித்வான்களோ ஒரு நகரத்திற்கு விஜயம் செய்து தங்கள் காட்சிகளும் கச்சேரிகளும் முடிந்து திரும்புவதற்குள், ஒரு முறையாவது முனிசிபல் தியேட்டரில் இலவசமாக நடிக்கவோ, பாடவோ கட்டாயப்படுத்தப்பட வேண்டும்.

வேலூர் ஜில்லா முன்சீப் ஸ்ரீ டி. என். வி. ஸ்ரீனிவாஸ வரதாசாரியார் புத்ரி சௌ சீதாலக்ஷ்மிக்கும், சித்தூர் அட்வகேட் ஸ்ரீ வி. ஆர். பார்த்தஸாரதி அய்யங்கார் புத்ரன் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்திக்கும், சமீபத்தில் விவாகம் நடந்தது.

நகரில் பம்பாய் மேயர்

நகரில் நடைபெற்ற யுவர்கள மஹாநாட்டில் பம்பாய் மேயர் ஜனப் யூஸப் மேஹர் அலி கலந்துகொண்டார். அவர் பிரசங்கம் புரியும் காட்சி.

பம்பாய் மேயருக்கு சென்னை நகரசபையார் வரவேற்பு உபசாரம் நடத்தினர். (பி. பி...)

கலை அறிவை வளர்க்க

"பொது மக்களின் கலையறிவை வளர்க்கும் சர்வ கலாசாலையாக முனிசிபல் தியேட்டர் இருக்க வேண்டும். கலையை ரசிக்காதவர் இருக்கவே முடியாது என்பது நிச்சயம். இப்போது இல்லா விட்டாலும் போகப் போகவாவது ஒவ்வொருவருக்கும் ரஸிப்பு உண்டாகும்.

"இது தவிர சித்திரப் படக் காட்சிகளையும் நடத்துவது முக்கியம் என்று எனக்குத் தோன்றுகிறது. கலை, சாஸ்திரம், சுகாதாரம், இலக்கியம், அரசியல் ஆகிய பல விஷயங்கள் சம்பந்தமாகவும் உபந்யாஸங்களை நடத்தவும் ஏற்பாடு பண்ண வேண்டும்".

இதற்கப்புறம் பம்பாய் மேயர் நகர சபைகளின் வேலைகளை விவரித்துக் காட்டும் படங்களைத் தயாரித்து அதைப் பொது மக்களுக்குக் காட்டலாம் என்று ஒரு யோசனை கூறினர். சிறுவர்களுக்கும் முதியோர்களுக்கும் கல்வியைப் பரப்ப, ஏன் படங்கள் பிரயோஜனப் படுத்தப்படவில்லை என்று வினவப்பட்டபோது, அவர் இ... போன்ற ஏழை நாட்டில் ... சாத்தியமில்லை என்றும் நகர சபையின் அதிகாரத்துக்குட்பட்ட ஒரு முனிசிபல் தியேட்டர் இருந்தால் தான் இது சாத்தியம் என்றும் பதில் புகன்றார். ஆனால் தற்கால கல்விமுறை படங்கள் இல்லா வி... பூர்த்தி பெறாது என்... குறிப்பிட்டார்.

பிறகு தாம் பார்த்த சில இந்தியப் படங்கள் உயர்தரமாயிருந்ததையும், "தேவதாஸ்" "பிரஸிடெண்ட்" போன்ற படங்கள் மிகவும் சிறந்தவை என்றும், அநேகம் தம்மால் வெறுக்கப்பட்டதையும் தெரிவித்தார். சென்ற சில வருஷங்களாக பட உற்பத்தி மிகவும் அபிவிருத்தி அடைந்திருப்பதாயும் அவர் கூறினர். ஆனல் படங்கள் மிகவும் நீளமாயிருப்பதாகவும், அடிப்படையான அம்சம் சரிவர கவனிக்கப்படுவதில்லை என்றும், உண்மைக்கு விரோதமானவையும் படம் என்ற காரணத்தைக் கொண்டு காட்டப்படுவதாயும் அவர் வெளியிட்டார்.

டாக்டர் அம்பேத்கர்

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

மாதம் ஸர் ஸ்டாபோர்ட் க்ரிப்ஸ் நம் நாட்டிற்குத் தூது வந்தார்: பல கக்ஷியினரையும் சந்தித்துப் பேசினார்: தாம் கொணர்ந்த திட்டத்தை எல்லோருடனும் ஆலோசித்தார்: இவரும் அழைக்கப்பட்டிருந்தார்: ஸர் க்ரிப்ஸ், காங்கிரஸ், லீக் இவ்விரு கட்சியாரையே பிரதானமாகக் கலந்து பேசியது இவருக்கு ரம்மியமாக இல்லை. இவ்விரு கட்சிகளைத் தூக்கி வைத்துப் பேசியதே பேச்சுகள் முறிந்ததற்குக் காரணம் என்று கூறவும் இவர் தயங்கவில்லை. தமது கக்ஷியும் முக்கியமானது என்பதே இவர் கருத்து: அதற்குப் பலம் தேடி, அதைப் பிரபல்யப்படுத்துவதே இப்போது இவரது பிரதான காரியமாக இருக்கிறது: பலம் பெற்ற கக்ஷியிடம் தான் பலரும் பணிந்து நிற்பர் என்பது இவரது அபிப்பிராயம். டாக்டர் அம்பேத்கர் தற்போது பதவியேற்று விட்டார்: பூர்வாங்கப் பிரசாரமும் முடிந்தாகி விட்டது. பகையைப் பெருக்க விடாமல் பணியைச் செய்யவேண்டும்: கக்ஷிபேதத்தில் கண்டனம் வளரும், நேர்மையாக நடந்துகொள்ளா விட்டால் நியாயமான நிபந்தனைகளையும் நிராகரிக்க நேரிடும். டாக்டர் அம்பேத்கர் நான்கு வகை நடவடிக்கைகளையும் நன்கறிவார்: நிர்வாக சபையில் நாட்டின் ஒற்றுமையை இவர் நாடுவார் என்றே எல்லோரும் நம்புகின்றனர். "பாகிஸ்தான்" பற்றியும் புத்தகம் எழுதியிருக்கிறார். "முஸ்லிம்கள் கேட்பதைக் கொடுக்கலாம்: ஆனல் மெஜாரிட்டி பிரதேசங்களில் மைனரிட்டி அபிப்பிராயத்தை அலக்ஷியம் பண்ணக்கூடாது!" இதுவே இவரது கருத்து. இதில் குறை கூட இடம் ஏது?

* * * * *

அறிவை யொட்டிய அபிப்பிராய பேதமும், சிந்தனா சக்தியைத் தழுவி சிந்தித்து பார்த்தலும் முன்னேற்றத்தின் முற்குறி... டாக்டர் அம்பேத்கர் விரிந்த ஞானமுள்ளவர்: தெளிவாகக் ...றவர். ரானடே கோகலே போன்ற... இவருக்கு இன்னுமிருக்கும் ...சிரத்தை; இதற்குக் காரணம் என்ன? அவர்கள் எந்த விஷயமானாலும் விபரமாகப் படிக்காமல் அபிப்பிராயம் கூற முன்வரமாட்டார்கள். அவர்களது கருத்துக்குத் தனிமதிப்பு உண்டு, என்பதே அது. இன்று காந்தி சகாப்தத்தில் ராஜீய வாதிகளுக்கு விஷய ஞானம் போதாது என்பதே இவரது துணிபு. தற்சமயம் மக்கள் சுயமாகவே சிந்தித்துப் பார்ப்பதில்லை: தராதரத்தைக் கவனிப்பதில்லை: தலைவரைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றுகின்றனர்—இதை டாக்டர் அம்பேத்கர் பஹிரங்கமாகவே தெரிவித்திருக்கிறார். இவருக்கு மஹாத்மாஜியிடம் குறை ஒன்று உண்டு; அது உத்தமரின் உண்மை மதிப்பில் அல்ல; ஆனல் அரசியலில் அந்தராத்மாவை அவர் பிரவர்த்திக்க விடுவதில் தான். மஹாத்மா தீர்க்கதரிசி: தற்காலிகப் பிரச்னைகளைத் தாங்கி நிற்போர் அதை மறந்து விடுகின்றனர். டாக்டர் அம்பேத்கர் வேறு ஒரு வகுப்பைமட்டும் சேர்ந்தவராக இருந்தால் ராஜீயத்துறையில் பிரவேசித்திருக்கமாட்டார்! சட்டசபைக்குள் புகுந்திருக்கமாட்டார்! ...த்துவப் போராட்டத்தில் நாட்டம் கொண்டிருக்கமாட்டார்! புத்தகப்படிப்பிலும் ...சிய புத்தகங்களை எழுதுவதிலும் ...தை விழுந்திருக்கும். பால்ய முதல் தாம் அநுபவித்த கஷ்டங்களும் தம் கண்ணால் கண்ட கொடுமைகளும், தலைவராகத் திகழத் தூண்டிவிட்டன. சளைக்காமல் சேவை செய்து வரு... உள்ளும் புறமும் ஒருமித்து வேலையில் முனைந்திருக்கிறார்: ...க்கு இதுவே போதும்!

உஷா தையல் மெஷின், பிரத்யேக பாகங்களை வாங்குங்கள் எல்லா தயாரிப்பு மெஷின்களுக்கும் தகுந்தவை. எமது பாகங்களை மாற்றிக் கொள்ளலாம். இயந்திரத்தால் செய்யப்படுபவை உபயோகம் திறமையான வேலைப்பாடு மிகக் குறைந்த விலையில் ஏராளமான சபைகள் கிடைக்கும். உடனே ஆர்டர் செய்யுங்கள்.
ஜே எஞ்ஜினியரிங் ஒர்க்ஸ் லிமிடெட்.,
C/o. Mr பயரிலால் மல்ஹோத்ரா,
1, மலனி ரோட், தியாகராயநகர்,
மதராஸ்.

(முன் பக்கத் தொடர்ச்சி)

இந்தியப் பிரச்னைகள்

பிறகு இந்தியப் படங்கள் எத்தகையனவாக இருக்கவேண்டும் என்று அவரைக் கேட்டபோது அவர் பின் கண்டபடி உத்திரம் சொன்னர்: "இந்திய விவசாயியின் வாழ்க்கையை எடுத்துக் கொள்ளலாம். சமூக நிலை, ராஜீய ஸ்திதி எப்படி அவனைப் பாதிக்கிறதென்பதைக் காட்டலாம். கிராம வாசிகளின் கடன் நிலை, குடியால் வரும் கேடு, பழைய மூட பழக்க வழக்கங்கள், பால்ய விவாகம், தாரதம்மியமற்ற கல்யாணம், இதுபோன்ற பல இந்தியப் பிரச்னைகளைச் சித்தரித்துக் காட்டலாம்.

எந்தப்படமும் பொதுமக்களுக்கு புத்தி புகட்டவேண்டும் என்றும். பிரச்னைகளைச் சரிவர அறிய அவை உதவ வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். ஒரு காரணத்துடன் தயாரிக்கப்பட்ட படத்தினுல் தான் நாட்டிற்கு அதிக பயன் ஏற்படும் என்றும் அவர் கூறினர். பொழுதுபோக்கும் புத்தி புகட்டலும் பிரியாமல் இருப்பதுதான் பொருத்தம் என்று அவர் மொழிந்தார் இறுதியில்.

* * * * *

அட்டைப் படம்

புரொபஸர் ஸர் ஸி. வி. ராமன். விஞ்ஞான சாஸ்திரத்தில் உலகம் பிரமிக்கத்தக்க விதம் ஆராய்ச்சி நடத்தி நுட்பங்களைக் கண்டெடுத்து உதவியவர்: நோபல் பரிசும் பெற்றுர்: சமீபத்தில் இவருக்கு "ப்ராங்க்ளின் பதக்கம்" வழங்கப்பட்டது. பெங்களூருக்குச் சென்னை கவர்னர் சென்றிருந்தபோது அந்தப் பதக்கத்தை அவர் நேரில் இவருக்கு வழங்கினர். இந்தப் பதக்கம் அமெரிக்கர் கொண்ட மதிப்பை வெளியிடுகிறது. இது உன்னத கௌரவம். யுத்த காரணமாக இவர் அமெரிக்காவுக்குப் போய் அங்கு இதைப் பெற இயலவில்லை.

...ச்சு - ஜெயலக்ஷ்மி

இச்சுவை நேயர்களுக்கு அறிமுகப்படுத்தவேண்டிய அவசியமில்லை. அவருடைய கதைகள் மித்திரனிலும், ஆனந்தவிகடனிலும் மற்றுமுள்ள பிரபல பத்திரிகைகளிலும் அடிக்கடி வெளிவந்திருக்கின்றன. பர்மாஷெல் கம்பெனியில் வேலையாயிருப்பவர். மன்னர்குடி பிரபல அட்வகேட் ராமசாமி ஐயரின் சகோதரர். முழுப்பெயர் வி. எஸ். கிருஷ்ணமூர்த்தி B. A. D. Com F. I. B அவருக்கும், தஞ்சாவூர் K. H. ஸ்கூல் அஸிஸ்டெண்ட் ஏ. பஞ்சாபகேசய்யரின் புத்திரி சௌ. ஜெயலக்ஷ்மிக்கும் சமீபத்தில் வெகு சிறப்பாக விவாகம் நடந்தது.

காலையில் எழுந்து செய்யவேண்டிய விதிகள் :

1 சோம்பலை நன்கு முறித்தல்.

2 சீக்கிரத்தில் ஸ்நானம் செய்தல்.

3 கூந்தல் அடர்த்தியாகவும் அழகிய மேனியுடனும் இருக்க கூந்தலில் தேங்காயெண்ணெயை கூந்தலில் தடவி நன்ருய்த் தேய்த்தல்,

4 பிறகு சீப்பு அல்லது புருசினால் கூந்தலை நன்கு வாரி சீர்படுத்தவும். உடனே கவனித்தால் இந்த நேர்த்தியான கூந்தல் தைலம் உங்கள் கூந்தலுக்கு எவ்வளவு மிருதுத்தன்மையையும் மேனியையும் அளிக்கிறதென் பதை நீங்களே அறிவீர்கள் !

உங்கள் கூந்தலுக்கு ...க்கும் ஆரோக்கியத்திற்கும் ...தும் டாமகோ பரிமளக்கூந்தல் தேங்காயெண்ணெயை உபயோகியுங்கள். எல்லா ...பலசரக்கு கடைகளிலும் கிடைக்கும்.

டாம்கோ பரிமள கூந்தல் தேங்காயெண்ணெய்.

டாம்கோ விற்பனை இலாகா : நெ 1. வாரன் ரோட், பீமன் பேட், மைலாப்பூர், மதராஸ்,

A TATA PRODUCT

தயாரிப்போர் : தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமி., டாடா புரம் & பம்பாய்,

T H 2365

நாகர்கோவில் ஆ. சுப்பிரமணியம் அவர்கள் புதல்வி ஸ்ரீமதி ஜாபிஸ் லில்லிக்கும், நாகர்கோவிலைச் சேர்ந்த புளியடி மனுவேல் அவர்கள் புதல்வர் ஸ்ரீமான் சுந்தரத்துக்கும், 24-6-42ல் புளியடியில் வைத்து மிகவும் சிறப்பாக திருமணம் நடந்தேறியது.

ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட் இங்கிலாந்து சென்ற போது சில பத்திரிகா நிருபர்கள் அவரைப் பேட்டியிட்ட சமயம் எடுக்கப்பட்ட படம். "இந்தியா லீக்" மெம்பர்களும் கூட இருந்தனர்.

பிரசங்க அனுபவம்

ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட்

எழுதியது

சென்ற வாரம் ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட் தமது பிரசங்க அனுபவத்தைப் பற்றி எழுதிய கட்டுரையின் முதல் பகுதி பிரசுரமாகியது. இவ் வாரம் அதன் இரண்டாம் பகுதி வெளியாகிறது: கட்டுரையும் பூர்த்தியாகிறது. இந்த பாகத்தில் ஸ்ரீமதி பண்டிட் உண்மையான உணர்ச்சியுடன் தாம் பிரசங்கித்ததைப் பற்றிப் பிரஸ்தாபித்திருக்கிறார். நகர சபைத் தேர்தல், சட்டசபைத் தேர்தல், இவற்றில் தாம் கலந்து கொண்டதைக் குறிப்பிட்டு, முதன் முதல் தாம் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் ஒரு முக்கிய தீர்மானத்தை எதிர்த்ததையும் விவரித்திருக்கிறார்: இந்த எதிர்ப்புக்கு அவருக்கு சரியான தண்டனை கிடைத்தது!

"அனுபவித்துப் பேசினேன்"

சில வருஷங்களுக்கு முன்பு மாக்ஸிம் கோர்க்கி (Maxim gorki) ஞாபகார்த்தமாக மாணவர் சங்கம் நடத்திய கூட்டத்திற்கு நான் அழைக்கப்பட்டேன். நான் பேச வேண்டும் என்று ஒருவரும் கேட்டுக்கொள்ளவில்லை: பேச எனக்கும் எண்ணம் கிடையாது. படித்த பலர் பிரசங்க மேடை மீதேறி, கோர்க்கியை இறந்து போனவரும் உயிருடன் இருப்பவருமான பல ஆசிரியர்களுடன் ஒப்பிட்டுப் பேசினர்: அநேக விஷயங்கள் விவரிக்கப்பட்டன: பல புதிய கோட்பாடுகள் தெரிவிக்கப்பட்டன: கோர்க்கி எந்த உணர்ச்சியை உலகத்தில் உருப்படுத்த முயன்ருரோ அது அப்பிரசங்கங்களில் இடம் பெறவில்லை என்பதை நான் கண்டேன். பேச்சுப் பிரவாகத்தில் நாம் மூழ்குவதாக எனக்குத் தோன்றியது: ஒரே பேச்சு, அர்த்தமில்லாத பேச்சு என்று எனக்குப் பட்டது. இதை சஹித்துக் கொண்டிருக்க என்னால் சாத்தியப்படவில்லை; ஆகவே, நானும் காலஞ்சென்ற பெரியாரைப்பற்றி சில வார்த்தைகள் பேச அனுமதி கோரி, அக்ராஸனாதிபதிக்கு ஒரு சீட்டு அனுப்பினேன்: அனுமதி உடனே அளிக்கப்பட்டது. நான் பேசவாரம்பித்தேன்; என் முன்பு நான் பெஞ்சிகள் வரிசையைக் காணவில்லை: ஆனால் கோர்க்கி எவர்களைப்பற்றி எழுதினாரோ அவர்களது முகங்களையே நான் பிரத்யக்ஷமாகப் பார்த்தேன். இந்த மாதிரி என் மனதில் ஒரு சித்திரம் பதிந்தது தான் தாமதம், வார்த்தைகள் கோர்வையாகவும் தெளிவாகவும் கிளம்பின; 'நான் முன் நீ முன்' என்றும் போட்டியிட்டன: நான் என்ன பேசினேன் என்பதை இங்குப் பிரஸ்தாபிப்பது பொறுத்த மல்ல: கோர்க்கியின் தேசத்திற்குத் துல்யமான. நமது இந்தியாவின் கிராமப் புறத்தை வர்ணித்தேன். நம் நாட்டு குடிகளும் தொழிலாளரும் லகுவில் கிரஹிக்கக்கூடிய விதத்தில் அவரது உள்ளக் கருத்தை எடுத்துக் காட்டினேன். ஆரம்பம் முதற்கொண்டு கடைசி வரை மாணவர்கள் என் பேச்சை ஸ்வாரஸ்யத்துடன் கேட்டனர்; அவர்கள் மனப்பூர்வமாகவே கை கொட்டினர். எனக்குமட்டும் ஒரு வருத்தம்; அதாவது கூட்டத்தைக் கெடுத்துவிட்டேன் என்பது! எனக்கப்புறம் ஒருவரையாவது மாணவர்கள் பொறுமையுடன் வரவேற்கவில்லை.

நகரசபைத் தேர்தல்

1935-ல் நான் நகர சபை மெம்பர் பதவிக்குப் போட்டியிட்டேன். எனக்குத் தேர்தல் நடைமுறை எவ்விதம் என்பது தெரியாது; வாக்காளர்களுக்கு எந்த உறுதியை அளிக்கவும் நான் தயாராக இல்லை; எங்கள் கட்சியார் சார்பில் வெளி

சிறுவர் பகுதி

'சிறு துரும்பும் உதவு'

எஸ். மைதிலி

ஒரு காசுக் கடையில் காசு அடிக்கும் யந்திர சாலையிலிருந்து அப்பொழுது தான் வெளி வந்த ஒரு பொன் நாணயமாகிய பவுனும், செம்பு நாணயமாகிய ஒரு பென்னியும் வர்த்தக பீடத்தில் காணப்பட்டன. [illegible] நாணயம் செம்புக் காசைப் பார்த்து "நீ என் அருகே இராதே. நீ அற்பமான வன். என்னை சீமான்களும் சீமாட்டிகளும் விரும்புவார்கள். நான் மிகுந்த ப்ரயோஜனம் உள்ளவன். என்னைச் செய்திருக்கிற பொன்னாலேயே அரசருடைய மகுடங்கள் அமைக்கப்படுகின்றன." என்று பெருமை பேசியது.

அந்த சமயத்தில் ஓர் லோபி அந்தக் கடைக்கு வந்து அந்தப் பொன் நாணயத்தை விலைக்கு வாங்கிக் கொண்டான். அப்பொழுது பென்னி பவுனுக்கு வந்தனம் அளித்து "நீ க்ஷேமமாக வாழ்வாயாக" என்று வாழ்த்தியது.

உலோபி, தான் வாங்கிய பவுனை ஒரு பையில் போட்டு பத்திரமாய்க் கொண்டுபோய் வீட்டில் சேர்த்தவுடன், பூமியில் ஒரு குழி தோண்டித் திருடர் கையில் அகப்படாதிருக்கும் பொருட்டு அதனை புதைத்து வைத்தான்.

உலோபி, பொன் நாணயத்தைத் தன் வீட்டிற்கு வாங்கிச் சென்ற பின், கடைக்காரன், தெருவில் விழுந்து விட்ட ஒரு கிழவிக்குப் பையன் ஒருவன் உதவி புரிந்ததைக் கண்டு மனமகிழ்ச்சி கொண்டு அச்சிறுவனுக்குத் தன்னிடத்திலிருந்த செப்பு நாணயமாகிய பென்னியைப் பரிசாக அளித்தான். அவன் அந்த பென்னியை எடுத்துக் கொண்டு வீட்டிற்கு விரைந்தோடிச் சென்று அதைத் தன் சகோதரிக்குக் காண்பித்து, அது தனக்கு கிடைத்த வரலாற்றையும் கூறினான்.

அந்தக் காசு பளபளப்பாய் இருந்ததனால் தன் சகோதரி அதை விரும்புகிறாள் என்று அறிந்து அவளுக்குக்கொடுத்தான். அவள் அப்பென்னியைத் தன் தாயினிடத்தில் காண்பிக்கப்போகும் சமயத்தில் எதிரில் ஒரு முடவன், நொண்டி நொண்டிப் பிச்சை கேட்டுக்கொண்டு வந்தான். அச்சிறுமி அம் முடவனுக்குத் தன் கையிலிருந்த காசைக்கொடுத்து அது தன் சகோதரனுக்குக் கிடைத்த வரலாற்றையும் அவனிடம் சொன்னாள். முடவன் அதைப் பெற்றுக்கொண்டு, மிகுந்த சந்தோஷத்துடன் ஒரு ரொட்டிக் கடைக்குப் போய் ஏதாவது வாங்கலாம் என்று எண்ணுகையில், அவ்விடத்தில் வயது முதிர்ந்த சந்நியாசி ஒருவன், கையில் ஒரு தடியை ஊன்றிக் கொண்டு, மெல்ல நடந்து வந்தான். அவன், துருக்கியரால் சிறையில் அடைக்கப்பட்ட தன் சகோதரனை மீட்கும் பொருட்டுப் பணம் சேகரிப்பதற்காக ஊரூராய் அலைந்து திரிந்தவன். அவனுடைய பரிதாபகரமான சரித்திரத்தைக் கேட்ட அந்த முடவன், மனமிரங்கித் தனக்கு கிடைத்த புதிய பென்னியை அவனுக்குக்கொடுத்து அதன் வரலாற்றையும் தெளிவாகக் கூறினான். இதை கண்ணுற்ற ரொட்டிக்காரன் முடவனுக்கு வேண்டிய அளவு ரொட்டியை இனமாகக் கொடுத்தான்.

சந்நியாசி, எருஸலேம் நகருக்கேகி, அவ்விடத்திலிருந்த துருக்கிய கவர்னரிடம் சென்று, தான் வைத்திருந்த பணத்தைக் கொடுத்து தன் சகோதரனை விடுதலை செய்யும்படி வேண்டிக் கொண்டான். கவர்னரோ, கொடுத்த தொகை போதாது என்றும், இன்னும் அதிகமான தொகை வேண்டும் என்றும் சொன்னார். அப்பொழுது சந்நியாசி தன்னிடத்திலிருந்த பணம் எல்லாவற்றையும் கொடுத்து விட்டதாகவும் ஒரே பென்னி மாத்திரம் இருப்பதாகவும், அதன்வரலாறு எப்படி பட்டது என்பதையும் எடுத்து உரைத்தான். கவர்னர் துரை, பலவித நன்மைகளுக்குக் காரணமாயிருந்த அந்தப் பென்னியைக்காண விரும்பினான். பிறகு, அந்த அற்புத காசைப் பெற்றுக் கொண்டு மற்ற தொகையைச் சந்நியாசியிடம் திரும்பிக்கொடுத்துவிட்டு, அவன் சகோதரனையும் சிறையிலிருந்து விடுவித்தார். கவர்னர் அந்த பென்னியைத் தமது மார்பில் அணிந்து கொண்டார்.

பிறகு ஒரு சமயம் துப்பாக்கிக் குண்டு, யுத்தத்தில் அவர் மீது வந்து பாய்ந்தது. அந்த குண்டு அவர் அணிந்திருந்த செப்பு நாணயத்தின் மேல் பட்டதால், ஒருவித இடையூறு மில்லாமல் உயிர் பிழைத்தார். கவர்னர் தம் தேசத்து சக்ரவர்த்தியினிடம், தாம் போரில் மடியாதபடி அப்பென்னியினால் காப்பாற்றப்பட்ட விஷயத்தை வெளியிட்டார்.

சக்ரவர்த்தி அதைப் பார்த்து தாம் அதைபெற்றுக் கொள்ளவேண்டும் என்று எண்ணம் கொண்டார். கவர்னர் அதை அந்து காசை அவரிடம் கொடுத்து விட்டார். அவ்வரசர் அதை ஓர் பொன் சங்கிலியில் பிணித்து தமது வாளாயுதத்தின் முனையில் கட்டித் தொங்கவிட்டார். ஒரு நாள் இரவில் போஜனம் அருந்தும் வேளையில், அரசன் தன் மனைவியிடத்தில் ஆச்சரியமான அந்தப் பென்னியின் சரிதையை விளம்பினார். அரசியும் அதைப் பார்க்க விரும்பினாள். அதைக் கையில் எடுத்து சக்கரவர்த்தினி பார்த்துக்கொண்டிருக்கும்போது, திடீரென சங்கிலி அறுந்து அவர்களுக்காக வைத்திருந்த பாலில் விழுந்தது. அதை எடுத்தபொழுது அது (காசு) பச்சையாக இருந்தது. அதனால் அரசனும் அரசியும் தங்கள் பாலில் யாரோ விஷம் கலந்திருந்ததைக் கண்டுபிடித்தார்கள். இருவரும் அதைக் குடிக்காமல் உயிர் தப்பினார்!

பிறகு வேந்தர் அந்த பென்னியினால் உயிர் காப்பாற்றப்பட்டதுபற்றி சந்தோஷித்து அதைத்தமது கிரீடத்தின் நடுவில் வைத்து சுற்றிலும் விலையுயர்ந்த கற்களை பதித்து தமது சிரசில் அணிந்து கொண்டு, நெடு நாள் சுகமாக வாழ்ந்தார்.

அற்பமாக எண்ணப்பட்ட அந்த பென்னிக்கு கிடைத்த மேன்மை மிகவும் ஆச்சரியமானது. எதையும் அற்பம் என்று எண்ணி தள்ளி[illegible] கூடாது.

ஆபரேஷனுக்குப்

பிறகும் அ[illegible]ச்சிகு[illegible] பி[illegible] கும், விபத்துக்[illegible] பிறகும் [illegible] உதிர்வதுண்டு. நீடித்த [illegible] களாலும், பிரஸவத்[illegible] ஜுரங்களாலும் கூந்தல[illegible] டைவதுண்டு. மயிர் [illegible] உதிர்ந்து வ[illegible]தால் [illegible] அடித்தலை[illegible] டும்.

எந்தக்காரணத்தால் [illegible] தா அம், கேசவர்[illegible] கொண்டு மயிர் உதி[illegible] நிறுத்துங்கள். இழந்[illegible] லுக்கு[illegible]ல் இளம் [illegible] தலை வளரச் செய்யுங்க[illegible] தும் கூந்தலை இழக்கா[illegible] பாற்றிக்கொள்ளுங்க[illegible]

கேசவர்[illegible]

கூந்தலைக் காப்பது, செய்வது, அழகுபடுத்துவது அணா 12; மேற்செலவு [illegible] எல்லாக்கடைகளிலும் கிடைக்[illegible]

தயாரிப்பவர்:
தென் இந்திய ரஸாயன சா[illegible]
ஆர். எஸ். புரம் — கோயமுத்[illegible]

இனம்[illegible]
[illegible]ண ஆரோக்கியம், இன்ப[illegible] வாழ்க்கை, நல்ல சந்ததிக்கும் வழி[illegible]
மதன மஞ்ஜரி பார்மஸி, 184 சைனா பஜார், மதுராஸ்.

Regd. No. 2514 Swadesamitran Illustrated Weekly

Coffee
Ours for Quality
ANESH & Co
THAMBU CHETTY ST. MADRAS
BRANCH: 285 CHINA BAZAAR RD.

வலே வேண்டாம்
உங்கள் வியாதி எதுவாயி ந்தாலும் சரி; உண்மை நல்ல மருந்து வேண்டு ல், அடியில்கண்ட நமக் தெரியப்படுத் தினால் தக்க வழிகளைத்
யப்பசாமி த்தியசாலே, ி. S. I.

மிய நூல்கள்
0 8 0
0 12 0
1 0 0
வாசகம் 1- வகுப்புவ
ன் புக் டிப்போ, நாச்சியார்கோவில்.

பல ஜோதிஷர்
ஜாக்களில் தங்க மெடல் பெற்றவர் ஒரு ஜாதகம் கண் ரூ. 2 நேரில் ஜாதகம் பார்க்க ரூ. மாகவாரி ஓரு வருஷ பலன் எழுத ரூ. ஆருடம்3கேள் விகளுக்கு ரூ. மேல் கேள்வி ஒ-க்கு
தகம் அல் எழுத பண்டித ஸாச்சாரியார், ராம்பேட்டு போஸ்டு,

நின்றிருந்தால்
என்றும் மாததிரை க்கு உபயோகித்தால் ம். ஒவ்வொரு ஆ ாவாதம் அனுப்ப 5/8. ஷிலிங். HAN, (S. M.) Fort, Bombay.
21343.

விஷக்கடி
பூச்சிக்கடி
சீக்கிரம்
குணமாகும்.

ஜாம்-பெக் உலகப் பிரசித்தி பெற்ற கிருமிநாச குணமளிக்கும் நிவாரணி

பூச்சிகள் கடித்தால் உடனே விஷம் உள்ளே பரவுகின்றது. கடுமையாக மாறி தொந்திரவு ஏற்படுமுன் டிண்பட்ட இடத்தில ஜாம்பெக் தடவுங்கள். ஜாம்-பெக்கிலுள்ள அற்புத மூலிகை ஆயில்கள் சருமத்திற்குள் சென்று, வீக்கம், வலியைப் போக்கி, சீழ் வடிதலை நிறுத்துகின்றது. விஷமுள்ள கிருமிகள் முதலியவற்றை ஒழித்து, ஜாம்-பெக் குணப் படுத்தும். ஜாம்-பெக் மெழுகு ரூ. 1. அல்லது 2—4. ஸோப் ரூ. 1. பவுடர் ரூ 1 ஏஜண்டுகள்: மேஸர்ஸ் தாதா அண்டு கம்பேனி, பி. டி., மதராஸ்.

எப்பொழுதும் ஜாம்பெக் உபயோகியுங்கள்.

ZAM-BUK

மிருகக் கொழுப்பற்றது

டோங்ரேயின்
பாலாமிருதம்
பிரசித்தி பெற்ற
குழந்தைகளின் டானிக்

ஜம்மியின்
லிவர்க்யூர் மூலம்
புனர்ஜன்மம்

ஜம்மியின்
லிவர்க்யூர்

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி நோய்களை தணப் படுத்துவதில் தாமதமோ அசட்டையோ செய்வது ஆபத்தாகும். நோய் கண்ட மாத்திரத்தில் 36 வருஷ காலமாக கீர்த்தி பெற்ற இச்சஞ்சீவியை உபயோகியுங்கள்.
எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும் அல்லது
ஜம்மி வெங்கடரமணய்யா & சன்ஸ்.
1/1, பிராடீஸ் ரோட், மைலாப்பூர், மதராஸ்.
மற்றும்:-பம்பாய், கல்கத்தா, லக்ஷ்மணபுரி, பெங்களூர், திருச்சினாப்பள்ளி.

நெ. 48, பெரிய தெரு, கும்பகோணம்.

வி.எச்.ஆர்
பெருங்காயம்

கே. சுவாமிநாதன் & கோ
24, எர்ரபாலு செட்டித் தெரு, மதராஸ்.
ரைஸ் மில், மாவு மில், சீக்காய் & காபி மிஷின், பம்பு வியாபாரமும், எல்லாவித காஸ்டிங் வேலைகளும், ஆயில் எஞ்சின் ரிப்பேர்களும் செய்யப்படும்.
சுவாமிநாதன் பவுண்டரி எஞ்சினீரிங் ஒர்க்ஸ்,
7, வால்டாக்ஸ் ரோட், P. T., மதராஸ்.
பிராஞ்சு:- பேனிங்டன் ரோடு, தஞ்சாவூர்.

வேபெக்ஸ்
அந்த ஜலப்பை நிறுத்தும்.

Printed and Published by T. S Visvanatha Iyer, B.A., at the Swadesamitran Power Press, Mount Road, Madras. Editor, C. R. Srinivasan, B. A.

யிடப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்ட வாக்குறுதியையும் நான் அளிக்க விரும்பவில்லை. ஏன்ன செய்வது என்று எனக்குப் புலப்படவில்லை. திடீரென்று எதிர்பாராத விதம் ஒரு யோசனை பிறந்தது. நான் பிறந்து வளர்ந்தது அலஹாபாத்தில். என்னை அறியாதவர் கிடையாது என்பதே அது. "நான் யார் என்பதும் என் கொள்கைகள் எவை என்பதும், நான் எவற்றை அனுஷ்டிக்க முயற்சிக்கிறேன் என்பதும் உங்களுக்கே நன்குய்த் தெரியும். என்னிடம் எங்களது உரிமைகளுக்குப் பாதகம் வராது என நம்பினால் உங்கள் ஓட்டை எனக்குக் கொடுங்கள்" என்றேன் நான். தேர்தலில் எனக்குதான் முதல் ஸ்தானம். நகர சபையில் பிரசங்கம் புரிவதும் எனது இதர அனுபவங்களுக்கு மாறுபட்டதாகவே இருந்தது. கூடியிருந்தவர் சொற்பபேர்கள்; நெருங்கிப் பேச வேண்டும். அவர்களோ, எவர் எதைப் பேசினாலும் அதில் தோஷத்தைக் காணக் காத்திருப்பவர்கள். நகர சபையில் எனது பிரசங்கள் பற்றிய மட்டில் ஒன்றும் ஆச்சர்யப்படும்படியாக நடக்கவில்லை.

கிராமப்புறத் தொடர்பு

பிறகு பொதுத்தேர்தல் நடந்தது. இதில் காங்கிரஸ் போட்டியிடத் தீர்மானித்ததால் நாடு முழுதிலும் பரபரப்பு காணப்பட்டது. இப்போது பிரசித்திபெற்றிருக்கும் தேர்தல் விஞ்ஞாபனம் அப்போது வெளியிடப்பட்டது. தேர்தல் பிரசாரமும் உடனே ஆரம்பமாகியது. எங்களுக்கு இவையெல்லாம் புதிதாக இருந்தன. 40000 வாக்காளர்களுக்கு அதிகமாயுள்ள கிராமப்புறத் தொகுதிகளில் பிரசாரம் நடத்துவது மிகவும் கஷ்டமான காரியம் என்று எங்களுக்குத்தோன்றியது. கூட்டங்களை நடத்துவது போதுமென்றும் தனி நபர்களிடம் போய் 'ஓட்' கேட்பது அநாவசியம் என்றும் காங்கிரஸ் தீர்மானித்தது இந்தப் பிரச்னையைத் தீர்த்து வைத்தது. முதன்முதலாகக் கிராமப்புறத்திற்கும் எனக்கும் இப்போது தான் உண்மையான தொடர்பு வாய்த்தது. தினமும் நாள் முழுதும் மோட்டாரிலும் மாட்டு வண்டியிலும், நடந்தும் நாங்கள் பல மைல்கள் போய், கூட்டம் நடத்துவோம். சில சமயம் ஆயிரக்கணக்காகக் கூடும் பெரிய கூட்டங்கள்: மற்றும் சில சமயம் சொற்ப பேர் அடங்கியவை: ஒவ்வொரு இடத்திலும் தேர்தல் விஞ்ஞாபனத்தை விளக்கி, ஓட்டுரிமையின் சக்தியை விஸ்தரித்து, அது எப்படி நலமளிக்கவும் தீமை புரியவும் கருவியாக்கப்படலாம் என்பதைச் சுட்டுக் காட்டுவோம். இந்தக் காலத்தில் செய்யப்பட்ட பிரசங்கங்கள் ஒத்துழையாமை இயக்க நாளில் செய்யப்பட்டவற்றிற்கு சமம் எனலாம்: பிந்தியது முந்தியது மாதிரித்தான்: அந்தந்த ஊருக்குத்தகுந்தாற்போல், லக்ஷியமும் கொள்கைகளும் தெளிவுபடுத்தப்பட்டன. இங்கும் வெகு விரைவில் எனக்கும் கூட்டத்தாருக்கும் அந்நியோந்நியம் அதிகரித்தது. ஓரோர் சமயங்களில் எனக்கு விரோதமாக வந்தவர்களும் என்னிடம் விசுவாசம் கொண்டனர்; நீடித்த விசுவாசத்தையும் காட்டினர்.

பதவி யேற்பதா?

தேர்தலில் காங்கிரசுக்கு வெற்றி கிடைத்த பின்பு, மாகாண சட்டசபைகளுக்குக் காங்கிரஸ் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஸ்திரீ புருஷர்களும், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி மெம்பர்களும் டில்லியில் பெரிய கூட்டம் கூடினர். காங்கிரஸ் பதவி பேற்பதா கூடாதா என்பதே நாங்கள் நிர்ணயிக்கவேண்டிய விஷயம். பதவி பேற்கவேண்டும் என்ற முக்கிய தீர்மானத்தைச் சென்னை பிரதம மந்திரியாக விருந்த ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாச்சாரியார் பிரேரித்தார். இதற்கு எதிராக ஒரு கட்சியும் இருந்தது; இரு தரப்பாரும் பலமாக வாக்கு வாதம் பண்ணினர். பலருடைய பேச்சுகளை மிகுந்த பொறுமையுடன் நான் கேட்டு வந்தேன். இந்தக் கூட்டத்தில் என்னுடைய கருத்தைத் தெரிவிக்க நான் ஆசைப்பட்டேனாயினும், அவ்வாறு பண்ண சற்று தயங்கினேன். நான் பேச முற்படுவது அகம்பாவம் காட்டும் என்று எனக்குத் தோன்றியது. இரண்டாம் தினம் பொறுத்திருக்க என்றால் இயலவில்லை; ஆகவே சபையின் விவாதத்திலிருக்கும் தீர்மானத்தை எதிர்க்க நான் அனுமதியை வேண்டினேன். அது கிடைத்தது; எனக்குப் பேச அழைப்பும் வந்தது. அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் இப்போதுதான் நான் முதன் முதலில் பேசினேன். நான் பேசுவதற்காக மேடை மீதேறிய போது, என்னைப் பற்றி சிலர் காதோடு காதாகக் கூறிய சில வார்த்தைகளை நான் கேட்டேன்; ஒரு க்ஷணம் எனக்கும் சங்கோசம் ஏற்பட்டது; ஆனால் பிறகு நான் கூட்டத்தில் எனது அபிப்பிராயத்தைப் பஹிரங்கப் படுத்தினேன்.

தண்டனை கிடைத்தது!

என் பிரசங்க வன்மையைக் காட்டவோ அல்லது அழகிய சொற்களமைந்த வாசகங்களை வெளியிடவோ நான் முயற்சிக்கவில்லை. நம் நாட்டில் மிகுந்த பிரசித்திப் பெற்ற தலைவர்களுக்கப்புறம் பேசும் நான் அவ்வாறு செய்வது விபரீதகரமாகும்! எனக்கு சகஜமான விதத்தில் நான் பேசினேன்: என் உள்ளத்தில் உதித்த சில சந்தேகங்களையும் சம்சயங்களையும் வெளியில் எடுத்துச் சொன்னேன். நான் பேசி முடிப்பதற்குள்ளாகவே மணியடிக்கப்பட்டது: ஆகவே நான் விரைவில் அதை முடித்துவிட வேண்டியதாகியது. என்னுடைய பிரசங்கம் எனக்கு திருப்திதரவில்லை. ஆயினும் எல்லோரும் என்னைச் சூழ்ந்து பாராட்டியது நான் எதிர்பாராததாகும்! மீண்டுமொரு முறை உள்ளத்தில் இருப்பதை ஒளியாமல் பேசும் முறை எனக்கு உதவியது. அச்சமயம் அங்கு என்னைச் சிலர் கண்டித்தனர்: காரியக் கமிட்டி தீர்மானத்தை ஒரு ஸ்திரீ துணிச்சலுடன் எதிர்ப்பது அவர்களுக்குப் பிடிக்கவில்லை. "எங்களுக்குத்தான் ஜயம் வரும். நாங்கள் பதவியேற்றவுடன் உங்களைத் தண்டிப்பது நிச்சயம்" என்றார் அவர்களுள் ஒருவர். தாம் கூறியதை அவர் மறக்கவில்லை; மந்திரி பதவியைக் கொடுத்து அவர் என்னைத் தண்டித்தார்!

அனுபவம் பல விதம்

அடுத்தபடி சட்ட சபையில்நான் பேசியது மிகவும் கொஞ்சம். அதைப்பற்றி இப்போது ஒன்றும் கூறத் தேவையில்லை. சட்ட சபையில் பேசுவதில் எனக்கு அதிக ஆசை உண்டு. ஒருவரையொருவர் சமத்காரமாகத் தாக்கிப் பேசுவது ஹாஸ்ய ரசம் மிகுந்தது; எனக்கு இதில் அதிக சந்தோஷம் உண்டு. சென்ற வருஷம் நான் இங்கிலாந்துக்குப் போயிருந்தபோது, இங்கிலீஷ்காரர் கூட்டமொன்றில் நான் பேச நேர்ந்தது; அவர்கள் என்னைப்பற்றி அதிகமாக நினைத்தார்களோ என்னமோ. எனக்குத் தெரியாது. கூட்டத்தாரும் பத்திரிகைக்காரரும் என்னிடம் ப்ரீதியையே காட்டினர்; அவர்கள் உண்மையைத்தான் உரைத்தனர் என்று நான் நம்புகிறேன். இந்த அனுபவம் எனக்குப் பிரயோஜனகரமாகியது; நான் இதனால் அறிந்தது அதிகம். பொதுஜனங்கள் முன்னிலையில்பேசும்போது எதிர்பாராத நிலைமை ஏற்படுவதுடன் நமக்குள் ஒரு திகைப்பு தோன்றுகிறது என்று நான் கூறுவேன். சில சமயங்களில் வேடிக்கை: இதர சமயங்களில் விபரீதம்: ஆனால் ஒரு சமயத்திலாவது நமக்கு ஸ்வாரஸ்யம் குறைவதில்லை; பேசுவதில் எனக்கிருக்கும் ஆசை அதிகம்.

அடுத்த வாரம் ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட் தமக்கு ஸ்திரீ புருஷர்கள் உட்பட பலர் எழுதிய கடிதங்களைக் குறிப்பிட்டிருப்பது அவசியம் படிக்கவேண்டியதாகும்.

பண்டித ஜவஹர்லால் நேரு, ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட், ஸ்ரீமதி சரோஜினி தேவி ஆகியோர் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்திலிருந்து வெளியே வருகின்றனர்.

"ஹரிஜன்" கட்டுரை

எளிய வாழ்க்கை

மஹாத்மா காந்தி

'போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்பதை மஹாத்மா காந்தி பிப்ரவரி மாதம் முதல் தேதி வெளியான 'ஹரிஜன்' இதழில் விளக்கியிருக்கிறார். எளிய வாழ்க்கையும் உயர் நோக்கமும் சிலாகிக்கத்தக்கவை என்பதை அவர் சுட்டிக் காட்டுகிறார்.

"தேவை சிறிது சிறிதாக அபிவிருத்தியடைந்தும், ஆனால் உழைப்பு அதிகமின்றியும் வாழ்க்கையை நடத்த சௌகர்யமளிக்கும் சமூகம் தான் எல்லோரும் எதிர்பார்ப்பதாகும்."—ஆமதாபாத்திலிருந்து இவ்விதம் ஒரு நண்பர் எனக்கு எழுதுகிறார். இந்த யோசனை திருப்திகரமாகத் தான் இருக்கிறது. இதற்குக் காட்டப்படும் ஆதாரங்களைப் பலர் ஒப்புக்கொள்ளக்கூடும். காங்கிரஸ் திட்டத்தை ராஜப்பிரதிநிதி அவசியம் ஏற்கமாட்டார் என்று இந்த நண்பர் முன்னதாகக்கூறினார். 'தனிப்பட்ட நபரின் சுதந்திரத்தில் அவருக்கு ப்ரீதியில்லை: ஆகவே ராஜப்பிரதிநிதி உதறித் தள்ளியது சரியானதுதான் என்பது அவர் கருத்து. அவர் முன்னதாகக் கூறியது நிறைவேறியதால் இப்போது எடுத்துக் காட்டும் ஆதாரங்களும் மிகவும் சரி என எண்ணி, "நான்தான் அப்போதே சொன்னேனே" என்று கூறக்கூடும். ஆகவே இந்தக் கடிதத்தைக் குறித்து நான் எழுதுவது அவசியமாகிறது.

தனி நபர் சுதந்திரம்

ராஜப்பிரதிநிதியின் மறுப்பு நண்பருக்கு சந்தோஷத்தை விளைவிக்காமல் இருக்கலாம். எனது சகாக்களும் கூட இவ்வாறு நடக்குமென்று முன்பேயே கூறிவிட்டனர். ஏதோ வெற்றி கிடைக்கும் என்ற எண்ணத்தால் நான் கிளம்பவில்லை: தோற்றாலும் அது நமக்கு இன்னும் அதிக பலத்தைத்தரும் என்பதே தான் எனக்குப் பிரதானமாக இருந்தது; ராஜப்பிரதிநிதி மறுத்தது தனிப்பட்ட நபரின் சுதந்திரத்தில் அவருக்கு நம்பிக்கை இல்லை என்று எண்ணுவதற்கு இடம் கொடுக்கக் கூடாது. பிரிட்டனும் அவ்வளவு தூரம் போகவில்லை: தனிப்பட்ட நபருக்கு சுதந்திரம் மறுக்க ஐரோப்பா துணிந்து விட்டது. இந்த சுதந்திரம் போய்விட்டால், எல்லாம்போய் விட்ட மாதிரிதான்! தனிப்பட்ட நபருக்கு மரியாதை இல்லாவிட்டால் சமூகத்தைப்பற்றிச் சிந்திப்பார் யார்? தனிப்பட்டவருக்கு சுதந்திரம் இருந்தால் தான் அவர் சமூக சேவையை உத்தேசித்து, தமது சுதந்திரத்தைத் தாமாகவே விட்டுக் கொடுக்கமுடியும். அது அவரிடமிருந்து பறிக்கப்பட்டால், அவர் யந்திரம் போலாகிறார்: சமூகம் நசித்து விடுகிறது. தனிப்பட்ட நபருக்கு சுதந்திரத்தை மறுத்தால், எந்த சமூகமும்தலை தூக்க முடியாது. இது மனித இயற்கைக்கு முற்றிலும் மாறுபட்டது. ஒரு மனிதனுக்கு எவ்வாறு ஒரு கொம்போ அல்லது வாலோ முளைக்கிறதோ, அதே மாதிரி, அவனுக்கு சிந்திப்பதற்கு சக்தியில்லாவிட்டால் அவன் ஒரு மனிதனாக வாழமுடியாது. தனிப்பட்டவர் சுதந்திரத்தை மறுப்பவர் தங்களுக்கு அந்த சுதந்திரம் உண்டு என்று உண்மையாகவே நம்புகின்றனர்; தற்காலத்தில் தோன்றியிருக்கும் செங்கிஸ்கான்கள் தங்களது சுதந்திரத்தில் அதிக நம்பிக்கை கொண்டிருக்கின்றனர்.

"விநோத மானது"

தனிப்பட்டவர் சுதந்திரத்தைப்பற்றி நண்பர்கொண்ட அபிப்பிராயம் எப்படி முரண்பட்டதோ, அதே மாதிரி அவரது மற்றொரு கருத்தும் விரோதமானது. இந்த உலகத்தில் ஒவ்வொருவரும் அதிக உழைப்பின்றி, நல்ல உயர்தர வாழ்க்கையை நடத்துவதென்பது மிகவும் விநோதமானது; ஒரு ஊசி முனைக்குள் ஒரு ஒட்டகம் புகுந்து செல்வதற்கொப்பானது. நண்பர் எதிர் பார்க்கும் உயர்தர வாழ்க்கை ஆடம்பர வாழ்க்கையைக் குறிப்பிடுவதாகும். இது எந்த சமூகத்திலும் அனுஷ்டான சாத்தியமில்லை. நமது ஆடம்பரத்திற்கு எல்லையில்லாவிட்டால் எங்கு தான் போய் நிற்பது? எல்லா வேத நூல்களும் இதற்கு எதிரிடையாகத் தான் உபதேசிக்கின்றன. எளிய வாழ்க்கையும் உயர்ந்த நோக்கமும்தான் நமக்கு லக்ஷியங்களாக இருக்க வேண்டும் என அவை வற்புறுத்துகின்றன, நம்மில் அநேகர் இதன் உட்கருத்தைக் கிரஹித்த போதிலும், அனுஷ்டிப்பதில் கஷ்டப்படுகின்றனர்: இதற்கு மனுஷ்ய ஸ்வபாவமே காரணமாகும், இம்மாதிரி வாழ்க்கை நடத்துவது சாத்தியமே. இந்தியாவின் கோடிக் கணக்கான மக்களுக்கு வருமானம் ஓரளவுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட வேண்டியது அவசியம்: இதற்கு பெரிய யந்திர சாதனங்கள் தேவையில்லை: அவை மூலம் கெடுதல் தான் சம்பவிக்கிறது.

எது உண்மை

பிரதி தினமும் தனது தேவைகளை மனிதன் பெரிதாக்கிக் கொண்டே போனால், எளிய வாழ்க்கையையும் உயர் நோக்கத்தையும் கடைபிடிப்பது கடினமானதாகிறது. இது சரித்திர பூர்வமாக நாம் கண்டறியும் விஷயமாகும். போதுமென்ற மனம் தான் மனிதனுக்கு சந்தோஷத்தைத் தரும். அதிருப்தி கொண்டவனுக்கு எவ்வளவு இருந்தாலும் மேலும் ஆசை தான். அவன் தனது ஆசைக்கு அடிமையாகிறான், தன் ஆசைக்கு அடிமையாவதை விட மோசமானது வேறு ஒன்றும் கிடையாது. தனக்குத் தானே விரோதியாயும் சிநேகமாயும் மனிதன் இருப்பதாக அநேக ஞானிகள் பஹிரங்கப் படுத்தியுள்ளனர். அடிமையாய் நிற்பதும் தலை தூக்கி நிற்பதும் அவனிடம் தான் இருக்கிறது. தனிப்பட்டவர் விஷயத்தில் எது உண்மையோ அது சமூக விஷயத்திலும் உண்மையானது தான்.

FREE! FREE! FREE!



லைசென்ஸ் தேவையில்லை
ஆடோமாடிக ரிபீடர்

திருடர்களையும் விலங்குகளையும் பயமுறுத்த ஆடோமாடிக் ரிபீடர் எவ்வித தொந்தரவுமின்றி 6 முறை சுடவும் உண்மை ரிவால்வரைப்போல சப்தம் கேட்கும் சுடும்பொழுது நெருப்பு தெரியும் தீங்கான விளைவுகள் ... ஒவ்வொரு வீட்டிலும் இருக்கவேண்டும் லைசென்ஸ் தேவையில்லை ... விலை ரூ. 4/8/ 35 ரவைகள் இலவசம் ... ரூ 5/ 45 ரவை இலவசம். ... ரூ 6/12/- 55 ரவை இலவசம் அதிகப்படி 1000 ரவை ரூ 3/- பெல்டுடன் கேஸ் ரூ 5/12/ ஆயில் ரூ 1/2/ தபால் சார்ஜ் ப்ரத்யேகம்.

இலவசம்:—ஒரு தோலால் லண்டன் ப்யூ கோல்ட் ஒரு அழகிய மியூட் கைக்கடியாரம் ஒவ்வொரு துப்பாக்கியுடன் இலவசமாகக் கொடுக்கப்படும் சேர்ந்தாற்போல் இரண்டு வாங்கினால் 3 அழகிய மியூட் கடியாரங்கள், 3 தோலால் லண்டன் ப்யூ ... தபால் சார்ஜ்

LONDON COMMERCIAL COMPANY.
(EAB) Post Box No. 165, (S.M.M) LAHORE (India)

டோங்ரேயின்
பாலாமிருதம்
பிரசித்தி பெற்ற
குழந்தைகளின் டானிக்

ஹிந்திக் கதை

ஒற்றையடிப் பாதை

★ ★

ஸ்ரீ கமலா காந்த வர்மா எழுதியது

அப்பொழுது நான் இப்படி இருக்கவில்லை. ஜனங்கள் என்னை எப்பொழுதும் நான் இதே மாதிரி பருத்து நீளமாக, அடிவானத்தின் மண்டலத்தைப்பிளந்து உலகத்தில் ஒரு கோடியிலிருந்து மறு கோடிவரை படுத்திருந்ததாகவே நினைக்கின்றனர். அது பழைய கதை, யார் அறிவார்கள் அதை?

அப்பொழுது நான் இவ்வளவு அகலமும் இல்லை. நீளமும் இல்லை. என் முகத்தில் கற்களின் சென்னிறம் இல்லை. என் மேனியில் கற்களாலும், சிமிண்டினாலும் இழைத்த ஆபரணம் எதுவும் கிடையாது. என் இரு புறங்களிலும் மர வரிசைகளும் கிடையாது. இரு புறமும் குறடுகளும் கிடையாது. மின்சாரக் கம்பங்கள் கிடையாது. அப்ஸர ஸ்திரீகளைப்போல் அலங்கரித்துக் கொண்டு நிற்கும் இந்தக் கடைகளும் கிடையாது. மோதிரத்தில் கல் பதித்தது போன்ற இந்தப் பார்க்குகள் கிடையாது. அப்பொழுது நான் ஒரு சின்னஞ் சிறிய ஒற்றையடிப்பாதை. மெலிந்த அழகான மேனி!

எப்பொழுதிலிருந்து நான் இருக்கிறேன்? இது எனக்கு ஞாபகம்வரவில்லை. ஆனால்ஒன்று மாத்திரம் ஞாபகம் வருகிறது. அமராயியின் (மாந்தோப்பு) இந்தப் பக்கத்திலிருந்து ஒரு யுவதி நதியிலிருந்து தண்ணீர் கொண்டு வர அந்தப் பக்கம் போயிருக்கவேண்டும். எப்படி ஒரு சிறிய சம்பவத்திற்குப் பிறகு ஒரு நியமம் உண்டாகி, பிறகு ஒரு தர்மமே வெளிப்படுகிறதோ. அதே மாதிரி, ஒரு யுவதி ஜலம் எடுத்துக் கொண்டு வந்தபிறகு கிராமத்திலுள்ள எல்லா இளம் மங்கையரும், குடத்தை எடுத்துக்கொண்டு, கர்வத்துடன் பேசிக்கொண்டு அதே வழியில் வந்திருக்கவேண்டும். பிறகு தான் என் வாழ்க்கைக்கதை பெருகலாயிற்று.

வரண்டுபோன என்னுடைய வாழ்க்கை அந்தகாரத்தில், கழிந்துபோன என் இனிய நினைவுகளின் இரு தாரைகள் இன்னும் ஜ்வலித்துக் கொண்டிருக்கின்றன. அமராயியின் கிராமத்து ஜனங்கள் எல்லோரும் எனக்குத் பரிச்சயமானவர்கள்தான் என்றாலும், எனக்கு ரொம்ப விருப்பமானவர்கள் இருவர்தான். ஒருவர் வடதாதா (ஆலமரம்) மற்றொன்று ராமியின் கிணறு.

வடதாதா அமராயிலுள்ள எல்லா விருக்ஷங்களிலும் வயதானவர். அவரிடம் இருந்த மரியாதையாலும் அன்பாலும் எல்லோரும் அவரை வடதாதா என்று சொல்வது வழக்கம். அவர் விருத்தர்தான என்றாலும் அவர் உள்ளம் குழந்தை உள்ளம் போன்று சரளமானது. யுவர்களின் உள்ளம் போல் சரஸமானது. அவர் அமராயியின் அதிபதி. அவரிடம் தபஸ்விகளின் தேஜஸ் ஜ்வலிக்கும். கிருஹஸ்தர்கள் இன்பம் திகழும்.

அவருடைய அடர்ந்த நிழலில் படுத்து கழிந்த யுகங்களின் துன்பமும், ஆனந்தமும் நிறைந்த கதைகளைக் கேட்டது மழைக் காலத்தில் அவர் புஜங்களில் அமர்ந்து பக்ஷிகள் இசைக்கும் மதுர கீதத்தைக் கேட்டானந்தித்தது-இவைகளை நினைத்தால் இன்று கூட என் மனம் வியாகூலமடைகிறது.

அவருக்கு நேர் அவரைச் சேர்ந்தாற் போல் நிர்மலமான ஜலத்துடன் கூடிய, ஆழமான உதார குணமுள்ள ராமியின் கிணறு. வைகறையில் கிராமத்துப் பெண்கள் ஜல் ஜல்லென்று தங்கள் நூபுரங்கள் ஒலி செய்ய நடந்து வந்து, அமராயியைத் தங்கள் இனிய கண்டத்வனியால் இசைபெறச் செய்து கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்துக் கொண்டு தங்கள் மலர்ப்பாதங்களால் என்னை ஈரமாக்கிக்கொண்டே செல்வார்கள்.

மனிதர்களின் வாழ்க்கைச் சரித்திரம், அநேகமாக, தங்களுடைய தோழர்களாலேயே தான் ஆக்கப்படுகிறது. ஏன் இம்மாதிரி ஆகிறது? இது நமக்குப் புரிவதில்லை! ஆனால் அகஸ்மாத்தாக யாரிடமோ கேட்ட வார்த்தைகள், சற்று நேரம் மாத்திரமே பார்த்த உருவங்கள், இரண்டொரு நிமிஷப் பரிச்சயம், இவை வாழ்க்கை இதிகாசத்தின் அமர சம்பவமாகவும், விலையற்ற ஞாபகச் சின்னமாகவும் ஆகி விடுகின்றன.

நம்முடைய மித்ரர்களின் சமூகம் யாவும் வாழ்க்கையின் எல்லாச் சம்பந்தங்களும், தாமரை இலைத் தண்ணீர் போல் தத்தளித்து ஒட்டாமலே நின்று விடுகின்றன. கிளம்பிக் கிளம்பி வருகின்றன. ஆனால் முழுகி விடுகின்றன. நிலைத்து நிற்க முடிவதில்லை. ஏன் இம்மாதிரி என்று யோசிக்கிறேன்; ஆனால் அறிய முடியவில்லை.

ஆனிமாதம். ஒருபகல், காற்று கொஞ்சம் உஷ்ணமாக அமராயியின் விருக்ஷங்களில் மோதி வீசிக்கொண்டிருந்தது: வடதாதா நித்திரையிலிருந்தார். ஒரு மரத்தைச் சுற்றிக்கொண்டிருந்த இரண்டு கொடிகளுக்குள் சண்டை ஏற்பட்டது.

நான் ஆச்சர்யமடைந்து அவைகளின் சண்டையைக் கேட்டுக்கொண்டிருந்தேன். இதற்குள் கிணறு என்னிடம், "பகடண்டி! (ஒற்றையடிப் பாதை) தூங்கிப் போய்விட்டாயா?" என்றது.

"இல்லையே, இந்தக் கொடிகளின் சண்டையைக் கேட்டுக் கொண்டிருக்கிறேன்!" என்றேன்.

கிணறு சிரித்துக்கொண்டே "என்ன சமாச்சாரம்?" என்றது.

"ஒன்றுமில்லை. காரணமில்லாத சண்டை! இரண்டும், இரண்டு முட்டாள்கள்!" என்றேன்.

கிணறு சிரித்துக்கொண்டே 'உலகில் யாரும் முட்டாளல்ல. நிலைமை எல்லோரையும் முட்டாளாக்கி விடுகிறது. இந்த அமராயியில் இன்று நீ தனியாக இருக்கிறாய்!, நாளைக்கு இன்னொரு பகடண்டி ஏற்பட்டு விட்டால் பிறகு உங்கள் இருவருக்கும் சச்சரவு ஏற்படக்கூடுமல்லவா?" என்றது.

நான் சற்று கோபமடைந்தேன். "சாதாரண விஷயங்களுக்குக்கூட என்னைச் சம்பந்தப்படுத்தி இழுக்க உனக்கென்ன அதிகாரம்?" என்றேன்.

"அவை முட்டாள்கள் என்று சொல்ல உனக்கென்ன அதிகாரம்?" என்று கேட்டது கிணறு.

"நான் நூறு தரம் சொல்லுவேன்! ஆயிரம் தரமும் சொல்லுவேன்! அவை இரண்டும் முட்டாள் முட்டாள் தான்!" என்றேன்.

இதற்குள் வடதாதா விழித்துக்கொண்டு "யாரை முட்டாளாக்கிக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

வார்த்தைகள் நின்றன. கிணறு மௌனமாக இருந்து விட்டது. இரண்டு நாள் வரை வேறு பேச்சு வார்த்தை நடைபெறவில்லை. இதனால் எனக்குச் சற்று கோபமும் வருத்தமும் கூட உண்டாயின. ஸ்திரீ காதலால் வாடுகிறாள். தன்னுடைய ஹிருதயத்திலிருந்து எழும் ஆசை எண்ணங்களை அடக்க முடியாதபோது அவள் சண்டை போடுகிறாள். ஸ்திரீகளுடைய பலங்கள் எல்லாவற்றிலும் சிறந்த பலம் அழுகை தான். அவர்களுடைய கலைகள் எல்லாவற்றிலும் சிறந்த கலை சண்டை தான். சண்டை போட்டுக் கோபித்துக் கொள்வது. பிணங்கிக்கொண்டு அழுவது, பிறகு மற்றவரை அழவைத்து ஒப்பச் செய்வது இவைகள் பெண்மை உள்ளத்திற்குப் பிரியமான விஷயங்கள்.

புருஷர்கள் படித்தவர்களாக இருக்கலாம். இலக்கியகர்த்தாவாக இருக்கலாம். தர்சன சாஸ்திரம் கற்றவராக இருக்கலாம். தத்வ ஞானியாக இருக்கலாம். ஆனால் அவர்கள் இந்த சிறிய சாதாரண விஷயங்களை அறியா விட்டால் அவர்கள் முட்டாள்கள் தான்.

இந்த சம்பவம் ஒன்றும் புதிதல்ல. தினசரி நடப்பதுதான்

ஸ்ரீ கமலா காந்த வர்மாவின் கற்பனை சித்திரம் அபூர்வமானது. "ஸ்திரீ காதலால் வாடுகிறள்: தன்னுடைய ஹ்ருதயத்திலிருந்து எழும் ஆசை எண்ணங்களை அடக்க முடியாதபோது அவள் சண்டை போடுகிறள். ஸ்திரீகளுடைய பலங்கள் எல்லாவற்றிலும் சிறந்த பலம் அழுகை த்தான். அவர்களுடைய கலைகள் எல்லாவற்றிலும் சிறந்த கலை சண்டைதான். சண்டை ஏற்பட்டுக்கோபித்துக்கொள்வது, பிணங்கிக்கொண்டு அழுவது, பிறகு மற்றவரை அழவைத்து ஒப்பச்செய்வது – இவை பெண்மை உள்ளத்திற்கு ப்ரியமான விஷயங்கள்'' இதன் உண்மையை இத்தக்கதையில் அறிவீர்கள். மனுஷ ஸ்வபாவத்தின் தன்மையை உணருவீர்கள். இதை மூலத்தின் சுவை குன்றமல் மிகவும் அழகாக மொழி பெயர்த்தவர் ஸ்ரீ அ. கி. ஜயராமன்.



டோக்கியோ வெளி நாட்டு யிலாகா காரியாலயத்தில் தீப்பிடித்துக்கொண்டு நாசம் ஏற்பட்டது. படத்தில் மேற்படி காரியாலயத்தின் வெளித்தோற்றத்தைக் காணலாம். (ஜி. என். எ.)

ஏதோ சிறிய விஷயத்தை முன்னிட்டு நாங்கள் சண்டையிடுவோம். ஒருவருக்கொருவர் வார்த்தை வளரும், பிறகு சில வாரங்கள் ஒருவருக்கொருவர் பேசாமல் இருப்போம். ஆனல் எதற்காக நான் இதெல்லாம் செய்து சண்டையெல்லாம் போடுகிறேனே, அது நடப்பதில்லை: கிணறு என்னை ஒரு போதும் ஒப்புக்கொள்வதில்லை, கடைசியில் தோல்வியடைந்து நானே பேச ஆரம்பிக்கும் போது, அதுவும் ஒன்றும் அறியாததைப் போல. ஒன்றும் நடக்காததைப் போலப் பேச ஆரம்பிக்கும்.

நான் என் மனதிற்குள். நான் அழுவதால் ஒரு வேதனையும் அடையாமல், நான் ஒப்புக்கொள்வதால் ஒரு ஆனந்தமும் அடையாமல் இருக்கும் இது ஒரு விசித்திர ஜீவன் என்று எண்ணுவேன். தானகக்கோபிப்பதில்லை. மௌனமாக இருப்பது. பேசினல் பிறகு பேசுவது. ஒன்றும் தெரியாததைப்போல! அட கடவுளே! உன்னுடைய ரசனையின் ஹ்ருதய ஹீனத்தையே எனக்காகத் திறந்து வைத்திருக்கிருயா,?

இந்த சம்பவத்தில் நான் விசேஷமாகக் கவனம் வைக்கவில்லை. ஆனல் இந்த அமராயியில் "நீ தனியாக இருக்கிருய், நானே மற்றொரு பகடண்டி ஏற்பட்டால் பிறகு உங்கள் இருவருக்கும் சச்சரவு ஏற்படக்கூடுமல்லவா?" என்ற வார்த்தைகள் என் செவிகளில் ஒலித்துக் கொண்டிருந்தன, இதற்கு நான் என்ன பிரதிவாதம் செய்தேன்? அதனுடன் சண்டைபோட்டு அதை முட்டாளாக்கினேன்!

இன்று என்னை நான் ஸ்திரீ என்றும், ஸ்திரீ ஜாதிக்குள்ள பலஹீனம் என்னிடமும் இருக்கிறதென்றும், எண்ணிக் கொண்டிருக்கிறது. இதற்கு பிரதிவாதம் செய்வதற்குப்பதில் அதனுடைய் தர்க்கத்திற்கே பிரதிவாதம் செய்கிறேன். மீண்டும் நான் முட்டாளானேனு அல்லது அதுவா?

எனக்கு என்னுடைய பலஹீனத்தின் மேல் கோபம் பொங்கி எழுகிறது! அதற்கு என்னுடைய கோபத்தைப் பற்றி சிந்தை இல்லாமலும், என்னை சாந்தப்படுத்த முயற்சிக்காமலும், என்னிடம் துளிக் கூட அனுதாபமில்லாமலும், இருந்தால் நான் மாத்திரம் ஏன் அதற்காக உயிரை விட வேண்டும்?

அது ஹிருதயஹீனகை இருந்தால் நானும் ஹிருதய ஹீனகை இருக்கிறேன். அது ஆத்ம நிக்ரஹம் செய்ய முடியுமானல் நான் என்னை அடக்கி தன் வசப்படுத்திக் கொள்ள முடியும்,

நான் சத்தியம் செய்கிறேன், நான் மீண்டும் அதனுடன் பிணங்க மாட்டேன். பிணங்கினலும் பேச மாட்டேன். என்ன ஆனலும் சரிதான், காதலுக்காக நான் பெண்மையைக் களங்கம் செய்ய மாட்டேன்.

இது ஒரு நாளைய விஷயம். ஐப்பசி மாதம் மழை சில நாட்களாக நின்றிருந்தது. சேறு சகதி ஒன்றுமில்லை. சிறு சிறு பசும் புற்களுக்கும், வன புஷ்பங்களுககும் இடையில் நான் அமராயியின் இந்தக் கரையிலிருந்து அந்தக் கரை வரையில் படுத்திருந்தேன்.

இந்த இயற்கையின் சுமையில் என்னைக் காண்பவர்களுக்கு நான் ஒரு சீமந்த கன்னிகையாகக் காட்சியளித்தேன். சரத்காலம் என் உடலில் பிரதி பலித்தது. நான் ஏதோ யோசித்துக் கொண்டிருந்தேன், சட்டென்று கிணறு "பகடண்டி! கேட்டாயா?" என்றது.

நான் மனமில்லாமல் "சொல்லேன்!" என்றேன். "நீ நாளுக்கு நாள் பெருத்துக் கொண்டே வருகிருய் என்றது" அது.

நான் ஒன்றும் பதில் சொல்லவில்லை.

சிறிது நேரம் பொறுத்து மீண்டும் "முன்பு நீ ஒலியாக இருந்த போது நன்ருக இருந்தாய்." என்றது கிணறு.

"நான் பெருத்திருந்தாலும் உனக்கு நன்ருக இருப்பதற்காக என்னல் ஒல்லியாக இருக்க முடியாது" என்றேன்,

"நீ ஒல்லியானல் நன்ருக இருக்கும் என்று நான் சொல்லவில்லை" என்றது.

"பின்னே நீ என்ன சொன்னய்?"

"ஸ்திரீகள் ஒல்லியாக இருந்தால் அதிக சௌந்தர்யமாக இருப்பார்கள் என்று கவிகள் சொல்வது வழக்கம், நீ பெருத்துப் போய் விட்டால் கவிகளின் பரிபாஷைகளிலிருந்து விலகிவிடுவாய்!"

"நீ உன்னைக் கவி யென்று நினைத்துக் கொள்ளவில்லையே?" என்றேன் கோபத்துடன்,

"இல்லவே இல்லை!"

"பின்னே நான் ஒல்லியாக இருந்தால் கவிகளுக்கு நன்ருக இருக்கும், அல்லது கெடுதலாக இருக்கும், என்று சொன்னதன் அர்த்தம் என்ன?"

அது சாந்தபாவத்துடன் "அதொன்றுமில்லை. எனக்கு அந்த பரிபாஷை தெரியும். அதை உனக்கும் தெரிவிப்பது என் கடமை என்று எண்ணினேன் அவ்வளவுதான்" என்றது.

நான் கம்பீரத்துடன் "சந்தோஷம்" என்றேன்.

ஸ்திரீ! உண்மையாக அவள் ஸ்திரீயாக இருந்தால் எல்லாவற்றையும் சகித்துக் கொள்வாள், ஆனல் தன்னுடைய ரூபத்தை திரஸ்கரித்து யாராவது பேசினல் அதை அவளால் சகிக்க முடியாது, ஸ்திரீ குரூபியாக இருக்கலாம். ஆனல் ஆடவர்கள் அவளை குரூபி என்று சொல்ல அதிகாரம் கிடையாது.

ஸ்திரீகளின் ஸ்திரீத்வம்தான் உலகில் எல்லாவற்றையும் விட உயர்ந்த சௌந்தர்யம். அதனெதிரில் குரூபத்தை சங்கேதம் செய்வது கூட அந்த ஸ்திரீத்வத்தை அவமதிப்பதாகும். ஸ்திரீகளைக் குரூபி என்று சொல்வது, புருஷர்களைக் கோழை என்று சொல்வதற்கு சமானம்,

22 காரட், டி. சி. என்.
ரோல்ட்கோல்ட் வளையல்கள்
அசல் தங்க வளையல்களைப்போல்



எப்பொழுதும் நிறம் மாருமல் இருக்கும்.
5 வருஷம் உத்திரவாதமுள்ளது. சிறு குழந்தைகள் முதல் பெரியவர்கள் சையிஸ் வரையில் ஒரே விலைதான். வளையல் ஜதை 1-க்கு ரூ. 6. வி. பி. செலவு: 1 ஜதை முதல் 6 ஜதைகள் வரை அணு 8. விலாசம்:-
டி. சி. நாகலிங்கப்பா & Co
பார்க் டவுன் போஸ்ட், மதராஸ்.

ஹிந்தி ஆசான்
உபாத்தியாயர் உதவியில்லாமல் தமிழ் உச்சரிப்பைக்கொண்டே நாலே வாரத்தில் நல்ல ஹிந்தி பாஷையை சுலபமாகக் கற்றுக்கொள்ளலாம். விலை 12 அணு. ஒரு சாபி அனுப்ப அணு 14 மணியார்டர் செய்யவும்.
எம். எஸ் ராமுலு கம்பெனி,
286, எஸ்பிளனேட், மதராஸ்.

உண்மை உறுதிக்கும் உத்திர வாதம்.
—:—
"ஷண்முகம் பிராண்டு"
ஸ்டீல் டிரங்கு & சூட்கேஸ்கள்
தேவைக்கு வேண்டிய புது மாதிரி தினுசுகளில் கிடைக்கும்.
ஷண்முகம்பிராண்டு ஸ்டீல்டிரங்குஒர்க்ஸ்
தயாரிப்பவர்:- சி. ஞானசுந்திர நாயகர்,
P. 3094. 341, எஸ்பிளநேட், மதராஸ்

கர்ந்தி ஜோஸியர்

ஒரு வருஷப் பலன் மாதவாரி ரூ. 3.
ஆருடம் 5 கேள்விகளுக்குப் பதில் ரூ. 1, வி. பி. செலவு அணு 5.
ஜனனகால விவரம் or எழுதும் நேரம், சுமார் வயது தேவை.
ஹனுமான் ஆச்ரமம், திருத்தணி S.I.

மிஸஸ் ச. கோ. இ.
காதர்மீரா சாயபு,
ஹைட் நர்சரி தோட்டம், சேலம் S.
ஒட்டு மாங்கன்களும், பழச்செடிகளும், இங்கிலீஷ் காய்கறி, புஷ்ப விதைகளுமிருக்கின்றன. கேட்லாக் இனம்.

ஆனந்த பற்பொடி

☞ இந்த லேபிலைப்பார்த்து வாங்குங்கள்
இதுதான் மார்க்கட்டில் சிறந்தது.
எங்கும் கிடைக்கும்.

Certified by Rt. Hon. V. S. Srinivasa Sastri, P.C.
Hon. Sir R. K. Shanmukham Chetty, K.C.I.E.
Hon Sir Md. Habibulla Sahib Bahadur K.C.S.I.
Hon. Sir K. V. Reddi, Kt. Sir B. N. Sarma, K.C.S.I.
Hon. Sir P. S. Sivaswami Aiyar, K.C.S.I., C.I.E
Hon. Sir C. P. Ramaswamy Aiyar, K.C.I.E.
Hon. Sir M. Krishnan Nair, Kt. Sir A. P. Patro, Kt.
Hon. A. T. Pannirselvam, Dr. P. Subbaroyan,
Hon. Justice K. Sundaram Chetti, Hon. P. T. Rajan

ANANDA TOOTH POWDER
TRADE MARK
REGISTERED

Hon. Justice Sir C. V. Kumaraswami Sastri, Kt
Hon. Justice Sir V. Ramesam, Kt.
Hon. Justice Sir C. V. Ananthakrishna Aiyar Kt
" C Madhavan Nair. Sir M. D. Devadoss, Kt.
" M. Venkatasubba Rao, Raja of Sivaganga.
Rajas of Kollengode Bobbili, Ramnad, Mandasa.
Gold medals from Mysore, Pudukkottai, Etc. States
MANUFACTURED BY—VAIDYARATNA
PANDIT U. RAMANATHA SASTRI, MADRAS.



வைத்திய ஸித்தாச்ரமம்,
39, பஜார் ரோட்,
மைலாப்பூர் — மதராஸ.

இன்று என்னை மனதிற்குள் குத்தும்படிப் பேசுகிறது என்பதைத் தெரிந்து கொண்டேன். அது விளையாட்டாகச் சொல்லவில்லை கேலி செய்கிறது. நான்மனதிற்குள், என்ன முடிவானலும் சரி, நானும் இன்றையிலிருந்து, யுத்தத்திற்கு ஆரம்பிப்ப தென்று முடிவு செய்து விட்டேன்.

அன்றிரவு நிலவு மலர்ந்திருந்தது. இரவின் மோனத்தில் லயித்து அமராயி மயக்கமடைந்திருந்தது, வட தாதா பக்ஷிகளை உறங்க வைத்துத் தானும் தூங்க ஏற்பாடு செய்து கொண்டிருந்தார். "நீ தூங்கி விட்டாயா?" என்ருர்.

"இல்லை தாத்தா, இந்த மாதிரி நிலவு எப்பொழுதும் இருக்கிறதா? என் வாழ்நாள் முழுவதும் இந்த மாதிரியே இந்த நிலவில் படுத்துக்கொண்டு கழிக்க வேண்டுமென்று தோன்றுகிறது" என்றேன்.

இதற்குள் கிணறு "தாதா அமராயியில் இப்பொழுதிலிருந்து விவாஹக்கட்டுப்பாடு ஆரம்பித்து விடு" என்றது.

"என்ன விவாகம்?" என்ருர் வட தாதா.

"பார்க்கவில்லையா? காதலின் முன் சரணம் ஆரம்பமாகிவிட்டது. இரண்டாவது சரணத்தில் கவிதை செய்யப்படும். மூன்ருவது சரணத்தில் பைத்தியத்தின் அபிநயம் நடக்கும், நான்காவது சரணத்தில் கல்யாணம் நிச்சயம் ஆகிவிடும்" என்றது.

எனக்கு மனதிற்குள் ஏதோ சுறுசுறு என்றது. இன்று இதைக் கோபமூட்டவேண்டுமென்று எண்ணினேன். நான் சிரித்துக்கொண்டே "பாரு தாத்தா! அவரவர்களுடைய பாக்கியத்தைப்பற்றிய வார்த்தைகள்! ஈஸ்வரன் உன்னை இவ்வளவு உயரமாய்ப் படைத்திருக்கிருன். உன்னுடைய கணக்கற்ற கைகளினுல் சூரிய, சந்திர, கிரணங்களை எப்பொழுதும் பருகி வருகிருய். திக்கு திக்காந்தரங்களிலிருந்து வரும் தென்றல் காற்றில் முழுகித் திளைத்து, அகண்ட ஆகாயத்தின் கண் தலை நிமிர்ந்து, பிரக்ருதியின் கணக்கற்ற திவ்யமான சோபையை மௌனம் செய்கிருய். நக்ஷத்திரங்கள் நிறைந்த இரவில் நூற்றுக்கணக்கான அழகிய பக்ஷிகளை உன் மடியில் படுக்கவிட்டுக் கொண்டு சந்திர லோகத்தின்கதைகளைச்சொல்லுகிருய். உஷையும், அஸ்தமனமும், உன்னை அன்புடன் முத்தமிடுகின்றன. இயற்கையின் வற்ருத பொக்கிஷம் எப்பொழுதும் உனக்கு திறந்தே இருக்கிறது. நான் உன்னைப் போல் அவ்வளவு உயரமானவளல்ல. ஆயினும் வெகு தூரம் வரை பரவி இருக்கிறேன். வஸுந்தரா தன் சோபையை என் முன் வாரி இரைக்கிருள், ஆகாயத்தில் செல்லும் சந்திர, சூரியர்கள் தங்கள் ஒளி வலைகளை என் மீது வீசுகிருர்கள்.

வசந்தத்தின் இன்பமதம், சிசிருதுவின் ஜலத்தோடு கூடிய பசுமை, சரத் ருதுவின் நிர்மலம் இவைகள் என் வாழ்க்கையில் இன்பத்தை உண்டாக்குகின்றன, நான் உயிரோடு மாத்திரம் இல்லை, வாழ்க்கையின் இன்பத்தையும் அனுபவித்துக் கொண்டும் இருக்கிறேன். எனக்கு, சூர்யப்பிரகாசம் கிடைக்காதவர்களையும் அந்தகாரமே வாழ்க்கையின் பீதியாகவும், வரட்சியே அவர்கள் கதையாகவும் இருக்கிறவர்களைப் பார்த்தால் துக்கமாகத் தான் இருக்கிறது. அவர்கள் தங்கள் கண்ணுக்கு எவ்வளவு தெரிகிறதோ, அவ்வளவுதான் ஆகாயம் என்று எண்ணுகிருர்கள். அவர்கள் எதுவரை பார்க்கிருர்களோ அதுவரை தான் பூமி என்று எண்ணிகிருர்கள். தாதா! அவர்களுடைய மனேபாவம் எவ்வளவு இரக்கப்படக் கூடியதாக இருக்கிறது பார்த்தீர்களா?" என்றேன்.

தாதா ஒன்றும் பதில் சொல்லவில்லை. ஒருக்கால் தூங்கிப்போயிருக்கலாம். ஆனல் கிணறுஉடனே "கேட்கிருயா தாதா, பகடண்டி எவ்வளவு உண்மை சொல்கிருள்? இவர்களை விட இரக்கப்படத்தக்க ஜீவன்கள் யார் இருப்பார்கள்? சில தினங்களுக்கு முன் நான்கூட இப்படித்தான் யோசித்தேன், ஆனல் உலகில் இரக்கப்படத்தக்க ஜீவன்கள் ரொம்ப இருக்கிறதென்று உணர்ந்தேன். சூர்ய சந்திரர்களிடமிருந்தும், பரந்த வான வெளியினின்றும், எழில் மிக்க வஸுந்தரையினின்றும், வஞ்சிக்கப்பட்ட அந்த ஜீவன்களுக்கு கடவுள், தயவு மேலீட்டினுல் ஒரு பொருளைத் தந்திருக்கிருர். அந்தப் பொருளை அவைகள் தங்களுடையதென்று சொல்லிக்கொள்ளலாம், அதனுல் உலகிற்குப் பல உபகாரங்கள் செய்யலாம். அதனுல் உலகிற்கு ஏதோ ஒரு உருவத்தில் அது சிறந்த லட்சியமாகிவிடும்.

ஆனல், இதெல்லாவற்றையும் விட மேலானவர்கள் இருக்கிருர்கள். அவர்கள் எதிரில் சிருஷ்டியின் சகல சம்பத்துகளும் விரிந்து கிடக்கின்றன. ஆனல் தன்னுடையது என்று சொல்லிக் கொள்ள அவர்களிடம் ஒன்றுமில்லை. ரேகா கணிதத்தின் ரேகைகளைப் போல அவர்களுடைய வாழ்க்கை என்னவோ இருக்கிறது. ஆனல் அதனுடைய, பருமன், அகல, நீளம் யாவும் கற்பனைதான். அவர்களுடைய வாழ்க்கை, மற்றவர்களுடைய வாழ்க்கையினின்றும்

WASH BASINS



அதிக வலுவு, நீடித்துழைக்கும் குணங்களுக்கு பர்ன் வெண்ணிறமான பேஸின்கள் புகழ்பெற்று விட்டன.

சுலபமான அமைப்பு முறை, அழகிய தோற்றம், உடையாது, விரிசல காணுது என்பதற்கு உத்திரவாதம். சுத்தம் செய்யவும், சுத்தமாகவைத்திருக்கவும் சுலபமானது.

இந்தியாவில் இந்திய ஊழியர்களைக்கொண்டு, இந்திய மூலதனத்தால் தயாரிக்கப்படுகின்றது. பர்ன் கை அலம்பும் பேஸின்கள் மிதமான விலையுள்ளவை. இறக்குமதி செய்யப்படும் சிறந்தவற்றின் ரகத்திற்கு இணையானது.

— விவரமான புத்தகம் கேட்போருக்கு இலவசம். —

BURN & CO., LTD.
ESTABLISHED 1781
12, MISSION ROW, CALCUTTA.
WORKS AT RANIGANJ AND JUBBULPORE
BP-3(A)

SAVE FOR VICTORY
BRITISH • WAR • SAVINGS MOVEMENT
ASK YOUR BANK

பர்ன் & கம்பெனி லிமிடெட்,
ஸ்தாபிதம் : 1781
12, மிஷன்ரோ, கல்கத்தா.
தொழிற்சாலை : - ராணிகஞ்சு & ஜபல்பூர்.
சென்னை ராஜதானிக்கு ஏஜண்டுகள்:—
பம்பாய் கம்பெனி லிமிடெட், த. பெ நெ. 109, மதராஸ்.

ஸர்நேவில் ஹெண்டர்ஸன். முன்புபெர்லினில் பிரிட்டிஷ் ஸ்தானிகராக இருந்த அவர் உள்நாட்டுப் பாதுகாப்புப் படையில் சேர்ந்திருக்கிருர். (இ என். பி.)

வேறுபட்டிருக்கிறது. அவர் எல்லோருக்கும் ஸாதனே. ஆனல் யாருக்கும் லட்சியம் இல்லே. அம்மாதிரி மனிதர்கள் கூட உலகில் இருக்கிருர்கள். உனக்கு அவர்களிடம் தயை வராதா?'' என்றது.

தாதா தூங்கியே போய் விட்டார். நான் சற்று கோபத்துடன் ''ராமிக்கிணறே! இந்த உலகத்திற்கு நீதான் லட்சியம்! நான் வெறும் சாதனே என்று நினேப்பாயானுல் அது உன் குற்றமாகும்! உலகில் ஏதாவது ஒன்று 'உண்டென்ருல், அது ஸாதனேதான்! லட்சியம் அல்ல.! லட்சியம் என்ற சப்தம் மனிதர்களின் சிக்கலான ஒரு கற்பனேயின் பலன் தான். லட்சியம் ஒரு பாவனே மாத்திரம் தான். ஸ்தூல, பிரத்யக்ஷ ரூபத்தில் அது எந்த ரூபமானுலும் சரி தான். யார் யாருக்கு இருக்கிறதோ அது ஸாதனே தான்?''

கிணறு கம்பீரமான குரலுடன் ''நீ என்னே முழுப் பெயரையுஞ் சொல்லி அழைத்தாய் இதற்காக உனக்கு என் நன்றி. நான் உனக்கு பதிலாக இரண்டொரு வார்த்தைகள் சொல்கிறேன். முதலில் உனக்கும் எனக்கும் எந்த விதமான சண்டையும் இல்லே. சொந்தமாக நானும் உன்னே ஒன்றும் சொல்ல வில்லே, நீயும் என்னே ஒன்றும் சொல்ல வில்லே. இரண்டாவது நீ சொல்கிற மாதிரியே லட்சியத்திற்கும் சாதனேக்கும் வேறு வித்யாசம் இல்லே என்ருலும் பரிணும வித்தியாசம் இருக்கிறது. உலகில் லட்சியம் என்ற பெயருள்ள வஸ்து ஒன்று இல்லே. அது சரி, இங்கு என்னென்ன இருக்கிறதோ அவை யாவும் ஒவ்வொரு ரூபத்தில் ஸாதனே தான். இதுவும் சரி.

ஆயினும் ஸாதனேயில் சில ஸாதனேகளே ஸாதனேகள் என்றும், சில ஸாதனேகள் அல்ல என்றும் சொல்லக்கூடாத நிலேமையில் இருக்கின்றன, என்பதை ஒப்புக்கொள்ளவேண்டும். தவிர, இன்னும் உலகின் நன்மைக்காக சில ஸாதனேகளே லட்சியம் என்று சொல்வதே யுக்தம் என்ற நிலேமை வந்து விட்டது. இதற்கு பிரத்யக்ஷமான உதாரணம் இதுதான்.

சில மனிதர்களிடம் உலகம் வருகிறது. கையை ஏந்தி ஏதோ கேட்கிறது. பிறகு சென்று விடுகிறது! உலகத்தின் ஸ்தூல விவகார பாஷையில் அது லக்ஷியமாகி விடுகிறது! மற்றும் சில மனிதர்களிடம் உலகம் வருகிறது! ஆனல் அவர்களிடம் ஒன்றும் பெறுவதற்காக அல்ல. ஆனல் அவர்களால், அது தன் லக்ஷியத்தின் சமீபத்தை அடைகிறது. உன்னுடைய சூக்ஷ்ம தர்சன பாஷையில் இம்மனிதர்கள் தான் ஸாதனே, தெரியுமா?'' என்றது.

நான் ஏதோ சொல்ல விரும்பினேன். ஆனல் என்னேத் தடுத்து ''பார் உன் சந்திரன் மறைந்துவிட்டான்! இனி மேல்கூட தூங்க மாட்டாயா என்ன?'' என்றது.

பின்னும் சில நாட்கள் சென்றன. என்னுடைய காதலில் சுய கௌரவம் என்ற சாம்பல் படியலாயிற்று. கிணறு உலகத்திற்கு ஒரு லக்ஷியம். நான் வெறும் ஸாதனே தான்! பிறகு எப்படி எங்களுக்குள் காதல் ஏற்படமுடியும். சிற்சில சமயம் நான் காதலின் பிரதிப் பிரயோஜனம் என்ன? என்று யோசிப்பேன்.

இருக்கட்டும்! அது தான் உலகத்திற்கு எல்லாம். நான் ஒன்றுமில்லே! இது ஒரு பெரிய காரணமாகுமா? நான் அதைக் காதலித்தால் அது அதற்குப் பிரதிதானம் ஒன்றும் செய்யாதா? கிணறு தன் உலக மகத்வத்தின் கர்வத்தில் மூழ்கி இருக்கிறது. அதனெதிரில் நான் ரொம்ப துச்சமானவளென்றும், என்னே காதலிப்பதைவிட தூர இருப்பது நல்லதென்றும், என்னுடன் பேசுவதேபாரமென்றும் எண்ணிக் கொண்டிருகிறது.

அது என்னிடம் வெறுப்பாக இருக்கிறது. என்னேப் பரிகாசம் செய்கிறது. வார்த்தைக்கு வார்த்தை என்னேமட்டம் தட்ட விரும்புகிறது. நல்லது! நல்ல புருஷஜாதி!

நான் நாளுக்குநாள் அதனிடமிருந்து விலகி இருக்க முயற்சிக்கலானேன். அதனிடம் சமீபிக்க என் மனம் தடங்கிற்று, அது மகத்வசாலி! உலகம் அதனெதிரில் பிச்சைக்காரியாக வருகிறது! ஆனல் நான்! எனக்கு ஒருவித் வன்மையும் இல்லே! ஏதாவது ஒரு லக்ஷியம் வரை செல்லும் ஒரு சாதனம்தான் நான்! எனக்கு அதற்கும் என்ன பொருத்தம்?

ரூ. 60,000 பெருமானமுள்ள ஆபரணங்கள் வழங்கப்பட்டன

உலகின் எட்டாவது அதிசயம். அமெரிக்கன் நியூ கோல்டு எங்கள் சிருஷ்டி. அது இந்தியா பூராவும் பிரபல்யம் அடைந்துவிட்டது. அதற்கு அறிமுகமே தேவையில்லே. பத்திரிகைகளும், பொது மக்களும் அதை எங்கும் புகழ்கிருர்கள். அதன் கெமிகல் நிறம் எப்பொழுதும் தங்க நிறமாகவே இருக்கிறது. இந்தத் தங்கத்தைக்கொண்டு நீங்கள் சிறந்த ஆபரணங்களே செய்து கொள்ளலாம்.

இந்த அமெரிக்கன் நியூ கோல்டை பிரபலப்படுத்தும் நோக்கத்துடன் ஒரு சாம்பிள் செட் விநியோகம் செய்ய நாங்கள் நிச்சயித்துள்ளோம்.

இந்த செட்டில் உண்மையான அமெரிக்கன் நியூகோல்டு 6 தோலாவும். ஒரு ஜதை புது மோஸ்தர் வளேயல்களும் ஒரு ஜதை மூக்குத்திகளும் 2 பம்பாய் மோஸ்தர் மோதிரங்களும், ஒரு ஜதை தோடுகளும் இருக்கும்.

AMERICAN NEW GOLD WORKS, P.O.Box 54, (S.M.M.) Amritsar.
(B. P. S.)

வீதிகளிலும் நம்பிக்கையற்ற கடைகளிலும் வாங்காதீர்கள்.

நஞ்சன்கூட பல்பொடி

பல வியாதிகளேத் தடுக்கவும் . குணப்படுத்தவும்

ஜிஞ்ச் கூலாயில் — ஸ்நான தைலம்

கவனிக்க போலிகளால் பற்களுக்கே அபாயம்

சோல் ஏஜண்ட்ஸ்: யுனேடெட் கன்ஸர்ன், 54, பந்தர் தெரு, மதருஸ்
(உதவி வைத்தியர் Dr. P. S. C. மணி) (தபால் மூலம் சிகிச்சை பெறுக)

கஷ்டம் குறைவு ! சுகம் நிறைவு !!

ஆகாரங்களில் உள்ள வைடமின் முதலிய ஜீவ சத்துக்கள் போகாமல் தேக சௌக்கியம் அடையவேண்டுமானல்

ருக்மணி குக்கர்

ஒன்றை இன்றே வாங்கிக் கொள்ளுங்கள். ஒருவித பிரயாசையுமின்றி ஒரே அடுப்பில் சாதமும், 5 வித பதார்த்தங்களும் செய்து முடித்து விடலாம்.

விபர புத்தகம் இனும். இன்றே எழுதுக.

1, 2, 4, 6, 8, 12, 16 பேர்களுக்குத் தகுந்த குக்கர்களின் விலே ரூ. 11, 15, 20, 27, 33, 40, 46.

ருக்மணி குக்கர் கம்பெனி,
ராயபுரம் (12) சென்னே.

ஏஜண்டுகள் :

விழுப்புரம்:—ஸ்ரீ கிருஷ்ண சுதேசி ஹால், ஜவுளி.
வேலூர்:—எஸ். வி. நாதம் அண்டு கோ., லாங் பஜார்.
திருவண்ணுமலே:—ராவ்சாகிப் எம். எஸ். சேஷாசலம் அய்யர்.
சேலம்:—சுதேசி எம்போரியம், போலீஸ் ஸ்டேஷனுக்கு எதிரில்.
காரைக்குடி:—சாரதா ஸ்டோர்ஸ்.
ஈரோடு:—ஸ்ரீ கிருஷ்ண அண்டு கோ., கடை வீதி.
கோயம்புத்தூர்:—சிவாஜி ஸ்டோர்ஸ், 11, அவனுசிரோட்.

நமது தொடர் கதை

ஸ்ரீகாந்தன்

சரத்சந்திரர் எழுதியது.

(ஸ்ரீ.கு.ப.ராஜகோபாலன் மொழிபெயர்த்தது)

முன் கதைச் சுருக்கம்

இந்திரநாதன் ஸ்ரீ காந்தனேவிட வயதில் பெரியவன். ஸ்ரீ காந்தனுக்கு அவனுடைய சிநேகத்தை சம்பாதிக்க அதிக ஆவல். இந்திரனுக்கும் ஸ்ரீகாந்தனுக்கும் தொடர்பு ஏற்பட்டது. இவ்விருவர்களும் தங்களது இளமைப் பருவத்தை மிகவும் துணிகரமாகவும் நிர்ப்பயமாகவும் சாதித்ததுடன் சமூகத்தை விரோதிக்கும் விதமாகவும் நடந்து கொள்கின்றனர். இதற்கப்புறம் ஸ்ரீகாந்தனுக்கு அவனது பழைய நண்பனு ஜமீன்தாரிடமிருந்து அழைப்புவருகிறது. அங்கு அவன் நடனம் செய்யும் பியாரியைச் சந்திக்கிருன். பியாரிக்கு ஸ்ரீ காந்தனிடம் விசேஷ ப்ரீதி: பிறகு அவன் வேறு இடம் கிளம்புகிருன்: வழியில் ஒரு சந்யாஸியை அவன் அடைந்து சில காலம் தங்கி விட்டு அவரிடமிருந்து பிரிகிருன். ஸ்ரீகாந்தனுக்கு தேக அசௌக்யம் ஏற்படுகிறது. இந்தச் செய்தியை யறிந்து பியாரி அவனது உதவிக்கு வருகிருள். பியாரி ஸ்ரீகாந்தனே தன் வீட்டிற்கு அழைத்துச் செல்ல, அங்கிருந்து சொஸ்தமான பின் அவன் கிளம்புகிருன். ஒரு நாள் விவாக சம்பந்தமாக ஒரு கடிதம் கிடைக்க, அதை எடுத்துக் கொண்டு அவன் கிளம்பி முடிவில் பியாரி வீட்டிற்குப் போய் அங்கு குதூஹலத்தைப் பார்க்கிருன பிறகு அவன் பியாரிடம் தன் விவாகம், ரங்கூன் பிரயாணம் இவற்றைப் பற்றி சம்பாஷித்து விடைபெற்று கப்பலேறிக் கிளம்புகிருன். கப்பலில் அவனுக்குப் பலருடன் பழக்க மேற்படுகிறது ரங்கூன் போய்ச் சேர்ந்ததும் அவனுக்கு ஏற்படும் அனுபவம் விநோதமாக இருக்கிறது. அங்கு அவன் உத்யோகத்திற்காக அலேந்த பின் அதை சம்பாதிக்கிருன். இதனுடன் தான் கப்பலில் சந்தித்த அபயாவின் புருஷனேக் கண்டு பிடித்து, அவன் அபயாவை ஏற்கும்படி வழி தேடுகிருன். பிறகு அபயாவை ஸ்ரீகாந்தன் சந்தித்தபோது அவள் அவனிடம் பல சீரிய கருத்துகளே வெளியிடுகிருள். ராஜலக்ஷ்மியிடமிருந்து ஒரு கடிதம் வர ஸ்ரீகாந்தன் ரங்கூனேவிட்டு புறப்பட்டு அவளிடமே வந்து சேருகிருன். அவர்கள் இருவருக்குமிடையே ரசமான சம்பாஷணே நடக்கிறது. சில தினங்களுக்கப்புறம் இருவரும் யாத்திரை கிளம்புகின்றனர்.

ராஜலக்ஷ்மி கோபம் கொண்டு ''நீ என்னே கேலி செய்கிருய். தெரிகிறது. ஆனல் நான் சொல்வது கேலிக்கிடமான விஷயமல்ல. வீட்டில் மனேவி எல்லோரைக்காட்டிலும் கேவலமாகச் சாப்பிடுகிருள். சில சமயங்களில் வேலேக்காரியைக் காட்டிலும் கேவலமாக இருக்கிருள். ஆனல் அந்தத் துக்கத்திற்காக நீ கவலேப்பட்டு அழவேண்டாம். நாங்கள் அடிமைகளாகவே இருக்கிறோம். இதர நாடுகளில் இருப்பது போல் எங்களே ராணிகளாக்கவேண்டாம். இதைத் தான் நான் உனக்குச் சொல்வேன்'' என்ருள்.

''நீ தர்க்க சாஸ்திரத்தின் தலே மேல் கால்வைத்து மூழ்கவடிக்கிருய். ஆனல் நானும் தர்க்க சாஸ்திரப்படி வாதிக்க முடியவில்லே என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன்.''

''இதில் தர்க்கம் செய்வதற்கு ஒன்றுமே இல்லே.''

''இருந்தாலும் அதற்கு வேண்டிய திறமை என்னிடமில்லே. எனக்கு நல்ல தூக்கம் வருகிறது. ஆனல் உன்பேச்சை ஒருவாருக அர்த்தம் செய்துகொண்டு விட்டேன்.''

ராஜலக்ஷ்மி ஒரு நிமிஷம் சும்மா இருந்துவிட்டு ''நம்தேசத்தில் எந்தக் காரணத்தாலோ ஏழைகளுக்கும் பெரிய மனிதர்களுக்கும் மேன் மக்களுக்கும் கீழ் மக்களுக்கும்—எல்லோருக்கும் பணத்தாசை வெகு ஜாஸ்தியாக இருக்கிறது, ஒருவரும் ஒரு சிறிதில் திருப்தி அடைவதில்லே. இதனுல் எவ்வளவு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது என்பது எனக்குத் தெரிகிறது'' என்ருள்.

''நீ சொல்வது உண்மை தான். ஆனல் நீ அறிந்து என்ன ஆகப்போகிறது?''

''பணத்தாசையால் தான் நமக்கு இந்த கதி வந்தது. ஆனல் முன் காலத்தில் இந்த மாதிரி இல்லே.''

''எனக்குச் சரித்திரம் அவ்வளவாகத் தெரியாது''

''இவ்வளவு அதிகமாக ஒரு காலும் இருந்ததில்லே. அந்தக் காலத்தில் பணத்திற்கு ஆசைப்பட்டு தாயார் பெண்ணே இந்த வழியில் விட்டதில்லே. அப்பொழுது ஜனங்கள் தர்மத்திற்குப் பயந்து கொண்டிருந்தார்கள். இன்று எனக்குப் பணத்திற்கு ஒன்றும் குறைவில்லே; ஆனல் என்னேப்போல் துக்கப்படுபவர்கள் யார் இருக்கிருர்கள்? தெருவில் போகிற பிச்சைக்காரன் கூடக் கவலேயற்று இருக்கிருன் என்று சொல்வேன்''

நான் அவள் கையை என் கையில் வைத்துக்கொண்டு ''நீ உண்மையில் அவ்வளவு கஷ்டப்படுகிருயா?'' என்று கேட்டேன்.

ராஜலக்ஷ்மி கண நேரம் மௌனமாக இருந்து விட்டுப் புடவையால் கண்களேத் துடைத்துக்கொண்டு ''என் கதை கடவுளுக்குத்தான் தெரியும்!'' என்ருள்.

அதன் பிறகு இருவரும் ஸ்தம்பித்துப்போய் உட்கார்ந்திருந்தோம். வண்டியின் வேகம் குறைந்து, கடைசியாக அது ஒரு சிறு ஸ்டேஷனில் வந்து நின்றது. சிறிது நேரத்திற்கெல்லாம் அது புறப்பட்டதும் நான் மறுபடியும் ''என்ன செய்தால் உன் பாக்கி நாள் பூராவும் சுகமாக இருக்கும்?'' என்று கேட்டேன்.

''நான் அதை யோசித்துப் பார்த்தேன். என்னுடைய பணம் பூராவும் எப்படியாவது செலவழிந்து போய் ஒன்றும் பாக்கி இல்லாமல்—நான் நிராதரவானுல்—''

மறுபடியும் இருவரும் மௌனமானேம். அவள் அபிப்பிராயம் எல்லோருக்கும் வெகு எளிதாக விளங்கக் கூடியது. ஆகையால் நானும் அதை அறிந்து கொள்ளத் தாமதமாகவில்லே சில நிமிஷங்கள் மௌனமாக இருந்துவிட்டு ''இந்த யோசனே உனக்கு எப்பொழுது முதற்கொண்டு?'' என்று கேட்டேன்.

''அபயாவினுடைய கதையைக் கேட்டது முதல்''

''ஆனல் அவர்களுடைய வாழ்க்கையும் இப்படியே நின்று போகப் போகிறதில்லேயே இன்னும் எதிர்காலத்தில் என்னென்ன துக்கத்தை அடையப் போகிருர்களோ. உனக்குத் தெரியுமா?''

அவள் தலேயை அசைத்து ''தெரியாதுதான்! ஆனல் எவ்வளவு துக்கம் ஏற்பட்ட போதிலும் என்னேப் போல அவர்கள் கஷ்டப்படமாட்டார்கள் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும்'' என்ருள்.

மறுபடியும் நான் வாயை மூடிக்கொண்டிருந்துவிட்டு ''லக்ஷ்மி, உனக்காக நான் எதை வேண்டுமானுலும் தியாகம் செய்யத் தயார், ஆனல் என்னுடைய கௌரவத்தை நான் எப்படித் தியாகம் செய்வேன்?'' என்றேன்.

''நான் அப்படி உன்னிடம் சொன்னேனு? மேலும் கௌரவம் என்பதுதான் மனிதனுக்கு முக்கியமான வஸ்துவா? அதை எப்பொழுது தியாகம் செய்ய முடியாதோ தியாகம் என்ற வார்த்தையை ஏன் வாயில் வைத்துப் பேசுகிருய்? உன்னே ஒன்றும் தியாகம் செய்யும்படியாக நான் சொல்லவில்லே.''

"நீ சொல்லவில்லை, வாஸ்தவம் தான், ஆனால் என்னால் முடியும். கௌரவம் போன பிறகு மனிதன் வாழ்வது வீணாகும். அது ஒன்றைத் தவிர வேறு எதை வேண்டுமானாலும் உனக்காக நான் தியாகம் செய்ய முடியும்."

ராஜலக்ஷ்மி சட்டென்று கையைப் பிடித்துக் கொண்டு "நீ ஒன்றையும் தியாகம் செய்யக்கூடாது ஆனால் உன்போன்றவர்களுக்குத்தான் மானம் போவது உண்டு. கௌரவம் உண்டு, என் போன்றவர்களுக்கு இல்லை என்று நீ மனதில் நினைத்துக்கொண்டிருக்கிறாயா? நாங்கள் அதை சுலபமாகத் தியாகம் செய்துவிடக் கூடுமோ? உங்களுக்காக எவ்வளவு ஆயிரம் பெண்கள் அதைத் திருணமாக மதித்திருக்கிறார்கள் என்பது உனக்குத் தெரியாமலிருக்கலாம். ஆனால் எனக்குத் தெரியும்" என்றாள்.

நான் பதில் சொல்ல வாயெடுத்தபொழுது அவள் என்னைத் தடை செய்து" இருக்கட்டும் மேலும் பேசிக்காரியமில்லை. உன்னைப்பற்றி நான் இவ்வளவு நாள் என்ன நினைத்துக்கொண்டிருந்தேனோ அதை மறந்துவிடுகிறேன். நீ தூங்கு. இது சம்பந்தமாக நானும் பேச்செடுப்பதில்லை. நீயும பேச்செடுக்காதே!" என்று சொல்லிவிட்டு எழுந்து போய் தன் பெஞ்சியில் உட்கார்ந்து கொண்டாள்.

மறுநாள் குறித்த காலத்தில் காசியை அடைந்து பியாரியினுடைய வீட்டில் தங்கினோம். மாடியில் இரண்டு அறைகளைத் தவிர பாக்கி வீடு பூராவும் பலவயது விதவைகளால் நிறைந்திருந்தது.

"இவர்களெல்லோரும் இங்கே குடியிருக்கிறார்கள்" என்று சொல்லி பியாரி முகத்தைத் திருப்பிக்கொண்டு சிரித்தாள்.

"ஏன் சிரிக்கிறாய்? வருகிற வாடகை எல்லாம் ஆதாயம் தானே?"

"இல்லை! சொல்லப்போனால் நான் கொஞ்சங் கொஞ்சம் கொடுக்க வேண்டியிருக்கிறது."

"அதாவது?"

பியாரி உரக்கச் சிரித்து "அதாவது பரசுகத்தை உத்தேசித்து இவர்களுக்கு நான் உண்டு உடுக்க உதவி செய்ய வேண்டும், இது தெரியாதா உனக்கு?"

"தெரியாமல்? உன் பரலோக இச்சையைத் திருப்தி செய்ய நீ எவ்வளவு பேரை இந்த மாதிரி அன்ன வஸ்திரம் அளித்து ஆதரித்துக்கொண்டிருக்கிறாய் என்று எண்ணிப் பார்த்துக்கொண்டிருக்கிறேன்!"

"அதைத் தவிர ஓரிருவர் என் குடும்பஸ்தர்களும் இருக்கிறார்கள்."

"அதென்ன? அது யார்?"

பியாரி ஒரு வரண்ட சிரிப்புச் சிரித்துவிட்டு "அம்மாவுடன் கூடக் காசிக்கு வந்தபொழுதுதான் நான் செத்துப் போனேன். ஞாபகமிருக்கிறதா? அப்பொழுது அகால மரணம் அடைந்ததற்காக, உதவி செய்தவர்களுக்கு என் உயிருள்ள வரை நான ஏதாவது பதில் செய்ய வேண்டாமா?" என்றாள்.

நான் வாயை மூடிக்கொண்டிருந்தேன்.

"இவர்கள் சரீரம் பூராவும் தயை நிரம்பி இருக்கிறது. ஆகையால் இவர்களை அருகிலேயே வைத்துக் கொண்டு இவர்கள பேரில் வெகு கவனமாக இருக்கிறேன். ஆகையால் இவர்கள் மேலும் உபகாரம் செய்து கொண்டிருப்பதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை."

அவள் முகத்தைப் பார்த்துத் திடீரென்று "உன் ஹிருதயத்திற்குள் என்னதான் இருக்கிறது? உட்புகுந்து அதை அறிய வேண்டுமென்று ஆவலாக இருக்கிறது, ராஜலக்ஷ்மி" என்றேன்.

"செத்த பிறகு பார்க்கலாம்! சரி, உன் அறைக்குப் போய் கொஞ்சம் தூங்கு. ஆகாரம் தயாரானதும் உன்னை எழுப்புகிறேன்" என்று சொல்லி அறையைச் சுட்டிக் காட்டி விட்டுக் அவள் கீழே சென்றாள்,

நான் வெகு நேரம் அங்கேயே நின்றேன், அவளுடைய உள்ளம் அன்று எனக்கு ஏதோ புதிதாகப் பரிசயம் ஆயிற்று என்பதில்லை. ஆனால் என்னுடைய ஹிருதயத்தில் அந்த சாதாரணமான பேச்சு ஒரு புதிய சுழலைத் துவக்கி விட்டது.

இரவு பியாரி என்னிடம் "உன்னை அனாவசியமாகச் சிரமம் கொடுத்து இங்கே கூப்பிட்டுக் கொண்டு வந்து விட்டேன். என்னுடைய குரு தீர்த்த யாத்திரை போய் விட்டார், ஆகையால் உன்னை அவருக்குக் காட்ட முடியவில்லை" என்றாள்.

"அதைப்பற்றி எனக்குக் கொஞ்சங்கூட வருத்தமில்லை, மறுபடி கல்கத்தாவிற்கு திரும்புவது தானே?" என்றேன்.

பியாரி தலையை அசைத்து "ஆமாம்" என்றாள்,

"நான் உன்கூட வரவேண்டிய அவசியமிருக்கிறதா? இல்லை என்றால் கொஞ்சம் மேற்கே சுற்றி விட்டு வரலாம் என்று நினைக்கிறேன்"

"பங்குவின் கலியாணத்திற்குக் கொஞ்ச காலம் இருக்கிறது. போவோமே நானும் பிரயாகையில் ஸ்நானம் செய்யவேண்டும"

நான் கலவரமடைந்து போனேன் என்னுடைய தூரபந்து ஒருவன் அங்கே வேலையாக இருந்தான். அவன் வீட்டில் போய் தங்கலாம் என்று எண்ணியிருந்தேன். அங்கே அவனைத் தவிர வேறு யாரும் தெரிந்தவர்கள் கிடையாது.

நிமிஷமாத்திரத்தில் பியாரி என் மனதில் இருந்ததை ஊகித்து "நான் கூட இருந்தால் நீ யாரையும் பார்க்க முடியாதல்லவா?" என்றாள.

நான் திகைத்துப் போய் உண்மையில் கெட்டபெயர் என்பது எப்பேர்ப்பட்ட வஸ்து என்றால் அது வெறும் பொய்யாக இருந்தாலும் ஜனங்கள் அதைக்கண்டு பயப்படுகிறார்கள்" என்றேன்.

பியாரி பலவந்தமாகச் சிரித்துக் கொண்டு "வாஸ்தவம் தான்! கிட்டத்தட்ட ஒரு வருஷம், உன்னை மடியிவிட்டுக்கொணடே இரவு பகலாகக் கழித்தேன்; நல்ல வேளையாக அந்த நிலைமையில் உன்னை யாரும் பாக்கவில்லை. அங்கே யாரும் பந்துக்கு இல்லை போலிருக்கிறது?" எனறாள.

நான் மிகவும் வெட்கமடைந்து போய் "பழையகதையை எனக்கு நினைப்பூட்டுவதில் உபயோகமில்லை. மனிதத்தன்மையில் நான் உன்னை விட மிகவும் கீழானவன் என்பதை மறுக்க முடியாது" என்றேன்.

பியாரி தீக்ஷணமான குரலில் "பழயதை நினைப்பூட்டுவதா? உனக்கு அதை எப்பொழுதாவது நினைப்பூட்டக்கூடும் என்று நினைத்துதான உன்னை சொஸ்தப்படுத்த நான் அங்கே வந்தேனா? இதோ பார், மனிதனுககு வேதனை கொடுப்பதில்கூட ஒரு அளவு இருக்கிறது. அதைத் தாண்டிப் போகக் கூடாது" என்றாள்.

ஒரு நிமிஷம் அப்படியே ஸ்தம்பித்துப்போய் நின்று விட்டு மறுபடியும் அது பிசகு தான். ஆனால் நானாக இருந்தால் இந்தப் பிசகை தலையில் ஏற்று ஜனங்களைக் கூப்பிட்டுக் காட்டிக் கொண்டு திரிவேன். ஆனால் இந்த மாதிரி வார்த்தையை வாயில் வைத்துச் சொல்லமாட்டேன்" என்றாள்.

"நீ எனக்கு உயிரைக் கொடுத்தாய். ஆனால் நான் மிகவும் சின்ன மனிதன், ராஜலக்ஷ்மி. உன்னுடன் என்னை ஒப்பிடவே முடியாது,

ராஜலக்ஷ்மி கர்வம் நிறைந்த குரலில் "உனக்கு நான் உயிரைக் கொடுத்தேன் என்றால் அது என்னுடைய ஆத்ம திருபதிக்காகத்தான்; உனககாக அல்ல. ஆகையால் அதற்காக நீ எனக்குக்கொஞ்சங்கூட நன்றி காட்டவேண்டியதில்லை. ஆனால் நீ சின்ன மனிதன் என்று நான் கருத முடியவில்லை. அப்படியிருந்தால் நான் உயிரோடிருக்க முடியாது. கழுத்தில் கயிறிட்டுக் கொண்டு என் உயிர் ஜுவாலையை அணைத்துக்கொண்டு விடுவேன்" என்று சொல்லி என் பதிலைக்கூட எதிர் பார்க்காமல் அறையைவிட்டு வெளியே போய் விட்டாள்.

மறுநாள் காலையில் ராஜலக்ஷ்மி டீ கொண்டு வந்து வைத்து விட்டு மௌனமாகத் திரும்பினாள். அவளை நான் கூப்பிட்டு "பேச்சு வார்த்தை நின்று விட்டதா?" என்றேன்.

"இல்லை, ஏதாவது சொல்லேன்" என்றாள்.

"வா, பிரயாகைக்குப் போய் சுற்றிவிட்டு வருவோம்."

"பேஷாகப் போய்விட்டு வாருங்கள்!"

"நீயும் வா!"

"அனுக்ரஹமே போதும்!"

"நீ வரவில்லையா?"

"இல்லை, அவசியமேற்பட்டால் போய்க்கொள்ளுகிறேன். இப்பொழுதில்லை" என்று சொல்லித் தன் காரியத்தைக் கவனிக்கப் போய்விட்டாள்.

நான் ஒரு நீண்ட பெருமூச்சு தான் விட்டேன், வாயிலிருந்து ஒரு வார்த்தையும் வரவில்லை.

மத்தியானம் சாப்பிடும் பொழுது நான் சிரித்துக் கொண்டே "நல்லது, லக்ஷ்மி, என்னுடன் பேசாமலிருக்க முடியுமா உன்னால்? ஏன் இந்த சாத்தியமில்லாத முயற்சியைச் செய்கிறாய்?" என்றேன்.

ராஜலக்ஷ்மி சாந்தமும் கம்பீரமும் நிறைந்த முகத்துடன் "எதிரே இருந்தால் யாராலும் முடியாது தான், என்னாலும் முடியாது. மேலும அது என்னுடைய விருப்பமும் அல்ல" என்றாள்.

"பின் உன் விருப்பம் தான் என்ன?"

"நேற்று முதலே நான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்: இந்தக் குத்தலும் மனஸ்தாபமும் இன்னும் அடங்குவதாக இல்லை. நீயும் ஒரு விதத்தில் ஸ்பஷ்டமாக வெளியிட்டுவிட்டாய். நானும் ஒருவிதமாக அர்த்தம் செய்து கொண்டுவிட்டேன். பிசகு என்னுடையது தான் என்றே நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால்—"

அவள் சட்டென்று நிறுத்தினதைக் கண்டு நான் "ஆனால் என்ன?" என்று கேட்டேன்.

"ஆனால் ஒன்றுமில்லை. ஒரு வெட்கங்கெட்ட அசடு போல் ஏதோ பிதற்றிக்கொண்டு நான் உன் பின்னாலேயே திரிந்து கொண்டிருக்கிறேன்" என்று சொல்லி திடீரென்று அவள் முகத்தைக் கடுமையாக்கிக் கொண்டு "பையன் தான் என்ன நினைத்துக் கொள்ளுவான். வேலைக்காரர்கள்தான் என்ன நினைத்துக் கொள்ளுவார்கள். அடடா! எவ்வளவு கேலிக்கிடமான காரியத்தைச் செய்துவிட்டேன்" என்றாள்.

சிறிது நேரம் தயங்கி இவ்வளவு வயதான பிறகு இதெல்லாமா காத்துக்கொண்டிருந்தது? நீ அலகாபாத்திற்குப் போக விரும்பினாய், போ. பிறகு முடிந்தால் பர்மாவிற்குப் போவதற்கு முன் ஒரு தடவைத் தலைகாட்டி விட்டுப் போ!" என்று சொல்லி விட்டுப் போய் விட்டாள்.

அவ்வளவு தான், என் பசியும் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது. அன்று அவள் முகத்தைப் பார்த்ததும் அதெல்லாம் அவமானத்தாலோ கர்வத்தாலோ ஏற்பட்டதன்று என்று எனக்குத் தெரிந்துவிட்டது. உண்மையாகவே இவள் ஏதோ தீர்மானத்திற்கு வந்திருக்க வேண்டும்.

சாயங்காலம ஹிந்துஸ்தானி வேலைக்காரன் ஒருவன் ஆகாரம் கொண்டுவந்திருந்தான். அதைக் கண்டு நான் ஆச்சரிய மடைந்து ராஜலக்ஷ்மியைக் குறித்துக் கேட்டேன். நான் பெற்ற பதிலைக் கேட்டு இன்னும் ஆச்சரிய மடைந்து போனேன், அவள் வீட்டிலில்லை. ஆடை அலங்காரம் செய்துகொண்டு பீட்டன் வண்டியில் எங்கோபோய் விட்டாள். வண்டி எங்கிருந்து வந்திருந்தது எதற்காக எங்கே போகவேண்டி ஏற்பட்டது—ஒன்றுமே தெரியவில்லை அப்பொழுது தான அவளே சொன்ன வார்த்தைகள் நினைவுக்கு வந்தன. இதே காசியில் தானே ஒரு நாள் அவள இறந்தாள்!

உண்மை ஒன்றும் எனக்குத் தெரியவில்லை. தான் ஆனாலும் எனக்கு ஒரு பெரும் வெறுப்பு ஏற்பட்டது

இருட்டியதும் எல்லா வீடுகளிலும் விளக்குகள் ஏற்றப்பட்டன. ஆனால் ராஜலக்ஷ்மி வரவில்லை.

அங்க வஸ்திரத்தை மேலே போட்டுக்கொண்டு கொஞ்சம வெளியே போய்விட்டு வரலாம என்று புறப்பட்டேன். தெருத் தெருவாக அலைந்துஎதெதையோ கண்டும் கேட்டும விட்டு இரவு பத்து மணிக்கு வீட்டுக்குத் திரும்பினேன். ராஜலக்ஷ்மி அப்பொதும் வீட்டுக்குத் திரும்பவரவில்லை என்பதை அறிந்தேன், எனக்கென்னவோ ஒரு பயம தோன்றலாயிற்று. ரதனைக் கூப்பிட்டுச் சங்கோசத்தை விட்டு இது சம்பந்தமான உண்மை பூராவையும் அறியலாமா வேண்டாமா என்று நினைத்தபோது வண்டிச் சக்கரங்களின் சப்தம் கேட்டது. ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தேன். பெரிய பீட்டன் ஒன்று வாசலில் வந்து நின்றது.

பியாரி அதிலிருந்து இறங்கினாள். நிலவின் ஒளியில் அவள் உடலில் இருந்த ரத்தினங்களெல்லாம் பளிச் பளிச் என்று பிரகாசித்தன. வண்டியில் உட்கார்ந்திருந்த இரு பெரிய மனிதர்கள் அவளிடம ஏதோ மெதுவாகச் சொன்னார்கள். என் காதில் விழவில்லை அவர்கள் வங்காளிகளா அல்லது பீஹாரிகளா என்று கூட என்னால் அறியமுடியவில்லை. சாட்டையடி விழுந்ததும் குதிரைகள் தாவிக்கிளம்பி கண மூடிக் கண் திறப்பதற்குள் பார்வையிலிருந்து மறைந்தன.

(தொடரும்.)

IMMEDIATE VASHIKARAN
On contract basis we undertake to influence or subjugate like spellbound any one or more persons (male or female) instantly and surely cause them entirely at your own grasp quite easily. Particulars against Stamps SANTI ASRAM, Dacca (Bengal)

தராசு

ஸ்ரீமான் ஸி. ஆர். ஸ்ரீநிவாஸன்

★

நிறை குடம் ததும்பாது என்பர். நீருக்குப் பதில் நெய் நிறைந்திருந்தால்கேட்க வேண்டுமா? ஆட்டினாலும் ஆடாது. உறைந்த நெய் நிறைந்த குடத்திற்கு சமானமாகச் சொல்லலாம் ஸர் பி. எஸ். சிவஸ்வாமி அய்யரை. பழய பெரிய பரம்பரையைச் சேர்ந்தவர். ஞானத்தை கேவலம் ஒரு லௌகிக சாதனமாகக் கொண்டவரல்ல. இளமையிலிருந்து படிப்பிலே ருசி; படிக்கப் படிக்க திகட்டவில்லை. இன்றைக்கும் புத்தகமும் கையுமாக பார்க்கலாம் அவரை. வயது 78 ஆகிறது. ஞானம் சுரக்கச் சுரக்க நிதானம் பூத்து காய்த்து கனிந்து விட்டது. நாக்கிலே நயம் என்றைக்கும் உண்டு. நடத்தையிலே நாணயம் பரம்பரை தர்மம். ஆசார்ய ஸ்தானத்திற்கு பக்குவம் பெற்றவர். அவருக்கும் பற்றும் பிரசக்தியும் அந்த வழியில் தான். ஆனால் வாழ்வு வேறாக வகுக்கப்பட்டிருந்தது. யோக்கியதையுடன் யோகமும் சேர்ந்து கொண்டது. பதவி ஏறி பட்டம் பெற்று பழமானேரிக்கு புகழ் தேடினார். சந்தர்ப்பங்கள் பல ஏற்பட்டன. சம்பந்தங்கள் பல முளைத்தன. சம்யோகம் ஒன்றிலும் நிலைக்கவில்லை. அகண்ட காவிரியை அகிழாகக் கொண்ட சீரங்கம் கோவில் போல் நிற்கிறார். சுற்று முற்றும் வெள்ளம் வழிந்தோடலாம். அவரைத் தீண்டவில்லை. நிலையில்லாத சக்தியில் நம்பிக்கையில்லை. நிதானமே பிரதானம். சாந்தமே சித்தாந்தம். நெருங்கிப் பழகிய சிலரே அறிவர். முகத்திலே கடுப்பு காணாது. மனதிலே கலமஷமில்லை. பேச்சிலே தடிப்பில்லை. கார்யத்திலே பரபரப்பில்லை. மனோவாக் காய சுத்தமே மதிப்புக்குக் காரணம்.

* * * * * * *

1864-ம் வருஷம் பிறந்தார்., 1885-ம் வருஷம் வக்கீல் தொழிலில் இறங்கினார். 1907-ம் வருஷம் அட்வோகேட் ஜெனரல் பதவி ஏற்றார், 1912-ம் வருஷம் சென்னை நிர்வாகசபை அங்கத்தினர் ஆனார். 1917-ம் வருஷம் வேலையிலிருந்து விலகிக்கொண்டார். வக்கீல் தொழிலுக்கு திரும்பவில்லை. சம்பாதிப்பதில் சிரத்தையில்லை. குடும்பபாரம் இல்லை, கௌரவ காலக்ஷேபத்திற்கு வேண்டியது சேர்ந்து விட்டது. பணத்தில் பிரமை யில்லை; ஆனால் பிடிப்புண்டு. அளவுக்குமிஞ்சி அள்ளிவிட மாட்டார். அண்டிக் கேட்போருக்கு இல்லை யென்றும் சொல்ல மாட்டார். நிதானம் அதிலும் காணலாம். வக்கீல்வேலை அவர் புரிந்தபோது பெரிய பெரிய மேதாவிகள் தொழிலில் ஈடுபட்டிருந்தனர். பாஷ்யம் அய்யங்கார், மணி அய்யர், கிருஷ்ணசாமி அய்யர், சுந்தரம் அய்யர், சங்கரன் நாயர் முதலானோர் வக்கீல் வேலை செய்து வந்தனர். இவர்களிடையே பெயர் எடுப்பது எளிதல்ல. காலக்கிரமத்தில் நல்ல பெயர் எடுத்தார். கக்ஷியாடும் போது நியாயவாதிக்கும் நீதிபதிக்கும் உள்ள தொடர்பு தெளிவாகத் துலங்கும். வாதத்திலே அதி வாதம் காணாது. யுக்தி வாதம் கிடையாது, நடுக்கண்ட நியாயத்தையே விளக்கிக் கூறுவார், ஆர அமர யோசித்து ஒரோர் வார்த்தையும்அளந்துபேசுவார். அவசரப்படமாட்டார்; ஆத்திரப்படமாட்டார். குறைத்தோ கூட்டியோ பேசமாட்டார். அவரிடத்தில் கக்ஷிக்காரனுக்கும் மதிப்பு உண்டு. நீதிபதிக்கும் மரியாதையுண்டு, நிதானம் சர்வார்த்த சாதகம்.

ஸர் பி. எஸ். சிவஸ்வாமி அய்யர்.

* * * * * * *

கவர்ன்மெண்டிடம் சலுகை பிறந்தது; பதவி தேடி வந்தது. அகம்பாவம் கொள்ளவில்லை. செய்வதை திருந்தச் செய்தார். அவ்வளவுதான். பதவிக்கேற்ற பொருப்பு காட்டினார். இந்தியரின் யோக்கியதையை மெய்ப்பித்தார். பொருப்பைப் பெருக்கிக்கொள்ள முயலவில்லை. இந்தியருக்கு ஸ்தானம் அளித்தது இலாகா நிர்வாகத்தை உத்தேசித்து மாத்திரமல்ல; இந்திய அபிப்பிராயம் பொதுவாக நிர்வாகம் முழுவதிலும் பிரதி பலிக்கவே. அதற்கு பிரயாஜைப் பட்டதாகக் காணவில்லை. 5 வருஷம் பதவி வகித்தார். இருந்தசோடு காண வில்லை. நிர்வாகப் போக்கு மாறவில்லை. முற்போக்கு காணாததே குறை. பிற்போக்கு கண்டது ஏமாற்றமாக முடிந்தது; அதிகாரத்திலே அமுல் இல்லை. சந்தேகம் ஒரு புறம்: சங்கோசம் ஒரு புறம். தட்டிப் பேச தைர்யமில்லை; எட்டிப் பார்க்க தர்சனம் இல்லை. உத்தியோக லக்ஷணங்கள் அமைந்திருந்தன; லக்ஷியங்கள் இல்லை. உததியோகம் அவருக்குப்பெரிதல்ல; காப்பாற்றிக்கொள்ள வேண்டுமென்ற நிர்ப்பந்தமுமில்லை. அப்படிக்கிருந்தும் சேவார்த்திக்கு அபூர்வ சந்தர்ப்பம் வாய்த்தாக அவர் நினைக்க வில்லை. காரணம் மக்களுடன் நெருங்கிய தொடர்பு இல்லாததுதான். படிப்பு பயன்படவில்லை. சுபாவம் இடம் தரவில்லை. எதோ வேலை பார்த்தார்; செய்த வேலையில் பழுதில்லை; கால கெடுவில் விலகிக் கொண்டார். விலகியது வருத்தம் உணர்த்தவில்லை.

* * * * * * *

தொழிலுக்குத் திரும்பவில்லை. தாம் கற்ற கல்வி பிறருககு உதவவேண்டும் என்ற ஆசை பிறந்தது. ஆனால் ஓய்வு கண்டநேரத்தில் துறை ஒதுங்கிவிட்டது. நாட்டிலே புதிய சக்தி புகுந்துவிட்டது. உபதேசம் மாத்திரம் எடுக்கவில்லை. உத்சாகம் வயதேறியவர்களிடையே எதிர்பார்ப்பதற்கில்லை. கவர்ன்மெண்டின் நன்மதிப்புக்கு பாத்திரமானவர்கள் கவர்ன்மெண்டிடம் நம்பிக்கை இழப்பதும் சிரமம். எவ்வளவுக்கெவ்வளவு கவர்ன்மெண்டிடம் நம்பிக்கை பாராட்டினரோ அந்த அளவுக்கு மக்களுடைய நம்பிகை இழந்தனர். பொதுவேலையில் ஈடுபடவும் கவர்ன்மெண்டின் தயவு தேவையாகிவிட்டது. ஒரு முறை இந்தியா சட்டசபையில் நியமனம் பெற்று ஸ்தானம் வகித்தார். சுயராஜ்யக்கக்ஷி சரித்திரம் எழுதிய சமயம் அது. ஞான வைராக்கியத்தினால் அங்கும் நல்ல பெயர் எடுத்தார், ராணுவத்துறையில் கவனத்தைத் திருப்பி ஊழல்களை வெளியாக்கி போற்றற்குரிய சேவை புரிந்தார். மறு முறை நியமனம் ஆகவில்லை. மக்களுடைய ஆதரவை நாடவும் மனம் துணியவில்லை. கல்வித்துறையில் என்றைக்கும் சிரத்தையுண்டு. சர்வகலாசாலை பிரதிநிதியாக சென்னை சட்டசபையில் ஸ்தானம் ஒரு முறை வகித்தார். சென்னையிலும் காசியிலும் சர்வகலாசாலைகளின் உப அத்யக்ஷகராக நிர்வாகப் பொருப்பை ஏற்று நடத்தினார். அவருக்கு ரஸிக்க வில்லை, பிறருக்கும் ருசிக்கவில்லை. அந்த தொடர்பும் விட்டது. கல்வித் துறையில் சிரத்தைக் கடையாளமாக தாமே ஒரு பள்ளிக்கூடத்தைத் திருக்காட்டுப் பள்ளியில் நிறுவி நடத்தி வருகிறார்,

* * * *

ராஜீயத்துறையில் அவர் மனதிற்கிசைந்த கக்ஷி மிதவாத சம்மேளனம் தான். முத்தண்ணாக்களின் சபை. முத்தண்ணாக்களில் மூத்தவர் சிவஸ்வாமி அய்யர். இரு முறை தலைவர் பதவி வகித்திருக்கிறார். சென்னையில் சமீபத்தில் கூடிய சம்மேளனத்திற்கு உபசரணை சபைத்தலைவராக இருந்தார். விஷயத்தை விளக்கி விதாயகம் விதிப்பதில் வித்வான்; ஆனால் கரடியாய்க் கத்தினாலும் கேட்பாரில்லை. மாண்டேகு காலத்தில் கக்ஷிக்கு இருந்த செல்வாக்கு இன்று இல்லை. வெள்ளம் வழிந்தோடுகையில் கரையிலிருப்போரை கவனிப்பாரில்லை. மிதவாதம் என்றால் வாதத்தில் மிதமல்ல; வேகத்தில்தான் மிதம் என்பது தெளிந்து விட்டது. கவர்ன்மெண்டாருக்கும் புளிப்பு விட்டுவிட்டது. சாக்ஷிக்காரனைவிட சண்டைக்காரனுடன சமாதானம் செய்து கொள்வது மேல் என்று எண்ணுகின்றனர். மிதவாதிகள் விடுவதாயில்லை. சமாதானத்திற்கு வழிசொல்லி வருகின்றனர். இந்தியா சம்பந்தமாக எந்தப் பிரச்னை எழுந்தாலும் அவர்கள் அபிப்பிராயம் கூறுவது நிச்சயம். அவர்கள் பணி அவ்வளவு தான். சிவஸ்வாமி அய்யரும் தம்மளவில் இதைத் தயங்காது செய்து வருகிறார். அபர வயதில் அவர் செய்து வரும் சேவை பெரிது, ஏக தேசத்தில் அவரிடம் மக்களுக்குள்ள மதிப்பு என்றைக்கும் குறையவில்லை. குறையவும் குறையாது.

* * * * * * *

அத்ருஷ்டம் எப்படி ?

★

சிறுகதை - ஸ்ரீநிவாஸ நாராயணன்

வெளியூர்ப் பத்திரிகை நிருபர்களைப் பற்றிய ஹாஸ்ய மயமான கதைஇது. செய்திகளை முந்தியனுப்புவதில் போட்டியிடுகின்றனர் இருவர். இதற்கிடையில் எவ்வளவு சங்கடம், எவ்வளவு எதிர்பாராத விபரீதம் நேரிடுகின்றன! பசுபதிக்கு ஒரு நாள் ஏற்பட்ட சந்தோஷத்திற்கு எல்லையே இல்லை. அந்த சந்தோஷத்தில் இடி விழுந்தது எப்படி?

மணி நாலரைக்கு மேலாகி விட்டது. தபால் கட்டு ஐந்து மணிக்குள் கட்டியாகி விடுகிறது. மணி வாசக நிலையத்தின் முப்பதாவது ஆண்டுவிழாக் கொண்டாட்டத்தின் நிகழ்ச்சிகளைச் சாங்கோபாங்கமாக எழுதிக்கொண்ட பசுபதி அவற்றைத் தன் பத்திரிகையின் தலைமைக் காரியாலயத்துக்கனுப்ப வேகம் வேகமாகத் தன் சைக்கிளில் பறந்து கொண்டிருந்தான். அவன் ஸைக்கிளைப் பார்த்தே பசுபதியின் திவ்ய சரித்திரத்தையும், திருக்கல்யாண குணங்களையும் பற்றி ஒரு பிரபந்தம் பாடி விடலாம். பிரளய காலம் வரையில் சுத்தம் செய்தால்கூட அந்தச் சைகிளிலுள்ள செம்மண் புழுதியைப் போக்க முடியாது; பெல் (மணி) என்ற நாமதேயமே அதற்குக் கிடையாது; அவசியமான பொழுது, பெல்லின் வேலையை அவன் வாயே செய்து விடுமாம். மட்கார்டு (மண் தடுக்கி) இல்லாமலே அந்தச் சைகிலை உற்பத்தி செய்திருக்க வேண்டும் என்றே நீங்கள் சத்தியம் கூடச் செய்வீர்கள். இனி மேல் டியூபில் பஞ்சர் ஒட்ட, இடம் இருந்தால் தானே! அதன் சீட் (ஆசனம்) பசுபதி ஒருவனைத்தான் உட்கார அனுமதிக்கும். இப்படிப்பட்ட திவ்ய வாகனத்தில் ஆரோகணித்துக் கருடாழ்வார் மாதிரி பறந்து கொண்டிருந்தான் பசுபதி.

பசுபதியைக் குறித்து முதலிலேயே சில வார்த்தைகள் சொல்லாத குற்றத்துக்கு மன்னித்துக் கொள்ளுங்கள்! அவனுக்கு இப்பொழுது வயது இருபத்தி மூன்று. இல்லறமென்னும் இன்ப (துன்ப?) சாகரக் கடலில் அவன் இன்னும் குதிக்கவில்லை. அவன் தயார் தான். ஆனால் அவனுடன் சேர்ந்து குதிக்க எந்தப் புண்ணியம் மிகுந்த கண்ணியக் கருவிழியாளும் துணிவு கொள்ளவில்லை. எம். ஏ. பரீக்ஷையில் சிறப்புடன் வெற்றி பெற்றவன்: வலக்கண் பார்வை ஒரு மாதிரி இருந்ததால், டாக்டர், அரசாங்க உத்தியோகத்துக்கு அவன் லாயக்கில்லை யென்று ஸர்டிபிகேட் கொடுத்து விட்டார். துரதிர்ஷ்டக்காரனுக்கு எங்குப் போனால்தான் விமோசனம்? அவனவன் நிழல் அவனவன் கூடத்தானே வரும்; அந்தப் பாழாய்ப் போன வாத்தியார் வேலை கூடக் கிடைக்கவில்லை. கடைசியாக, "நாடோடி"ப் பத்திரிகைக்குத் "தடாவூரி"ன் நிருபர் வேலையை மிகுந்த சிபார்சின் பேரில் பெற்றான். "எங்கள் வீட்டுக்காரரும் கச்சேரிக்குப் போகிறார்" என்ற பழமொழி இக்காலத்தில் பசுபதி ஒருவனுக்கன்றி வேறு ஒருவனுக்கும் பொருந்தாது. இந்தத் தொழிலிலாவது வெற்றி உண்டா? 'அ' என்ற விலாசமே இந்த ஜன்மத்தில் இந்த ஆசாமிக்கு இல்லைபோலிருக்கு! "வாயாடி" "வம்பு" "தடபுடல்" முதலிய பத்திரிகைகளின் நிருபர்கள் அந்த ஊரில் இவனுக்குப் போட்டி! பசுபதியைப்போல் அவர்கள் காலேஜுக்கு ஆறு வருஷம் கப்பம் கட்டாதவர்கள். இருந்தாலும் சம்பாத்யத்தில் பசுபதியை பன் மடங்கு மீறியவர்கள்.

பசுபதியின் அவசரம் ரங்குவுக்குத் தெரியுமா? சைகிலில் பறக்கும் பசுபதியை வழியில் கண்ட ரங்கு, கை தட்டி அவனை நிறுத்தி "பசுபதி! உனக்கு இன்றைக்கு ஒரு கொள்ளை. ஐந்து நிமிஷத்துக்கு முன் அங்காளம்மன் தெருத் திருப்பத்தில் ஒரு மோட்டாரும் மாட்டு வண்டியும் மோதிக் கொண்டதால் இரண்டு மரணம். மோட்டார் டிரைவரும் வண்டி யோட்டியும் அங்கேயே மாண்டு விட்டார்கள். வண்டிகளும் சேதமாய் விட்டன. ஒரு மாட்டின் ஒரு காலும் காதும் அபேஸாகி விட்டன. போய்ப் பார்த்து உன் பத்திரிகைக்கு எழுதி அனுப்பு" என்று சொல்லிச் சென்றான்.

"அப்பா! இன்றுதான் கடவுள் நம் விஷயத்தில் கண் திறந்திருக்கிறார் போலிருக்கிறது! இனி மேல் நம் பாடு யோகம் தான், அடுத்த நாள் பத்திரிகையில் தடாவூரைப்பற்றி இரண்டு பூராப் பத்திகள் வெளிவரும். இரண்டு பத்தி என்றால் நமக்கு இருபது ரூபாய் அல்லவா?"

இவ்விதம் நினைத்து பசுபதி கொண்ட சந்தோஷம் அடுத்த நினைப்பு வந்தவுடன் ஓடி ஒளிந்தது. "அந்தச சத்ரு சந்திரனுக்கு இந்த விஷயம் எனக்கு முன்னால் தெரிந்திருந்தால்?..." இந்த எண்ணம் தான் பசுபதியின் மனத்தில் பெரும் புயலை எழுப்பிவிட்டது.

பசுபதிக்குப் "பங்காளி"யான இந்தச் சந்திரன் யாரென்று கேட்கிறீர்கள். சந்திரன் "தடபுடல்" பத்திரிகையின் தடாவூர் நிருபர். எஸ். எஸ். எல். ஸி. அரணை ஏழு முறை முற்றுகையிட்டு, எட்டாவது முறையில் வெற்றி யுற்றவன். ஆனால் வசீகரமான முகம்: வசப்படுத்தும் மாயப் பேச்சு; தேனைச் சேகரிக்கும் வண்டினை யொத்த, விஷயங்களை, சாதுக்காகக் கிரகிக்கும் சாமர்த்தியம்; எறும்பின் முயற்சியும் உழைப்பும்; யாவருடனும் கசப்பில்லாத நேசம். இப்படி ஒரு நிருபர் இருந்தால் அவர் பத்திரிகையின், முன்னேற்றத்தைப் பற்றிப் பேசவேண்டுமா? பொடிக் கடை பொன்னுசாமி முதலியார் கையிலிருந்து தடாவூர் தாசீல்தார் தாடியா பிள்ளை மேஜை வரையில் தடபுடல் பத்திரிகை கம்பீரமாக வீற்றிருக்கும். சந்திரனிடம் தடாவூர் வாசிகளுக்கும் பெருமதிப்பு. அவன் சொல்லுக்குக் கட்டுப் படாதவர்கள் அவ்வூரில் அபூர்வம். தடாவூரில் எந்த இடத்தில் என்ன விசேஷம் நடந்தாலும் முதல் தாம்பூலம் சந்திரனுக்குத் தான். தடாவூரைப் பற்றிய விஷயம் எதுவாயிருந்தாலும் முதலில் தடபுடல் பத்திரிகையில் தான் வெளிவரும். இவற்றையெல்லாம் கேட்கும்போது நமக்கே ஒருமாதிரியாக இருக்கும்போது, பசுபதியைப் பொறாமை பிடுங்கித்தின்பது இயற்கை தானே. ஒரே தொழிலில் அமர்ந்துள்ள இரண்டு பேர்கள் சல்லீசாக இருந்தார்களென்று நம் இதிகாச புராணங்களில்கூட இல்லை.

விபத்து நடந்த இடத்துக்குப் பசுபதி வேகம் வேகமாகத்தன் வாகனத்தில் சென்றான். தனக்கு முன் சந்திரன் அங்கு வந்திராதிருந்தால் வழிப் பிள்ளையாருக்குக் கடைத் தேங்காய் பத்து உடைப்பதாகப் பிரார்த்தனையை வழியிலேயே செய்து கொண்டான்.

அங்காளம்மன் தெருத்திருப்பத்தில் ஒரு பெருங்கூட்டம். கூட்டத்தினுள் புகுந்தான் பசுபதி. பிணங்களை பார்க்குமுன் அவன் கண்கள், சந்திரன் எங்காவது கூட்டத்திலிருக்கின்றானா என்பதைத் துருவிப்பார்த்தன. நல்லவேளை! அந்தப்பாவிப் பயல் அங்குக்காணப்படவில்லை. 'ஒரு வேளை முன்னாலே வந்து விட்டுப்போய்விட்டானோ' சீ!சீ!! அப்படியிருக்க முடியாது. ஐந்து நிமிஷத்துக்கு முன்புதானே ஆபத்து ஏற்பட்டதாக ரங்கு சொன்னான். கூட்டம் இன்னும் கலையவில்லையே. இதற்குள்ளாகவா வந்து போயிருப்பான், ஒருகாலும் இருக்காது. இத்யாதி யோசனைகள் பசுபதி மனத்தில் எழுந்து மறைந்தன.

"ஒரே ரத்தவெள்ளம். அதில் இரு பிணங்கள், ஒரு காலும் காதும் போன மாடு ஒன்று, பாதி சேதமடைந்த ஏ. பி. 006 மோட்டார். சுக்கல் சுக்கலாய்ப் போய்விட்ட மாட்டு வண்டி, விபத்தில் பங்கெடுத்துக் கொண்டவர்கள் இவர்களே, டிரைவர், மாட்டு வண்டியோட்டி இவர்கள் வயது ஊர் முதலிய பூர்வோத்திரம் இவைகளைப்பற்றி அங்கிருந்தவர்கள் என்னென்ன சொன்னார்களோ அவைகளை சேர்த்து மெய்காலும் பொய் முக்காலுமாக புனைந்து பசுபதி ஒரு செய்திச் சித்திரம் வரைந்தான். இதைத் தபாலில் சேர்க்க வேண்டுமே! அன்றைய் தபாலில் போனால்தானே நான் சந்திரனை ஏமாற்ற முடியும்? தபால்கட்டுக் கட்ட இன்னும் ஐந்து நிமிஷம் தான் பாக்கி. தபால் ஆபீசோ முக்கால் மைல் தூரத்தில் இருக்கிறது. அவசரமாகச் சைகில் மேல் தாவி உட்கார்ந்து கொண்டு தன் ஆசையும் ஆத்திரமும் பலமும் இடம் கொடுத்த வரையில் 'பெடலை' அழுத்தினான். பசுபதியின் அவசரத்தை அறிந்து சைகிலும் வேகமாய்த் தான் ஓடிற்று, ஆனால் வழியில் ஒரு பெரிய மேடு வந்து சேர வேண்டுமா? பல்லைக் கடித்துக் கொண்டு பசுபதி சைகிலைச் செலுத்துகிறான்; சைகிலும் திணறிக்கொண்டே மேடேறுகிறது. மேட்டின் உச்சிக்கு வர ஒன்பதடியிருக்கும் பொழுது சைகிலின் செயின் (சங்கிலி) பட்டென்று அறுந்தது. பசுபதி சைகிலை விட்டுக் கீழே குதித்தான். சைகில் சதி செய்து விட்டதால், முகம் வெளுத்து அசடு தட்ட ஆரம்பித்தது. "தன் விஷயம் அன்றைய தபாலில் போய்ச் சேருமா? பார்க்கலாம் முயன்று" சைகிலைத் தள்ளிக்கொண்டே போய், தபாலாபீஸ் கேட்டுக்குள் நுழையும் பொழுது, தபால் கட்டைத் தலை மீது சுமந்துகொண்டு தபால் காரன் ரயிலுக்குக் கிளம்பினான். பசுபதியின் மனம் என்ன பாடுபடும்? முழக்கயிறோ அல்லது கத்தியோ அந்தச் சமயம் அவனிடமிருந்தால் என்ன செய்துகொண்டிருப்பானோ? கைக்கெட்டியது வாய்க் கெட்டவில்லையே! என்ன துரதிர்ஷ்டம்? ஒரு நிமிஷம் பிரமித்து நின்றான். உடனே ஒரு யோசனை உதித்தது. எம். ஏ., படித்ததற்கு இதுகூடத் தோன்றாதா? அன்று நடந்த விஷயத்தைச் சுருக்கித் தன் பத்திரிகைக்குப் பத்திரிகாலயத்தார் செலவிலேயே தந்தி அனுப்பிவிடத் தீர்மானித்தான். ஆம்! அதுதான் சரியான யோசனை; விஷயத்தை எழுதி, தந்திக் குமாஸ்தாவிடம் கொடுத்தான். நான்கு ரூபாய் பதினைந்தணா சார்ஜ் என்று குமாஸ்தா கூறினார். ரூபாயில் கை வைத்தபொழுது கை கூசியது; விரல்கள் நடுங்கின. தந்தி கொடுக்கலாமா வேண்டாமா என்ற ப்ரச்னை பலமாக அவன் மனதைத் தாக்கியது. இந்தப் பணம் பத்ரிகாலயத்திலிருந்து கிடைக்காவிட்டால்? இந்தப் போராட்டத்தில் நெஞ்சைப் பறிகொடுத்துப் பசுபதி நிற்கும் பொழுது "என்ன ஐயா? தந்தியைக் கொடுத்துவிட்டுக் காசைக் கொடுக்காமல் சும்மா நிற்கிறீர்?" என்று கோபித்துக்

(18-ம் பக்கம் பார்க்க)

பச்சையப்பன் கலாசாலை

★

நூறு வருஷ சேவை

★

'நே. எஸ். ஆர்.'

★

பச்சையப்பன் கலாசாலை! ஸ்தாபிதமாகி ஒரு நூற்றாண்டு பூர்த்தியாகி விட்டது. இதில் படித்துப் பிரக்யாதியடைந்த பெருமக்கள் எவ்வளவு பேர்! மாணவருக்கு மனமுவந்து வித்யாதானம் செய்த உத்தமர் எவ்வளவு பேர்! நம் தமிழ் நாடு உண்மையாகவே பெருமை படக் கூடிய ஸ்தாபனம் பச்சையப்பன் கலாசாலை என்பதில் சந்தேகமில்லை. சென்ற வருஷம் பிரஸிடென்சி காலேஜின் நூறும் ஆண்டு விழா கொண்டாடப் பட்டது: அதற்குச் சில வருஷங்களுக்கு முன்பு கிறிஸ்தவர் கலாசாலையிலும் இதே மாதிரி கொண்டாட்டம். இந்த இரு கொண்டாட்டங்களுக்கும், பச்சையப்பன் கலாசாலை கொண்டாட்டத்திற்கும், ஒரு வித்தியாசம் உண்டு. அது என்ன? பச்சையப்பன் கலாசாலை மற்ற இரு வித்யாசாலைகள் போல் அல்ல. ஒன்று ஸர்க்கார் நிறுவியது: மற்றொன்று பிற நாட்டுப் பாதிரிமார் பிறப்பித்தது. ஆனால் பச்சையப்பன் கலாசாலை, நம் நகரப் பிரமுகர்களால் ஆரம்பித்து நமக்காக நடத்தப்பட்டது: உத்தமர் ஒருவர் விட்டுச் சென்ற நிதியின் உதவியினால் ஆரம்பிக்கப்பட்டது: இதில், ஹிந்து மதம், ஹிந்து தர்மம், இவற்றின் பிரசாரத்திற்குத் தான் முதலிலிருந்தே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. உன்னதமான கைங்கர்யம்: உத்தமமான சேவை: உயர்ந்த பலன். இந்த நூறு வருஷ காலமும் மிகுந்த உத்சாகத்தையே அளிக்கிறது.

பச்சையப்ப முதலியார்

இந்தக் கலாசாலை மூலம் தற்போதும் பிரசித்தி பெற்றிருக்கும் பச்சையப்பர் பிறந்தது 1754-ம் வருஷத்தில்: பிறப்பதற்கு சிறிது காலத்திற்கு முன்பே பிதா பரலோகப்ராப்தியடைந்தார்: பிறந்த சமயம் நாட்டில் கலவரம்: இங்கிலீஷ்காரரும் பிரெஞ்சுக்காரரும் பலமாகப் போட்டியிட்டனர். தாய் தன் மக்களை சம்ரக்ஷிக்க, பட்ட கஷ்டம் பலவிதம்: சிறுவனான பச்சையப்பன் படிக்க ஆரம்பித்த சமயத்தில், அதுவரை குடும்பத்தைப் பரிவுடன் ஆதரித்து வந்த ரெட்டிராயரும் காலமானார். உடனே தாயார் சென்னைக்கு வந்து சேர்ந்தாள்: தன் கஷ்டம் எப்படியாவது தீரும் என நம்பினாள்; எதிர்பார்த்தபடியே நடந்தது. அச்சமயம் நெய்தவாயல் நாராயண பிள்ளை என்பவர் பிரசித்தி பெற்ற துபாஷ்; ஐரோப்பியர் பலரது சகவாசத்தால் உயர் நிலையில் இருந்தார்: அவர் இந்த குடும்பத்தாரிடம் கருணை காட்டினார்: சம்ரக்ஷித்தார்: பச்சையப்பரின் இரு சகோதரிகளுக்கும் தகுந்தவிடத்தில் மணம் புரிவித்தார்: பச்சையப்பனும் வெகுவிரைவில் தமக்கு அவசியமான அளவுக்கு வித்தியாப்ஸம் பெற்றார்: இங்கிலீஷ் படிக்கவும் எழுதவும் கற்றுக் கொண்டார்: அவரது புத்தி கூர்மை ஒரு வியாபாரியின் கவனத்தை கவர்ந்தது: இருவரும் தென் ஜில்லாக்களில் சுற்றி வந்தனர். பச்சையப்பரும் இதனால் பெரும் பொருள் சம்பாதித்தார்: இளம் வயதிலிருந்தே அவருக்கு பகவத் பக்தி அதிகம். தமது 20-ம் வயது பூர்த்தியாவதற்குள்ளேயே தேவாலயத் திருப்பணிகளில் நாட்டம் காட்டினார். இதற்கப்புறம் பூவிருந்தமல்லி, திருப்பாச்சூர் முதலிய கிராமங்களில், நிலவரி வசூலிப்பது பச்சையப்பரிடம் விடப்பட்டது. இதனால் அவருக்கு அதிக லாபம் கிடைத்தது: நடத்தையும் நடவடிக்கையும் மிகவும் நேர்மையாகவே இருந்தன: செல்வாக்கும் நாளடைவில் அதிகரித்தது: மேலதிகாரிகளும் முதலியாரிடம் நெருங்கிப் பழகினர்; தஞ்சை ராஜாவும் இந்த தர்மாத்மாவின் சகாயத்தைக் கோரினார்: முதல் மனைவிக்குப் புத்ரசந்தானம் இல்லை: ஆகவே தஞ்சையில் இருந்த காலத்தில் மறுமுறை மணந்தார்: இரண்டாம் மனைவிக்கு ஒரு புத்ரி பிறந்தாள்.

பகவத் பக்தி

தமது குடும்ப விருத்தியில் காட்டின கவனத்தைவிட பொது ஜன க்ஷேமத்தில் பச்சையப்பர் காட்டிய அக்கரை அபாரமானது: எப்போதும் தெய்வ சிந்தனை: க்ஷேத்ராடனத்திலேயே சதா ஆவல்: பிராம்மணப் பிள்ளைகளுக்கு மத போதனைபுரிய, பல இடங்களில் பச்சையப்பர் ஏற்பாடு பண்ணினார். இவ்வாறிருக்கையில் 1788ல் பச்சையப்பர் மீது குற்றம் சாட்டப்பட்டது; அக்கிரமம் புரிந்து பணம் வசூலிப்பதாகப் புகார் பண்ணினர்; அவரை விசாரித்து தண்டிக்க வேண்டுமென்றனர் சிலர். கடைசியில் பச்சையப்பர் மீது ஒருவித தோஷமும் கூற முடியாது என்ற முடிவுக்கு வந்தனர். கௌரவம் தலை தூக்கி நின்றது: ஆனால் வினயத்திற்கும் குறைவில்லை. பெருமை உயர்ந்த சமயத்திலும் பரமேஸ்வரனையே துதித்தார். 1794-ம் வருஷாரம்பத்தில் தமதுதேகசுகம் தளர்ச்சியடைந்தது பற்றி, பச்சையப்பர் கும்பகோணம் சென்றார்; அங்கு ஒரு சத்திரம் கட்டுவித்தார். இதற்கப்புறம் தமது

காஞ்சிபுரம் பச்சையப்ப முதலியார். (கீழ்) சேத்துப்பட்டில் புதிதாகக் கட்டப்பட்ட பச்சையப்பன் கலாசாலைக் கட்டிடத்தின் தோற்றம்.



ஸ்தாபனத்தை ஆரம்பித்த பெரு மக்கள்



பச்சையப்பன் கலாசாலையை ஆரம்பிப்பதற்குக் காரணமாயிருந்த பெரியார்கள். (நிற்பவர்) அட்வகேட் ஜனரலாயும் தர்ம ஸ்தாபன போஷகராயுமிருந்த மிஸ்டர் ஜார்ஜ் நார்ட்டன். (இடது) நிர்வாக சபை முதல் தலைவராயிருந்த ஸ்ரீ வி. ராகவாச்சாரியார். (வலது முன்னிருப்பது) ஸ்ரீ இ. வீராசாமி அய்யா, (பின்னிருப்பது) ஸ்ரீ கோ. ஸ்ரீநிவாஸ் பிள்ளை.

ஆயுள் அந்திம தசையை அடைந்து விட்டது என்பதை அவர் அறிந்து கொண்டார்: ஆகவே இவ்வருஷம் மார்ச் மாதம் 22-ம் தேதி தமது உயிலை எழுதி வைத்தார். சிவன் விஷ்ணு கோவில்களில் திருப்பணி நடத்த வேண்டும்: பல க்ஷேத்திரங்களிலும் கோவில்களிலும் யாத்ரீகர்களுக்கு வசதி செய்ய வேண்டும்: மத ஸ்தாபனங்களை நிறுவ வேண்டும்; ஏழைகளை ரக்ஷிக்க வேண்டும்: சம்ஸ்கிருதக் கல்வியை அபிவிருத்தி செய்ய வேண்டும்: மற்றும் காலத்திற்கேற்றபடி தானதர்மாதிகளை நடத்த வேண்டும்—இவை தான் பச்சையப்பர் தெரிவித்த கடைசிக்கோரிக்கைகள்: உயில எழுதியதும் திருவையாறு சென்றார். மார்ச்சு மாதம் 31-ம் தேதி அவர் பரமபத மடைந்தார்.

தர்ம நிர்வாகத் திட்டம்

பச்சையப்பர் இறந்ததும் தகராறுகள் பலதலைகாட்டின: மனைவிமார் இருவருடைய நிலைமையும் சிக்கலாகியது. அவருடைய ஏராளமான சொத்தை அபகரிக்க முயற்சித்தவர் அநேகர். கடைசியரை துபாஷ் நாராயணப்பிள்ளை சிறிதாவது சளைக்கவில்லை. பணம் வீணாக விரயமாகக் கூடாது என்பதே அவரது கருத்து. தானதர்மம் நீடித்து நடக்கவேண்டுமென்பதே அவரது ஆவல். மிகுந்த 2½ லக்ஷம் வராகன் தர்மத்திற்கு விநியோகமாக வேண்டும் என்று ஒப்புக் கொள்ளப்பட்டது: பின்பு ஒருவர் பின் ஒருவராக பச்சையப்பரின் சொத்தில் சிரத்தை காட்டியவர்கள் மறைந்தனர்: 1826-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 3-ந் தேதி சுப்ரீம் கோர்ட்டார் பச்சையப்பர் தர்ம பரிபாலனம் எப்படி நடந்து வருகிறதென்று கேட்டுஒரு உத்திரவு பிறப்பித்தனர். 1828-ல் அட்வகேட் ஜனரலான ஜார்ஜ் நார்ட்டன் இதே விஷயத்தில் மேலும் சிரத்தைகொண்டார், 1832-ம் வருஷத்தில் கையிலிருப்பது 4,47,267 ரூபாய் என்றும், மிகுதி கோர்ட்டு செலவில் கழிந்துவிட்டதாகவும் கூறப்பட்டது, இதே வருஷம் அக்டோபர் மாதம் 13-ம் தேதி சுப்ரீம் கோர்ட்டார் 6 பிரபல ஹிந்துக்களை பச்சையப்பர் தர்மத்தின் டிரஸ்டிகளாக நியமித்தனர்.

வித்யாப்யாஸ ஏற்பாடு

1839-ம் வருஷம் மார்ச்சு மாதம் லார்ட் எல்பின்ஸ்டன், சென்னை கவர்னராக வந்தார். உயர்தரக் கல்வியில் அவருக்கு அதிக விஸ்வாசம். மேல் வகுப்பாருக்கும் மத்திய வகுப்பாருக்கும் உயர்தரக் கல்வி அதிகம் கிடைத்தால்தான் பொது மக்களுக்கும், அது பயன்படும் என்று அவர் கருதினர்: இந்த நோக்கத்துடன் லார்ட் எல்பின்ஸ்டன் ஒரு சர்வ கலாசாலையை ஸ்தாபிக்க முன் வந்தார். இதில் இரு அங்கங்கள் உண்டு. ஒன்று ஹைஸ்கூல்: இதில் ஆங்கிலத்திலும் தாய் பாஷைகளிலும் பயிற்சியளிக்கப்படும். மற்றொன்று கலாசாலை: இங்கு சாஸ்திரமும் சரித்திரமும் போதிக்கப்படும். மறு வருஷம் இதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டது. இந்ததிட்டத்தை நிறைவேற்ற பச்சையப்பர் தர்ம நிதி பரிபாலனத்திற்காக மிகுந்த சிரமப்பட்ட ஜார்ஜ் நார்ட்டனை தலைவராகக் கொண்ட கமிட்டியும் அமைக்கப்பட்டது. 1841-ல் மதராஸ் ஹைஸ்கூலும் ஸ்தாபிக்கப்பட்டது.

கலாசாலை ஆரம்பம்

பச்சையப்பன் கலாசாலை ஆரம்பத்தைப் பற்றிக் டிரஸ்டிகளின் கடமைகளை ஜார்ஜ நார்ட்டன் விவரித்தார். இந்த ஏற்பாடு எங்கும் கொண்டாடப்பட்டது. தர்ம நிதி கரைந்து போகாமல் பாதுகாக்கப்பட்டது. 1841-ம் ஆண்டில் தர்மநிதி கணக்குகளைப் பார்த்த போது 3,14,239 ரூபாய் அதிகம் சேர்ந்திருந்தது. இதற்கப்புறம் காசி, சிதம்பரம், திருவெல்லிக்கேணி, போன்ற சில ஸ்தலங்களில் தர்மம் நடத்த திட்டமிடப்பட்டது: இதற்காக ரூ. 3,71,748 ஒதுக்கி விடப்பட்டது. மிகுந்திருந்த 3,89,761 ரூபாய் மூலம் கிடைக்கும் வட்டியிலிருந்து பிரதி வருஷமும் நகரில் வித்யாப்யாசம் அளிக்கவும், நகரில் பள்ளிக்கூடக் கட்டடம் கட்டவும், 4200 ரூபாய் கொடுக்க முடிவு செய்யப் பட்டது. இதுதான் பச்சையப்பர் கலாசாலையின் ஆரம்பத்திற்குப் பூர்வோத்தரம்.

குறிப்பிடுவோம். பச்சையப்பர் டிரஸ்டிகளின் முதல் கூட்டம். 1841-ம் வருஷம் அக்டோபர் மாதம் 9-ம் தேதி நடந்தது: இவர்களது முதல் தலைவராகவிருந்த வன்பாக்கம் ராகவாச்சாரியார் அச்சமயம் அக்ராசனம் வகித்தார்; குஜிலி பஜாருக் கருகில் ஹிந்து இலக்கிய சங்கத்தாரின் வீட்டை வாடகைக்கு எடுத்துக் கொள்ளவும், ஒரு குமாஸ்தாவையும், காரியதரிசியையும் நியமிக்கவும் தீர்மானிக்கப்பட்டது. நவம்பர் மாதம் 2-ம் தேதி டிரஸ்டிகளின் இரண்டாவது கூட்டம் நடைபெற்றது: டிரஸ்டிகளான கோ. ஸ்ரீநிவாஸப் பிள்ளை, சொக்கப்பச் செட்டியார், எல். வெங்கடபதி நாயுடு ஆகிய மூவரும், பிளாக் டவுனில் அரண்மனைக்காரத் தெருவிலோ, அல்லது பாப்பாம் ப்ராட்வேயிலோ, சுமார் 300 பிள்ளைகள் அடங்கிய ஒரு பள்ளிக்கூடத்திற்குப் போதுமான வீட்டை வாங்கவோ அல்லது வாடகைக்கு எடுத்துக் கொள்ளவோ அனுமதிக்கப் பட்டனர். டிசம்பர் மாதம 7-ம் தேதி மூன்றும் விசை டிரஸ்டிகள் கூடியபோது, அடுத்த ஜனவரி மாதம் முதல் தேதியன்று ஒரு பெரிய பள்ளிக்கூடத்தை ஆரம்பிப்பதென்று முடிவு செய்யப்பட்டது. பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர்களும், ஆனால் பள்ளிக்கூட சம்பளத்தைக் கட்ட சக்தியற்றவர்களுமான சில மாணவர்களை சென்னை சர்வ கலாசாலைப் படிப்புக்கு பொறுக்கி யெடுத்தனுப்பவும் டிரஸ்டிகள் தீர்மானித்தனர். இந்த மாணவர்கள் "பச்சையப்பன் பிள்ளைகள்' வித்யார்த்திகள், மாணவர்கள்" என்று வழங்கவும், இவர்களது சம்பளத்தை தர்மத்திலிருந்து எடுத்துக் கொடுக்கவும் நிச்சயிக்கப்பட்டது.

இதர ஏற்பாடுகள்

மாதம் 70 ரூபா சம்பளத்துடன் ஒரு ஐரோப்பியர் புதிய பள்ளிக்கூட ஹெட்மாஸ்டராக நியமிக்கப் பட்டார். பள்ளிக்கூட சிப்பந்திகளை ஒவ்வொரு டிரஸ்டியும் முறையே ஒரு மாதத்திற்குப் பார்வையிடவும் ஒப்புக் கொள்ளப்பட்டது. மதராஸ் ஹைஸ்கூலுக்கும், மதராஸ் ப்ரிபரேடரி (ஆரம்ப) ஸ்கூலுக்கும், பச்சையப்பன் மாணவர்களாக 20 பேர்களையும் 40 பேர்



போலீஸ் ராகவாச்சாரியார்: தர்ம நிர்வாக சபையின் முதல் தலைவராயிருந்து பாடசாலை ஸ்தாபிப்பதற்கு காரணபூதராயிருந்தவர்.

களையும் முறையே அனுப்புவதென்றும்முடிவாகியது. பள்ளிக்கூடம ஆரம்பித்து சில மாதங்களுக்குள்ளாகவே அது மிகுந்த பிராபல்யம் அடைந்துவிட்டது. ஹெட்மாஸ்டர் மிஸ்டர் மக்நாமி, பள்ளிக்கூட அபிவிருத்தியைப்பற்றி வற்புறுத்தலானர். நான்கு ஆங்கில ஆசிரியர்களும், இரண்டு தமிழ் பண்டிதர்களும், இரண்டு தெலுங்கு பண்டிதர்களும் நியமிக்கப்பட்டனர். இந்தப் பள்ளிக்கூடம் ஆரம்பிக்கப்பட்ட சொற்ப காலத்திற்குள்ளேயே மதராஸ் ஹைஸ்கூலில் படிக்கும் பச்சையப்பர் மாணவர்கள் சம்பளத்திற்காக பிரதி வருஷமும் 2500 ரூபாய் யுனிவர்சிடி போர்டாரிடம் ஒப்புவிப்பது என்றும் வெகு சீக்கிரத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டது. இலவசப்படிப்பு பெறும் இந்த மாணவர் ஜாபிதாவில் காலிஸ்தானம் ஏற்பட்டால் அதற்கு பச்சையப்பன் பள்ளிக்கூட மாணவர்களிடை போட்டி நடத்தவும் திட்டம் போடப்பட்டது.

போலீஸ் ராகவாச்சாரியார்

தாம் முன் நின்று தொடர்ந்த முயற்சி பலன் அளிப்பதைப் பார்க்க வி. ராகவாச்சாரியார் கொடுத்துவைக்கவில்லை. பள்ளிக்கூடம் ஆரம்பமான சில மாதங்களுக்குள்ளாகவே அவர் காலமானர்: அவருக்கப்புறம் அவருடன் டிரஸ்டிகள் போர்டில் ஆரம்பம் முதல் இருந்து வந்த கோ. ஸ்ரீ நிவாஸபிள்ளை போர்டு தலைவரானர். ஜார்ஜ் நார்ட்டன் இந்த ஸ்தாபனத்தின் போஷகராக இருக்க சம்மதித்தார். எஸ்பிளனேட்டில் இருக்கும் பச்சையப்பன் கலாசாலைக் கட்டிடத்தின் அஸ்திவாரக் கல்லை 1846-ம் வருஷம் அக்டோபர் மாதம் 2-ம் தேதி ஜார்ஜ் நார்ட்டன் நாட்டுவித்தார். அப்போது நார்ட்டன் டிரஸ்டிகள் தலைவராகவிருந்த ஸ்ரீநிவாஸபிள்ளையை சிலாகித்து தலைவராக விருந்து காலஞ்சென்ற ராகவாச்சாரியாரைப்பற்றியும் பிரஸ்தாபித்தார்: 'இந்த தரும விசாரணை டிரஸ்டிகளுக்குத் தலைவராயிருந்து இறந்துபோன ராகவாச்சாரியாரைப் பற்றி நான் குறிப்பிடவேண்டும். அவரை நீங்கள் நேசித்திருந்ததைவிட நான் அதிகமாக நேசித்திருந்தேன். அவர் இப்போதிருந்தால் இன்றையதினம் நடக்கிற ஆடம்பரத்தைப் பார்த்து அதிக சந்தோஷப்படுவார். அன்றியும் உங்களுக்குள் சிறந்தவராய், மேன்மையான டேபுடி மாஜிஸ்திரேட் எனும் உத்யோகத்தை யடைந்து அவர் காலமெல்லாம் வித்தியா விஷயங்களை விருத்தி செய்வதிலும், இந்த தரும காரியங்களை ஊர்ஜிதப்படுத்துவதிலும் போக்கினர். 'அவருடைய பேர் உங்களுக்குள் அழியாமல் வழக்கிவரக் கடவது" முதல் இந்திய போலீஸ் கமிஷனராக விருந்து பெரும் புகழ் படைத்த இந்த ராகவாச்சாரியார் இருந்த இடம் தான் இன்றும் "போலீஸ் ராகவாச்சாரியார் ஸ்கொயர்" என வழங்கிவருகிறது (இவருக்கப்புறம் இவரது குடும்பத்தார் இக்கலாசாலையிடம் கொண்ட தொடர்பும் குறிப்பிடத்தக்கதாகும்.)

பச்சையப்பன் ஹால்

1850-ல் கவர்னர் ஸர் ஹென்றி பாட்டிஞ்ஜர் புதிய பச்சையப்பன் கலாசாலைக் கட்டிடத்தைத் திறந்து வைத்தார். இது கிரேக்கர் காலத்திய தீஸியஸ் கோபுரத்தைப்போல் கட்டப்பட்டது: இதன் தோற்றம் மிகவும்கம்பீரமானது. இங்குதான் இக்கலாசாலை 90 வருஷ காலம் குடியிருந்தது: இந்த பச்சையப்பன் கலாசாலை ஹால் நம் நகரில் மிகப் பிரசித்தி பெற்றது. விக்டோரியாபப்ளிக் ஹால் கட்டுவதற்குமுன்பு எல்லா பொதுக்கூட்டங்களும், மற்றும் விழாக்களும் இங்குதான் நடப்பது வழக்கம். 1853-ம் வருஷம் டிரஸ்டிகள் போர்டு தலைவராக விருந்த ஸ்ரீநிவாஸ பிள்ளை காலமானர். அவர் இப்பச்சையப்பன் கலாசாலை அபிவிருத்திக்காக மிகவும் பாடுபட்டார்: தான தர்மத்தில் சிரத்தைகொண்டவர்: கல்வியிலேயே கருத்து: சமூக சீர்திருத்தத்திலும் சீரிய நோக்குள்ளவர்: பெண் கல்வியைப் பிரதானமாகப் பாவித்தவர்: அறியாமையையகற்ற ஆர்வம் கொண்டவர். பச்சையப்பன் சரிதத்தையும் சிரமப்பட்டுத் தமிழில் எழுதி வைத்தவர். ஏழைகள் வித்யாப்யாசத்திற்காக அவர் 70000 ரூபா விட்டுச் சென்றார்; ஹிந்து பெண் பள்ளிக்கூடம் ஒன்று இப்போதும் அவர் பெயரால் நடந்து வருகிறது.

சோமசுந்தரம் செட்டியார் சேவை

இதற்கப்புறம் பச்சையப்பன் தர்ம நிர்வாகத்தில் மிகுந்த அக்கரை கொண்டவர் பெரியபாளையம் சோமசுந்தரம் செட்டியார். 1859-ம் வருஷத்தில் அவர் தர்ம நிர்வாக சபைத் தலைவரானர்: 23 வருஷ காலம் இந்தப் பதவியை அவர் வஹித்தார்: மேலும் மேலும் அபிவிருத்தியை நாடினர். 1863-ல் ஹிந்து வாசகசாலையை டிரஸ்டிகள் எடுத்துக் கொண்டு நடத்தலானர்கள்: படித்த ஹிந்துக்கள் உலக விவகாரங்களை அறிந்து கொள்வதற்கு இது வழி தேடும் என அவர்கள் எண்ணினர். பி. டி. வீ. செங்கல்வராய நாயகர் தமது உயில் மூலம் தொழிற் கல்வி அபிவிருத்திக்காக வைத்துச் சென்ற பணம் பூராவும் பச்சையப்பன் டிரஸ்டிகள் ஆதிக்கத்தின் கீழ் வர அவர் ஏற்பாடு செய்தது மிகவும் முக்கியமானதாகும்: மிகுந்த சாமர்த்தியத்துடன் ஸ்ரீமான் செட்டியார் இந்த] பணத்தைக் கோரி ஒரு உறவினர் கொண்டு வந்த வியாஜ்யத்தையும் முறியடித்தார். இந்த பணத்தைக் கொண்டு வேப்பேரியில் ஒரு தொழிற் பள்ளிக்கூடத்தை அவர் ஆரம்பித்தார்: அது இன்றும் சிறப்பாக நடந்து வருகிறது. சோமசுந்திரம் செட்டியார் அக்காலத்தில் மிகவும் பிரக்யாதி பெற்றவர்: எந்த சபையிலும் அவரே பிரதான ஸ்தானம் வகித்தார். எந்த நல்ல காரியமும் அவர் முன் நின்று தான் நடக்கும் அந்நாளில்.

கலாசாலை அபிவிருத்தி

இது நிற்க 1857-ல் சென்னை சர்வகலாசாலை ஸ்தாபிதமாகியது. இது முதற் கொண்டு இப பள்ளிக்கூட மாணவர்கள் சர்வ கலாசாலையார் நடத்திய மெட்ரிகுலேஷன் பரீக்ஷைக்கும் அனுப்பப்பட்டு வந்தனர், மிஸ்டர் பேஸில் லவரி முதல் பிரின்ஸிபாலாக இருந்து சுமார் 30-வருஷ காலம் இவ்வித்தியாசாலையின் அபிவிருத்திக்குக் காரணபூதரானர். 1879-ல் இப்பள்ளிக்கூடம் இரண்டாம் வகுப்பு கலாசாலையாக உயர்த்தப்பட்டது: இதுவரை இப்பள்ளிக்கூடத்திலிருந்து சிறப்புடன் தேறிய எட்டு மாணவர் பிரஸிடென்சி காலேஜில் சேர்ந்து படிக்க வசதி பெற்று வந்தனர்: கலாசாலையாக உயர்த்தப்பட்டது முதல் இந்த பழக்கம் மறைந்தது: இதனல் சுமார் 30-வருஷ காலமாக பிரஸிடென்சி காலேஜுக்கும் பச்சையப்பன் ஹைஸ்கூலுக்கும் இருந்து வந்த சம்பந்தம் விலகியது. 1879-ம் வருஷம் பிரசிடென்சி காலேஜ் பிரின்ஸிபால் மிஸ்டர் தாம்ஸன் தமது நிர்வாக யாதாஸ்தில் பின் கண்டபடி குறிப்பிட்டார். "பச்சையப்பன் ஹைஸ்கூலுக்கு கலாசாலைப் பகுதியும் ஏற்பட்டு விட்டதால், பணம் பூராவும் அதற்கே உபயோகமாவது மிகவும் சகஜம்தான். ஆனல் ஆனரபிள் வி. சடகோபாச்சார்லு, ஆனரபிள் வி. ராமய்யங்கார், ஆனரபிள் எ, சேஷய்யா சாஸ்திரி, ஆனரபிள் ஸி. ரங்காச்சார்லு, ஸ்ரீ பி. ரங்கநாத முதலியார் போன்ற பல உத்தம மாணுக்கர்களை அளித்து வந்த அப்பள்ளிக்கூடம் இப்போது அந்த தொடர்பை நிறுத்திவிட்டிருப்பது எனக்கு விசனமாகவே இருக்கிறது."

மேலும் முற்போக்கு

1872-ல் லவரிவிலகிக்கொண்டார்: மிஸ்டர் டி. எம், க்ரூஷாங்க் பிரின்ஸிபால் ஆனர்; 12 வருஷ காலம் பதவி வகித்து அவரும் விலகிவிட்டார். இதற்கப்புறம் கேம்ப்ரிட்ஜில் படித்து பெருமையுடன் தேறிய ஜான் ஆடம் பிரின்ஸிபாலாக நியமிக்கப்பட்டார், இவருடைய நாளில் கலாசாலையின் அபிவிருத்தி இன்னும் பன் மடங்கு அதிகரித்தது; முதல்தர கலாசாலையாக உயர்ந்தது முதல் சிறப்பு. 1889-ல் நடந்தது: புதிய பாடப் பகுதி

டிரஸ்ட் போர்ட் தலைவர்கள்.

(வலது புறத்துப் படங்கள்) பச்சையப்பன் தர்ம ஸ்தாபன நிர்வாக சபையில் தலைமை வகித்து சேவை செய்தவர்கள் : 1. பாளையம் சோமசுந்தரம் செட்டியார், 2 திவான் பஹதூர் பாக்கம் ராஜரத்ன முதலியார். 3. ஸர் பி. தியாகராய செட்டியார். 4. திவான் பஹதூர் வி. திருமலை பிள்ளை.

மிகப் பழைய மாணவர்

பச்சையப்பன் கலாசாலையில் படித்த மிகப் பழைய மாணவர் சேலம் டாக்டர் ஸி. விஜயராகவாச்சாரியார்.

கள் ஆரம்பிக்கப்பட்டது அடுத்த சிறப்பு. 1892-ம் வருஷம் நவம்பர் மாதம் கலாசாலையின் பொன்விழா கொண்டாடப்பட்டது. ராஜப் பிரதிநிதி லான்ட்ஸ்டவுன் பிரபு தலைமை பூண்டார். டிரஸ்டிகள் போர்டு தலைவர் ஸ்ரீ டபிள்யூ. எஸ். வெங்கடராமாநுஜலு நாயுடு அச்சமயம் தேசீயக் கல்வியை வளர்ப்பதே தங்கள் உத்தேசம் என்றும், தேசபக்தியைத் தடை செய்யாமலும், மத உணர்ச்சிக்குப் பாதகம் ஏற்படாமலும், மேனாட்டார் கண்டறிந்த விஷயங்களைப் போதிப்பதே தங்கள் கடமையாகக் கொள்ளப்பட்டிருப்பதாகவும் சொன்னார். பச்சையப்பன் போலவே தெய்வ பக்தியும் எளிய வாழ்க்கையும் மேற்கொண்டு, சமூகத்தின் சிறந்த ஜோதிகளாகத் திகழும் ஹிந்துக்களை, அப்பள்ளிக்கூடம் பிரதி வருஷமும் உலகுக்கு அனுப்பும் எனத் தாம் எதிர்பார்ப்பதாக ராஜப்பிரதிநிதி தெரிவித்தார். மிஸ்டர் ஆடம் பதவியை ராஜிநாமாச் செய்து நியாயவாதத் துறையில் இறங்கியதால், அந்த ஸ்தானத்திற்கு மிஸ்டர் ஆர். எஸ். லெப்பர் உயர்த்தப்பட்டார். 1901-ம் வருஷம் வரை அவர் இந்தப் பதவியை அலங்கரித்தார். அவர் திருவனந்தபுரம் போனதும், அவருக் கடுத்தபடி வந்தவர் மிஸ்டர் ஜே. எ. யேட்ஸ்.

புதிய அமைப்புத் திட்டம்

1902-ல் கலாசாலையின் வைர விழா ஸ்ரீ நாயுடுக்கப்புறம் திவான் பகதூர் ராஜரத்தின முதலியார் சில வருஷ காலம் தலைவராகவிருந்து சேவை புரிந்தார். கொண்டாடப்பட்டது. 60 வருஷ கால பூர்த்தி! மேலும் மேலும் புதிய பகுதிகள் ஆரம்பம். அடுத்த பிரின்ஸிபால் மிஸ்டர் ட்ரூ என்பவர். பச்சையப்பன் கலாசாலை சரித்திரத்தில் அடுத்த முக்கிய சம்பவம் 1909-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 12-ம் தேதி, டிரஸ்ட் போர்ட் அமைப்பு சம்பந்தமாக சென்னை ஹைகோர்ட் தயாரித்த புதிய திட்டம் தான். இது விஷயமாக பச்சையப்பன் கலாசாலையில் படித்தவரும், இந்த தர்ம ஸ்தாபன சபையின் முதல் தலைவரான போலீஸ் ராகவாச்சாரியாரின் பௌத்ரரும் ஆன ஸ்ரீமான் வி. வி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் சிரமம் எடுத்துக்கொண்டார். சுமார் 1907-ல் காலஞ் சென்ற ஸர். பி. தியாகராயசெட்டியார் காரணமாகக் கொண்டு, கலாசாலையில் உயர்தரக் கல்வி அளிப்பதை நிறுத்திவிடப்போவதாகப் பயமுறுத்தினர். அப்போது தான் ஸ்ரீ வி. வி. ஸ்ரீநிவாஸய்யங்காரும் அவரது நண்பர் சிலருமாகச் சேர்ந்து, அப்போது அட்வகேட் ஜனரலாக விருந்த ஸர் சங்கரன் நாயரிடமும், அவருக்குப்பின்பு அந்தஸ்தானத்தை யேற்ற ஸர் பி. எஸ். சிவஸ்வாமி அய்யரிடமும், இந்த தர்மஸ்தாபன நிர்வாகத்தைப்பற்றிய திட்டத்தை மாற்றியமைக்க வேண்டும் என்றும், டிரஸ்ட்போர்டு அமைப்பை வேறுவிதம் திருத்த வேண்டும் என்றும். இதில் 'தேர்தல்' முறையைக் அனுஷ்டிப்பதற்கும், மற்றும் வெளியூர்களில் இருந்த வித்யாசாலைகள் பரிஸனத்திற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்றும் கோரி மனு செய்து கொண்டனர். 1909-ம் வருஷம் ஏப்ரல் மாதம் முதல் தேதி ஹைகோர்ட் உத்திரவு காரணமாக புதிய டிரஸ்ட் போர்ட் அமைக்கப்பட்டது: டிரஸ்டிகள் விலகவும், காலி ஸ்தானங்களுக்குத் தேர்தல் முறையை ஓரளவுக்கு அனுஷ்டிக்கவும் இதனால் விதிக்கப்பட்டது. மிஸ்டர் ட்ரூ விலகியதும் 1912-ல் மிஸ்டர் ஜே. ஸி. ரோலோ கலாசாலைத் தலைவரானார்.

. பழைய கட்டிடத்தின் தோற்றம்



இந்தக் கட்டிடத்தில் 1940-ம் வருஷம் வரை, 90-வருஷ காலம் பச்சையப்பர் கலாசாலை நடந்தது. நகரில் மிகப் பிரசித்தி பெற்ற ஹால் இது.

முற்போக்கு மார்க்கம்

1913-ல் இக் கலாசாலைக்கு ஒரு ஹாஸ்டலைக் கட்டும்யோசனை உதயமாகியது கலாசாலையை எஸ்பிளனேட்டிலிருந்து வேறு ஒரு நல்ல பிரதேசத்திற்குக் கொண்டு போகவும் உத்தேசிக்கப்பட்டது. கலாசாலைக்கு அடுத்தாற் போல் ஹாஸ்டலைக் கட்டி மாணவர்கள் படிப்பதற்கு வசதி தேடும் எண்ணம் இப்போதுதான் தோன்றியது. ஸர் ஸி.பி. ராமஸ்வாமி அய்யரும், திவான் பஹதூர் வி. மாசிலாமணி பிள்ளையும் இவ் விஷயத்தில் முன் நின்றதுதான் முற்போக்குக்கு ஊக்கமளித்தது. ஹாஸ்டல் அஸ்திவாரக் கல்லை லார்ட் பெண்ட்லண்ட் நாட்டுவித்தார். ஆனால் 1914-ல் மஹா யுத்தம் ஆரம்பிக்கவே, கலாசாலைக் கட்டிட நிர்மாணம் நடைபெறுமல் போய்விட்டது. 1924-ல் கலாசாலையில் ஆனர்ஸ் வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன. மாணவர் தொகையும் அதிகரித்தது: சுமார் 1000 பேர்களுக்கு அதிகமாக வந்து சேர்ந்தனர். 1928-ல் சர்வகலாசாலைக் கமிட்டியார் கலாசாலையைப் பார்வையிட்டபோது, அது இருக்கும் இடம், முதலியவற்றைப்பற்றியெல்லாம் கண்டித்து எழுதினர். மாணவர் தொகையையும் 800-க்குக் குறைக்க நிர்ப்பந்தம் பிறந்தது, இக்காலத்தில் கலாசாலைத் தலைவராகவிருந்தவர் ஸ்ரீ எம். ரத்னசாமி; இப்போது அவர் சென்னைபப்ளிக் சர்விஸ் கமிஷன் மெம்பர் ஸதானம் வஹிக்கிறார், 1921-ல் அவர் இப்பதவி யேற்றார். திவான் பஹதூர் வி. திருமலைபிள்ளை அச்சமயம் டிரஸ்ட் போர்டு தலைவராக இருந்தார்.

முயற்சியில் முனைந்தது

1933-ம் வருஷத்தில் மறுபடியும் கலாசாலையை வேறு ஒரு இடத்திற்குக் கொண்டு போகும் யோசனை எழும்பியது: பல காரணங்கள் பற்றி பலன் அளிக்கவில்லை. கடைசியாக 1935-ம் வருஷம் பிப்ரவரி மாதம் டிரஸ்ட் போர்டார் சேத்துப்பட்டில் கலாசாலையைக் கட்ட முடிவு பண்ணினர்: பழைய மாணவர் உட்பட அநேகருக்கு, இந்த கைங்கர்யம் நிறைவேறுவதற்குப் போதிய திரவிய சகாயம் அளிக்கும்படி வேண்டுகோள் விடப்பட்டது, இதன் பின் டிரஸ்ட் போர்ட் தலைவர்கள் ஒவ்வொருவரும்-ஸ்ரீமான்கள் கே. வெங்கடசாமி நாயுடு, ஸ்ரீ டி. எஸ். நடராஜ பிள்ளை-மிகுந்த அக்கரை காட்டினர். பிரின்ஸிபாலாக இருந்த ஸ்ரீ பி என். ஸ்ரீநிவாஸாச்சாரியாரும் இதற்காக முழு மனதுடன் உழைத்தார். அவரது உழைப்புதான் தற்போதைய நிலைக்குக் காரணமாகியது! கட்டிடத்திற்குப் பாதி திரவிய சகாயம் கோரி ஸர்க்காருக்கு 1935-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டது. அடுத்த வருஷம் பிப்ரவரிமாதம் சகாயத்தை அளிப்பதாக உறுதி கூற முடியாதென ஸர்க்கார் பதில் அளித்துவிட்டனர். இதனால் டிரஸ்டிகள் மனம் தளரவில்லை. மீண்டும் கல்வி மந்திரியைப்பேட்டியிட்டு முறையிட்டனர். கடைசியில் 1936-ம் வருஷம் டிசம்பர் மாதம் முடிவான திட்டங்கள் ஸர்க்காருக்கு அனுப்பப்பட, மந்திரியாகவிருந்த குமாரராஜா ஸர் முத்தய்யாசெட்டியார் சிரத்தை காரணமாக, திட்டம் அங்கீகாரத்தைப் பெற்றது.

ஸ்ரீ ஸி. ஆர். புரிந்த உதவி

இதற்கப்புறம் காங்கிரஸ் மந்திரி சபை பதவி யேற்றதும், பிரதம மந்திரியான ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாச்சாரியாரை டிரஸ்டிகள் 1937-ம வருஷம் ஜுலை மாதம் 23-ம் தேதி பேட்டியிட்டனர். ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியாரும் இதில் விசேஷ அக்கரை கொண்டார். பல இனங்களில் ஸர்க்கார் வருமானம் குறைந்த போதிலும் இந்தகலாசாலைக் கட்டிடத்திற்கு நிதி உதவ அவர் சம்மதித்தார். மறு வருஷம் மார்ச்சு மாதம் அவருடைய முயற்சி காரணமாக சட்ட சபையும் இதை அனுமதித்தது. 1939-ம்

(25-ம் பக்கம் பார்க்க)

பச்சையப்பன் கலாசாலை ஹாஸ்டல். சேத்துப்பட்டில் பல வருஷங்களுக்கு முன்பு கட்டப்பட்டது.

ஜோதிர்மண்டலம்

★

விஷுஆு மாசி மாதம்

★

விசாகம்

ஜோதிஷத்தில் பிரியமுள்ளவர்கள் பொருட்டு இம்மாதத்திய ராசி சக்கரம் கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது.

	சனி குஜன்	குரு	
சூரியன்	1௳—கும்ப—சூரியன் (12-8) 1௳—ரிஷப—சனி 12௳—ரிஷப—குஜன் 29௳—கும்ப—புதன்		
புதன் சுக்கிரன்			ராகு

இப் பக்கத்திலுள்ள படம், சென்னையில் இம்மாதம் முன்னிரவில் நமக்குப்புலப்படும் நக்ஷத்திரக்கூட்டங்களைக் காட்டுகின்றது. படத்திலுள்ளபடியே, முதல் தேதியன்று இரவு சுமார் 10-30 மணிக்கும், 15-ம் தேதி யன்று 9-34 மணிக்கும், 30-ம் தேதியன்று 8-35 மணிக்கும் நக்ஷத்திர மண்டலங்கள் காணப்படும். சென்னைக்கு வடக்கே. தெற்கேயுள்ள இடங்களுக்கும் இப்படத்தை உபயோகிக்கலாம்.

படத்தை உபயோகிக்க:—எந்ததிசையை நோக்கி நிற்கிறோமோ, அந்ததிக்கு அடிப்பாகமாக வரும்படி படத்தை திருப்பி வைத்துக் கொள்ளவேண்டியது. அப்பொழுது நம் எதிரில் உள்ள நக்ஷத்திரங்கள் படத்தில் அடிப்பாகம் முதல் நடுவரையில் காணப்படும்.

மிதுனக் கூட்டம்

ராசிக் கூட்டங்களில் மேஷம் மறைந்து கொண்டிருக்கிறது. ரிஷபமும், மிதுனமும், மேல் வானை அழகு படுத்துகின்றன. கடகம் உச்சியை அடைகிறது. சிம்மம் கிழக்கே உயரத்தில் கம்பீரமாக வீற்றிருக்கிறது. கன்னிக் கூட்டம், இப்பொழுது கிழக்கில் உதயமாகியிருக்கிறது.

மிதுனக் கூட்டம், ராசிக் கூட்டங்களில் மூன்றாவது. பண்டைக் கால முதல் ஜனங்களால் கவனிக்கப்பட்டு வந்தது. 2000 வருஷங்களுக்கு முன் இத்தாலியில் வழங்கிய நாணயங்களில் ஒரு புறம் இரு சிறுவர்களின் தலையும், மறுபுறம் இருவர் குதிரையில் சவாரி செய்வது போலும் அச்சடிக்கப்பட்டு இருந்தன. கிரேக்கக் கோயில்களில், இக் கூட்டத்தை குதிரை மேல் சவாரி செய்யும் இரு வீரர்களின் உருவால் சித்தரித்திருக்கிறார்கள். கிரேக்க சரித்திரப்படி, இவ்விருவரும், ஜுபிடரின் இரட்டைப் புதல்வர்கள். இவ்விருவரும் ஜேஸனுடன், பொன் ஆட்டுத்தோல் தேடப் புறப்பட்ட வீரர்கள். தங்கள் வீரத்தினால் புகழ் அடைந்தவர்கள். இவர்களின் ஒற்றுமையை என்றும் விளங்கச் செய்வதற்காக ஜுபிடர் இவர்களை நக்ஷத்திரங்களாகச் செய்து என்றும் பிரகாசிக்க வைத்திருக்கிறார்.

இக்கூட்டத்தின் முக்கிய நக்ஷத்திரங்கள் காஸ்டர், (Castor) போலக்ஸ் (Pulleux) புநர்வசு. இவையிரண்டும் அதிக ஒளி பொருந்திய நக்ஷத்திரங்கள். இவை யிடையேயுள்ள தூரத்தில் 9 சந்திரர்களை நாம் வைக்க முடியும். காஸ்டர் ஒரு இரட்டை நக்ஷத்திரம். இதில் முக்கியமானது. நம் சூரியனைப் போல் 20 மடங்கு அதிக பிரகாசமுடையது: இதன் உப நக்ஷத்திரம், 11 மடங்கு அதிக பிரகாசமுடையது. சமீபத்தில் செய்த ஆராய்ச்சியினால், இவ் விரு நக்ஷத்திரங்களைச் சுற்றி கண்ணிற்குப் புலப்படாதவேறு இரு நக்ஷத்திரங்கள் வருவதாக நிர்ணயித்திருக்கிறார்கள். போலக்ஸ் நக்ஷத்திரம் முதல்தரமான ஒளி வீசுவது. நம் சூரியனைப் போல் 30 மடங்கு அதிக ஒளி வீசுவது. அதன் குறுக்களவு (Diameter) 13,000,000 மைல் எனக் கணக்கிட்டிருக்கிறார்கள்! காஸ்டரிடமிருந்து நமக்கு ஒளி வந்து சேர சுமார் 45 வருடங்கள் ஆகின்றன. போலக்ஸிலிருந்து 34¼ வருடங்கள் ஆகின்றன. காஸ்டர் நம் சூரியனைப் போல் 12 மடங்கும், போலக்ஸ். 5 மடங்கும் அதிக எடையுள்ளன. மேலே குறிப்பிட்டுள்ள விவரங்களினால் இவ் விரு நக்ஷத்திரங்களும் எவ்வளவு பெரியன்வென்று விளங்கும். ஆனாலும் நமக்கு அவை அழகிய ஒளி வீசும் புள்ளிகளாகவே தென்படுகின்றன.

கிரஹங்களின் நிலை

புதன்:—இம்மாதம் ஆரம்பத்தில் வக்ரத்தில் மகரத்தில் காணப்படுகின்றது. 11-ம் தேதி யன்று (22-2-42) வக்ரத்யாக மடைந்து அதன் பிறகு கும்பத்தை நோக்கிச் செல்கின்றது. இம்மாதம் கடைசி தேதியன்று கும்பக் கூட்டத்தை புதன் அடைந்து விடுகின்றது. மாதம் செல்லச், செல்ல, புதனுக்கும் சூரியனுக்கும் இடையேயுள்ள



கவலைவேண்டாம்

உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி; உண்மையான நல்ல மருந்து வேண்டுமானால், அடியில்கண்ட நமக்குத் தெரியப்படுத்தினால் நிவர்த்திக்க தக்க வழிகளைத் தெரிவிப்போம்.

மலையப்பசாமி
வைத்தியசாலை,
பழனி. S. I.

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர் ஒரு ஜாதகம் கணிக்க ரூ.2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ.5. மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ.5. ஆருடம்3கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், 58, லஸ் சர்ச் ரோடு, மைலாப்பூர், மதராஸ்.

தூரம் அதிகரித்துக்கொண்டே வருகிறது. இம்மாதம் 25-ம் தேதியன்று (8-3-42) புதன் சூரியனுக்கு அதி தூரத்திலிருக்கிறது. மாதக்கடைசிவாரத்தில் அதனுல் புதனே விடியற்காலையில் கீழ் வானில் காண முடியும்.

சுக்கிரன் :—விடியற்காலையில் கீழ் வானின் முக்கிய காக்ஷி சுக்கிரனே. இம்மாதமெல்லாம் மகரத்திலேயே ஊர்ந்து வருகின்றது. சுக்கிரன் இம்மாதம 11-ம்தேதி வரையில்(22-2-42) வக்ரித்திருக்கிறது. அதற்குப் பிறகு கும்பத்தைநோக்கிச் செல்கின்றது. இம்மாதம் சுக்கிரன் தினம் தினமும் சூரியனுக்கு வெகு நேரம் முன்பேயே உதயமாகும். அதன் ஒளியும் நாளுக்கு நாள் அதிகரிக்கின்றன. 26-ம் தேதியன்று (9-3-42) இதன் பிரகாசம் உன்னதத்தை அடைகின்றது. அன்று இதன் ஒளி, ஒரு மாதத்திற்கு முன் இருந்ததைவிட இருமடங்கு அதிகம். இம்மாதிரி அதிப்பிரகாசமாய் விளங்கும் சுக்கிரனே, சூரியன் உதயமான பிறகுகூட ஆகாயத்தில் காணலாம்.

குஜன்:—மேல் வானில் முன் இரவில் காணலாம். இது அழகிய ரிஷபக்கூட்டத்தில் தங்கியிருக்கிறது. இதனருகே சனியும், குருவும் காணப்படுகின்றன. இம் மூன்று கிரஹங்களும் அழகிய ரிஷபக் கூட்டத்தின் நக்ஷத்திரங்களினிடையே பிரகாசிக்கும் காக்ஷி பார்க்கத்தகுந்தது. இம்மாதம் 13-ம் தேதியன்று குஜனும், சனியும் அடுத்தடுத்தாற்போல் காணப்படும். அவைகளினிடையே சுமார் 3½ டிக்ரி தூரம் இருக்கின்றது. இத்தேதிக்கப்புறம் குஜன் சனிக்குக் கிழக்குப் பக்கத்தில் வந்து விடுகிறது. இக் கிரஹங்களில் குருவின் உன்னத ஒளியே சிறந்து விளங்குகிறது. சனியும், குஜனும் ஏறத்தாழ ஒரேவிதமானப் பிரகாசத்துடன் தோன்றுகிறது. ஆனல் குஜனின் சிவந்த நிறம், இதன் அழகை அதிகப்படுத்துகின்றது.

உரானஸும் நெப்டியூனும்:—முறையே ரிஷபத்திலும் கன்னியிலும் ஊர்ந்து வருகின்றன.

சந்திரன்:—கீழ்க்கண்ட தேதிகளில் கிரஹங்களினருகே காணப்படும்:—

பிப்ரவரிமீ
- 14உ சுக்கிரனருகில்.
- 14உ புதனருகில்.
- 22உ குஜனருகில்.
- 22உ உரானஸருகில்.
- 22உ சனியருகில்.
- 24உ குருவினருகில்.

மார்ச்சுமீ
- 13உ சுக்கிரனருகில்.

அத்ருஷ்டம்எப்படி

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டே தந்திக் குமாஸ்தா தந்திக் காகிதத்தை எடுத்து ஜன்னலின் வெளியே எறிந்தான். "கோபம் கொள்ளக் கூடாது ஸார்! ஏதோ யோசித்துக்கொண்டிருந்துவிட்டேன். இதோ பணம்?" என்று சொல்லி, பசுபதி நான்கு ரூபாய் பதினைந்து அணுவையும் வைத்தான்.

தந்தியும் கொடுக்கப்பட்டது. தந்திக்கு கொடுத்த பணம் பத்திரிகாலயத்திலிருந்து வந்தாலும் வராவிட்டாலும், சந்திரனைத் தான் முந்திக்கொண்டதொன்றே போதும்!

"அடுத்த நாள் வெளியாகும் நடோடிப் பத்திரிகையில், வெளியாயிருக்கும். தடாவூரைப் பற்றிய செய்தி, தன் பத்திரிகையில் வெளியாகாததைக் காணும் போழுது, சந்திரன் அப்படியே வயிறெரிந்து சாவான். அதுவே போதும். தனக்கு சந்திரன் முகத்தில் ஒரு தடவையாவது கரியைத் தடவினுல அதுவே தன் வெற்றி." இப்படி எண்ணிக்கொண்டே வீட்டுக்குத் திரும்பினுன் பசுபதி.

வழியில் காமாட்சி காபி ஹோட்டலில் காப்பி வாசனை பசுபதியை உள்ளே இழுத்தது. ஹோட்டலின் உட்சென்று, ஒரு கப் சூடான காப்பிக்கு ஆர்டர் கொடுத்துவிட்டு ஒரு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டான். அப்பொழுது அடுத்த அறையிலிருந்து ஒரு குரல் கேட்டது. அது பழக்கமான குரலாகத் தெரிந்தது உற்றுக் கேட்டான் பசுபதி, "என் தடபுடல் பத்திரிகையில், தடாவூரில் நடந்த விபத்தைக் குறித்து நாளை வெளி வரப்போவதை அந்த தூங்கு மூஞ்சி பசுபதி கண்டால் மனம் வெடித்துச் சாவான் இன்று மாலை மூன்று மணிக்கு நடந்த சம்பவத்தை வெகு நேர்த்தியாக வர்ணித்து எழுதியிருக்கிறேன். அதற்குக் குறைந்தது பதினைந்து ரூபாய் கிடைக்கும் என்று அந்தக் குரல் உச்சத்தொனியில் சொன்னவை பசுபதியின் காதுகளில் நெருப்புக் குழம்பை வார்த்தமாதிரி விழுந்தன. காப்பி கொண்டுவரப் போன பையன் சூடான காப்பி கொண்டுவருவதற்குள் வந்த குறி தெரியாமல் கம்பி நீட்டினுன் பசுபதி. வேறு என்ன செய்வான். தந்திக்குச் செலவு செய்த பணத்தை இன்றும் பசுபதி எதிர் பார்த்துக் கொண்டு தானிருக்கிறுன். நம்பிக்கையை மட்டும் விடவில்லை.

BLACK LOCK & MACARTHUR LTD, GLASGOW



வெள்ளை வர்ணத்தில் 541 வெள்ளைதான் உயர்ந்தது. வெண்மை மாறுது வெடிக்கவும் செய்யாது. அதிக ஸன்னமாதலால் ஆண்டு வரும். 541 ஈய வெள்ளையை வாங்கி உபயோகித்தால் கூலி மிச்சமாகும். அடிக்கடி வர்ணம் கொடுக்க வேண்டிய அவசியமுமிராது. 541 கெக்கின்பேரில் மான் மார்க்கும் இரண்டு ஈய வில்களும் இருக்கிற கெக்காகப் பார்த்து வாங்குகள். போலிகளை வாங்கி ஏமாறுதீர்கள் செந்தூரத்தில் "மான் மார்க்" செந்தூரம்தான் உயர்ந்தது. இவைகள் எல்லா வர்ண வியாபாரிகளிடத்திலும் கிடைக்கும்.

Sole Agents:- M.R V. AIYER & CO., 49. பந்தர் தெரு, மதராஸ்.

அபார சக்திவாய்ந்த டானிக்!

S.K.M.

Dr. N. V. ஸ்ரீராமாச்சார்லுவின்

—ஸித்தகல்ப—

மகரத்வஜம்

60 மாத்திரை ரூ. 10.
30 மாத்திரை ரூ 5.

விவரத்திற்கு எழுதவும்:

மதராஸ் ஆயுர்வேதிக் பார்மஸி லிமிடெட்., த, பெ. கெ. 151. (ஸ்தாபனம் 1915௵) 289, எஸ்பிளனேட், மதராஸ்.

ஏன்! நான் பெரிதும் விரும்புவது

Ba-Ba-Water

(பா-பா வாடர்)

மல விரோசனிகளை உட்கொள்ளும்படி குழந்தைகளைத் தூண்டுவது கடினம். பா-பா வாடர் குழந்தைகள் பெரிதும் விரும்புவதாகும். இதன் சமனமுடடும் குணம் மிகவும் பாராட்டப்படுகின்றது.

எங்கும் விற்கப்படுவது

குழந்தைகளுக்கு அமிர்தம்

பா-பா வாடர் மான்யுபாக்சரிங் கம்பெனி,

ஹைதராபாத், (தக்காணம்)

BW 2

பாத்ருடுவின் "பாலசஞ்சீவினி"

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டிகளை குணப்படுத்தும்

Dr பிள்ளா பாபய்ய பாத்ருடு & Bros.,

11, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர். போன் 86257.

திருச்சி பிராஞ்ச்: 81, ஆண்டார் தெரு, தெப்பக்குளம்.



கெ.சுவாமிநாதன்&கோ

24, எர்ரபாலு செட்டித் தெரு, மதராஸ்.

சுவாமிநாதன் பவுண்டரி எஞ்சினீரிங் ஒர்க்ஸ், 7, வால்டாக்ஸ் ரோட், P. T., மதராஸ்.

3 உயர்தர டானிக்குகள்

யூனிடெட் கன்ஸர்ன், 54, பந்தர் தெரு, மதராஸ். (உதவி வைத்தியர் Dr. P. S. C. மணி)

எவ்வுருவும் எம்பிரானுக்குத் தகும்

"ஸமுத்ர மதனம்"

மஹாமஹோபாத்யாய

ஆர். வி. கிருஷ்ணமாச்சாரியார்

இந்த "ஸமுத்ர மதனம்" என்ற ரூபகம் "ஸமவகாரம்" என்ற ரூபக வகுப்பில் சேர்ந்தது. இதனையும் வத்ஸராஜன் தான் எழுதிருக்கிருர். இதில் மூன்று அங்கங்கள் உள்ளன. மொழிபெயர்த்திருப்பது இரண்டாமங்கம். ஸமுத்ர மதனக் கதை மஹாபாரதத்தில் பல ஸ்தலங்களில் பிரஸ்தாபிக்கப்பட்டிருப்பதும் தவிர, ஸ்ரீ ராமாயணம் ஸ்ரீபாகவதம் விஷ்ணு புராணம் பத்ம புராணம் முதலிய வற்றிலும் காணப்படுகிறது. விஷ்ணுவின் மோஹினி வேஷம், அவர் அஸுரர்களை வஞ்சித்தது, கருடனுக்கும் அமுதத்துக்குமுள்ள ஸம்பந்தம், அமுதத்தை அக்கினி காப்பாற்றுவது முதலிய கதைகள் ஆங்காங்கு நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. இந்த மஹாகவி, அந்த அந்தக் கதைப் பகுதியை ரூபகத்துக்கு ஏற்ற முறையில் ரஸமாகவும் ஸந்தர்ப்போசிதமாகவும் தொகுத்திருப்பது, கண்டு ரஸிக்கத் தக்கது. இதன் பாக்கி இரு அங்கங்களையும் ரஸிகர்கள் படித்து மகிழவேண்டும்.

இரண்டாம் அங்கம்.

கபடமாக மோஹினி வேஷம் கொண்ட வைகுண்டனும் (விஷ்ணு) தோழியுருவம் பூண்ட கருடனும் வருகிருர்கள்:

கருடன்:— (மகிழ்ச்சியுடன்) ஜனார்த்தன பகவானே! உலகமனைத்தும் தேவரீருடைய உருவம். ஆகவே தேவரீர் புதிதாக ஓர் அத்புத ரூபம் எடுப்பதில் ஆச்சரியமொன்றுமில்லை. ஆனல் இப்பொழுது தேவரீர் ஏற்றுள்ள இந்தப்பெண்ணுருவம் இதுவரை எடுக்கப்படவில்லை. இருக்கட்டும், நாம் இங்குக் கடற்கரைக்கோடி வீட்டில் நிற்கிருேம். இங்கோ ஒரு புருஷனும் கிடையாது. இங்ஙனமிருக்க, தேவரீர் ஏன் விணில் காமகலா விலாஸத்தைக் காட்டுகின்றீர்கள்? தேவரீருடைய இரு கண்களும் காதுவரை சென்று மிரள மிரள மெல்லத் தவழ்கின்றன. புருவக் கொடி நடனமாடி, மன்மதன் வில் வளைப்பதைக் காட்டுகிறது. அடிக்கடி புன்னகை பூக்கும் இக் கமல முகம் காண்பவரைக் களிப்புறச் செய்கிறது. தேவரீரே, இந்நிலையைக் கண்ணுடியில் கண்டால், காம மயக்கம் கொண்டு கலங்கி நிற்பீர்கள்.

வைகுண்டன்:—கருடா! இது அர்த்த சிருங்காரம். (ஒரு பயனை எதிர்நோக்கிச் செய்யும் சிருங்காரம்) இது அத்புதமானது. இது பெரிய ஒரு பயனை அளிக்கப்போகிறது. திடீர் என்று எவனுவது ஒரு புருஷன் வந்து விடக்கூடுமென்று சங்கித்தே மன்மத விலாஸத்தை அபிநயித்துக் கொண்டிருக்கிறேன்.

கருடன்:— (பரபரப்புடன்) காலடி சப்தம் கேட்கிறதே! எவனே ஒருவன் வருகிருப் போலிருக்கிறது.

வைகுண்டன்;— (மனத்திடுக்கத்துடன்) அப்பா கருடா, இனி நமது ஸ்திரீ வேஷத்துக்குத் தக்கபடி (ஸம்ஸ்கிருத பாஷையை நிறுத்திவிட்டு) பிராகிருத பாஷையிலேயே (தேசியபாஷை) காமக்கிளர்ச்சி நிறைந்துள்ள பேச்சைப் பேச வேண்டும்.

கருடன்:-(இலைகளிடையாகப் பார்த்து, ரகஸியமாக) மஹாநுபாவனுன ஒரு சிறந்த புருஷன் ஒரு சேவகனுடன் வருகிருன்,

இரண்டாம் காக்ஷி

பலிச்சக்ரவர்த்தியும், அவனது தோழன் குசம்பனும் வருகிருர்கள்.

பலி:— (ஸந்தோஷத்துடன்) தோழா! குசம்பா நல்ல காரியம் செய்தாய்! வெகு ஸாமர்த்யமாக அமுதத்தைக் கொண்டு வந்து விட்டாய்! கடலிலுதித்த லக்ஷ்மியைக் காட்டிலும் சிறந்த கட்டழகியொருத்தி எனக்குக் கிடைக்காத வரையில் இந்த அமுதம் கிடைத்தும், இது கிடைக்காததாகவே என் உள்ளம் உணருகிறது.

குசம்பன்:—(அருவருப்புடன், மனத்துள்) ஐயோ! என்னே காமப்பித்து! இவ்வெறிமூடன் அமுதத்தைக் காமக்கிழத்தி கிடைப்பதை விடக் கீழாக எண்ணுகிருனே! (வெளிப்படையாக, வணக்கத்துடன்) பெரும் பாக்கியமுள்ள பலிச்சக்கரவர்த்திக்கு இதுவும் கிடைத்தற் கரிதன்று என்றே நினைக்கிறேன்.

வைகுண்டன்:—(ஏளனமாக, மனத்துள்) இரண்டும் கிட்டாது

பலி:—குசம்பா! என்னடா இங்கே கஸ்தூரி கந்தம் கமழ்கிறது?

குசம்பன் :—(வாசனை பிடித்து, ஆச்சரியத்துடன்) அஸுர சக்கரவர்த்தியே! இந்தப் பரிமளம் வனலதைகளின் மலர்களிலிருந்து வருவதன்று. நான் அந்தப் பரிமளத்தைப் பல தடவை அநுபவித்திருக்கின்றேன். இது கஸ்தூரியின் கந்தமே ஆகையால், இங்கு யாராவது இருக்க வேண்டும். நான் எழுந்து பார்க்கிறேன். (எழுந்து பார்த்து, களிப்புடனும் வியப்புடனும்). அரசனே! வருக வருக, கண்களை ஸபலமாக்குக. இன்றுமுதல் உனது பிறவி பயன்பெற்றது. அதோ பார் இதுவரை நாம் காணுத கன்னிகாரத்தினம் காணப்படுகின்றது. (பலி ஆவலுடன் எழுந்திருக்கிருன்.)

கருடன்:—(ரஹஸியமாக) பகவானே! இப்பொழுது தேவரீர், கணவனைப் பிரிந்த காரிகையிடம் காணும் காமக்குறிகளை நடித்துக் காட்டவேண்டும்.

வைகுண்டன்:—(மனத்துள்) உடலில் வெளிறு, மெலிவு, பெருமூச்சு, முதலியவை விப்ரலம்ப (பிரிதல்) காலத்தில் உண்டாகக் கூடியன. இவற்றை நான் நடித்துக்காட்ட நினைக்கும் பொழுதே, உண்மையாகவே இப்பொழுது நான் லக்ஷ்மியைக் காணுமல் பிரிந்திருக்கிறபடியால், அவை யனைத்தும் ஸத்தியங்களாகத் திருகின்றன.

கருடன்:-(ப்ராக்ருத பாஷையில்) ஆருயிர்த் தோழீ! மோஹினீ! உன்னுயிரையும் உன்னிலைமையையும் கவனியாமல் ஏன் இவ்வாறு வாடுகின்ருய்? நீ சொப்பனத்தில் கண்ட அந்தக் கட்டழகன எவ்வாறிருப்பான். என்னிடம் சொல்.

மோஹினி:— "நிபுணிகே! சொல்லிப் பயன் என்ன? இந்த மூன்று லோகங்களிலும் அவருக்கு நிகராக ஒருவனுமில்லை.

பலி:—(கேட்டு, ஆவலுடன்) ஆச்சரிய புருஷன் என்று இவள் சொல்லுமாறு பாக்கியம் பெற்றவன் எவனே?

குசம்பன்:—வா. நாம் இப்பொழுது வெளிப்படுவோம். (இருவரும் அடுத்துச் சென்றனர்.)

நிபுணிகை:—(பரபரப்புடன் எழுந்து வணக்கத்துடன்) பாக்கியவானே! எனது ராஜகுமாரி நமஸ்கரிக்கின்ருள்.

பலி:—(தழுதழுத்த குரலுடன்) உனது ராஜகுமாரி, விரும்பியதை அடைவாளாக.

வைகுண்டன்:—(மனத்துள்) இவனுடைய தொண்டை தழுதழுத்தமையால் எழுத்துக்கள் பூரணமாகப் புறப்படாவிடினும், இதுவே சுபஸூசகமான சகுனமாகின்றது.

குசம்பன்:—(மேல் வஸ்திரத்தை மடித்து ஆஸனமிட்டு) சக்கரவர்த்தி இதில் இருக்கவேணும்.

பலி:—(உட்கார்ந்து, களிப்பும் வியப்பும் ஆசையும் கலந்து) பிரம்மதேவனுடைய ஸ்ருஷ்டியில் இம்மாதிரிப் பெண்மணியை நான் பார்த்ததில்லை. உலகம் வென்ற மதனன் தான் தனது மாயையின் மஹிமையால் இந்த மங்கையை ஸ்ருஷ்டித்திருக்க வேண்டும். (வெளிப்படையாக, தோழியைக் குறித்து) மங்களமுள்ளவளே! உனது அரசகுமாரியான இவள் யார்? எதற்காக வருந்துகிருள்?

நிபுணிகை:—சீராள்ரே! இவள் ஸமுத்திர ராஜனுடைய இளைய பெண். லக்ஷ்மி தேவிக்குத் தங்கை. இவள் ஒருநாள் ஸ்வப்நத்தில் ஒரு ஸுந்திர புருஷனைக்கண்டாளாம். அன்று முதல் இவளுடைய உள்ளத்தை விரஹாக்னி கொளுத்துவதால் பலமான வாதனைக்காளாகி வாடுகிருள். இவள், தனது பிராணன் போய்விடுமே என்று எண்ணுமல், கடுகளவு கூடக் கவலைப்படாமல், தென்னற் காற்றுக்கு வந்து, வழிபாடு செய்து அதனை வரவேற்கின்ருள்; அதனை நுகருகின்ருள்; அதில் குதிக்கின்ருள். குயில்களின் இனிய தொனியைக் காது குளிரக் கேட்கின்ருள். (உட்கருத்துடன் சிரித்துக் கொண்டு) இப்பொழுது தங்களைப் பார்த்தது முதல் கொஞ்சம் கொஞ்சம் ஆறுதல் இவளுக்கு ஏற்படுகிறதாகத் தோன்றுகின்றது. அவள் சொப்பனத்தில் கண்ட மஹாநுபாவருக்கும் தங்களுக்கும் உருவம் ஒத்திருக்கிறதோ, என்னமோ? எனக்கு இது எப்படித் தெரியும. (மோஹினி தன் தோழியைக் குறுக்குப்பார்வையால் அடக்கிவிட்டு, நாணத்துடன் தலை குனிந்து நிற்கின்ருள்.)

பலி:—(பேராவலுடன்) மடந்தையே! அமுதம் பொழியும் பார்வையால் நீ என்னை அநுக்ரஹிக்க வேண்டும். எனது இருப்பும் இறப்பும் உன் கையிலுள்ளன.

(மோஹினி குனிந்த வண்ணமே புன்சிரி புரிகின்ருள்.)

பலி:—(சந்தோஷத்துடனும் ஆவலுடனும், மனத்துள்) நேச பாசத்தினுல் கட்டிய இக்கட்டழகியின் கடாக்ஷமென்னும் கமல மாலை, ஸ்வயம்வர மாலை போல என் மீது விழுகிறது. இது என் பாக்கிய காலம. (வெளிப்படையாக) குசம்பா! இந்த மங்கை, மனம் தெளிந்துதயைபுரிந்துஎன்னைக் கடாக்ஷித்து வெகுமதித்திருக்கிருள். சுக்கிராச்சாரியார் இன்னமும் வரவில்லையே. கால விளம்பம்ஆகிறதே! அம்ருத ப்ராசந மஹோத்ஸவத்தில் அக்கிராஸனம் வஹிப்பதற்காக அவரை அழைத்து வரும்படி ஸந்தானகனை அனுப்பியிருந்தேன். ஸந்தானகன் நொண்டியாய் விட்டானு? அல்லது, குரு வேறு காரியங்களில் ஈடுபட்டிருக்கிருரா?

மூன்றும் காட்சி

சுக்கிராச்சாரியரும், ஸந்தானகனும் வருகிருர்கள்.

ஸந்தானகன்:—(வணங்கி) அஸுர சக்கரவர்த்தியே! இதோ வருகிருர் குரு சுக்கிராசாரியர், (பலி பரபரப்புடன் எழுந்து முறைப்படி உபசரித்து அடி பணிகின்ருன்.)

சுக்கிரன்:—(களிப்புடன்) கலி ஓங்கி வளருக. (மனத்துள், வெட்கத்துடன்) ஐயோ! "பலி" என்று சொல்ல வேண்டியிருக்க ஆநந்த பரவசனுன என் முகத்திலிருந்து "கலி" என்று தவறி வந்து விட்டதே! நல்ல வேளை இதனை வேருெருவரும் கவனிக்கவில்லை. போனது போகட்டும். (கலி = சண்டை)

ஸந்தானகன்:—(தர்ப்பாஸனம் கொண்டு வந்து போட்டு) குரு இதில் உட்கார வேணும்.

சுக்கிரன்:—(உட்கார்ந்து) மோஹினியைக் கண்டு வியந்து மனத்துள்) ஆ, ஹா! இவ்வண்ணம் அத்புதமான பெண்ணுருவத்தைப் பிரம்ம ஸ்ருஷ்டியில் இதுவரை நான் கண்டதில்லை. இது ஏதாவதொரு மாயையாயிருக்குமோ? (மோஹினி முன் போலவே நாணித்துடன் இருக்கிருள்.)

பலி:—(ஸந்தோஷமாக) சுக்கிர பகவானே! லக்ஷ்மியைவிட சிறந்த ஸௌந்தர்யமுள்ள இவள், ஸமுத்ரராஜனுடைய இரண்டாம் பெண். இவள் என்னிடம் காதல் கொண்டிருக்கிருள். இதற்கு மேல் ஆகவேண்டிய காரியம் தேவரீருடைய பொறுப்பிலிருக்கிறது.

சுக்கிரன்:—(மகிழ்வுடன) இதில் ஆலோசிக்க வேண்டியதொன்றுமில்லை. இடையூறின்றி நீ ஸகல வித க்ஷேமங்களுக்கும் பாத்திரனுகுக.

திரைக்குள்:—கொடிய தெய்வம் இதனைப் பொறுக்கவில்லை. தேவர்கள், ஸமுத்திரத்திலிருந்து கிளம்பிய பொருள்களனைத்தையும் தம்வசமாக்கிக் கொண்டனர். திமிர்பிடித்துப் போர் தொடுத்து அஸுரர்களைப் புறம் காட்டி ஓடச் செய்தனர். அஸுரர்களோ அல்லல்பட்டு அவ்விடம் விட்டு வருகிருர்கள்.

பலி:—(கோபத்துடன் எழுந்து) ஆ! இவ்வாறு நிகழலாமா? பலி வலிமையிழந்துவிட்டானு?

குசம்பன்:-ஸைன்யங்களைத் தயாராக்கவேண்டும்

சுக்கிரன்:—(இடைக் கண் துடிக்க, வருத்தத்துடன் மனத்துள்) ஐயோ! என் முகத்திலிருந்து கிளம்பிய அசுப வாக்கு முதல் அபசகுனம். இதனை இப்பொழுது மற்றெரு அபசகுனம் பின்தொடர்கிறது. இருக்கட்டும் இவ்வாறு கூறுகிறேன். (வெளிப்படையாக) அப்பா! அஸுரராஜனே! இது காலை யுத்த மஹோத்ஸவம் நடத்துவது உசிதமன்று. தேவர்களெல்லாம் ஒன்றுகூடியிருக்கிருர்கள்.

பலி:— (எள்ளி நகைத்து) குருவே! பலியின் பலம் தேவரீருக்குத் தெரிந்தது தானே. அங்ஙனமிருக்க, ஏன் இங்ஙனம் கூறுகிறீர்கள்? (கோபத்துடன்) முன் நான் என் கைகளால் மந்தர பர்வதத்தை இட்டுச் சுழற்றிக்கடைந்தபடியாலே தான் கலக்கமடைந்து கடலரசன் 'தன்னிடமுள்ள பல உயர்ந்த வஸ்துக்களை வழங்கினன். அந்தக் கைகள் இதோ இருக்கின்றன. இவற்ருல் வீண் புஜபல பெருமை பாராட்டி நிற்கும் தேவர்களைப் பிடித்துப் பொடியாக்கிவிட்டு, இம்மடந்தையின் தந்தையான ஆழியை அகமகிழச் செய்கிறேன்.

சுக்கிரன்:—அப்பா அவுணரரசே! நீ அமுதம் பருகிய பின் போரைத் தொடங்கலாம். அப்பொழுது உனக்கு மரணம் வராது. யுத்தமும் ஸுபமாக நடைபெறும்.

பலி:—(செருக்குடன்) குருவே! அமுதம் என்பது வெறும் மருந்து மாத்திரமே. எனக்கு இது எதற்கு? எனது இரு கையும் ஆழியிலிருந்து எழாத அத்புத அமுதமல்லவா? இதனுல் சத்துரு குலத்தை அழித்துச் சடுதியில் அமரத்தனத்தை (சாவில்லாமை) அடையப் போகிறேன். குருவின் முன்னிலையில் நான் ஒரு ப்ரதிக்ஞை செய்கிறேன். அமுதம் கண்டு அநந்தக் கூத்தடித்துப் பெரிதும் திருப்திப்பட்டிருக்கும் சத்துருக்களான தேவர்களை, அமர்க்களத்தில் எனது கத்தி முனைக்கு இலக்காக்கி, வீழ்த்திவிட்டுப் பிறது குலகுருவான தேவரீரை அக்ராஸனத்தில் அமர்த்திப் பூஜித்து அநுமதி பெற்று இவ்வமுதத்தை நண்பர்களுடனும் உறவினர்களுடனும் கூடி நானும் இந்த மோஹினியும் பருகுவோம். இப்படி நான் செய்கிறேனு, இல்லையா, பாருங்கள்.

வைகுண்டன்:—(உவகையுடன், உள்ளத்துள்) நல்ல வேளை. சுக்கிரனுடைய ஆலோசனை சிதறுண்டது. உயிரிழக்கவே இவன் இவ்வண்ணம் பாழும் ப்ரதிக்ஞையைச் செய்திருக்கிருன்.

சுக்கிரன்:—(மனம் கொதித்து) அடே! அஸுர குலம் அழியப் போகிறது ஆகையால் தான் நீ, கெடு சூழ்ந்த இந்தப் பிடிவாதத்தை விடவில்லை. ஆயினும், மீண்டும் ஒரு தடவை வற்புறுத்திக் கூறுகிறேன்—முன்பு மது முரன் முதலிய மஹா அஸுரர்களெல்லாரும் எந்த வைகுண்டனுடைய கத்தி முனை என்னும் கடும் கனலில் விட்டிற் பூச்சிகளாக விழுந்து மடிந்தார்களோ, அந்த வைகுண்டன் இன்று பெண் பிள்ளையாகத் தீர்ந்து விட்டானு? உனது புஜபலத்தைப் பற்றி வீணே பாராட்டிக் கொண்டு அகந்தையடைய வேண்டாம்.

(வைகுண்டனும் கருடனும் ஒருவரையொருவர் உட் கருத்துடன் பார்த்து விட்டு, அடக்கமாயிருக்கின்றனர்.)

பலி:—குருவே! ஏன் இப்படித் தடுமாறிப் பேசுகிறீர்கள்? வைகுண்டன் என் முன்பு பெண் பிள்ளை தான். நிற்க. தேவரீரை நான் ஒன்று வேண்டிக் கொள்கிறேன்—அத்புத ரூபமுள்ள இந்தக் கன்னிகை, என்னை ஸுகப் படுத்தத் தானுகவே இங்கு வந்து என் மீது காதல் கொண்டு நிற்கின்ருள. இவளைத் தேவரீர் பாதுகாக்க வேணும். எனது பிரயாஸம் வீணுக வேண்டாம். (குசம்பனைக் குறித்து) நண்பா! குசம்பா! அந்த அமுத பாத்திரத்தை எடு.

வைரங்கள் வாங்கும் ஆபீஸ்: ஆண்ட்வர்ப் & ஆம்ஸ்டர்டாம்

டெலி போன்: 2696. கிராம்: 'NECKLACE'

பாபாலால்

நம்பிக்கைக்கான பெயர்போன ஸ்தாபனம்

தங்கம், வெள்ளி, சாமான்கள் கையாலேயே தயாரிக்கப்படுகின்றன.

ஆகவே நீடித்திருக்கின்றன. தவிர இந்த உத்திரவாதமும் உண்டு.

"எங்களிடம் வாங்கிய எல்லா தங்க, வெள்ளி சாமான்களையும் பிற்காலத்தில் மாற்றவேண்டுமாயினும் அல்லது அவற்றிற்குப் பணம் வேண்டுமாயினும், அவ்வப்பொழுதுள்ள சவரன் நாணய (Coin) விலைப்படியும் — சுத்த வெள்ளிக்கிரயப்படியும் கொடுக்கிறோம். —

பத்திரமான மூலதன முதலீடு. - எவ்வித குறைவும் கிடையாது.

பாபாலால் & கம்பெனி,

(ஸ்தாபிதம்: 1910)

வைரம், தங்கம், வெள்ளி நகை வியாபாரிகள்.

ராம்கோடி பில்டிங் - ராட்டன் பஜார், பார்க் டவுன், மதராஸ்.

ஞாயிற்றுக்கிழமை பகல் 1-மணிவரைதான் கடை உண்டு

41 வருடம் அனுபவம் உள்ளது; ஞாபகம் இருக்கட்டும்.

சூதக வயிற்றுவலி இருக்கும்வரை கெற்பம் தரிக்காது.

ஷை வயிற்று வலியை எடுத்து 6 வித மலட்டையும் நீக்கி

புத்திரசந்தானம் உண்டாகவேண்டுமானல் R.M.K. கெற்ப சஞ்சீவி எண்ணெயை சாப்பிடுங்கள்.

ஸ்திரீகளுக்கு மாதாந்திரத்தில் வரும் பொறுக்கமுடியாத வயிற்று வலியை அந்தக்ஷணமே நிறுத்தும். எந்த மருந்திலும் தீராத எவ்வளவு நாட்பட்ட சூதக வயிற்று வலியும் இதில் அவசியம் தீரும். சூதகம் கண்டும் காணுமலும், துப்பரவாகாமலும் டயப்படி ஆகாமலுமுள்ள சூதகபந்தமானுலுஞ்சரி, இதில் சுகமாகிவிடும். காலா காலத்தில் கிரமப்படி பஹிஷ்டை ஆகும். இன்னும் கெற்பநோய் சம்மந்தமான சகல வியாதிகளும் தீர்ந்து கெற்பம் தரித்துவிடும்! குணம் இல்லையேல் பணம் வாபீஸ்.

1 புட்டி ரூ. 2. சேலவு வேறு. ஒரு நபருக்கு 3 புட்டி வேண்டும். ஒரே தடவையில் 3 புட்டி ரூ. 5.

வைத்திய ஆசிரியர் ஆர். எம். கே. வேலுசாமி,

சித்த வைத்திய சாலை, பழனி. PALNI. (S. I. R.)

பிராஞ்சுகள் :— 16, திருவல்லிக்கேணி ஹைரோடு, மதராஸ்,

,, :— 68, சேட்டியார் தெரு, கோழும்பு.

புதிய பதிப்பு! மலிந்த விலை!!

பாரதி நூல்கள்

(நேர்த்தியான காலிகோ பைண்டு)

1.	கவிதைகள்	Vol I	ரூ.	3	0	0
2.	வசனங்கள்	Vol II	,,	3	0	0
3.	கட்டுரைகள்	Vol III	,,	3	0	0
4.	பகவத்கீதை (காலிகோ)		,,	0	8	0
5.	Agni & other Poems & Translations		,,	1	0	0
6.	Essays & other Prose Fragments		,,	1	0	0
7.	சரித்திரம்		,,	0	4	0

பாரதி பிரசுராலயம்,

567, ஹைரோடு, திருவல்லிக்கேணி, மதராஸ்.

அமிர்தாஞ்சன்

போலிகள் எச்சரிக்கை

"சுதேசமித்திரன்"

எல்லாவித நோய்களையும் தீர்க்கும்.

அமிர்தாஞ்சன் லிமிடெட்,

பம்பாய் - சென்னை - கல்கத்தா.

தியகராய நகரில் ஜெயின் ஹாஸ்டல்



சென்னை ஜனப்பிரதிநிதி சபைத் தலைவர் கனம் புலுசு சாம்பமூர்த்தி தியகராயநகரில் புதிதாக கட்டப்பட்ட ஸ்ரீ எஸ். எஸ். ஜெயின் போர்டிங் ஹாஸ்டலை சமீபத்தில் திறந்து வைத்தார். (என். என். பி. எஸ்.)

(குசம்பன் எடுத்துக் கொடுத்த அம்ருத பாதத்தை பலி வாங்கிக் கொள்கிருன். மோஹினி யருகு வந்து) அன்பார்ந்தவளே! இந்த அமுதத்தை வாங்கிக் கொள். எனக்கு இந்த அமுதம் எதற்கு? நீ தான் எனக்கு அமுதம். சிறிது நேரத்தில் உனது மனோரதம் நிறைவேறும். இப்பொழுது நான் யுத்தம் கொண்டாடப் போக வேண்டும். (மோஹினிக்கு எதிரில் அமுத பாத்திரத்துடன் நிற்கிருன்.)

மோஹினி:—(மனம் ஒடிந்தாற் போல நடித்து தழு தழுத்த குரலில்) ஆர்ய புத்திரர் யுத்த ஜயத்துக்குப் போவதானுல் (நடுவில் நாணம் நடித்து) இரண்டு மூன்று நாழிகை நேரம் தான் எதிர் பார்த்துப் பொறுத்துக் கொண்டிருப்பேன். அதன் பிறகோ, பயனற்ற இவ் வுடலை அக்னியில் ஆஹுதியாக்கி விடுவேன்.

பலி:—(மனம் பதைத்து) கட்டழகி! நீ இப்படி வருந்தக் காரணம் ஏது? போனதும் திரும்பி விடுவேன். (மிக விரைவாகச் செல்கிருன்).

வைகுண்டன்:—(ஸந்தோஷமாக, மனத்துள்) நம் மனோரதம் ஸித்தமாயிற்று. விக்கினம் நீங்கிற்று. பலியும் சென்ருன். (வெளிப்படையாக, வெட்கம் நடித்து) ப்ரியஸகி! இந்த அமுத பாத்திரத்தைக் கையில் எடுத்துக் கொள். நிபுணிகை (கெட்டிக்காரி) யன்ருே நீ, கை நழுவிப் போகாமல் காப்பாற்று. மறுபடியும் நீ தேடிக் கொண்டு வருமாருக வேண்டாம். (கருடன் எடுத்துக்கொள்கிருன்.)

சுக்கிரன்;—(கலக்கத்துடன், மனத்துள்) ஐயோ! அமுதம் அன்னியன் கையில் அகப்பட்டு விட்டது. என் மனம் என்னவோ குழம்புகிறது. இதில் நான் செய்யக்கூடியது என்ன? இந்த வீண் ஆலோசனை எதற்கு? எல்லாமே பலியின் அவலக்காரியம் தான்.

வைகுண்டன்:—(மனத்துள்) இனிக் காலம் தாழ்த்தலாகாது. (நினைவு வரவே) எதிர்ப்பாரைத் துரத்தியடிக்க அக்னியை அழைக்கின்றேன். (அக்னி வருமாறு எண்ணுகிருர்.)

சுக்கிரன்:—(நான்கு புறமும் பார்த்து. மனம் திடுக்கிட்டு) ஆ! ஆ!! இதென்ன விபரீதம்? பயங்கரமான நெருப்பு கிளம்பி எரிகிறதே! இதனுடைய ஜ்வாலைகள் எண்டிசைகளையும் மண்டி நிற்கின்றன. இதிலிருந்து எழும்பும் பெரும் புகை விசும்பினை வலுக்கச் செய்கிறது. இதன் சூடு ஏற்றுப் பாற்கடல் கொதித்துப் பொங்குகின்றது. இது பிரளயகாலமல்லவே. காலாக்னி புறப்படக் காரணம் என்ன? புகைக் கஷ்டம் பொறுக்க முடியாமல் ஸூரியன் எங்கோ ஓடி ஒளிந்து விட்டான். அவனுடைய காரியமான வெளிச்சத்தை இந்நெருப்பே நெடுகப் பரப்புகிறது. பெருங்காற்றடித்து அக்னி ஜ்வாலைகள் எங்கும் பரவவே, உலகம் முழுமையும், ஸ்வர்ணமயப்ரம்மாண்டமாகக் காணப்படுகிறது. எனவே, இப்பொழுது நான் செய்தற்குரிய காரியம் என்ன?

வைகுண்டன்:—அடி தோழீ! நிபுணிகே! அந்த ஸுந்தரனுக்குச் சுபம், ஏற்படுமென்று தோன்றவில்லை. ஆதலால் நாம் இந்த நெருப்பில் குதித்து ஆத்மாவை கிருதார்த்தமாக்குவோம் (இருவரும் எழுந்தனர்.).

சுக்கிரன்:—(அச்சத்துடன், மனத்துள்) அந்தோ! இவளுடைய பூர்வாநுராகம் (முதற் காதல்) மரணத்தில் முடிந்ததே! இவளோ அமுதத்தைக் கையில் வைத்துக்கொண்டே அக்னியில் விழத்தொடங்கினுள். நான் இரு பொருளையும் காப்பாற்றவில்லை. இருக்கட்டும் இவளைத் தடுத்துப் பார்க்கிறேன். (வெளிப்படையாக) அம்மா! மங்களவதி! ஏன் இப்படிக் காரணமின்றி அமங்கள காரியத்தை ஆரம்பிக்கிருய்? கொஞ்ச நாழிகை பொறுத்திரு.

வைகுண்டன்:—(சோகமும் லஜ்ஜையும் நடித்து) ஆர்யரே! தேவரீருடைய பேச்சு ஆர்யர் பேசும் பேச்சாயில்லையே. அவருடைய தலை அறுபடும் பொழுது அவரிடம் காதல் கொண்ட நான் செய்யவேண்டியது இதுதானே.

சுக்கிரன்:—அம்மா! நீ அறியாப்பெண், உன்னையும் அமுதத்தையும் பாதுகாக்கும்படி அஸுரராஜன் உன் முன்னிலையில் தானே என்னிடம் சொன்னுன். நான் தடுத்தும் நீ இணங்காவிட்டால், உன்னை எரிக்காதிருக்க அக்னியை ஸ்தம்பிக்கச் செய்துவிடுவேன்.

வைகுண்டன்:—(மனத்துள்) அமுதம் என் கையில் கிடைத்து விட்டது. இப்பொழுது சுக்கிரனுடைய தற்புகழ்ச்சிப் போக்கையும் பார்த்து விடுகிறேன். (வெளிப்படையாக) ஆர்யர், உரிமைப்படி கருமம் புரியலாம்.

சுக்கிரன்:— (அக்னிஸ்தம்ப மந்திரம் ஜபித்துவிட்டு, வியப்புடன்) ஆ! ஹா! உக்கிரமாக ஒளிரும் இவ்வக்னி, குதித்துக் குதித்துத் தாவித்தாவி முன்னேறி முன்னேறி வருகிறதே! எனது மந்திரப் பிரயோகத்தைச் சிறிதும் பொருட்படுத்தாமல் வீரவ்ரதம் கொண்டாற்போலச் சீறிவருகிறதே! (ஆலோசித்து) சுக்கிரனுடைய மந்திர சக்தி, பிரளய காலத்திய அக்னிமீது பிரயோகித்தாலும் பழுது படாதே! இப்பொழுது பயன் படாததைப் பார்த்தால், அல்லும் பகலும் அஸுர குலத்தை அழிப்பதிலேயே கண்ணும் கருத்துமாயிருக்கும் வைகுண்டனே கோபத்துடன் இங்கு ஒரு மூலையில் ஒளிந்துகொண்டிருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. இருக்கட்டும். தியானத்தால் உண்மையைக் கண்டுபிடித்து விடுகிறேன். (தியானித்துப் பார்த்து மனத்துள்) ஐயையோ! வந்தது அனர்த்தம். வைகுண்டன்ருே பெண்ணுருவமெடுத்து எதிரில் நிற்கின்ருர். இனி ஏன் பயப்படவேண்டும்? (வெளிப்படையாக செருக்குடன் எள்ளி நகைத்து) வைகுண்டனே! கடலைக் கடைந்து எடுத்த அமுதம் எதற்கு? சீச்சீ. அதனைத் தூரத் தள்ளவேண்டியதுதான். மேலும் ஸமுத்திரத்திலிருந்து பிறந்த மற்றச் சிறந்த வஸ்துக்களும், சீச்சீ, வேண்டவே வேண்டாம். அஸுரர்கள் உம்மைப் பெண்ணுருவம் எடுக்கச் செய்தார்களே! போதாதா? இதைவிட அவர்களுக்குக் கிடைக்கவேண்டிய சிறப்பு என்ன?

வைகுண்டன்:-(பெண்ணுருவத்தைவிடுத்து, பரிஹாஸமாக) சுக்கிராசாரியரே! நீதிநெறியில் நிபுணரல்லவா நீர். நீர் இவ்வாறு கூறலாமா?

கருடன்:—(தோழி வேஷத்தை விட்டு, ஏளனமாக) அஸுர குருவே! நாங்கள் போக விடை பெற்றுக்கொள்ளுகிருேம்; நீரும் அஸுரர்களுடன் சென்று அம்ருதப்ராசந மஹோத்ஸவத்தில் அக்ராஸனம் வஹிப்பீராக.

(எல்லோரும் சென்றனர்.)

CATARACT

and all Eye diseases cured radically by COCONAUT Brand LOTUS Honey World-wide Reputed and Tested. ½ Dram Re, 1 4.1 Dram Rs. 2

ULCERINE

A sovereign remedy for all sorts of Boils. Piles, Sinus, Fistulls, Carbuncles, Gangrenes, Foul-ulcers operated wounds, etc. Bottle Rs. 1-4 For these products All India Karachi Congress & Lucknow Govt. Exhibitions awarded medals Free details from:

DADHA & Co., P. T. Madras.

கர்ப்பத்தைத்தடுக்க "ரஹாத்"

நிச்சயமான மருந்தாகும். மூன்று நாட்கள் உபயோகித்தால் கர்ப்பம் தரிக்காது. ஆர்டருடன் உத்திரவாத பாரமும் அனுப்பப்படும். விலை ரூபா 5/8. அல்லது 10 ஷில்லிங். மாதவிடாய் தவருமல் ஏற்படும்.

Dr. S. H. KHAN, (S.M.) 42, Churchgate St., Fort, Bombay. Phone 21343.

தொண்டைப் புண்ணை குணப்படுத்துங்கள்

• தொண்டை புண்பட்டு, கர கரப்பு இருந்தாலும், ஆகாரத்தை விழுங்குவதில் சிரமமேற்பட்டாலும் பெப்ஸ் உட்கொள்ளுங்கள். இக்கிருமிநாச சுவாச மாத்திரைகள் சீக்கிரம் நிவர்த்தியளிக்கின்றன.

வாயில் கரைந்தவுடன் பெப்ஸின் மருந்து பூர்வமான ஆவி, சுவாசத்துடன் கலந்து சுவாசப் பைக்குச் செல்லுகின்றது. தொண்டைக் குழாய் சமனமடைகின்றது. வீக்கம் வடிந்து, விஷக்கிருமிகள் ஒழிந்துவிடுகின்றன. பெப்ஸ் ருசிமிகுந்தவை. வாய்கொப்பளிக்கும்மருந்துகளைவிட நீடித்திருப்பவை. எல்லா மருந்து வியாபாரிகளும் பெப்ஸ் ரூ. 1 - வீதம் விற்கின்றனர். ஏஜெண்டுகள்: மெஸர்ஸ் தாதா & கம்பெனி, பார்க் டவுன், மதராஸ்.

எப்பொழுதும் பெப்ஸ் உட்கொள்க.

PEPS

கிருமிநாச சுவாச மாத்திரைகள்.

சிறுவர் பகுதி

★

மித்ர த்ரோகி

★

ஆர். மருதப்பா

வேதபுரி என்னும் ஊரிலே கந்தன், ராமன், என்று இருவர் இருந்தனர். கந்தன் உழைப்பாளி. தான் கஷ்டப்பட்டு அதில் கிடைக்கும் பணத்தைக்கொண்டு ஜீவித்து வந்தான். ராமன் சுத்த சோம்பேறி:ஒருவிதக் கஷ்டமுமில்லாமல் பலரை ஏமாற்றியும் மோசம் செய்தும், வயிற்றை வளர்த்து வந்தான். அதைக் கண்ட கந்தன் அவனுக்கு எவ்வளவோ நல்ல புத்திமதிகளை சொல்லியும்; அவன் திருந்தாததால், சும்மா இருந்து விட்டான். ராமனின் மோசச் செய்கைகள, நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வந்தன. அதைக் கண்ட அவ்வூர் ஜனங்கள், அவனை வெறுக்க ஆரம்பித்தார்கள். தன்னுடைய மோசச் செயல் இனி இந்த ஊரில் பலிக்காதென்பதை உணர்ந்து, கந்தனிடம் சென்று, "கந்தா! நான் உன் வார்த்தையைக்கேளாமல், என் இஷ்டத்தைப்போல் நடந்துவந்ததின் பலனை இப்பொழுதுதான் அறிந்தேன். எனக்கு புத்தி வந்தது. என்னிடம் கொஞ்சம் பணமிருக்கிறது. அதை எடுத்துக்கொண்டு அடுத்த ஊருக்குப் போய்,ஏதாவதொரு வியாபாரம் செய்து ஜீவிக்கலாமென்று நினைத்திருக்கிறேன். நீ என் பாலிய நண்பனுதலால், உன்னை விட்டுப் போக எனக்கு மனம் வர வில்லை. நீயும் வேலையில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறாய். ஆதலால் என்னுடன் வந்துவிடு. வியாபாரத்தில் கிடைக்கும் லாபத்தை வைத்துக்கொண்டு சுகமாய் வாழலாம்'' என்றான்.

கந்தன், "தோழா! நீ புது மனிதனைய் மாறிவிட்டதைக் காண சந்தோஷமடைகிறேன். எனக்கு தற்போது வேலையில்லாமலிருந்தாலும், வேலை செய்த காலத்தில் செலவு போக மிச்சப்படுத்தி வைத்திருந்த பணத்தைக் கொண்டு இப்பொழுது கஷ்டமில்லாமல் ஜீவித்து வருகிறேன். நீ கூப்பிடுகிறபடியால் உன்னுடன் வருகிறேன். வியாபாரத்திற்கு மேற்கொண்டு பணம் வேண்டுமானலும், என்னிடமிருக்கும் பணத்தையும் கொடுக்கிறேன்.'' என்றான்.

மறுநாள் காலை இருவரும் கைப் பெட்டிகளுடன் காட்டு மார்க்கமாய் புறப்பட்டு, பகல் பூராவும்

நடந்தார்கள். இரவு வந்து விட்டது. ராமன் கந்தனை நோக்கி, "நண்பா! இருட்டில் மேற்கொண்டு நடக்க வழி தெரியவில்லை. ஆதலால் அதோ காணும் காளி கோவிலில்இந்த இரவைக் கழித்து விட்டு காலையில் ஊருக்குப் போகலாம்'' என்றான்.

கந்தன் அதற்கு சம்மதிக்க, இருவரும் தத்தம் பெட்டிகளை தலையின் கீழ் வைத்துக்கொண்டு, நித்திரை போனார்கள். நடந்து வந்த களைப்பினால் கந்தன் நன்றாக உறங்கிவிட்டான். அவன் எப்பொழுது உறங்குவானென்று எதிர் பார்த்திருந்த ராமன், அவன் தலையினடியில் வைத்துக் கொண்டிருந்த பணப் பெட்டியை எடுத்துக் கொண்டு,காலி பெட்டியை அவன் தலை கீழ் வைத்து விட்டு, வந்த வழியே ஊருக்குத் திரும்பிவிட்டான்.

நடு இரவில் நித்திரை கலைந்த கந்தன், தன் பக்கத்தில் படுத்திருந்த ராமனைக் காணாததினால் அதிக பீதியடைந்து, நான்கு புறமும் பார்த்து, அவன் இல்லையென்பதை நிச்சயித்துக் கொண்டு, தன் பெட்டியைத் திறந்து பார்த்தான்.



அது காலி பெட்டியாயிருக்கக்கண்டான். தன்னை ஏமாற்றவே இவ்வாறு சூழ்ச்சி செய்தானென்பதை உணர்ந்தான். அப்பொழுது சற்று தூரத்தில், மனிதர்களின் பேச்சுக்குரல் கேட்டது. அதைக் கண்ட கந்தன் பயந்து பெட்டியை மறைவான ஒரு இடத்தில் வைத்து விட்டு, கோவிலுக்கு எதிரிலிருந்த மரத்தின் மீது ஏறிக் கொண்டான். சற்று நேரத்திற்கெல்லாம் கறுத்து தடித்த நான்கு முரட்டு மனிதர்கள், கையில் தடியும் கத்தியுமாய் கோவிலுக்கு முன் வந்து நின்றார்கள். அவர்களில் ஒருவன் கையில் ஒரு மூட்டை காணப்பட்டது. அவன் கோவிலுக்கு எதிரிலிருந்த பாறையைப் புரட்டி அந்த மூட்டையைஅதில் வைத்து மறுபடியும், பாறையை மூடிவிட்டு மற்றவர்களை நோக்கி "அண்ணே! இந்த பணம் இங்கேயே இருக்கட்டும். நாளைக்குக் கிடைக்கும் பணத்தையும், கொண்டு வந்து பங்கிட்டுக்கொள்ளலாம்.'' என்று சொல்லி அவர்களை அழைத்துச் சென்றான்.

அவர்கள் சென்ற சற்று நேரம் கழித்து, கந்தன் மரத்தை விட்டிறங்கி பாறைக்கடியிலிருந்த, பண மூட்டையை எடுத்து பெட்டியில் வைத்துக் கொண்டு, ஊருக்குப் போய்ச் சேர்ந்தான்.

கந்தன் திரண்ட செல்வத்துடன் வந்திருப்பதைக் கண்ட, ராமன் தானும் காட்டிற்குச் சென்று, பணம் சம்பாதிக்க வேண்டுமென்னும், பேராசை கொண்டவனாய், மறுநாள் இரவு காட்டிற்குச் சென்று, கந்தன் ஏறிக்கொண்டிருந்த மரத்தின் மீது ஏறிக் கொண்டான். முன் இரவு வந்ததைப் போலவே நான்கு திருடர்களும், வந்து பாறையைப் புரட்டிப் பார்த்து, மூட்டையில்லாதிருப்பதை கண்டு ஏமாற்றமடைந்தார்கள். அதில் ஒருவன், "அண்ணே! நாம் எவ்வளவோ காலமாக கொள்ளை பணத்தை இங்கு வைத்திருக்கிறேன். அதில் ஒரு துரும்பும் அசைந்ததில்லை.'' என்றான்.

மற்றொருவன், "நம் ரகசியத்தை யாரோ தெரிந்துக் கொண்டிருக்கிறார்கள். கூடிய சீக்கிரத்தில் அவர்களை கண்டு பிடித்து, காரியத்தை முடித்தி விடலாம். இப்பொழுது கொண்டு வந்திருப்பதைப் பங்கிடுங்கள்'' என்றான்.

அப்பொழுது மரத்தில் இலைகள் அசையும் சப்தம் கேட்டது. கள்வர்கள் மரத்தைப் பார்த்தார்கள். ராமன் பதுங்கிக் கொண்டிருந்ததை ஒருவன் பார்த்து, "அண்ணே! நேற்று பணத்தை அடித்துக் கொண்டுபோனவன் இன்றைக்கும்வந்திருக்கிறான்'' என்று சொல்லிக் கொண்டே மரத்தின் மீதேறி, ராமனைக் கீழே தள்ளினான். அதைக் கண்ட ராமன் "நாமொன்று நினைக்க தெய்வமொன்று நினைத்து விட்டது. தோழனுக்கு செய்த துரோகத்திற்குப் பிரதிப்பலன் கை மேல் கிடைத்தது'' என்று சிந்தித்தபடி கள்வரின் மத்தியில் விழுந்தான். அவர்கள் கையில் வைத்துக் கொண்டிருந்த, தடியால் ராமனை நையப் புடைத்தார்கள். அந்த நிமிஷமே உயிர் துறந்தான். அவன் துரோகமே அவனை அழித்தது.

தமிழ் நூல்கள்

குழந்தைக்கட்டி	1	4
உலகரகசியம்	1	0
தக்ஷிணுத்யகானம்	2	8
தீனதயாளு	0	10
ஜெய காந்தன்	0	8
உசலாம்பிகை	2	4

சுதேசமித்திரன் ஆபீஸ், சென்னை

த்யாகராஜ கீர்த்தனம்

[காபிரைட்]

(சங்கீத வித்வான் துறையூர் எம். ராஜகோபால சர்மா)

I

பல்லவி

ஸர்வாந்தர்யாமி நீ வனே
ஸாம்ராஜ்யமு நிஜமே ராம!

அனுபல்லவி

நிர்வாஹமு லேனி யீ ஜனுல கனி
நிர்மலாத்முலெடு ஸைரிஞ்சிரோ கானி

சரணம்

தாரி தெலியலேரு கொந்-
தரு தரித்ருலைனுரு
துரஹங்காருலை பரம
நிக்ருஷ்ட மதாசாருலைனுரு
ஜாருலைனுரதி காக தாரு
மாரு பனுலு ஜேஸேரு ஸம்
ஸாருலைனுரு த்யாகராஜ ஸ்வாந்த
ஸதன! கபடமேமோ தெலிய

II

ஸர்வாந்தர்யாமி!	—எங்கும் நிறைந்த பொருளே!
ராம!	—ஸ்ரீராமா!
நீவு அனே	—உன் பக்தி என்கிற
ஸ்ாம் ராஜ்யமு	—ஸாம்ராஜ்ய பதவி (ஸகலத்திற்கும் மேற்பட்ட அதிகாரம் கொண்ட பதவி)
நிஜமே	—உண்மையானது (மற்றவை நிஜமானதல்ல)
நிர்வாஹமுலேனி	—செய்வகையறியாமல் உலகின் மாய்கையில் உழன்று அவஸ்தையுறும்
யீ ஜனுலகனி	—இவ்வுலகில் வாழும் பாமர ஜனங்களைக்கண்டு
நிர்மலாத்முலு	—பரிசுத்த மனதையுடைய மஹான்கள்
எடு ஸைரிஞ்சிரோ கானி	—எப்படி ஸகித்துக்கொண்டிருக்கிறார்களோ அறியேன்.
தாரி தெலிய லேரு	—சிலர் ஜன்மத்தைப் புனிதமாக்கிக்கொள்ளும் வழியை அறிந்துகொள்வதில்லை.
கொந்தரு	—வேறு சிலர்
தரித்ருலை னுரு	—வறுமைப் பிணியில் மூழ்கிக் கிடக்கின்றார்கள்
கொந்தரு	—வேறு சிலர்
துரஹங் கர்ருலை	—பிறர் வாழ்வதைக் கண்டு சகிக்காதவர்களாய்
பரம நிக்ருஷ்ட மதாசாருலைனுரு	—தங்கள் வர்ணாச்ரம தர்மங்களை விட்டொழித்து மிகவும் இழிவான ஆசார வழக்கங்களோடுத் திரியத் தலைப்பட்டனர்
ஜாருலைனுரு	—சிலர் அந்நிய ஸ்திரீகளிடம் மோகங்கொண்டு திரியலானார்கள்.
அதிகாக	—அதுவுமல்லாமல்
தாருமாரு	—தாருமாறாக (மனம் போனபடி)
பனுலு ஜேஸேரு	—காரியங்களைச் செய்யலானார்கள்
ஸம்ஸாருலு ஐனுரு	—பூலோக வாழ்வே இன்பம்,ஸ்திரம் என்று மயங்கி, பெண்டு பிள்ளைகளிடம் மோகம்கொண்டு பிறவிக் கடலில் மூழ்கிக் கிடக்கலானார்கள்
த்யாகராஜஸ்வாந்தஸ்தன!	—த்யாகராஜன் ஹ்ருதயத்தில் வசிப்பவனான ஸ்ரீராமா!
நீ கபட மேமோ தெலிய	—உன் கபடம், உன் திருவிளையாடல் எத்தன்மையானதோ அறியேன்!

III

இந்தக் கீர்த்தனத்தால் மாய்கையில் மூழ்கி இல்வாழ்க்கையின் இன்பமே பெரிதென்று எண்ணி பவ ஸாகரத்தில் உழன்று, கரையேற வகையறியாமல் தவிக்கும் ஜீவகோடிகளுக்கு, பகவத் சரணாரவிந்த பஜனமே இத்துக்கங்களிலிருந்து நீக்கி மோக்ஷ ஸாம்ராஜ்யத்தை அளிக்கவல்லது என்ற உண்மையை ஸ்வாமிகள் உபதேசிக்கிறார்.

ஸர்வாந்தர்யாமி:—ஸனத் குமார ஸம்ஹிதையில் நாரத மஹரிஷியால் அருளிச் செய்யப்பட்ட ராமஸ்தவராஜம் என்ற பகுதியின் கீழ் காணப்படும்.

பவோத் பவம் வேத விதாம் வரிஷ்டம்
ஆதித்ய சந்த்ரா நல ஸுப்ரபாவம் |
ஸர்வாத் மகம் ஸர்வ கத்ஸ்வரூபம்
நமாமி ராமம் தமஸ: பரஸ்தாத் || என்ற ச்லோகம் கவனிக்கத்தக்கது.

நீவனே ஸாம்ராஜ்யமு:—ராம பக்தி ஸாம்ராஜ்ய, ராம நதாஸுத என்ற கீர்த்தனங்களில் இவ்வுண்மையை விளக்கியுள்ளார்.

நிர்வாஹமுலேனி:—பிறவிக் கடலில் மூழ்கி மாய்கையின்கண் வயப்பட்டுத் தவிக்கும் ஜனங்களுக்கு ஞானோபதேசம் செய்வதால் பயனெதுவும் ஏற்படாது என்று தெரிவித்துள்ளார். இது போன்றே.

குழந்தைகளின் ஈரல் குலைக் கட்டிகளுக்கு பிரபல டாக்டர்கள் ஜம்மி வெங்கட்ரமணய்யாவின் "லிவர்க்யூரை"யே சிபார்சு செய்கிறார்கள்

ஜம்மி'ஸ்
லிவர் க்யூர்
போலிகளைக் கண்டு மோசம் போகாதீர்கள்
எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும் அல்லது
ஜம்மி வேங்கட்ரமணய்யா & சன்ஸ்.
1/1, பிராடீஸ் ரோட், மைலாப்பூர், மதராஸ்.
மற்றும் பம்பாய், கல்கத்தா, லக்ஷ்மணபுரி, பெங்களூர், திருச்சிராப்பள்ளி.

1 மணியில் வாலிபம்!
ரமண விலாசினி
வடிகா
கர்ம சக்தின்ய விருத்தி செய்து, துரித ஸ்கலிதத்தை நிறுத்தி, எல்லோருக்கும் சிற்றின்பத்தில் திருப்தியைத்தரும் பரம ஔஷதம். டப்பி ரூ. 1.
மதன மஞ்சரி பார்மஸி,
184, சைனாபஜார் ரோட், மதராஸ்

உங்களுக்கு
மலச்சிக்கலோ அல்லது
ரத்தக்கொதிப்போ அல்லது
மண்டை கனமோ அல்லது
தலைவலியோ அல்லது
மயக்கமோ அல்லது
வாய்துர்நாற்றமோஅல்லது
சருமப்படுவனோ இருந்தாலும்
உடனே பரீக்ஷியுங்கள்
காஸ்டபீன்
ருசி மிகுந்த சாக்லட் மல விரோசனி. மலச்சிக்கலை ஒழிக்க பத்திரமும் நிச்சயமுமான வழி.
குழந்தைகள், நடுவயதினருக்கும், ஆரோக்யம், பலத்தை அளித்திருக்கின்றது.
எல்லா மருந்து வியாபாரிகளிடமும் 2 சாக்லட் உள்ள பாகெட் ஒரு அணா. ஒவ்வொன்றும் 25, 50, 100 கொண்ட பாட்டில்களிலும் கிடைக்கும்.
CASTOPHENE
CASTOR OIL CHOCOLATES
ஏஜண்டுகள் :—
மெஸர்ஸ்:
சிவராம் & ஸ்வாமி லிமிடெட்.
154, நைனியப்ப நாயக்கன் தெரு, பி. டி., மதராஸ்.

வைத்த சுவரலம்பின் மண்போமே
மாயையிஞேர்க் கெத்தனே போதித்து மென்ன மெந்தாய் பராபரமே

என்று தாயுமான ஸ்வாமிகளும் மேற்கண்ட பராபரக் கண்ணியில் தெரிவித்துள்ளார்.

இத்தகைய ஜனங்கள் ஞானுபதேசத்தால் எவ்விதம் உய்யக்கூடும் அநித்யமான வாழ்வையே நித்யமென்று நினேக்கின்ருர்களே என்று மஹான்கள் அவ்வெளிய ஜனங்கள்பால் கொண்டுள்ள கவலையையே ஸ்வாமிகள் இங்கு குறிப்பிட்டுள்ளார்.

தாரிதேலியலேரு:—இந்தச் சரணத்தால் ஸ்வாமிகள் பொய்யான வாழ்க்கையை மெய்யெனக் கொண்டுதான் என்ற மதங்கொண்டு திரியும் பாமர ஜனங்களின் நிலைமையையும் அவரவர்கள் படும் அவஸ்தையையும் விவரித்துள்ளார்.

பர்த்ருஹரிஸுபாஷிதத்தில்,

க்ஷணம் பாலோ பூத்வா க்ஷணமபி யுவா காமரஸிக:
க்ஷணம் வித்தைர் ஹின: க்ஷணமபிச ஸம்பூர்ணவிபவ: |
ஜரா ஜீர்ணை: அங்கை: நட இவ வளீ மண்டித தனு:
நர: ஸம்ஸாராந்தே விசதி யமதானீயவனிகாம் || என்ற ச்லோகத்தில்

சொல்லப்பட்டுள்ள கருத்தும் ஸ்வாமிகள் சொல்லும் வண்ணம் உள்ளது.

நீ கபட மேமோ தேலிய:—

வாழ் வெனவுந் தாழ்வெனவு மிரண்டாப் பேசும்
வையகத்தார் கற்பனேயா மயக்கமான
பாழ் வலையைக் கிழித்து தறிச் செயல்போய் வாழப்
பரமே நின் ஞனந்தப் பார்வை யெங்கே. என்ற தாயுமான ஸ்வாமி

பாடலில், வாழ்வென்றும் தாழ்வென்றும் இரண்டாகப் பேசுகிற உலகத்தாரது கற்பனே யென்கிற மயக்கமாகிய பாழாகிய வலையை கிழித்து தறி விட்டு செயலற்று வாழ்வதற்கு, பரமவஸ்துவே, உனது ஆநந்த நோக்க மெங்கே? என்று தெரிவித்துள்ளார்.

ஸ்வாமிகள் இத்தகைய பாமர ஜனங்களே மாய்கையின் கண் வயப்படுத்தி ஒன்றுமறியாதவர்களாக இருத்தி வேடிக்கை பார்ப்பது எக்காரணத்தாலோ என்று பகவானே வினவுகிருர்?

IV

ராகம் பைரவி — ஆதி தாளம்

(20—வது மேள ஜன்யம்—ஸம்பூர்ணம்.)

பல்லவி

1.	; ரீ ரிகரீ	ஸ்கரிஸ ரிஸ ரிஸநீ	ஸா நிஸ	ரி ஸ ரீ	க ரி க க	ரிஸ நிஸ
	ஸர் வாங் . .	தர் . . . யா	மி நி .	. . வ	னே . . .	. . . .
2.	, நி ரிப மாபமகரி	ஸகரிஸ ரிஸ ரிஸநீ	ஸா நிஸ	ரி ஸ ரீ	க ரி ச க	ரிஸ நிஸ
	. ஸர் . வாங்	தர் . . . யா	மி நீ .	. . வ	னே . . .	. . . .
3.	, நி ரிக மாபம கரி	ஸகரிஸ ரிஸ ரிஸநீ	ஸா நிஸ	ரி ஸ ரீ	க ரி க க	ரிஸ நிஸ
	. ஸர் . வாங்	தர் . . . யா	மி நி .	. . வ	னே . . .	. . . .
	, ஸ ரிகமா ;	மக ரிக மகமா	க மா க	மபாம	த பா ம	கக ரிஸ
	. ஸாம் . ராஜ்	ய . மு . . நிஜ	மே . .	. . .	ரா . .	ம . . .
	நிஸ					
	. . (ஸர்வாந்தர்யாமி)					

அனுபல்லவி

1.	; பா பா, த	நிஸ்பா பதநீ தப	தம பா	தா நீ	ஸ்ா நீ	ஸ்ா ஸ்ா
	நிர் வா .	ஹ . மு லே	. . னி	. ஜ	னு ல	க னி
2.	; பா பா, த	நிஸ் நிஸ்ரி ஸ்நிதப	தம பா	தா நீ	ஸ்ாரிஸ்	ரீக்ரி ஸ்ா
	நிர் வா .	ஹ மு . : லே . . .	. . னி	. . ஜ	னு ல .	க , . னி
	க்ரிக்க்ரீஸ்க்	ரிஸ்ரிநிஸ்க்ரீ	ஸ்ா ;	ஸ்ப பா	தநிஸ்நி தப	பமகா ரிஸ
	நிர் . . ம லாத்	. . மு . லெ . டு	ஸை	நிஞ் . சி	ரோ . . .	கா . . னி .
	நிஸ					
	. . (ஸர்வாந்தர்யாமி)					

சரணம்

; பநிதப மத	பம கம பாமா	பதபத மா	பாபத	நீ தா	பா த ப
தா . ரி . தெ .	வி . ம் . லே .	ரு	. கொந்	. .	த ரு .
பம நித நிபதா	பாபம கரிகா மபதப	பமகா ரீ ;	நீ	ஸா ரீ	ஸ்ா ;
. . த . ரித் .	ரு லை . . . . னு . . .	. . . ரு	து	ர .	ஹம்
கீ நீ நிஸ ரீகரி	ஸா ; ; ரிக	மா ;	பா த ப	மபதப பமகா	ரீஸா
காரு லை	. பர	ம	நி க் ரு .	. . . ஷ்ட . .	மதா
; நீ நீ நிஸ	ரிகஸா ரிகமரி	க க ரீ	; ;	ரி ஸ நீ	ஸா ;
சாரு லை .	. . . னு . . .	ரு . ,		. . .	.
; மநி தப மத	பமகரி கா ;	; மப	தா பா	பம பத	பா ;
ஜா . ரு . லை .	. . . . னு	ரதி	கா க	தா . .	ரு
; நி தாப மா, த	பமகா ரீ ரிகா	; மம	பமபத பத	தபபம பமபா	; ;
மா . ரு ப .	னு . . லஜே .	ஸே . ரு . . .	. .	ஸம்	
; பா பா தநி	ஸ்ப பதநீ தப	தம பா	தா நீ	தா நீ	ஸ்ா ரீ
ஸாரு லை .	. . னு	. . ரு	. த்யா	க ரா	. ஜ
க்ரிக்க்ரீ ஸ்ா	ரீஸ்ா ஸ்ாரீ	ஸ்ப பத	நீ நிநி	தப பமகா	ரீ ரிஸ
ஸ்வாங் . . த ஸ	த ன . கப	ட . மே .	. மோ .	. . தெ . .	வி ய .
நிஸ					
. . (ஸர்வாந்தர்யாமி)					

(ஸங்கீத வித்வான் உமையாள்புரம் எஸ். வெங்கடராமய்யர் இந்தக் கீர்த்தனத்தின் வர்ணமெட்டை உதவினர்.)

நினைவிருக்கட்டும்

தேகாரோக்கியம் கெடாமலிருப்பதற்கு எப்படி கலப்பற்ற சுத்தமான உணவு உட்கொள்ளுகிருேமோ அதுபோலவே, கண்களுக்கும், மூளைக்கும் கெடுதல் நேரிடாது. ஞாபக சக்தியும் சுறு சுறுப்பும் அடைவதற்கு கலப்பற்ற 'பொடியே அவசியமென்பதை பொடி உபயோகிக்கும் சகோதரர்கள் அறிதல் வேண்டும். இவ்வித கலப்பற்ற பொடிக்கு மதராஸ் ஸ்ரீ அம்பாள் அண்டு கம்பெனி, யார் 35 ஆண்டுகளாக புகழ் பெற்றவர்களென்பது யாவரும் அறிந்ததே. பொடி வாங்கும்போது **ஸ்ரீ அம்பாள் பட்டணம் பொடியை**யே கவனித்து வாங்க நினைவிருக்கும்படி கேட்டுக் கொள்ளுகிருேம்.

பயஸ்யா

தாய்மாரகளே!

குழந்தைகளுக்கு தாய்ப்பால் தவிர மற்ற எந்த உணவும் ஏற்றதல்ல.

உங்கள் பாலை விருத்தி செய்து கொண்டு குழந்தைகளை நீங்களே ஆரோக்கியமாய் வளருங்கள்.

தாய்ப்பாலினுல் வளர்ப்பது ஆரோக்கியம் மட்டுமல்ல. மிகச் சிக்கனம்கூட.

பயஸ்யா. (Regd)

தாய்ப்பாலை மிகுதியாய் உண்டு பண்ணும் உத்தம ரஸாயனம்.

விலை ரூ. 2—8—0

(Packing & Postage Extra.)

எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.

அல்லது நேரில்:—

ஆத்ரேய ஆயுர்வேதிக் ஒர்க்ஸ், தென்னூர்ரோடு, திருச்சினுப்பள்ளி.

Prop. V. B. Nataraja Sastri, Ayurvedacharya.

(தாய்மாருக்கு உபயோகமுள்ள பயஸ்யா புஸ்தகம் இனம்.)

பச்சையப்பன் கலாசாலை

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

வருஷம் மார்ச்சு மாதம் 23-ந் தேதி பச்சையப்பன் கலாசாலை அஸ்திவாரக்கல்லை கவர்னர் எர்ஸ்கின்பிரபு நாட்டுவித்தார். சுமார் ஒரு வருஷ காலத்திற்குள்ளேயே கட்டிட வேலை யாவும் பூர்த்தியாகியது. 1940-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 12-ந் தேதி கவர்னர் ஸர் ஆர்தர் ஹோப் புதிய பச்சையப்பன் கலாசாலைக் கட்டிடத்தைத் திறந்து வைத்தார். அப்போது போர்ட் தலைவராக திவான் பஹதூர் டாக்டர் ஏ. லக்ஷ்மணசாமி முதலியார் சோபித்தார். இவ்வருஷம் 17-ம் தேதி இதன் நூற்றுண்டு விழா புதிய கட்டிடத்தில்: தற்சமயம் தர்ம பரிபாலன சபைத் தலைவர் குமாரராஜா ஸர் எம். எ. முத்தையா செட்டியார்.

சீரும் சிறப்பும்

இதன் புதிய கட்டிடம் சிறப்பாக அமைந்திருக்கிறது: மிகவும் விஸ்தாரமான அறைகள்; நல்ல காற்றுவாட்டமான இடம்; படிப்பில் சிரத்தையை வளர்க்கக்கூடிய பிரதேசம்: இக் கலாசாலை மற்றவைகளுக்குத் குறைந்தது அல்ல. நம் கல்வி விஷயத்தில் நம்மவர் செய்த முயற்சியின்மேன்மையையே இது

பச்சையப்பன் கலாசாலையில் படித்து பிரசித்தி பெற்ற மாணவர்கள் சிலர்: 1. சென்னை சட்டசபையில் முதன் முதல் மெம்பராக நியமிக்கப்பட்ட இந்தியர், ஆனரபிள் வி. சடகோபாச்சார்லு. 2. மைசூர் திவானுன ஸ்ரீ ஸி, ரங்காசார்லு. 3. திருவாங்கூர் திவானுன ஸ்ரீ வி. ராமய்யங்கார், ஸி. எஸ். ஐ. 4. தர்மஸ்தாபன நிர்வாகியாக இருந்து புத்தக ரிஜிஸ்திரராக இருந்த திவான் பஹதூர் வி. கிருஷ்ணமாச்சாரியார்.

கோஷிக்கிறது. முதன் முதல் சென்னை சட்டசபை மெம்பரர்க நியமிக்கப்பட்ட இந்தியர் ஆனரபிள் வி. சடகோபாச்சார்லு இங்கு தான் படித்தார்: தென்னிந்திய சமஸ்தானங்கள் பலவற்றைச் சிறப்புடன் நிர்வகித்த பல திவான்களும் இங்கு தான் படித்தனர்: பெரிய வித்யாதிகாரிகளும் இங்கு தான் படித்தனர்: "ஹிந்து" "சுதேசமித்திரன்" பத்திரிகைகளை ஸ்தாபித்த ஸ்ரீமான்கள் ஜி. சுப்பிரமணிய அய்யரும், எம். வீரராகவாச்சாரியாரும், உலக பிரசித்தி பெற்ற மஹாகனம் வி. எஸ். ஸ்ரீநிவாஸ சாஸ்திரியாரும் இக் கலாசாலையில் வித்யாதானம் செய்தனர்: காங்கிரஸ் மஹாசபைத் தலைவர்கள் இருவர் இக் கலாசாலையுடன் தொடர்பு கொண்டவர்கள்; ராய் பஹதூர் பி. அநந்தாச்சார்லு இங்கு பாடம் போதித்தார்: சேலம் ஸ்ரீமான் ஸி. விஜயராகவாச்சாரியார் இங்கு படித்தார்: பழைய மாணவர்களுள் பழையவர். அவர் தான் தற்போது. பச்சையப்பன் டிரஸ்டியாக இருப்பதே பெரிய கௌரவமாகக் கருதப் பட்டு வந்தது. இந்திய சமஷ்டி கோர்ட்டு நீதிபதியும், நம் மாகாண நீதிபதிகள் சிலரும் படித்தது இக் கலாசாலையில்தான் என்ருல், இதற்கு இதைவிட வேறு என்ன பெருமை இருக்க முடியும்?

சென்றவார நிகழ்ச்சிகள்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மிஸ்டர் அமெரி பேச்சு

மிஸ்டர் அமெரி 4-ந் தேதி செய்த பிரசங்க மொன்றில் குறிப்பிட்டதாவது:—

"பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகள் பிரிட்டனுக்குச் சமமாகப் பெற்றுள்ள அந்தஸ்தையும் சுதந்திரத்தையும் இந்தியாவும் பெற வேண்டு மென்பதே நம் கருத்து. யுத்தம் முடிந்த பின் கூடிய சீக்கிரம் இந்தியா அப்படிப்பட்ட அந்தஸ்தைப் பெற நாம் உதவுவோம்.

"சுய ஆட்சி வேண்டுமானுல் ஜனங்களெல்லோரும் ஒற்றுமைபட வேண்டியது அவசியம். இந்தியாவுக்குச் சுதந்திரம் கொடுக்கக் கூடியவர் இந்தியரே, இந்தியரிடை ஒற்றுமை யேற்படா விட்டால், நாமாக ஓர் அரசியல் முறையை வலுக் கட்டாயமாக இந்தியா மீது சுமத்த முடியுமா? ஐரோப்பிய நாடொன்றுக்கு நாம் ஓர் அரசியல் முறை வகுத்தால், அது எவ்வளவு உருப்படுமோ, அவ்வளவு தான் நாம் இந்தியா மீது சுமத்தும் அரசியல் முறையும் உருப்படும்."

* * * *

கர்னல் நாக்ஸ் அறிக்கை

"அட்லாண்டிக், பஸிபிக் இரு சமுத்திரங்களிலும் நம் ராணுவ நிலைமை அபாயகரமாகவே இருக்கிறது" என்று கர்னல் நாக்ஸ் சென்ற 2-ந் தேதி காங்கிரஸுக்கு அறிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:- ஒரு சமுத்திரத்துக்குப் போதிய கடற்படையைக் கொண்டே இரு சமுத்திரங்களிலும் போர்செய்ய நாம் முயன்று வருகிருேம். நம் பலத்தை அதிகப்படுத்த இன்னும் சில காலமாகும். துரிதமாகப் பலனேற்படாதும் உள்ளதைக் கொண்டு கூடியவரை பாதுகாப்பதே நாம் இப்போது செய்யக்கூடிய காரியம். இதற்கிடையே நம்பலம் முழுவதையும் கொண்டு உற்பத்தியை அதிகரிக்க வேண்டும்.

* * * *

எகிப்தில் புது மந்திரி சபை

நஹாஸ் பாஷா புதிய மந்திரி சபை அமைத்துவிட்டார்.

"ஆங்கிலோ-எகிப்து ஒப்பந்தத்தை நிறைவேற்றி வைப்பதில் எகிப்தின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாமல். அதை சுயேச்சையான ஒரு நேச நாடாக மதித்து அதனுடன் ஒத்துழைக்க வேண்டுமென்பதே பிரிட்டனின் கொள்கை" என்று பிரிட்டிஷ் ஸ்தானீகரான ஸர் மைல்ஸ் லாம்ஸன் புதிய பிரதம மந்திரியான நஹாஸ் பாஷாவுக்கு உறுதிமொழி கூறியிருக்கிருர்.

நஹாஸ்பாஷா ஸர் மைல்ஸுக்கு எழுதியிருந்த ஒரு கடிதத்தில் பின்வருமாறு தெரிவித்திருந்தார்:—

"ஆங்கிலோ-எகிப்து உடன்படிக்கைப்படியோ, ஒருசுதந்திர நாடென்ற முறையில் எகிப்துக்குள்ள அந்தஸ்தின்படியோ, பிரிட்டன் எகிப்தின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதற்கில்லை. இந்த நிபந்தனையின் பேரிலேயே நான் மந்திரி சபை அமைக்க ஒப்புக்கொண்டிருக்கிறேன்.

* * * *

அம்பாய்னுவில் பெரும்பாகம் எதிரி வசம்

அம்பாய்னுத் திவை (நியூகினிக் கருகில் இருக்கிறது) அதிகத் தொகையுள்ள ஜப்பானியப் படை தாக்கியது. இங்கு இன்னும் ஆயுதபாணிகள் மறைந்து நின்று எதிரிகளைத் தாக்கி வருகின்றனர்; இத் தீவில் பெரும்பாகம் ஏறக்குறைய ஜப்பானிய வசமிருக்கிறது. அம்பாய்னு தீவிலிருந்த படைகளில் ஒரு பகுதி தப்பி வந்துவிட்டது. மேற்கொண்டு தகவல்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. பாலம்பாங்கிற்கு அருகில் ஒரு விமானக்கூடத்தின் மீது குண்டுகள் வீசப்பட்டன. யந்திர பீரங்கிப் பிரயோகமும் செய்யப்பட்டது. சேதம் மிக்க குறைவாகும்.

* * * *

ரங்கூன் விமான நிலையத்தில் குண்டு வீச்சு

ரங்கூன் வடபாகத்திலுள்ள விமான நிலையம் இம்மாதம் 7-ந் தேதி பகல் 12 மணிவரையில் நான்கு தடவைகள் எதிரி விமானங்களினுல் தாக்கப்பட்டன. சேதம் அதிகமில்லை. ஒரு வருக்கும் காயமில்லை.

வளவனூரில் வடலூர் ஸ்ரீ ராமலிங்கஸ்வாமிகளின் தைப்பூச விழா சம்பந்தமாக பல்லாயிர ஏழைகளுக்கு அன்னமிடப்பட்டது. (வி. எஸ்.)

ஸ்வாத்னலாகெட்	0	12
ஜனசக்தி சாஸ்திரம்	0	2
வர்த்தக மித்திரன்	1	8
ஸ்வாராஜ்யம்	0	5
க்ருஷ்ண வேணி	2	0
ரத்ன மாளிகை	0	12

சுதேசமித்திரன் ஆபீஸ், சென்னை

நவநாகரீகம்

★

துஸ்து

★

காசினி எழுதியது

* * * 'என்ன இவ்வளவு நேரம்? வரப்போரேளா இல்லையா என்று தவியாய் தவிக்கப் போனேமே?' என்று மாலினியும், நளினதேவியுமாக அனரபிள் சிவன் மனைவியை வரவேற்றுர்கள்.

'அவள் வந்து உங்களுக்கு ஏதாவது ஆகவேண்டி இருக்கா?' என்று என் அத்தை கேட்டாள்.

'இல்லாமலா இப்படித் தவித்து, என் வருகைக்குத் தவம் கிடந்தார்கள்? சோழியன் குடுமி சும்மாக்கூட ஆடுமா?' என்று நகைத்த வண்ணம் ஆனரபிள் சிவன் மனைவி பதில் சொன்னுள்.

'என்ன விசேஷம்?' என்று என்னுடைய அத்தையும், 'ஏன் உங்களுக்கு இவ்வளவு நாழிகை?' என்று மாலினியும் மறுபடியும் கேட்டார்கள்.

'நானும் ஒரு மணியில் இருந்து புறப்படுகிறேன்; யார் யாரோ வந்து கொண்டே இருந்தார்கள்; அவாளை அனுப்பி விட்டு வர இவ்வளவு நேரம் ஆச்சுது. விசேஷம் ஒன்றுமில்லை. இவர்களுக்கு மருதாணி இட்டு விடுவதாகச் சொல்லி இருந்தேன்; அவ்வளவு தான்!' என்று ஆனரபிள் சிவன் மனைவி இவர்களுக்கு பதில் சொன்னுள்.

'மருதாணி இடப்போகிறீர்களா?' என்ற குரலில் ஆச்சரியம் தொனிக்கப் பக்கத்தாத்து பங்கஜம் கேட்டாள்.

'நாளைக்கு லேடி சுந்திராசாரி வீட்டுத் தோட்டக் கச்சேரி இல்லையா? இதுக்கு நாங்கள் மருதாணி இட்டுக்கொண்டு போகப் போகிறேம். 'விதேசிப் பொருளான நக வர்ணங்களை உபயோகிக்கப் போரதில்லை. இனிமேல் சுதேச துஸ்துப் பொருளான, மருதாணி, செம்பஞ்சு, மை இவைகளைத்தான் உபயோகிக்கப் போகிறேம். இதில் தேசிய அபிமானம் தவிர, முன் யோசனையும் கலந்து இருக்கிறது!' என்று நளினதேவி சவிஸ்தாரமாக சமாசாரத்தைச் சொன்னுள்.

'தேசிய அபிமானம் சமாசாரம் இவர்களுக்கு இந்த விஷயத்தில் எவ்வளவு தூரம் இருக்கிறது என்பது எனக்குச் சரியாகத் தெரியாது; ஆனல், வரும்முன் காப்போன் என்ற பெயர் இவர்களுக்கே தகும்!' என்று கூறி, ஆனரபிள் சிவன் மனைவி நகைத்தாள்.

சமாசாரம் இவ்வளவுதான். இப்பொழுது கிரீம, உதடு வர்ணம் நக வர்ணம்போன்ற துஸ்து சாமான்களில் உபயோகிக்கப்படும் சில சரக்குகள், யுத்தத்தில் உபயோகிக்கப்படும் வெடி குண்டுகள், பாம்கள் முதலிய தயாரிக்க அத்யாவசியமாக இருக்கிறதாம். யுத்தம் போகிற ரீதியைப் பார்த்தால் சட்டென்று முடிகிற வழியாக இல்லையே; இந்தப் பொருள்கள் நாளாக ஆக, துஸ்து-சாமான்கள் தயாரிக்க கிடைக்காமல் போய்விடலாம் என்ற சமாசாரத்தை இவர்கள் படித்தார்களாம். உடனேயே, ஏன் நம்ம தேசத்தில் செலவும் அதிகம் இல்லாமல், ஏராளமாகக் கிடைக்கும் துஸ்துப் பொருள்களை உபயோகிக்கக்கூடாது என்று தோன்றிறும். அந்த சமயம் தற்செயலாக அங்கு வந்த ஆனரபிள் சிவன் மனைவியை மருதாணியை எப்படி அரைப்பது என்று கேட்டார்களாம்.

'எரும்பைப் பிடித்து வைச்சு அரைக்கணம் என்பார்கள் இல்லையா?'

'எரும்பையும், ஈயையும் வைச்சு அரைக்க வேண்டாம். கடைசியில் இரண்டு சொட்டு எலுமிச்சம் பழ ரசத்தை விட்டால் போரும்!' என்று சொல்லி, மறுநாள் தான் மருதாணியை அரைத்து வருவதாகவும். எங்கள் வீட்டுக்கு அவர்கள் வந்தால் அத்தகைய அழகாக இட்டுவிடச் சொல்லுவதாகத்தான் சொன்னதாகவும் ஆனரபிள் சிவன் மனைவி சொன்னுள்.

'கடைசியில் என்னைத் தானு பிடிச்சீர்கள்?' என்று கூறிவிட்டு, என் அத்தை இவர்களுக்கு மருதாணி இட்டுவிட்டாள். நளினதேவியின் இடது உள்ளங்கையில் ஒரு சிறிய தாமரைப் பூ மாதிரியில் சுண்ணும்பில் வரைந்து மருதாணி இட்டாள். துவரம் பருப்பைக் கோலம் மாதிரியில் மாலினி கையில் கழித்தி இட்டாள். பருப்பு இருந்த இடம் வட்ட வட்டமாக வெளுப்பாகவும் மற்ற இடம் சிவந்தும் அழகாக இருந்தன.

ஆழ்ந்த ஆரஞ்சு வர்ணக் கதர் புடவை உடுத்தி, தலையில் சிகப்பு ரோஜாப்பூக்களை இலையுடன் கொத்தாகப் பறித்துச் சூடி, காலில் சிகப்பு வெல்வெட் சடாப் போட்டு, மிகவும் அழகாகச் சிங்காரித்துக் கொண்டு லேடி சுந்திராசாரியின் தோட்டக் கச்சேரிக்கு நளினதேவி வந்திருந்தாள்.

மாலினி, சிகப்பில் வெள்ளைப் புள்ளிகள் போட்ட புடவை கட்டி, மல்லிகையும், அசோக மொட்டுகளும் சேர்த்துக் கட்டின பூ மாலையைக் கூந்தலில் சுற்றி, வெள்ளை மணி சிகப்பு மணி கோத்த கைப்பையைப் பிடித்துக்கொண்டு, காலில் சிறிய பாதசரம் பொட்டு! உய்யார நடை நடந்து வந்தாள்!

இப்போதுஎல்லாரும்என் அத்தையை எனக்குக் கொஞ்சம் மருதாணி இட்டு விடுங்கோளேன் என்று ஓயாமல் கேட்கிறுர்கள். என் அத்தை தான் ஒரு அழகுக் கூடம் திறக்கப் போவதாகக் கேலி பண்ணுகிறுள். தினுசு, தினுசாக இவர்களுக்கு மருதாணி இட்டு, அலங்காரம் செய்துவிடுவதில் என் அத்தைக்கு ஒரு அலாதி சந்தோஷம் இருக்கத்தான் செய்கிறது.

புதிய வெலிங்டன் பிரபு ராயல் ஆகாய விமானப் படையில் உத்தியோகமேற்றிருக்கிறுர். (இ. என். பி.)

FREE

ART PHOTO ALBUM

French Art Photos of beautiful young girls in charming poses are sent against /5/- postage stamps with one album free. Limited albums left Order now lest you be disappointed.

LONDON COMMERCIAL CO.

P. B 165 (S M M.) LAHORE (INDIA)

(E A B)

தற்கால நிலைமையை உத்தேசித்து விலைகளை மிகவும் குறைக்கப்பட்டிருக்கிறது.

புது மாதிரி பெங்களூர் பட்டு சேலைகள்
நவீன ஜரிகை பார்டர் பனரஸ் சேலைகள்
அழகிய கரைகளுள்ள நாணய நூல் சேலைகள்
வேஷ்டிகள் : : அங்கவஸ்திரங்கள்

ரு. பழனியாண்டி பிள்ளை & சன்ஸ்,

"பழனி ஹவுஸ்" (சௌகார்பேட்டை சமீபம்) பி. டி., மதராஸ்.

புடலங்காய்க் கூட்டு

பிஞ்சுப் புடலங்காயை வட்ட வட்டமாக அப்படியே நறுக்கிக்கொள்ள வேண்டும். அடுப்பில் மட்டாக ஜலம்வைத்து திடமாக உப்பு போட்டு, நறுக்கி அலம்பின புடலங்காய்த் துண்டுகளை இதில் போட்டு வேக வைக்க வேண்டும். காய் சீராக வெந்ததும் நன்ருக வெந்த துவரம் பருப்பில் கொஞ்சம் போட வேண்டும். பருப்பு போடாமலும் இந்தக் கூட்டைப் பண்ணலாம். துவரம் பருப்புக்கு பதிலாக, இளம் வருவலாக வருத்து வெந்த பயற்றம் பருப்பையும் போடலாம்.

தான் வெந்தானதும், கொஞ்சம் மிளகு, இரண்டு சீரகம் இரண்டையும் அம்மியில் வைத்து பொடித்து, கொஞ்சம் நெய்யில் பொரித்துக் கொதிக்கும் கூட்டில் கொட்ட வேண்டும். இரண்டு கொதி வந்ததும் சக்கையும் சாருமாக ஓடாமல், கூட்டுச் சேர்ந்து இருக்கும்படி மிகவும் கொஞ்சமாக மாக் கரைத்து விட்டு, ஒரு கொதி வந்ததும், இறக்க வேண்டும், கடுகு தாளித்து. கருவேப்பிலை போடவேண்டும். இந்தக் கூட்டு நல்ல மணமாகவும் ருசியாகவும் இருக்கும். பத்தியத்திற்கு தாராளமாக உபயோகிக்கலாம். மற்றைய விவரங்கள் அடுத்த கடிதத்தில்.........

அட்டைப் படம்

ஸ்ரீமான் வி. வி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார். சென்னை ஹைக்கோர்ட் மாஜி நீதிபதி. பச்சையப்பன் கலாசாலை மாணவர். பச்சையப்பன் தர்ம நிர்வாகிகளின் முதல் தலைவராக விருந்த போலீஸ் ராகவாச்சாரியின் பௌத்திரர்: கலாசாலையுடன் நீடித்த தொடர்பு கொண்ட குடும்பத்தைச் சேர்ந்தவர்.

FREE!

If you are suffering from any malady or are worried for any reason whatsoever you are advised to write to me in full confidence giving detailed account as far as possible. You will get very valuable advice absolutely FREE and without any obligation.

ANAND SWAMI

P. B. 61 SMM Lahore, India)
(E A B)

சித்திரமும் சிருங்காரமும்

"ஆகாயத்தில் போராடுவோர்"

பில் மொர்ஸிடிஸ் ஒரு காலத்தில் பெரிய ஆசாமி. ஆனல் குடிகாரன்: இதனல் அவனுக்கு எங்கும் வேலை கிடைக்கவில்லை. சகோதரி கே என்பவளுக்கு அவனிடம் மிகுந்த ப்ரீதி: எழுத்தில் சாமர்த்தியம் வாய்ந்தவள். ஒரு கம்பெனி சொந்தக்காரரான டான் மக்ளீனிடம் வேறு ஏதோ பொய்ப் பெயரைச் சொல்லி, தன் சகோதரனுக்கு அவள் உத்யோகம் சம்பாதிக்க முயற்சித்தாள்: மிகவும் வேகமாகப் பறக்கும் விமானம் ஒன்றைத் தயாரிக்கும் போட்டியில் மக்ளீன் ஈடுபட்டிருக்கிறுர்: மக்ளீனுக்கு பண உபத்திரவமும் அதிகம். மார்டின் ஏமிஸ் முதலிய இஞ்ஜினீயர்களுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை.

மக்ளீனும், ஏமிஸும் ஒரு ஹோட்டலுக்குப் போகின்றனர். அங்கு பில் அவர்களைச் சந்திக்கிறுன்: அவன் தனக்கு ஏதாவது வேலை கொடுக்கும்படி மக்ளீனைக் கேட்க, அது மறுக்கப்படுகிறது. பர்தட் என்ற லேவாதேவிக்காரர் மக்ளீன் புதிய கப்பல் கட்டுவதற்கு உயர்தர வட்டி விகிதத்தில் கடன் கொடுக்க சம்மதிக்கிறுர். மக்ளீனுக்கு வேறு வழி இல்லை: ஒன்று வட்டி கொடுக்க சம்மதித்து அத்ருஷ்டத்தை எதிர்பார்க்கவேண்டும்: அல்லது ஆசை மோசம் போய் நிற்கவேண்டும்.

ஆகாயக்கப்பலை நிர்மாணிப்பவர்களுக்கு இயற்கை அமைப்பு பற்றி குழப்பம் ஏற்படுகிறது. இது விஷயமாகவே தன் சகோதரனுடன் பேசுகிறுள். அவன் ஒரு புதிய யுக்தியை அவளிடம் எடுத்துச் சொல்கிறுன். மார்டின் ஏமிஸ் அவசரம் அவசரமாக நிர்மாண வேலையைப் பூர்த்திசெய்கிறுன். இதற்கப்புறம் பிரபல விமான ஓட்டியான, டிக் ஆலர்டனை மக்ளீன் வரவழைத்து, விமானத்தின் போக்கைப் பரீக்ஷிக்கும்படி வேண்டுகிறுன். ஆலர்டனுக்கும் மார்டினுக்கும், கே விஷயமாக தகராறு தோன்றுகிறது. ஆயினும், ஆலர்டன் விமானத்தை நன்கு பரீக்ஷை பண்ணுகிறுன். பின்பு கே மார்டினிடம், சகோதரனை பில்லை அறிமுகமாக்கி வைக்கிறுள். பில் தான் விமான அமைப்பில் நிபுணன் என்பது மார்டினுக்குத் தெரிந்ததும், அவனுக்கு ஏற்படும் ஆச்சர்யத்திற்கு அளவே கிடையாது. எல்லோருமாகச் சேர்ந்து ஆலர்டவன் நடத்தும், பரீக்ஷைகளையும் அவை மிகவும் திருப்திகரமாக இருப்பதையும் பார்த்து மகிழ்கின்றனர். பரீக்ஷையின்போது, திடீரென்று விமானம் கீழே இறங்கியது, அவர்களது சந்தேகத்தை எழுப்பியது: இறக்கை சற்று வளைந்ததாகவும், வேடிக்கை செய்தால் அது உடைந்துவிடும் என்று பயந்ததாகவும், ஆலர்டன் மார்டினிடம் கூறுகிறுன்.

மார்டினும் மக்ளீனும் ஆலர்டனுடைய அபிப்பிராயத்தை மாற்ற முடியவில்லை. அப்போது ஒருவருக்கும் சொல்லாமல் பில் விமானத்தில் கிளம்புகிறுன்; வெகு வேகமாகப் பறக்க விடும்போது, இறக்கை உடைந்து விடுகிறது. விமானம் கீழே விழுந்து பற்றி எரிகிறது. பில் மிகவும் ஜாக்கிரதையாக கீழே இறங்கி விடுகிறுன், மார்டினுக்கு கோபம் பிறக்கிறது. கேயும் பில்லும் வெளிக்கிளம்பும்படி உத்திரவிடுகிறுன். பர்தட்டிடம் மக்ளீன் போய், வேறு ஒரு புதிய விமானம் கட்டுவதற்கு பணம் கடன் வாங்குகிறுன்; புதிய விமானமும் விரைவில் நிர்மாணிக்கப்படுகிறது; மார்டினுக்கும் பில் கதி தான் கிடைக்கிறது!

பின்னர் மார்டின் கேயிடம் தன்னை மணக்கும்படிக் கேட்கிறுன். கே தன் சகோதரன் பில் உதவியால் ஒரு புதிய விமானம் கட்டத் திட்டம் தயாரிக்கிறுள்; ஆகவே மார்டின் மீண்டும் விமான அமைப்பில் முனைகிறுன். இந்த விமானம் பூர்த்தியானதும், இது மிகவும் ஆச்சர்யகரமாகப் பறக்கிறது; அந்த விமானம் கீழே இறங்கும் சமயத்தில், அதில் ஒரு கோளாறு ஏற்பட, பில் வேறு ஒரு விமானத்தில் மேலே பறந்து, மிகுந்த சாமர்த்தியத்துடன் அந்த கோளாறை, ஆகாய மார்க்கத்திலே இருந்து கொண்டே சரிப்படுத்துகிறுன். தீர முயற்சி காரணமாக பில் மரண காயமடைகிறுன். விமானம் மட்டும் பத்திரமாகக் கீழே இறங்குகிறது. மக்ளீனுக்குக் காரியம் சித்திக்கிறது. மார்டினும் கேயும் மணக்கின்றனர்; பில் வாழ்க்கையும் பயன் அடைந்தது.

இதில் பில் மொர்ஸிடிஸாக ரிச்சர்ட் டிக்ஸ், மார்டினுக கெண்ட் டேலர், மக்ளீனுக எட்மண்ட் லோ. கேயாக வெண்டி லாரி ஆகியோர் மிகச் சிறப்பாக நடித்திருக்கின்றனர்.

இந்த "ஆகாயத்தில் போராடுவோர்" (Men against the sky) என்ற ஆர். கே. ஓ ரேடியோ படத்தை அமெரிக்காவில் பத்திரிகைகள் எல்லாம் புகழ்ந்து கொண்டாடின. இந்தப் படம் காட்டப்படும் 70 நிமிஷ நேரமும், நமக்கு பொழுது போவது மிகவும் திருப்திகரமாக இருப்பதாக அவை யாவும் எழுதின. விமானத்தில் இருந்து கொண்டு செய்யும் பிரமிக்கத்தக்க காட்சிகள் நிரம்பியது இந்தப் படம். உயிரையும் லக்ஷியம் பண்ணுமல் எவ்வளவு! துணிச்சலுடன் ஆகாயத்தில் பறக்கின்றனர்! ஒவ்வொரு நிமிஷமும் நமக்கு எவ்வளவு பயம்! விமான ஓட்டியைப் பற்றி நமக்கு எத்தகைய கவலை! இத்தகைய மனப்பான்மை நம்முள் தோன்றுவது ஒரு புறமிருக்க, மற்று மொரு புறம் கதையில் காணும் காதல் கட்டமும் கவர்ச்சி தருகிறது.

இந்தப் படம் நியூ எல்பின்ஸ்டனில் இம்மாதம் 18-ம் தேதி முதல் நான்கு தினங்கள் காட்டப்படும்.

"ஆகாயத்துடன் போராடுவேன்" படத்தில் நடிக்கும் லேஸ்டி பாரியும் கேண்ட் டேலரும்

* * * * *

மேரி டுகான் விசாரணை

மெட்ரோ-கோல்ட்வின் மேயர் தயாரிப்பான 'மேரி டுகான் விசாரணை' (Trial of Mary Dugan) இம்மாதம் 14-ம்தேதி முதல் க்ளீனேவில் காட்டப்படும்' இதில் ராபர்ட் டங்கும் லரேன் டேயும் நடிக்கின்றனர்,

பேயார்ட் வீலர் என்பவர் எழுதிய ஒரு நாடகத்தைத் தழுவியது இப்படம். ஒரு சிறுமி இளங் குற்றவாளிகள் விடுதியில் அநியாயமாக அடைத்து வைக்கப்படுகிறுள; அவள் அங்கிருந்து தப்பியோடுகிறுள். பிறகு ஒரு நியாயவாதியைச் சந்திக்க, அவர் அவளை மணக்க விரும்புவதாகத் தெரிவித்து. இருவரும் தென் அமெரிக்கா போய்விடலாமென்று சொல்கிறுர். இதற்கு அவள் இணங்குவது அசாத்தியமாகிறது. ஏனெனில் அவள், தான் யார் என்று சொன்னுல்தான், பிரயாண அனுமதிச் சீட்டு அவளுக்குக் கொடுக்கப்படும்.

பிறகு அந்த நியாயவாதி மட்டும் புறப்பட்டுப் போகிறுர். ஒரு வருஷம் கழித்து அவர் திரும்பியபோது, அவள் தனக்கு முன்னர் சகாயம் புரிந்த ஒருவரைக் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு விசாரணையில் இருப்பதைக்காண்கிறுர். குற்றவாளிக்காக ஆஜராகும் நியாயவாதி, இந்த வழக்கை அரை மனதுடன் நடத்துவதைக்கண்டு. தாமே வழக்கை மேற்கொண்டு நடத்த முன் வருகிறுர். வழக்கு மிகவும் ருசிகரமாக நடக்கிறது. கடைசியில் அந்த நியாயவாதி குற்றவாளி அந்த ஸ்திரீ அல்ல என்பதை ருஜுவாக்கியதுடன், உண்மைக் குற்றவாளியைக் கண்டுப்பிடிக்கவும் வழி காட்டுகிறுர். ஆரம்பம் முதல் கடைசி வரை உள்ளத்தை கொள்ளை கொள்ளும் கதை. தன் ரகசியத்தை மறைத்து வைக்க சிரமப்பட்டதின் விபரீதம் மிகவும் கொடிதாக மாறுவதைப் படத்தில் காணலாம்.

* * * * *

டைரோன் பவர்

தமது பாட்டனுரின் பிதா, சுமார் ஒரு நூற்றுண்டுக்குமுன்பு எழுதிய ஒரு கதையில் டைரோன் பவர் நடிப்பார்.

டைரோன்பவர் ப்ரபிதாமஹர் வேடிக்கையான கதைகளை எழுதுவதில் நிபுணர் எனப் பிரசித்திபெற்றவர். அவர் எழுதிய நவீனங்களுள் மிகப் பிரசித்திபெற்றது "அரசரின் ரகஸ்யம்" என்பது இங்கிலாந்தில் 18-ம் நூற்றுண்டில் நடந்த சில சம்பவங்களை அஸ்திவாரமாகக்கொண்ட கதை: வீரமும் தீரமும் செறிந்த சரித்திரம்.

டைரோன் பவர் சமீபத்தில் மேற்படி புத்தகத்தின் பிரதிகளைப் பார்த்துக்கொண்டு வரும்போது, இது சினிமாக் கதைக்கு மிகவும் ஏற்றதாக இருக்கும் என்பதைக் கண்டார். அதை புரொட்யூஸர் வில்லியம் பெர்ல்பர்க்கிடம் காட்டியபோது அவர் இதைப்படம் பிடித்தால் அதில் டைரோன் பவர் நடிக்கலாம் எனத் தெரிவித்தார்.

இந்த "அரசரின் ரகஸ்யம்" என்ற படத்தில் நடிக்க ஆரம்

பிப்பதற்கு முன், அவர் வேறு இரண்டு படங்களில் நடிக்க வேண்டியதாயிருக்கிறது. இப்போது டரில் ஸனுக் தயாரிக்கும் "ஸன் அப் ப்யூரி" என்ற படத்தில் அவர் நடிக்கிறார்: மெஸன் மார்டிலர் என்பவர் எழுதிய பிரசித்தி பெற்ற நவீனமான "பென்ஜமின் ப்ளேக்" என்பதை இது அடிப்படையாகக் கொண்டது.

டைரோனின் பாட்டனார் அயர்லாந்து வாசி. அவர் பல விசைகள் அமெரிக்காவுக்குப் போய்வந்தவர்.

* * * *

வாழ்க்கை படங்கள்

நேஷனல் ஸ்டூடியோக்காரர் இப்போது ஸர் ஸையது ஆமத்கான் சரித்திரத்தைப்படம் பிடிப்பதில் முனைந்திருக்கின்றனர் இதேமாதிரி பால கங்காதர திலகரின் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்ட வேறு ஒரு பம்பாய் பிலிம் கம்பெனி முயன்று வருவதாகவும் தெரிகிறது.

* * * *

பாஞ்சோலி சித்ர படம்

பாஞ்சோலி சித்ர பட அதிகாரிகள் தங்களது மூன்ருவது ஹிந்தி படத்தை இப்போது தயாரிக்கின்றனர். 'ஜமீன்தார்' என்ற பெயர் கொண்ட இந்தப் படத்தில் சாந்தா ஆப்தே நடிக்கிறார்: இது காரணமாக ஆப்தே "பூஞ்ஜி" என்ற படத்தை ஒத்தி வைப்பது அவசியமாகிறது. மோதி கித்வானி டைரக்ஷன் கீழ் ஸ்ரீ பாஞ்சோலி இப்படத்தைத் தயாரிப்பார்.

* * * *

படத்திலுமா சோகம்?

"நாம் சிரிப்போம்; நம்முடன் மற்றவர்களும் சிரிப்பார்கள்: நாம் அழுவோம்: ஆனல் நம்முடன் சேர்ந்து அழ ஒருவரும் வரமாட்டார்"-எங்கு பார்த்தாலும யுத்த வெறி தாண்டவமாடும் இந்தக் காலத்திலும் இந்தவாக்கியத்தின உண்மை லகுவில் புலப்படும். இங்கிலீஷ் மந்திரி சபையில் ஸ்தானம் வகிக்கும் லார்ட பீவர்ப்ரூக் இந்த உலகத்தில் நாம் தற்சமயம் சிரித்துக்கொண்டு வேடிக்கையாக இருக்கமுடியும் என்று கருதுகிறார். "ஆகாய விமானப் படையில ஒரு அமெரிக்கர்" என்ற படத்தை இருபதாம் நூற்றூண்டு பாக்ஸ் கமபெனிக்காக தயாரித்துக் கொண்டிருந்த டரில் ஸனுக்குக்கு அவர் ஒரு கடிதம் எழுதியதாகவும், அதில் அவர் சோகத்திற்கும் வருத்தத்திற்கும் இடம் கொடுக்கக்கூடாது என்று குறிப்பிட்டிருப்பதாகவும் தெரிய வருகிறது. "படத்தில் எவ்வளவு வேடிக்கை புகுத்தபபட்டிருக்கிறதோ அவ்வளவும் நமக்கு திருப்தி தான்" என்கிறார் பீவர்ப்ரூக் பிரபு. இதற்கப்புறம் கதை இந்த யோசனைக்கு ஏற்ற விதமாக மாற்றியமைக்கப்பட்டது. கதையில் பெரும் பகுதி படம் பார்ப்பவர்களை மகிழ்விக்கச் செய்கிறது: மிகுந்த தீரம் நிறைந்தது. இந்தப் படத்தை டைரக்ட் செய்யும் ஹென்ரி கிங், பீவர்ப்ருக் கூறிய வார்த்தைகள் வாஸ்தவமானவை என்றும், படக்காட்சியில் சோகம் மேலிடக் காரணமில்லை என்றும் கூறுகிறார். பத்திரிகையில் தினமும் உள்ளத்தை உருக்கும் செய்திகளைப் படிக்கும் நாம் படத்தில் கூடவா அவற்றைப் பார்க்க வேண்டும் என்கிறார் கிங்,

* * * *

ஹஸ்னு பனு

சினிமா நடிகர்களது வாழ்க்கை மிகவும் சௌகர்யமானது என்றும், அவர்களைப் போன்ற சுக ஜீவிகள் கிடையாது என்றும் எண்ணுவது பிசகு.

"என் வாழ்க்கையில் ஒவ்வொரு நாளும், நிமிஷத்திற்கு நிமிஷம் சதா வேலைதான். ஒரு சமயம் பரபரப்பு, மற்றுமொரு சமயம் கவலை, வேறு ஒரு சமயம் ஆவல், இவ்வாறு ஒவ்வொரு நிமிஷமும் கழிந்து போகிறது" என்கிறார். நேஷனல் ஸ்டூடியோவைச் சேர்ந்த பிரபல சினிமா நக்ஷத்திரம் ஹஸ்னு பனு.

இப்போது நேஷனல் ஸ்டூடியோவின் "ஜவானி காஸம்" என்ற படத்தில் அவர் நடித்து வருகிறார். இப்போது இந்தப் படப்பிடிப்பு சமயத்தில் தினசரி வாழ்க்கை ஒரு யந்திர வேகத்துடன் நடப்பதாக அவர் கூறுகிறார். காமிரா வெகு சுலபமாகப் படம் பிடிக்கிறது: ஆனல் நடிகரின் சிரமத்தை மட்டும் அது காண்பதில்லை என்கிறார் அவர்.

காலை 5 மணிக்கே அவர் எழுந்து விடுகிறார். முதலில் சங்கீதாப்யாசம்: பிறகு அவசரம் அவசரமாக ஸ்நானம்: அதற்கப்புறம் காலைப் போஜனம. அவ்வளவுதான்! வேறு எதைப்பற்றி சிந்திக்கவும் அவகாசம் இருப்பதில்லை. வெகு வேகமாகச் ஸ்டூடியோவுக்கு விரைந்துசெல்வதுதான் அடுத்த காரியம. நேஷனல் ஸ்டூடியோவுக்கு வந்தவுடன் அன்றைய தினம் செய்யவேண்டிய வேலை விவரத்தை முதவில் கவனித்துக்கொள்கிறார்: பிறகு அன்றைய படப் பிடிப்புக்கு அவசியமான ஆடைகளை அணியச் செல்கிறார்; பிறகு முக அலங்காரம்; இதற்குள் 9–30 மணி அடிக்கிறது. படப்பிடிப்பு காரியமும் மும்முரமாக ஆரம்பிக்கிறது.

காலை 9-30 மணி வரை அவருக்குச் சிறிதாவது ஓய்வு கிடையாதாயினும், அதுவரை அவருடைய தினசரி அலுவல் ஆரம்பித்தபாடில்லை எனலாம்: தமது பாடத்தைப் படித்து தமது வாக்கியங்களை ஞாபகப்படுத்திக் கொள்கிறார்: நடிப்பதற்கு அவர் தம்மைத் தயார் படுத்திக் கொண்டு வரும்போது, ஒருவன் வந்து எல்லாம் சித்தமாக இருப்பதாகக் கூறிவிட்டுப் போகிறான்.

கடைசியாக ஒரு காட்சி ஒத்திகை க்ஆரம்பிகிறது; அது டைரக்டருக்குப் பிடிக்க வில்லை; அதிருப்தி காட்டுகிறார்; மறுபடியும் அதே காட்சி நடிக்கப்படுகிறது; இதுவும் மனதுக்குத் திருப்தி தரவில்லை. இவ்வாறு காட்சி மறுபடியும் மறுபடியும் நடிக்கப்படுகிறது கடைசியில் எதிர் பார்த்த படியான நடிப்பு! காட்சியும் படம் பிடிக்கப்படுகிறது. முதல் காட்சி முடிந்ததும் ஹஸ்னு பனு சற்று விச்ராந்தியடைகிறார்: இந்த சமயத்தில் அடுத்த காட்சிககானஜோடிப்புகளும் ஏற்பாடுகளும் தயார் செய்யப்படுகின்றன. இதெல்லாம் ஆனதும் மறுபடியும் படப்பிடிப்பு. இவ்வாறு ஒரு காட்சிக்கும் மற்ருெரு காட்சிக்கும் இடையே கிடைக்கும் அவகாசத்தில் அவர் ஏதாவது நவீனத்தையோ பத்திரிகையையோ படிப்பது வழக்கமாம். படப் பிடிப்பு வேலையில் இராத சமயத்தில் அவர் நடனத்திலும் சங்கீதத்திலும் சிரத்தை காட்டுவாராம். அன்றைய தின வேலை முடிந்ததும், முந்தியநாள் பிடிக்கப்பட்ட காட்சிகள் அவருக்குக் காட்டப்படும். அப்போது அவர் பரீக்ஷையின் முடிவை ஏப்படி ஒரு மாணவன் ஆவலுடனும் பயத்துடனும் எதிர்பார்ப்பானே அதே மாதிரி இருப்பது வழக்கமாம். வீடு திரும்பியதும் முதலில் தூக்கம்: பின்பு அடுத்த நாள் காட்சியைப்பற்றிய சிந்தனை.

FREE!

மாதம் ரூ. 575 சம்பாதிக்க வேண்டுமென்ற அபிப்பிராயமிருந்தால் எமது உண்மையான அமெரிக்கன் நியூ கோல்ட் சம்பந்தமான பூரா விவரங்களுக்கு எழுதவும். உரைக்கல்லில் உண்மை தங்கத்தைப் போலிருப்பதுடன்மட்டுமின்றி ... பிரேட்டுகளாகவும் அடிக்கலாம், நிறம் மாறுவதில்லை. எமது தங்கத்தா செய்யப்பட்ட எல்லாவித நகைகளும் எம்மிடம் கிடைக்கும். 6 தோலா அமெரிக்கன் நியூ கோல்ட் 2 ஜோடி அழகிய கைவளையல்கள், 2 ஜோடி கடுக்கன், 2 மோதிரம் முதலியன சாம்பிளாக அனுப்பப்படும்.

இலவசம்:—நகைகளின் பூரா காட்லாக், விவரங்கள் இலவசமாக அனுப்பப்படும் இன்றே எழுதுங்கள்.

American New Gold Co.
P. B. 61 (S·M M.) Lahore India)
(EAB.)

சுத்த சவரன்

தங்கத்திலிருந்து

வீகம்ஸீ நகைகள் செய்கிறார்கள்

VEECUMSEE
CHABILDOSS & SONS
JEWELLERS & DIAMOND MERCHANTS
ESTABLISHED 1893
CHINA BAZAAR ROAD, MADRAS

கர்ப்பத்தை நிறுத்த

லில்லி கர்ப்பத்தடை மாத்திரைகளை வருஷத்தில் 4 நாள் சாப்பிடுங்கள். இம்மாதிரி வருஷத்திற் கொரு தரம் சங்கடமான கர்ப்பத்தடை மருந்துகள், 'பிஸாரி முதலியன வேண்டாம். ஆயுள் முழுதிற்கும் உத்தரவாதம். ஆரோக்யம், மாதவிடாய் இவற்றைப் பாதிக்காது. விலை ரூ. 3. வி. பி. செலவு தனி. விவரங்களுக்கு :

LILY PRODUCTS Mfg Co.,
COLABA BOMBAY.
கடிதம் ஆங்கிலத்தில்தான்எழுதவேண்டும்

மூன்று அவ்சிய குடும்ப ஔஷதங்கள்.

இரண்டும் அணு 10. **ஸ்ரீகா கஸ்தூரி கோரோஜனை மாத்திரை** இரண்டும் அணு 10

பாலகஸ்—பேதியாக மாத்திரை, —பாட்டில் அணு 4.
யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர்தெரு, மதராஸ் (மாடுங்கா)

விக்டோரியா டிபோ.
மைலாப்பூர், மதராஸ்.

மஹாபலிபுரத்தில் புதிய பாலத் திறப்பு விழா



1. மஹாபலிபுரத்தில் "முத்துரங்கம் பால"த்தை ஸ்ரீ ஸி. ராஜகோபாலாச்சாரியார் திறந்து வைத்தார். இந்த பாலம் செங்கற்பட்டு ஜில்லா போர்டாரால் கட்டப்பட்டது. இது பக்கிங்ஹாம் கால்வாய்மீது இருக்கிறது. இதற்கு ரூ. 20000 செலவாகியது. 2. பாலத்தின் தோற்றம். 3. தாழ்த்தப்பட்ட வகுப்பார் 4-வது மஹாநாடு சமீபத்தில் நகரில் மிஸ்டர் ஆஸ்டினால் திறந்து வைக்கப்பட்டது. (பி. பி. பி.)

கலைமகள்

வெளியீடுகள்

★

	ரூ.	அ.
முருகன் ஓர் உழவன்—ஸ்ரீமான் வேங்கடரமணி அவர்கள எழுதிய அரிய நாவல்	1	8
குமுதினி—ஸ்ரீ ரவீந்த்ரநாத் டாகுர் எழுதிய நாவல்: வங்காளியிலிருந்து ஸ்ரீமதி ரங்கநாயகி மொழிபெயர்த்தது	1	8
மாயா விநோதினி—ஸ்ரீ ரவீந்த்ரநாத் டாகுர் எழுதியது: ஸ்ரீமதி தனுசம மொழிபெயர்த்தது	1	8
பைரவி—சரத்சந்த்ர சட்டர்ஜி எழுதியது: ஸ்ரீ த. நா. குமாரஸ்வாமி மொழிபெயர்த்தது	1	8
விதியின் செயல் முதலிய கதைகள்—ஸ்ரீ ஏ. எஸ். பஞ்சாபகேச ஐயர், ஐ.ஸி.எஸ். எழுதியது	0	6
ரிஷப விஜயம்—ஓர் இனிய நாடகம்: ஸ்ரீ கே. வி. பஞ்சநதையர் எழுதியது	0	12
மண்ணாசை—ஸ்ரீ சங்கரராம் எழுதிய நாவல்	1	8
ஸ்ரீ சங்கராசார்யார் உபந்யாசங்கள்—50 உபந்யாசங்கள் கொண்ட புஸ்தகம்	1	8
ஸ்ரீ சங்கர விஜயம்—ஸ்ரீ காமகோடி பீடாதிபதியவர்கள் திருவாய்மலர்ந்தருளியது	0	10
சியாமளா தண்டகம்—வடமொழி மூலமும் தமிழுரையும்: ஸ்ரீ அனவரத விநாயகம் பிள்ளையவர்கள், எம். ஏ., எல். டி. மொழிபெயர்த்தது	0	1
த்வாதசோபநிஷத்—தமிழில் ஸ்ரீ என். எஸ். ராஜாராமையர் மொழிபெயர்த்தது	2	0
முப்பெரு வீரர்—ஸ்ரீ ஏ. எஸ. பஞ்சாபகேசய்யர் எழுதிய அரிய நவீனம்	2	0
நிர்மலா—ஸ்ரீ பிரேம்சந்த் (ஸ்ரீ கா. ஸ்ரீ. ஸ்ரீநிவாஸாசாரியார் ஹிந்தியிலிருந்து மொழிபெயர்த்த நாவல்)	1	8
அநுபமா—சரத் சந்த்ர சட்டோபாத்யாயர் எழுதிய நாவல்: ச.வி. ஸ்ரீனிவாச சர்மா மொழிபெயர்த்தது	0	8
கோனஷ்டையின் கதைகள்	1	8
இருளில் ஒளி—சரத்சந்த்ர சட்டோபாத்யாயர் எழுதியது	0	6
ஜவஹர் கடிதங்கள்—(தம் குமாரி இந்திரா நேருவுக்கு எழுதியவை) ஸ்ரீ சி. ரா. வேங்கடராமன் பி. ஏ., பி. எல்., மொழிபெயர்த்தது.	1	8
கலைஞன் தியாகம்—(ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன்)	1	8

★

SANATHANA DHARMA	1	8
TWO PLAYS of BHASA (Sri A. S. P. Iyer)	1	8

தபாற் செலவு, ரயில் செலவு முதலியவை பிரத்யேகம்.

எமது எல்லா ரயில்வே புத்தகசாலைகளிலும், ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்.

இவைகள் தவிர வியாபாரிகளுக்கும், வாசகசாலைகளுக்கும், பஞ்சாயத்து போர்டுகளுக்கும் கோர்வையான் அகப்படக்கூடிய நாவல்கள் முதலியன ஆர்டரின்பேரில் அனுப்பப்படும்.

மானேஜர்,

"சுதேசமித்திரன்" புத்தகசாலை, சென்னை.

Printed and Published by T.S. Visvanatha Iyer, B.A., at the Swadesamitran Power Press, Mount Road, Madras.- Editor, C.R. Srinivasan, B.A.